# இராசேந்திரன்

(வரலாறு தழுவிய நாடகம்)

ந.மு.கோவிந்தராய நாட்டார்

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி, சென்னை – 600 113.

பண்டிதச் சோழன் என்னும்

# இராசேந்திரன்

வரலாறு தழுவிய நாடகம்

ந.மு. கோவிந்தராய நாட்டார் B.A., L.T.,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | Rācēntiran̲ |
| Author | : | N.M. Govindaraya Nattar |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>T.T.T. I Post, Taramani,<br>Chennai - 600 113. |
| Language | : | Tamil |
| Publication Number | : | 308 |
| First Edition | : | 1949 |
| Reprint | : | 1998 |
| Paper used | : | TNPL 16 Kg Super Printing |
| Size of the book | : | 1/8 demy |
| Printing types | : | 11 Point |
| No. of pages | : | xviii + 242 |
| Price | : | **Rs. 55/-** |
| No. of Copies | : | 1000 |
| Printed by | : | **Pavai Printers (P) Ltd.,**<br>142, Jani Jan Khan Road,<br>Royapettah,<br>Chennai - 600 014.<br>Phone : 8532441 |
| Subject | : | Historical Drama |

முனைவர் **ச.சு. இராமர் இளங்கோ**
இயக்குநர்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600 113.

# அணிந்துரை

அகநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணம், அகத்தியர் தேவாரத் திரட்டு, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி முதலிய இலக்கிய நூல்களுக்கும், தண்டி யலங்காரம், யாப்பருங்கலம் முதலிய இலக்கண நூல்களுக்கும் உரை எழுதிய பெருமை நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டாருக்கு உண்டு. சங்கச் சான்றோர்களில் நக்கீரர், கபிலர் ஆகிய இருவரைப் பற்றித் திறனாய்வு நூல்களை எழுதியவர்; சோழர் சரித்திரம், கள்ளர் சரித்திரம், வேளிர் வரலாற்று ஆராய்ச்சி முதலிய வரலாற்று நூல்களையும் ஆக்கியவர்.

வேங்கடசாமி நாட்டாரின் தம்பியான கோவிந்தராய நாட்டாரும் தம்முடைய தமயனாரைப் போலப் படைப்பாற்றலும் எழுத்தாற்றலும் மிக்கவராக விளங்கினார். தஞ்சை மாவட்டத்தில் தமிழாசிரியராகப் பல இடங்களில் பணியாற்றி, தமிழ் உணர்வு மிக்க மாணவர்களை உருவாக்கினார்.

உலகப் பொது தமிழ் எழுத்தொலி, திருவையாறு ஏமூர் திருவிழா, கண்ணுதல் நின்கால் விளையாட்டு, நக்கீரர் முதலிய நூல்களை இயற்றியவர். நாடகங்களைப் படைப்பதில் குறிப்பாக வரலாற்று நாடகங்களைப் புனைவதில் வல்லவர் கோவிந்தராய நாட்டார் அவர்கள். இவர் திட்பமும் நுட்பமும் மிக்க சிந்தனை யாளர். சிறந்த இலக்கியப் படைப்பாளி, அயராது உழைத்த அரும்பெரும் செம்மல்.

பொதுவாக வரலாற்று வகைப்படைப்புகளை ''Chronological plays' என்பர். இது கிரேக்கத்தில் 'Khronika Annualy' என்ற சொல்லில் இருந்து தோன்றியது ஆகும். இதற்குப் பொருள் ஆண்டுத் தொகுப்பு என்பதாகும். வரலாற்று வரிசையில்

அமைந்த, தொடர்பான நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தருவது இப்படைப்பின் பொதுப் பண்பாகும்.

உலகில் வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு, சேக்ஸ்பியர், பெர்னாட்ஷா, பெர்லட் ரைட், கார்க்கி முதலிய மேலைநாட்டுப் படைப்பாளர்கள் நாடகங்களை இயற்றியுள்ளனர்.

தமிழில் வரலாற்று நாடகங்களை இயற்றியவர்கள் விரல் விட்டு எண்ணத்தக்கவர்கள். அவர்களில் ஒருவர் கோவிந்தராய நாட்டார் ஆவர். 'வாழ்க்கை வெற்றிக்கு வழி யாது?' என்பது அவர் எழுதிய ஓரங்க நாடகங்களின் தொகுப்பாகும். இராசாதிராசன் இவர் எழுதிய ஒரு வரலாற்று நாடகம். இவரது மற்றொரு சிறந்த நாடகமே வரலாற்று மாந்தரான முதலாம் இராசேந்திர சோழனை நாடகத் தலைவனாக்கி அவர் படைத்த 'பண்டிதச்சோழன் என்னும் இராசேந்திரன்' என்ற வரலாற்று நாடகம்.

வரலாற்று நாடகம் எழுதுவோர்க்கு வரலாற்று அறிவும் கலைத் திறமும் கற்பனைத் திறமும் இன்றியமையாதவை. நாடக ஆசிரியர்கள் தாம் தேர்ந்தெடுக்கும் வரலாற்று நாடகத்திற்குரிய கால கட்டத்தையும் அக்காலக் கட்டத்தில் வழங்கிய வாழ்க்கை முறைகளையும் நாடகத்தில் அமைக்க வேண்டும். எனவே சமூக நாடகங்களை எழுதுவதைக் காட்டிலும் வரலாற்று நாடகங்களை எழுதுவது மிகவும் பொறுப்பு வாய்ந்ததாக அமைகிறது. வரலாற்று நாடகங்களை எழுதுவோர் இலக்கியச்சான்றுகள், கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், நாணயங்கள், அகழாய்வுகள், முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு நாடகங்களைப் படைப்பர். வரலாற்று நாடகங்களைப் படைப்போரிடம் இரு பெரும் பொறுப்புகள் உள்ளன. ஒன்று கடந்த கால நிகழ்வுகளை மக்களுக்குக் கூறி அவர்களின் தற்கால வாழ்க்கை நிலையை நினைக்கச் செய்வது. பிறிதொன்று சென்ற கால வாழ்க்கை முறையைச் சுட்டுவதன் மூலம் தங்களுடைய தற்கால வாழ்க்கை யைச் செப்பம் செய்ய வழி செய்வது.

'பண்டிதச் சோழன் என்னும் இராசேந்திரன்' எனும் இந்நாடகம் 1949-இல் நாட்டார் தமிழ்ப் பேரவை சார்பாக வெளியிடப்பட்டது. 1949-இல் வெளிவந்த அந்நூல் இன்னும் மறுபதிப்புச் செய்யப்படவில்லை. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அந்நூலை மறுபதிப்புச் செய்து வெளியிடுகிறது.

இந்நாடகம் 5 அங்கங்களையும், 31 களங்களையும் கொண்டது. முதலாம் அங்கத்தில் 5 களங்களும், 2-ஆவது அங்கத்தில் 4 களங்களும், 3-ஆவது அங்கத்தில் 6 களங்களும், 4-ஆவது அங்கத்தில் 9 களங்களும், 5-ஆவது அங்கத்தில் 7 களங்களும் கொண்டு அமையப்பெற்றுள்ளது.

சேக்ஸ்பியரின் நாடகங்களின் காட்சிப்பகுப்பு முறைகளைப் பின்பற்றி, கோவிந்தசாமி நாட்டாரும், அங்கம், களம் என்று காட்சி அமைப்புகளை உருவாக்கியுள்ளார்.

முதலாம் இராசேந்திரன் பிற்கால சோழர்களில் குறிப்பிடத்தக்க புகழ் பெற்ற பெருமன்னன் ஆவான். சோழ மன்னன் இராசராசனுக்கும் வான்மாதேவிக்கும் மார்கழித் திங்கள் திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவன். கி.பி. 1014-இல் தந்தை மறைவுக்குப் பிறகு ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தான்.

இம்மன்னனுடைய ஆட்சிக்காலத்தை வரலாற்று அறிஞர்கள் 'பொற்காலம்' என்று அழைத்தனர். 33 ஆண்டுகள் சீரோடும் சிறப்போடும் ஆட்சிபுரிந்த இவன் கி.பி. 1044-இல் மறைந்தான்.

அலெக்சாந்தரும், சமுத்திர குப்தனும், அசோகரும், நரசிம்மவர்மனும் தம் தந்தையைக் காட்டிலும் மிக்க புகழுடையவர்களாகத் திகழ்ந்தது போன்று இவனும் இராசராசனைவிட சிறப்புடையவனாக விளங்கினான். இந்திய வரலாற்றில் புகழ் வாய்ந்த பெரும் மன்னர்களுள் தலைசிறந்த மன்னன் முதலாம் இராசேந்திர சோழன் என்றால் அது மிகையாகாது.

முதலாம் இராசேந்திரன் பாண்டிய நாட்டையும் சேர நாட்டையும் வெற்றி கொண்டு 1021-இல் வடபுலத்தின் மீது படையெடுத்தான். சாளுக்கியர், கலிங்கர், தெலுங்கர் முதலிய வேந்தர்களை வென்றான். பின்னர்ச் சக்கரக் கோட்டம், ஆதிநகர், தண்டபுத்தி, தக்கணலாடம், கீழ் வங்காளம், உத்தரலாடம் முதலான பகுதிகளில் ஆண்ட வட இந்திய அரசர்களையும் வென்றான். எனவே 'கங்கைகொண்ட சோழன்' என்ற சிறப்புப் பெயர் பெற்றான்.

இங்ஙனம் முதலாம் இராசேந்திரன் சோழப் பேரரசைத் தென்புலத்தில் இருந்து வடபுலம் வரை விரிவுபடுத்தினான். வடபுலத்தில் பெற்ற வெற்றியின் நினைவாகக் 'கங்கைகொண்ட சோழபுரம்' என்ற நகரை உருவாக்கினான். அங்கே 'கங்கை

கொண்ட சோழேச்சுரம்' எனும் சிவன் கோயிலைக் கட்டினான். இன்றும் அந்நகரும் கோயிலும் நினைவுச் சின்னங்களாகப் போற்றப்படுகின்றன.

இத்தகைய சிறப்பும் புகழும் மிக்க இம்மன்னனின் வரலாற்றை, இவன் புரிந்த சாதனைகளைத் தமிழ் மக்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் இவனது வீரம் சார்ந்த செயல்கள், பக்தியுணர்வு, மக்கள் மேல் கொண்ட பாசம் போன்ற, சிலவற்றைத் தேர்ந்து நாடகமாக்கித் தந்துள்ளார் ஆசிரியர். இவனது காலத்தில் இவன் செய்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த செயல்களான, கங்கைகொண்ட சோழபுரம் நகர் உருவாக்கியமை, கங்கைகொண்ட சோழேச்சரம் கோயில் கட்டியமை, ஏரி உருவாக்கியமை போன்றவற்றை இவனது இலட்சியங்களாக ஆசிரியர் சுட்டுகின்றார்.

இராசேந்திரன், அவனுடைய மனைவியர், புதல்வர்கள், புதல்விகள், வல்லரையன் வந்தியத் தேவன் போன்ற பல வரலாற்றுச் சிறப்பு மிக்க மாந்தர்களுடன், பல கற்பனைப் பாத்திரங்களையும் படைத்து நாடகத்தைச் சுவையாகக் கொண்டு செல்கின்றமை ஆசிரியரின் வெற்றிக்குத் துணையாக அமைகிறது.

நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் காட்டிவருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி - பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு. த. இரா. சீனிவாசன் இ.ஆ.ப. அவர்களுக்கும் இவ்வரிய வரலாற்று நாடகத்தை மறுபதிப்பாக வெளியிட நிதி உதவி நல்கிய தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ச. நாகராசன் அவர்களுக்கும், எங்கள் நன்றி.

இந்நூலினைச் சிறந்த முறையில் அச்சிட்டுத்தந்த பாவை அச்சகத்தார்க்கும், இதன் மெய்ப்பைத் திருத்திய திரு. வ. நீலகண்டன் அவர்களுக்கும் நன்றி.

**இயக்குநர்.**

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| அணிந்துரை | ... | ... | iii |
| பதிப்புரை | .... | .... | viii |
| ஆங்கில முன்னுரை | ... | ... | ix |
| சிறப்புப்பாயிரம் | ... | ... | xii |
| பாயிர வாழ்த்து | ... | ... | xiii |
| முன்னுரை வாழ்த்து | ... | ... | xiv |
| முகவுரை | ... | ... | xv |
| நாடக மக்கள் | ... | ... | xvii |
| நாடகம் | ... | ... | 1 |

# பதிப்புரை

எனது நண்பர் ந.மு. கோவிந்தராய நாட்டார் B.A., L.T., சோழப் பேரரசன் இராசேந்திரனைத் தலைவனாகக் கொண்டு எழுதிய இந்நாடகம் தமிழ் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் என்பது எனது எண்ணம். திரு. நாட்டார் அவர்கள் தமிழ்நாடு போற்றும் காலம் சென்ற நாவலர், பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களின் இளவல் என்பதனைத் தமிழுலகம் நன்கறியும். இவர்கள் கூர்ந்த அறிவாற்றலும் பன்மொழியாராய்ச்சியும் உடையவர்கள். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே 'நக்கீரர்' என்னும் ஒரு நாடகத்தை எழுதி அச்சிட்டு வெளியிட்டார்கள். தற்போது உலகிற்குப் பெரிதும் பயன்தரத்தக்க 'உலகப் பொது தமிழ் எழுத்தொலி' என்ற பொருள்பற்றிச் சிறந்ததோர் ஆராய்ச்சி செய்துவருகின்றார்கள். இது முற்றுப்பெறுமானால் உலக மொழிகளையெல்லாம் தமிழ் எழுத்துகொண்டு சிறிதும் ஒலி வழுவிலாது எழுத வியலும். இப்பொருள் குறித்த நூலை விரைவில் வெளியிடப்போகின்றனர். 'இராசேந்திரன்' என்னும் இந்நாடகத்தை 'நாட்டார் தமிழ்ப்பேரவை'யின் முதல் வெளியீடாக இயற்றித் தந்தமைக்கு எனது நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இவ்வாறே அவர்கள் எழுதவிருக்கும் பல நூல்களையும் நாட்டார் தமிழ்ப் பேரவைக்கு அணிகலன்களாகச் செய்யுமாறு அவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

**அ. கிருட்டினசாமி வாண்டையார்,** M.L.A
தலைவர்,
நாட்டார் தமிழ்ப் பேரவை,
தஞ்சை.

பூண்டி,
*14.8.1949.*

# FOREWORD

Thiru M. Govindaraja Nattar the author of this historical drama and the brother of the late lamented illustrious Tamil scholar, Navalar, Panditha N.M. Venkatasamy Nattar, is himself a great Tamil scholar and an inspired writer. The Historical Play has a national value. Shakespeare and Ilanko are a perennial inspiration. The play way method is revolutionising the art of teaching and there can be no better means of bringing home the message of history than by dramatising it. This historical drama gives all the details of Tanjore City, its streets, its temples, its endowments and even the measures in use at the time; all the details of the army and the navy, their divisions, numbers and organisation and all the details of the campaigns of Rajendra; in short all that one can learn after a careful study of many researches - these are given here in a very interesting way as only a drama can give.

Rajendra who extended the Tamilian kingdom as far as the Ganges on the North, as far as the southern limits of Ceylon on the South and as far as the Eastern Archepelago on the East and as far as the Arabian Sea on the West, unfortunately received but a bare mention in the ordinary text books of History studied in our secondary schools. The Tamilians have not as yet succeeded in gaining a proper historical perspective of their country. If the present work of the author becomes popular even as a pioneer work, the Tamilian is sure to achieve a certain amount of self respect with a proper historical background. Inspite of the life-like portraits of the Imperial Cholas painted with great accuracy by research scholars like professor Nilakanta Sastry, the common man is not even favoured with a silhoutte of these architects of Tamil life, a life so very much transformed by the Cholas through their temples, epics and cosmopolitanism. The present drama displays necessarily an aggressive Tamilian spirit

but the basic principle of Tamilian culture is never forgotten. Rajendra in the true spirit of a Tamilians is made by this author to Tamilianise even those spies from the north doomed already for death.

But a drama stands or falls on its merits as a drama. This drama also has to be judged from that point of view. Rajendra's history is but the background for this drama. Apart from his victorious march, this drama represents the victorious march of his soul - from the slough of despondency into which he fell on the death of the great emperor, his father. Raja Raja - whose miraculous and immortal achievements in war and peace could not be easily reconciled with a mortal frame, a march through success to success, thanks to the inspiration of a loving mother, a Tamilian culture, a Saivaite religion, an imperial ambition and a glorious victory - an unimpeded march - till he himself turns away from this very surfeit of success to hanker after rest - yes - a victorious march of his soul to the haven of peace vouchsafed to him by the great sage Karuvoor Thevar who comes in at the proper moment to bring home to the king certain truths of Life, herein and hereafter, and to give us through him a vision of the future, a real perspective of the achievements of Rajendra within the infinity of the historical background. Rajendra is thus raised to a higher plane as a repositary of the Tamil culture in its onward march through joy and suffering to its ever advancing goal of perfection.

This alone is not enough to weave a beautiful pattern of a living drama. The author cunningly weaves into this fabric of a drama, two beautiful patterns of contrasting love episodes - one a comedy and the other a tragedy. The love story of Ammanga, the daughter of Rajendra and her lover Narendra, the Eastern Chalukya Prince, the patron of Nannayya Bhatta of Telugu Mahabharatha fame and the father of the future emperor. Kulothunga I, is in a way the main theme of this drama. The characters here are superbly drawn befitting the royal descent of the couple and their culture. The tragic story (an invention of the author) of Ammanga's

maid servant, Anjugam and her lover Veerappuli brings together not only the life in the street of the common man and the life in the court of the great man of the age but also throws into bolder relief the main background of the drama representing the victorious march of the soldiers of Rajendra. Though ending as a tragedy this story in its earliest parts starting as a story of the soldiers, affords a good deal of comic relief.

The plot and characterisation are thus what one may expect. The style keeps up the historical grandeur without becoming pedantic. I do not know whether this will appeal to the common man when enacted as a whole; but cutting a few scenes and omitting a few speeches, this can be brought to manageable proportions to be staged in any modern theatre. Without hoping for this wider public the book can safely and usefully work its way through the student population, the future citizens of this great land, as a great success. May the author be inspired to write more dramas of this kind.

**T.P. Meenakshisundaram.**

Madras
23.8.1949.

# சிறப்புப்பாயிரம்

**சேலம் சார்ந்த தோரமங்கலம், ஆசிரியர், புலவரேறு,**
**தமிழ்ப்பேரன்பர்,**
**திருவாளர் அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள்**
**இயற்றியன.**

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

திருவார்சையத் திடைத்தோன்றித் தேவர் முனிவர் மகிழ்ந்தேத்த
உருவாருயிர்கள் பலவாழ வோங்கு முதன்மை யறம்வளர்த்துப்
பொருவி லாவைந் திணைமுகனும் புல்லி யுலகம் படைத்தளித்தே
ஒருவா தரனார் பாகமுறை உமையாம் பொன்னித் திருநதியே.

இரவி மரபோ ரெனற்கேற்ப இகலோ ராழி தனியுருட்டிப்
புரவுக் கடன் பூண் டிருளகற்றிப் பொலியும் விளக்க முலகெய்த
மருவுஞ் சோழர் புகழ்மணந்த வளக்காவிரிசூழ் சோணாட்டிற்
றிருவை யாற்றிற் கணித்தாகித் திகழும் பதியாஞ் சிறப்பினதே.

தடுக்கா விரிநீர்க் கொண்மூவைத் தருவான் கனிகடருவான் சார்ந்
தடுக்கா விரிபூம் பொய்கையுட னாறு மடுப்ப வளஞ்சிறந்த
நடுக்கா விரியென் றிடுநகரி னண்ணும் புலவர் கலிகளெல்லாம்
நடுக்கா விரியச் செய்கையினா னன்முத் தையனார்
தவத்துதித்தோன்.

சங்கப் பன்னூ லுரைபெறவும் சரித்தி ரங்க ளுயிர்த்திடவுந்
துங்கக் கவிக ளெளிதாகத் தோன்றிக் கவிஞர் சுவைத்திடவுந்
தங்குஞ் சீர்வேங்கடசாமி தனக்கு மிளையா னவற்கிளையான்
எங்கும் புகழ்சால் கோவிந்த ராய நாம மேற்றோனே.

மன்னுமிராசேந் திரச்சோழன் வரலா றனைத்து மிகநாடிப்
பன்னுங் கல்வெட் டுகள் செப்புப் பட்ட யங்கள் பலதேர்ந்து
தன்ன தருமைத் தமிழுணர்ச்சி ததும்ப வொருநா டகமாகித்
துன்னச் சுவையும் மெய்ப்பாடுந் தோன் றவுரைத்தான் துய்ப்பீரே.

---

**குறிப்புகள் :-**

**செய்யுள் (1)** உமாதேவிக்கும் காவிரிக்கும் சிலேடை, சையம் - குடகுமலை, மலை. ஐந்திணைமுகம் - ஐந்துநிலங்கள், சிவபெருமானுடைய ஐந்து முகங்கள்.

**செய்யுள் (3)** முதல் அடி - சோலையின் மரங்கள் மேகத்தைத் தடுத்துத் தமது பயனாகிய கனிகளைத் தருவான் வானிற்சாரும்.
புலவர்கலி நடுக்கா இரிய - நடுங்கித்தோற்றோட

# பாயிர வாழ்த்து

## சென்னை அரசாங்கக் கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியராயிருந்து ஓய்வுபெற்றுள்ள தமிழ்ப்பெரும் புலவர் பண்டித அ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் இயற்றியன.

இமைய மால்வரைப் பிடர்திரித் திலாஞ்சனை யிறுவிக்
கமைகொள் காழகம் ஈழமே காந்தளூர்ச் சாலை
யமைய ஏனவும் அடிப்படுத் துலகினி தாண்ட
தமை நிகர்த்தபோர் மீளியர் சோழர்முத் தரையர்

இனைய ராட்சியின் மாட்சிகள் எனையன! கல்லின்
வனைய வுள்ளன; நூல்களின் முழங்குவ; மற்றும்
புனைவ வூர்பெயர், குடிப்பெயர், உளபல புகழும்
அனையர் தம்வழித் தோன்றிரா சேந்திர வரசன்

தள்ள ருந்தமிழ் நாடகக் காப்பியத் தலைவன்
உள்ள வன்மிசைப் புனைந்துரைத் திடும்முறை யுன்னி
விள்ளருந்திறல் விறல்சுவை யிடந்தொறும் விரவக்
கொள்ளு நூனுத லியபொரு ளுறுபயன் கொளுவி

ஏனை மாந்தருந் துய்த்தருஞ் சுவைபய னெய்த
தான மாம்வழக் காறுகள், குழூஉக்குறி, சரிதம்
ஆன மாமர பியாவையு மெளிதினி லறியத்
தேன வாந்தமிழ் நல்விருந் தளித்தனன் தெரிந்தே.

### வேறு

தேங்குசெந் தமிழ்மொழிக்கோர் தெய்வமென் றுலகம் போற்றும்
வேங்கட சாமிநாம விற்பனற் கிளைய மேலோன்
ஆங்கிலம், மொழி நூல்வல் லோன் அருந் தமிழ்க்கலை விநோதன்
தாங்குகோ விந்தராசத் தனிப்பெயர் குரிசி லம்மா.

### வெண்பா

இன்னும் பலநூல்கள் இற்றை நிலைக்கேற்ப
மன்னுந் தமிழின் வகுத்தருளி - முன்னோன்
எனவே புகழெய்தி யெஞ்ஞான் றும் வாழ்க
தனைநிகர்கோ விந்தரா சன்.

# முன்னுரை வாழ்த்து

## கரந்தைப் புலவர் கல்லூரியின் தலைவராயிருந்து ஒய்வு பெற்றுள்ள கரந்தைக் கவியரசு

## திருவாளர் அரங்க வேங்கடாசலம் பிள்ளை அவர்கள்

## இயற்றியது.

உலகெலாம் புகழும் உயர்சோ ணாட்டில்
நடுக்கா விரியாம் நகர்செய் தவத்தினர்,
வழிவழிக் கலையும் வளர்அறத் திருவும்
நிலவுநற் குடியினர், நீளுல கம்புகழ்
நாவல வேங்கட சாமிநாட் டாரை
அறியார் யாரே! அன்னவர்க் கிளைஞர்,
ஆங்கிலம் செந்தமிழ் ஓங்கிய புலமையர்,
உலகறி வோங்கிய தலைமைசால் வீரர்,
எண்ணிய எண்ணியாங் கியற்றும் தீரர்,
கலைமா ணவர்க்குக் கண்ணெனத் திகழ்வார்,
அன்னவர் உலகிற் களித்த பொன்மலர்!
இராசேந் திரனென இயம்பும் மணமலர்!
அரசர்தம் செங்கோல் ஆட்சிசேர் ஆண்மை,
அமைச்சர் முதலோர் தமைப்புரந் தாளல்,
படைக்கல வகைகள், படைஞரின் இயல்கள்,
ஏனை யரசுடன் இயங்கும் நடைமுறை,
தெய்வப் பற்றுச் சீலம் ஒழுக்கம்
மிக்குயர் மாந்தராம் நற்குடி யாளர்,
கற்பெனும் விண்ணில் பொற்புறு மீன்கள்,
காதலின் உருத்திகழ் ஞாயிறாம் கணவர்,
எங்கும் காணா எழிலமை நகரம்,
விண்கடந் துயர்ந்த விமானக் கோவில்,
ஒருகுடை நீழல் உலகாள் சிறப்பு,
மறைந்து காண்கில்லா மாண்பினர் சீரைச்
சிறந்தொளி காணத் தெரிக்கும் நல்விளக்கம்,
வரலாற்று மாண்பு வயங்குகல் லெழுத்தின்
திண்ணிய பொருள்களை எண்மையிற் காட்டல்,
இன்னண பெருமைகள் எழிலுற ஓங்கும்
இராச ராசேச்சர எழிலுறு விமானம்!!
செந்தமிழ் நாடெலாம் தெளிவுற அமைத்த
எங்கள் நண்பர் இருங்கலைப் புலவர்
கோவிந்த ராசக் குணநிதி வாழியர்!
எல்லா வாழ்வும் இனிதின் எய்தி
ஊழி ஊழி வாழி வாழியர்!!

# முகவுரை

இராசேந்திரன் என்னும் பெயரிய இந்நாடகம் கங்கை கொண்ட சோழன் என்றும் பண்டிதச் சோழன் என்றும் பாராட்டப்படுகின்ற சோழப்பேரரசன் வரலாற்றை ஒருவாறு தழுவி எழுதப்பெற்றதாகும். காய்தல், உவத்தல் இன்றிக் காண்போமானால் இப்பெருமகனுக்கு ஈடான வீரன் இந்திய வரலாற்றில் வேறு எவரும் இல்லையென்றே கூறலாம். கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் மகதப் பேரரசனாகிய **பிந்துசாரன்** தமிழ்நாட்டின் மீது படையெடுத்து வந்தான் என்பதற்குத் தக்க சான்றுகள் உள்ளன. அவன் சோழ மன்னர் ஒருவரால் முறி யடிக்கப்பட்டுத் தமிழ்நாட்டினின்றும் வெருட்டியடிக்கப் பட்டான். குப்தப் பேரரச னாகிய சமுத்திர குப்தன் தனது தென்னாட்டுப்படையெழுச்சியில் காஞ்சிபுரம் வரை வந்து திரும்பி விட்டான். கில்ஜி வழிவந்த அல்லாவுத்தீனுடைய தானைத் தலைவன் மாலிக்காபூர் பாண்டிநாடுவரை வந்து திரும்பினான். முகலாயப் பேரரசனாகிய அவுரங்கசீப் தமிழ்நாடு தவிர இந்தியா முழுமையும் அடிப்படுத்தினான். ஆனால் சோழப் பேரரசனாகிய இராசேந்திரன் இலங்கை முதல் இமயம் வரைத் தனது தானைகளைச் செலுத்தி வென்றி கொண்டவன் ஆவன்.

இவனுடைய வெற்றிக்கொடி இந்தியாவுடன் நில்லாது பெருங்கடல் தாண்டியும் சென்று பறக்கலாயிற்று. இந்தொநேசியா என்று இப்பொழுது பேசப்படுகின்றதும், இரண்டாம் உலகப் பெரும் போருக்கு முன்னால் கிழக்கிந்திய தீவுக்கூட்டம் என்று அழைக்கப்பெற்றதும், இராசேந்திரன் காலத்தில் ஸ்ரீ விஜயம் என்றும் கடாரம் என்றும் கூறப்பெற்றதுமாகிய குணகடல் தீவுக்கூட்டத்தின்மீது இப்பெருமகன் தனது கடற் படையைச் செலுத்திப் போர் செய்து கடாரப்பேரரசனாகிய விசயோத்துங்க வர்மனை அடிபணியச் செய்த பேராற்றல் படைத்தவன். அசோகன் காலமுதல் ஆங்கிலேயர் இந்நாட்டிற்கு வந்த காலம் வரையிலும் இந்திய வரலாற்றில் கூறப்படுகின்ற வேறு எப்பேரரசனும் பெருங்கடல் தாண்டிப் படையெடுத்ததாகத் தெரியவில்லை. ஆகையின் இராசேந்திரன் இந்திய நாட்டின் இணையற்ற வீரன் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. இவ்வீரனைப்பற்றி இப்பொழுதுதான் சில தமிழ்ப் புலவர்கள் தமிழில் சற்று விரிவாக எழுதியுள்ளார்கள். இவர்கள் முயற்சி பெரிதும் போற்றற்குரியது.

காலஞ்சென்ற தமிழறிஞர் V. கனகசபைப்பிள்ளை யவர்கள்B.A., B.L. எழுதிய 'The Conquest of Bengal and Burma by the Tamils' என்ற ஆங்கிலக் கட்டுரையைப் பல ஆண்டுகளுக்கு முன் யான் வாசித்தேன். அந்நாளிலிருந்து ஆங்கில நாடகப் பெரும் புலவராகிய - ஷேக்பியரின் வரலாற்று நாடகங்களைப் பின்பற்றித் தமிழில் இராசேந்திரனைக் குறித்து

ஓர் நாடகம் எழுதவேண்டும் என்ற எண்ணம் எனதுள்ளத்திற் குடிகொண் டிருந்தது. இப்பொழுதுதான் அவ்வெண்ணம் செயலாக உருப் பெற்றது.

பெரும்பாலும் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதினேனாயினும் நாடகப் போக்கிற்கேற்பக் கற்பனைகளையும் மேற்கொள்ளவேண்டியவனாயினேன். எனினும் இராசேந்திரன் காலத்துத் தமிழ்நாட்டின் நிலையை ஒருவாறு படம்பிடித்துக் காட்டுவது எனது நோக்கங்களில் ஒன்று. உண்மை வரலாற்றை உள்ளவாறே நாடகமாக எழுதுதல் செயற்கரிய காரியமாகும். இதனாலேயே இந்நூலில், 'முடிசூட்டு விழா,' 'திருமண விழா' ஆகிய இரு நிகழ்ச்சிகளையும் நாடகப் பேச்சு நடையாக எழுதாது உரைநடையாக எழுதிவிடுத்தேன். இவ்வாறே வங்க மன்னன் அரசவை நிகழ்ச்சியையும் கடாரப் பேரரசன் அரசவை நிகழ்ச்சி யையும் அவ்வம் மொழிகளில் எழுதிக்காட்டுதல் இயலாத தொன்றாகும். நாடக மக்களின் குடிநிலை, அறிவு நிலைகளுக் கேற்பத் தமிழ்ப் பேச்சு நடையைத்தரப்படுத்தியும் அக்காலத் தில் வழக்கிலிருந்து இப்பொழுது வழக்கு வீழ்ந்த சில சொற் களையும் சொற்றொடர்களையும் எடுத்தாண்டும் எழுதியுள்ளேன்.

இந்நூல் நாடகமாக நடிப்பதற்கு ஏற்றதொரு நூலாயிருப்பினும், சற்று விரிவாக விருப்பதால் முழுநாடகத்தையும் குறிப்பிட்ட சிலமணி அளவில் நடித்தல் இயலாது. பகுதி பகுதியாகவோ அல்லது சுருக்கியோ தான் நடித்தல் கூடும். கல்லூரி மாணவர்களுக்கு இந்நூல் பெரிதும் பயன்படும் என்பது எனது எண்ணம்.

நூலை வெளியிட்ட நாட்டார் தமிழ்ப்பேரவையினருக்கும் அழகாக அச்சிட்டுத்தந்த தஞ்சை மகாலிங்கம் பதிப்பகத்தாருக் கும் எனது நன்றியுரியதாகும். ஆங்கிலத்தில் முன்னுரை எழுதியுதவிய அருங்கலைவாணர், பன்மொழிப் புலவர், திருவாளர் T.P. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, M.A., B.L., M.O.L., அவர்களுக்கும் தமிழரசியின் திருவோலக்கமன்ற நாப்பண் சமத்தானப் புலவர்களாய் வீற்றிருக்கக் கூடிய வீறுடையோராயிருந்தும் வெளிறனாகிய எனது நூலுக்குச்சிறப்புப் பாயிரம், பாயிர வாழ்த்து முன்னுரை வாழ்த்து உவந்தளித்த புலவரேறு, தமிழ்ப்பெரும் புலவர், கரந்தைக் கவியரசு ஆகிய மூவருக்கும் எனதுள்ளம் நிறைந்த நன்றியை அறிவித்துக் கொள்ளுகின்றேன்.

ந.மு.கோ.

# நாடக மக்கள்

**இராசேந்திரன்** - இராசராசன் மகன், சோழப்பேரரசன்

**இராசாதிராசன்**
**இராசேந்திர சோழதேவன்**
**வீரராசேந்திரன்**
} இராசேந்திரன் மக்கள்

**வல்லவரையர் வாண்டியதேவர்** - அமைச்சர், சாமந்தர் தலைவர், இராசராசன் தமக்கை குந்தவ்வையாரை மணந்தவர்.

**அரையன் இராசராசன்** - மகாதண்டநாயகம்.

**இராசேந்திரசோழ மாவலிவாணராயர்** - கடற்றானை மகாநாயகம்

**இராசராச ஈழத்தரையர்** - வேளைக்காரப் படைத்தலைவர்

**விமலாதித்தன்** - கீழைச்சாளுக்கிய மன்னன், வெங்கைதலைவன், இராசேந்திரன் தங்கை குந்தவ்வையாரை மணந்தவர்.

**இராசராச நரேந்திரன்** - விமலாதித்தன் மகன், இராசேந்திரன் மகள் அம்மங்காதேவியின் காதலர்.

**மகிபாலன்** - வங்க மன்னன்.

**சங்கிராம விசயோத்துங்க வர்மன்** - ஸ்ரீ விசயம் எனப்பட்ட கடாரப் பேரரசன்

**சர்வசிவ பண்டிதர்** - இராசேந்திரன் ஆசிரியர்

**கருவூர்த் தேவர்** - சிவயோகி, திருவிசைப்பா ஆசிரியர்.

**கங்கைநாடர், தஞ்சைராயர்,**
**களத்துவென்றார், மூவரையர்,**
**பொன்னாரம்பூண்டார்,**
**சிங்கப் புலியர், வீரப்புலியர்,**
**போர்முட்டியார், வாள்வெட்டியார்.**
] இராசேந்திரன் படைவீரரிற் சிலர்

**சாத்தவேள், பிர்மவர்மன்,**
**ஆதித்தன், சங்கரதேவன்,**
**இராசராசப்பிச்சன்**
} தஞ்சை நகர மாந்தரிற் சிலர்

**கிருட்டினன் இராமன் மும்முடிச்சோழன்** - வங்கம் சென்ற தூதன்

**வாயிற்காவலர், ஒற்றர் முதலாயினோர்.**

**வானவன்மாதேவி** - இராசேந்திரன் தாய்.

**பஞ்சவன்மாதேவி** - இராசேந்திரன் மனைவி.

**அம்மங்காதேவி** - இராசேந்திரன் மகள், நரேந்திரன் காதலி

**அஞ்சுகம்** - சிங்கப்புலியர் மகள், வீரப்புலியர் காதலி, அம்மங்கா தேவியின் தோழி.

**சிங்கப்புலியர் மனைவி, நங்கை, மங்கை என்ற தோழிகள் முதலாயினோர்.**

# இராசேந்திரன்

## அங்கம் - ஒன்று

### களம் 1

**இடம்:** **தஞ்சைநகர் உள்ளாலையில் வானவன் மாதேவிப்பெருந் தெருவும் அதையடுத்த பூங்காவும்.**

**நடிகர்:** **இராசராசப்பிச்சன், சாத்தவேள், ஆதித்தன், சங்கரதேவன், பிர்மவர்மன்**

**பொழுது:** **மாலை**

**ஆதித்தன்** - வருக, இராசராசப்பிச்சரே, வணக்கம். என்ன! இன்று ஓர் புதுமையாக விருக்கிறதே, தாங்கள் வானவன் மாதேவிப்பெருந் தெருப்பக்கம் வருவது அருமை யாயிற்றே!

**இரா.பிச்சன்** - வணக்கம். தாம் சொல்வது உண்மைதான். அருமையாக வருவதுண்டு. பெரும்பாலும, வீரசோழப் பெருந்தெரு, இராச வித்யாதரப் பெருந்தெரு, சயங் கொண்டசோழப் பெருந்தெரு, சூரசிகாமணிப் பெருந் தெரு இவைகளினூடேதான் யான் செல்வது வழக்கம்.

**ஆதித்-** இவ்வளவுதானா? எத்தனையோ தெருக்களை விட்டு விட்டீர்களே? கந்தர்வத்தெரு, வில்லிகள்தெரு, ஆனை யாட்கள்தெரு, ஆனைக்கடுவார்தெரு, மடைப்பள்ளித் தெரு, பன்மையார்தெரு, சாலியத்தெரு முதலியவைகள் தங்கள் கால்படாமலிருக்க என்ன பாவஞ்செய்தன?

**இரா.பி** - பாவமா? அப்படியானால் யான் இனி ஒன்றையும் விடப்போவதில்லை. திருபுவனமாதேவிப் பேரங்காடி, கொங்காள்வார் அங்காடி, இராராசப் பிர்மமாராயன் அங்காடி, உய்யக்கொண்டான் திருமஞ்சனத்தார் வேளம், பஞ்சவன் மாதேவியார் வேளம் முதலியனவும் எனது கால்தூளியால் புண்ணியம் பெறட்டும்.

**ஆதித்** - போதும் நிறுத்துங்கள், வானவன்மாதேவிப் பெருந் தெரு இன்று செய்த புண்ணியம் என்னவோ, அதைச் சொல்லுங்கள்.

**இரா.பி** - பெருவுடையார் கோயிலுக்குச் செல்கின்றேன். இறை வணக்கத்திற்குத் திருப்பதிகம் மிகமிக ஏற்றதாயிருக் கின்றது. திருப்பதிகம் விண்ணப்பஞ்செய்வோர் பொரு ளுணர்ச்சியுடன் பாடுகின்றனர். அதனால் எனதுள்ளம் இறைவனை நினைந்து உருகுகின்றது. அடுத்தாற் போல் கனபாடிகள் சாமகானம் பாடுகின்றனர். அதைக் கேட்டால் உள்ளநெகிழ்ச்சிச் சிறிதேனும் ஏற்பட வில்லை.

**ஆதித்** - அப்படியானால் யானும் தங்களுடன் வருகின்றேன். மாலைப்பூசைக்கு இன்னும் பொழுது இருக்கின்றது, சிறிதுநேரம் பூங்காவிற்கழித்துப் பின்னர் செல்வோமே?

**இரா.பி** - அவ்வாறே செய்வோம்.

***(பூங்காவிற்குச் செல்லுதல்)***

***(பூங்காவில் மேடைமீது அமர்ந்துள்ள சாத்தவேள், சங்கரதேவன், பிர்மவர்மன் மூவரும் இவர்களை வரவேற்றல்.)***

**சாத்.சங் பிர்** - வருக, ஆதித்தரே, இராசராசப்பிச்சேர வணக்கம்.

**ஆதித், இரா.பி** - வணக்கம்.

***(மேடையில் அமர்தல்)***

**சாத்** - ஆதித்தரே, இராசராசப்பிச்சர் தாமாக இங்கு வரமாட்டாரே, தாங்கள் அழைத்துவந்தீர்களோ?

**சங்** - அப்படித்தானிருக்கவேண்டும்.

**பிர்** - ஏன்? பிச்சர் இப்பக்கம் வருவதில்லையோ?

**ஆதித்** - பிச்சர் பழக்கம் உங்களுக்கும் நன்றாகத் தெரிந்திருக்கிறது. நான்தான் அவரை அழைத்துவந்தேன். அவர் பெருவுடையார் கோயிலுக்குத் திருப்பதிகம் கேட்கச் சென்றுகொண்டிருந்தார்.

**சாத்** - யானும் திருப்பதிகம் கேட்கவேண்டும்.

**இரா.பி** - ஐயோ, இராசராசேச்சரத்தை எடுப்பித்த நமது மன்னர் மன்னன், இராசகேசரி, சிவபாதசேகரன், இராசராசன் இன்னுஞ் சிலவாண்டுகள் இருந்திருக்கக்கூடாதா? கோயில் எடுப்பித்து நான்காண்டுகள் நிரம்பவில்லை. சிவ பாதசேகரன் சிவபாதத்தைச் சேர்ந்துவிட்டான். இவ் வுலகம் உள்ளளவும் இவர் எடுப்பித்த கோயிலைப் பார்த்தே மன்னர்பெருமையை நன்றாக உணர்ந்து கொள் வார்கள். தக்கணமேரு என்னும்பெயர் இக்கோயிலுக்கு எவ்வளவு பொருத்தம், பாருங்கள்!

**சங்** - உண்மை, உண்மை. இதோ பாருங்கள் விமானத்தை, இதன் உயரத்தையும், எடுப்பான தோற்றத்தையும் என் னென்று சொல்வது!

**இரா.பி** - மன்னர் பெருமானுடைய கவர்ச்சியான உடல் தோற்றத்தையும், பொலிவினையும் இது நினைவுறுத்து கின்றது. அவருடைய விரிந்த உள்ளமும் இறைவ னிடத்து அவருக்குள்ள எல்லையில்லா அன்புமே இப் பெருங்கோயில் தோன்றுவதற்குக் காரணங்களாகும்.

**பிர்** - நண்பர்களே, யான் கேள்விப்படுவது உண்மையா யிருக்குமா?

**ஆதித்** - எது?

**பிர்** - இராசேந்திர மன்னர் ஆற்றொணாத் துக்கத்திலாழ்ந்து இராசகாரியம் பார்ப்பதற்கே மனமில்லாதிருக் கின்றாராம்.

**சங்க** - யானும் கேள்விப்பட்டேன்.

**இரா.பி** - ஐயோ, அப்படியானால் நமது பேரரசு என்னாகும்?

**சாத்** - நமது நாடு என்னாகும், நமது ஆட்சியிலுள்ள பிறநாடுகள் என்னாகும்?

**சங்** - ஏன் வீணாக அஞ்சுகிறீர்கள்? நமது மன்னர் பெருமான் ஒருக்காலும் அரசைத் துறக்கமாட்டார். வேண்டுமானால் ஒரு சோதிடம் சொல்கிறேன், கேளுங்கள். இராசேந்திரன் நமது பேரரசை இன்னும் பெரிதாக்குவார். எத்தனையோ போர்கள் அவருக்காகக் காத்திருக்கின்றன. இவ்வுலகில் இணையிலாப் பேரரசை அவர் ஏற்படுத்துவார். விளை யும் பயிர் முளையிலே. இராசேந்திரன் இருந்திரா விடில் இராசராசன் இப்பொழுதுள்ள நமது பேரரசை நிலைநாட்டியிருக்க முடியுமா? எண்ணிப்பாருங்கள்.

**இரா.பி** - அப்படியா? அவ்வாறானால் கவலையில்லை.

**சாத்** - சங்கரதேவரே, நீங்கள் சொல்வது உண்மையாயிருந்தால் கவலையேயில்லை.

**ஆதித்** - கவலையே இல்லை என்று எளிதாகச் சொல்லிவிட் டீர்களே, போர் என்றால் எத்தனையாயிரம் வீரர்கள் இறப்பார்கள்? எத்தனையாயிரம் பெண்மணிகள் தங்கள் கணவர்களை இழந்து தவிப்பார்கள்? நாட்டில் அமைதி நிலவுமா?

**இரா - பி.சாத் -** ஆம், ஆம், தாங்கள் கூறுவது சரிதான்.

**சங் -** என்ன, எல்லாவற்றிற்கும் ஒரே ஆமாம் போடு கிறீர்கள், அரசாங்கம் என்றால் போரில்லாமலிருக்க முடியுமா? நாம் சும்மாயிருக்கின்றோம் என்று வைத்துக் கொள்வோம். வேறொரு மன்னன் நமது நாட்டின்மேல் படையெடுத்தால்?

**ஆதித் -** நாம் போர் செய்துதான் ஆகவேண்டும். பல்லாயிரக் கணக்கான வீரர் மடிந்துதான் ஆகவேண்டும்.

**பிர் -** நமது மன்னர் இராசேந்திரனைப் பற்றிக் கூறினேன். நீங்கள் சண்டைக்குப் புறப்பட்டுவிட்டீர்கள். போர் என்றால் உங்களுக்கு எவ்வளவு விருப்பம் இருக்கிறது!

**இரா - பி.சாத் -** எங்களுக்கு விருப்பமே கிடையாது.

**பிர் -** உங்களுக்கு விருப்பம் திருப்பதிகத்தில்.

**இரா.பி -** ஆம், மறந்துவிட்டேன், நல்லவேளையாக நினைப் பூட்டினீர்கள். யான் பெருவுடையார் கோயிலுக்குச் சென்று வருகிறேன்.

**சாத் -** யானும் தங்களுடன் வருகிறேன்.

**ஆதித் -** யானும் வருகிறேன்.

**பிர் -** நீங்கள், சென்றுவாருங்கள். நான் நாளை சென்று திருப்பதிகம் கேட்டுவருகிறேன்.

**சங் -** எனக்கு வேறு அலுவல் இருக்கிறது. சென்று வாருங்கள். உங்கள் எல்லோருக்கும் வணக்கம்.

**சாத் -** ஆதி. இரா-பி - வணக்கம். போய் வருகிறோம்.

(செல்லுதல்)

**பிர்** - சங்கரதேவரே, நீங்கள் எந்தப்பக்கம் செல்கிறீர்கள்?

**சங்** - நீங்கள் செல்லுகிறபக்கம் என்னால் வரமுடியாது. யான் வீரசோழப் பெருந்தெருவழி போகவேண்டும்.

(இருவரும் வெவ்வேறு பக்கங்களிற் செல்லுதல்)

---

## களம் 2

**இடம் :** தஞ்சை அரண்மனையில் திருவோலக்க மன்றம்.

**நடிகர்:** இராசேந்திரன், இராசாதிராசன், இராசேந்திர சோழதேவன், வீரராசேந்திரன், வல்லவரையர் வாண்டியதேவர், அரையன் இராசராசன், வானவன்மாதேவி, சர்வசிவ பண்டிதர்.

**பொழுது:** மாலை.

**இராசேந்திரன்** - மாமா, இனி எனக்கு அரசபதவியே வேண்டாம். எனது இணையற்ற தந்தை, இராசகேசரி, சிவபாத சேகரன், இராசராசதேவரே போய்விட்டார். இனி என்னாலாவதென்ன? அந்தோ, அவருடைய அகன்ற மார்பும், பரந்த தோள்களும், உயர்ந்த தோற்றமும், பகைவரையும் மகிழ்விக்கும் அவருடைய தாமரைக் கண்களும், கொடியோரை ஒறுக்கும் அவருடைய நிமிர்ந்த நெற்றியும், ஏறிய புருவங்களும் எனது கண்களை விட்டு என்றும் அகலா. அவற்றை யான் எக்காலமும் மறவேன்.

**வல்லவரையர்** - இராசேந்திர மன்னா, இன்னும் எத்தனை யாண்டு நீ இவ்வாறு உள்ளமுடைந்துருகக் கருதியிருக்கின்றாய்? நீ என்ன, சிறுவனா? உலகமறியாதவனா?

**இரா** - ஐயோ! அவர் எடுப்பித்த இராசராசேச்சரத்தை உலகம் என்றும் அறியும். கண்டோரைக் கருத்தழியச் செய்யும், அணுகியோரை மலைக்கச்செய்யும் வானளாவிய அதன் எடுப்பான இறுமாந்த தோற்றத்தைப் பாருங்கள்! அம்மம்ம! இது விண்ணவர் இழிவதற்கமைந்த படிகளின் வரிசையோ, அன்றிப் பண்டு திருமாலும், பிர்ம தேவனும் தேடியஞான்று இறைவன் எடுத்த தோற்றமோ, என்னென்றுரைப்பேன்! சிலர் இதனை என்னரிய தந்தை எட்டுத்திசையும் வென்றதற்குக்கட்டிய வெற்றித்தூண் எனக்கருதுகின்றனர். அற்றன்று, இது அவருடைய புகழுருவின் தோற்றம்! இறையன்பின் நிறைந்த காட்சி!

**வல்ல** - இராசேந்திரா, எனது சொற்கள் நினது செவிக் கேறவில்லையே?

**இரா** - விமானத்தின் உச்சியிலேறிய கருங்கல்லைப் பாருங்கள், ஒரே கல், எத்தனைப் பெரியது! எத்துணை நிறையுள்ளது! அதனை உச்சியிலேற்றிய விந்தையே விந்தை! கல்லின்மேல் நிற்கும் குடத்தைப்பாருங்கள். ஆசிரிய பெரும, தூபிக்குடத்தின் நிறையென்ன?

**சர்வசிவ பண்டிதர்** - வேந்தே, இந்த ஆராய்ச்சியெல்லாம் இப்பொழுது எதற்கு? தூபித்தறியில் வைக்கப்பட்டுள்ள செப்புக்குடத்தின் நிறை 3083 பலம். அதன் மேற் போர்த்துள்ள பொற்றகட்டின் நிறை 2926½ கழஞ்சு.

**இரா** - பெருவுடையாரை எதிர்நோக்கி அமர்ந்துள்ள நந்தியம் பெருமானைப் பாருங்கள். அம்ம! எத்துணைப்பெரியது! ஆனாலும் ஒரே கல்! அதன் நிமிர்ந்த முகத்தினையும், எடுப்பான திமிலையும், கவருங் கண்களையும், மேல் நோக்கி மூக்கைத் தழுவும் நாவினையும், முடக்கிய கால்களையும், மேனியழகினையும் பாருங்கள்.

**வல்ல** - மன்னா, ஏன் இன்னும் இந்த மதிமயக்கம்?

**இரா** - என்னரிய தந்தையின் மதியினளவை என்னென்று கூறுவேன்? அவர் எழுந்தருளிவித்த திருமேனிகளும், செய்துவைத்த அணிகலன்களும். வழிபாட்டிற்கு ஏற்படுத்தியுள்ள நிபந்தங்களும், கட்டியகோயில்களும், வெட்டிய எழுத்துக்களும், தீட்டிய ஓவியங்களும், நெஞ்சை நெகிழ்விக்கும் தேவாரத் திருப்பதிகங்ளை விண்ணப்பம் செய்ய செய்துள்ள ஏற்பாடும், ஐயகோ, எனது நெஞ்சைவிட்டு என்றும் நீங்கா.

**வானவன் மாதேவி** - குழந்தாய், உலகம் போற்றும் உனது தந்தையை யான் மறந்தாலும் நீ மறவாய்போலும். அவர் உனக்கு இணையிலாப் பேரரசை விட்டுச் சென் றிருக்கிறாரே, நீ தாழ்க்காது இராசகாரியம் பார்க்க வேண்டாமா?

**இரா** - ஆம், அம்மையே, இப்பேரரசு என் தந்தையின் வெற்றி மேம்பாட்டின் மெய்க்கீர்த்தியைப் புலப்படுத்துகின்றது.

(பாடுதல்)

திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வெங்கை நாடுங் கங்க பாடியும்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்களர் ஈழமண் டலமும்
இரட்ட பாடி யேழரை இலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீரா யிரமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட(வன்)
தேசுகொள் கோராச கேசரி வர்மரான
உடையார் ராசராச தேவர் - என்தந்தை.

**வா.தேவி** - குழந்தாய், இப்பேரரசை வென்று கொடுத்ததுதானா உன்தந்தை உனக்குச் செய்தது? தந்தை மகனுக்குச் செய்யவேண்டிய கடமைகளில் யாதாவது குறை வைத்துச் சென்றிருக்கிறாரா? எண்ணிப்பார்.

**இரா** - தாயே, தினையத்தனை குறையும் வைக்கவில்லை. பொய்யில் புலவர் வள்ளுவப் பெருந்தகை, ''தந்தை மகற் காற்று நன்றி யவையத்து - முந்தி யிருப்பச் செயல்'' எனக் கூறியாங்கு, என்னைக் கல்வி கேள்விகளில் தக்கோனாக்கி எப்பேரவையிலும் முந்தியிருக்கும்படி செய்தார் என் தந்தை. பண்டிதச் சோழனெனப் பாவலரும், நாவலரும், காவலரும் என்னைப்போற்றும் வண்ணம் செய்துவைத்தார் என்தந்தை. ''சான்றோனாக்கு தல் தந்தைக்குக்கடனே'' எனப்புலவர் பொன் முடியார் கூறினார். இதனை மேற்கொண்டு படைக்கலப் பயிற்சியாகிய கல்வி, அதற்குரிய அறிவு, செயல்கள் இவற்றில் என்னை நிறைந்தவனாகச் செய்தார் என் தந்தை. இத்தகைய தந்தைக்கு யான் என்ன கைம்மாறு செய்தேன்? ஓர் சிறிய உதவியேனுமுண்டோ?

**அரையன் இராசராசன்** - அரசரேறே, தாங்கள் தந்தைக்குச் செய்யாத உதவியுமுண்டோ? தாங்கள் கூறிய வள்ளுவனார் ''மகன் றந்தைக் காற்று முதவியிவன் றந்தை - என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.'' எனக் கூறியுள்ளாரே. தாங்கள் தங்கள் தந்தையின் தவத்தின் பெருமைக்கு இணையிலா எடுத்துக்காட்டாகவன்றோ விளங்குகின்றீர்கள்? தாங்கள் கூறிய புலவர் பொன் முடியார் ''ஒளிருவா ளருஞ்சம முருக்கிக் - களி றெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே'' எனக் கூறியுள்ளாரே, இக்கடனில் ஒரு சிறிதாவது தாங்கள் தவறினீர் களோ? தங்கள் தந்தையின் வெற்றிகளிற் பெரும்பகுதித் தங்களைச் சார்ந்ததன்றோ? பஞ்சவன் மாராயன் என்னும் பட்டம் தாங்கி, மலை, காடு, கடலாற்சூழப்பெற்று அடைதற்கரிதாயிருந்த சேர நாட்டின்மீது படை யெடுத்துச் சென்று காந்தளூர்ச் சாலையில் சேர

பாண்டியர்களை முறியடித்தது யார்? தங்கள் தந்தை யனுப்பிய தூதரைச் சிறைசெய்த குடமலை நாட்டரசனை வென்று அவன் நாட்டைக் கைக்கொண்டது யார்? கலிங்க நாட்டரசனை வென்று மகேந்திர மலையி னுச்சியில் வெற்றித்தூண் நாட்டிவந்தது யார்? சோழர் படையை அவமதித்துப் பேசிய படைவன்மையும் தோளாற்றலுமிக்க மேலைச் சாளுக்க அரசனாகிய சத்யாசிரயனுடைய இரட்டபாடியின் மீது ஒன்பது நூறாயிரம் வீரர்களடங்கிய பெருந்தானையை நடத்திச் சென்று கடும்போர்செய்து சத்யாசிரயன் போர்க்களத் திலிருந்து புறங்காட்டியோடும்படி செய்ததுயார்? அரசகோளரியாகிய தாங்கள் படைகளை அணிவகுத்து நிறுத்தி வேற்படை இடிஇடித்தாற் போன்று பகைவர் அணிவகுப்புகளைத் தாக்கிக் குலைக்கவும், வாட்படை மின்னைப்போன்று ஒளிவீசி பகைவீரர் தலைகளை வெட்டி வீழ்த்தவும், விற்படை விடாமழை போன்று அம்புகளைப்பொழிந்து, பகைவீரர் மார்களைத் துளைக்கவும், பிணமலைகுவியவும், செந்நீர் வெள்ளம் பெருக்கெடுத்தோடவும், முருகவேளென வீரத்தோடு பொருது நாட்டைச் சூறையாடி, நகரைக் கொளுத்திப் பாழ்படுத்திச் சாளுக்கர்குலத்தை வேரறுத்துத் திரும்ப வில்லையா? சுருங்கக்கூறின் தங்கள் தந்தையின் பேரரசை நிலைநிறுத்தியது தாங்கள் அன்றோ? அரசு தங்களுடையது. தயக்கமின்றி ஆட்சியை மேற்கொண்டு நடத்துங்கள். எத்தனையோ எதிரிகள் தருணம் பார்த்து நிற்கின்றனர்.

**இரா** - மகாதண்டநாயகமே, உமது தமிழறிவையும், சொற் பெருக்கையுங் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். என் னரிய தந்தை தாம்பெற்ற ஒவ்வொரு வெற்றிக்கும் இராசராசேச்சரமுடையாருக்கு எண்ணரிய நிபந்தங்கள் ஏற்பாடு செய்துள்ளார். முதற்கண் நவமணிகள் இழைத்த பொன்னாலாய அணிகலன்களின் மதிப்பை அளவிடல் முடியுமோ? இத்தகைய பெருந்தகையே இறந்தனர். இனி எனக்கென்ன வாழ்வு வேண்டும்!

**சர்வ** - எண்டிசை புகழும் பண்டிதச் சோழமன்னரே, திரும்பத் திரும்ப இவ்வாறு பேசுவதன் பயன் என்ன? யாக்கை நிலையாமை குறித்து யானா நினக்கு எடுத்துக்கூற வேண்டும்? ''நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்,பெருமை யுடைத்திவ் வுலகு'' என வள்ளுவனார் கூறினாரே. நேற்றிருந்தவன் இன்றில்லை யென்பதுதானே இவ்வுலக வாழ்வின் பெருமை. நீயும் செல்லவேண்டியவன், யானுஞ் செல்லவேண்டியவன் தானே. திருஞான சம்பந்தப் பிள்ளையார் நெஞ்சறி வுறுத்தலாகக் கூறியுள்ளதைக் கேள் :

**தந்தையார் போயினார், தாயரும் போயினார்**
**தாமும் போவார்**
**கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார்**
**கொண்டு போவார்**
**எந்தநாள் வாழ்வதற்கே மனம் வைத்தியால்**
**ஏழை நெஞ்சே**
**அந்தணாரூர் தொழுதுய்யலாம் மையல் கொண்**
**ட ஞ்சல் நெஞ்சே.**

**வா.தேவி** - குழந்தாய், உனது அருமைத் தந்தை உடம்பின் நிலையற்ற தன்மையை எவ்வாறு உணர்ந்திருந்தார் என்பதனை அவர் செய்த ஒவ்வொரு ஏற்பாட்டிலும் உணரலாமே. அதனாலன்றே அவர் இறப்பதற்குச் சில வாண்டுகள் முன்னரே உனக்கு முடி சூட்டி வைத்தார். இந்த ஒரு காரியத்தை உன்னிப்பார். அவருக்குப்பிறகு இந்தச் சோழப் பேரரசை நீயாள வேண்டுமென்று அவர் முன்னேற்பாடு செய்துவைத்திருந்தும் இப்பொழுது நீ ஏதேதோ அறியாதவன்போல் பேசுகின்றாய். பேச்சுப் போதும், காரியத்தைப்பார். ஒப்பற்ற வீரர்களாகிய நினது மக்கள் இம்மூவரும் இருக்கிறார்கள். உனக்கென்ன குறையுள்ளது?

வல்ல - எள்ளத்தனை குறையுமில்லை. இராசேந்திரா, தாய் சொல்லைத் தட்டாதே. நினது குடிகள் கவலையுள் ஆழ்ந்திருக்கின்றனர். முதல் அமைச்சனாய், சாமந்தர்

தலைவனாய் யான் எதற்காக விருக்கின்றேன்? எழுந்திரு, செங்கோல் நடக்கட்டும். நின் கொற்றம் ஓங்குக!

**அரை** - பஞ்சவன் மாராயன், பண்டிதச்சோழன், இராசேந்திர தேவன் கொற்றம் ஓங்குக!

எல்லோரும் - ஓங்குக!

**இரா** - தாயே, தங்கள் சொல்லை யான் ஒருக்காலும் தட்ட மாட்டேன். 'தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை'.

**(முழங்கால் மடக்கி யமர்ந்து வணங்குதல்)**

**வா.தேவி** - **(கையமர்த்தி)** வாழ்க நீ பல்லாண்டு, வாழ்க நின் கொற்றம்!

**இரா** - மாமா, இனி எனக்கொரு குறையுமில்லை. நமது பேரரசின் நிலை இப்பொழுது எவ்வாறுள்ளது? எல்லைப்புறக் காவல்கள் சரியாக இருக்கின்றனவா? கப்பக் கடமைகள் தவறாது வருகின்றனவா?

**வல்ல** - எல்லைப்புறக் காவல்களைப்பற்றி நினது வீரமக்கள் கூறுவர். கப்பக் கடமையைப்பற்றி யான் கூறுகின் றேன். இராசராச மண்டலமாகிய பாண்டியமண்டலம், இளவரசர் வீரராசேந்திரர் நேர் ஆட்சியிலிருப்பதால் கப்பக்கடமை கிடையாது. மும்முடிச் சோழமண்டல மாகிய ஈழத்திலிருந்து குடிகள் மூலம் அரசிறையே பெறுகின்றோம். கங்கபாடி, நுளம்பபாடி, தடிகைபாடி, குடமலை நாடுகள் இவற்றிலிருந்து கப்பக்கடமை தாழ்க்காது வந்துகொண்டிருக்கிறது. சயங்கொண்ட சோழமண்டலத்துச் சிற்றரசர்களும் தவறுவதில்லை. முந்நீர்ப்பழந் தீவுகளிலிருந்து பன்னீராயிரம் பொன்னும் தவறாமல் ஆண்டுதோறும் வருகின்றது. வெங்கைநாடு தங்கள் மஞ்சர் விமலாதித்தருடையது ஆதலின் நாம் அவரிடமிருந்து கப்பம் பெறுவதில்லை. ஆனால்

இரட்டபாடி ஏழரை இலக்கத்தில் நமக்குச் சேரவேண்டிய ஒன்றரையிலக்கம் சரியாக வருவதில்லை. இதைக்குறித்து இளவரசர் இராசாதிராசர் கூறுவர்.

**இராசாதிராசன்** - தந்தையே, மேலைச்சாளுக்கர் மிகவும் தந்திர சாலிகள். நமது நிலைப்படை அவ்வெல்லையில் பலம் பெற்றிருக்கின்றவரை கப்பக்கடமை தவறுவதில்லை. படையைச் சிறிது குறைத்தாலும் தொகை குறைந்து விடுகிறது. நமது தானைக்கஞ்சி அவர்கள் தமது கோநகரை மண்ணைக்கடக்கத்திலிருந்து கலியாணபுரத் திற்கு மாற்றிக்கொண்டிருக்கின்றனர். மேலும் நாம் எப்போது தளர்வோம் என்று சயசிம்மன் தருணம் பார்த்துக் கொண்டேயிருக்கிறான். ஆனாலும் யான் அவனுக்குச் சரியான அடிகொடுத்து அடக்கக் கருதி யுள்ளேன்.

**வீரராசேந்திரன்** - எந்தையே சேர பாண்டிய நாடுகளைப்பற்றித் தங்களுக்குச் சிறிதும் கவலை வேண்டியதில்லை. தாங்கள் ஈழத்தரசன் மகிந்தனை முறியடித்துக் காட்டிற்கு ஓட்டிய பிறகு ஈழமும் அடங்கிக்கிடக்கின்றது. இருப்பினும் அதைக்குறித்து எச்சரிக்கையாகவே இருக்கின்றேன். கடல்தாண்டிய நாடாகவிருப்பதால் ஈழத்தாரும் தருணம் பார்த்துக்கொண்டேயிருப்பர்.

**இராசேந்திரசோழதேவன்** - தந்தையே, சயங்கொண்ட சோழ மண்டலத்தைப் பற்றிச் சாமந்தர் தலைவரே தங்களுக்குக் கூறிவிட்டார். ஆனாலும் யான் குறிப்பிட வேண்டிய தொன்று உண்டு. வெங்கை நாட்டை மாமா விமலாதித்தர் ஆண்டு வருவது தங்களுக்குத் தெரியும். கலிங்கநாட்டு மன்னரிடமிருந்து நமக்கு இவ்யாண்டு இன்னும் கப்பம் வரவில்லை. இத்துடன் நில்லாது அவர் மாமா விமலாதித்தருக்கு அடிக்கடி தொந்தரை கொடுத்து வருகிறார். ஆகலின் விமலாதித்த மன்னரை யழைத்து நிலைமையறிந்து ஆவன செய்யவேண்டும்.

**அரை** - மன்னர் மன்ன, கடற்காவற் குறித்துங் கவலையில்லை. ஈழத்துப் போரும், முந்நீர்ப்பழந் தீவுகளும் நமது கடற்படை வன்மையை உலகிற்கு எடுத்துக்காட்டி யுள்ளன. கடாரம், சீனம் ஆகிய இரண்டு பேரரசுகளும் நம்முடன் நட்பாக விருக்கவே விரும்புகின்றன.

**இரா** - மாமா, நிலைமையை முற்றுமுணர்ந்தேன். எனதுள்ளம் ஒருவாறு தெளிவுற்றது. மக்கள் வாழ்வின் நிலை யாமையுணர்ந்து என் ஒப்பற்ற தந்தை செய்தவாறு யானும் ஒன்று செய்யக்கருதியுள்ளேன். அதற்குத் தங்கள் ஒப்பமும், எனது வீரத்தாயின் உடன்பாடும், ஆசிரியர் வாழ்த்தும் ஏற்படுமானால் உடனே அவ்வாறு செய்து விடுவேன்.

**வல்ல** - மன்னரே, தாம் செய்யக்கருதுவது உணர்ந்தேன். அவ்வாறே செய்யலாம்.

**வா.தேவி** - நீ செய்யக்கருதுவது என்ன? விளங்கச்சொல், நான் தடை செய்யேன்.

**இரா** - என்னருமைத் தந்தை தமது ஆட்சியிறுதியில் எனக்கு முடிசூட்டினார். யான் எனதாட்சியின் தொடக்கத்தி லேயே இராசாதிராசனுக்கு முடிசூட்டக் கருதியுள்ளேன்.

**வா.தேவி** - குழந்தாய், எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சி, மிகத் தேர்ந்துகூறினாய். உடனே அவ்வாறு செய்வதே நல்லது.

**வல்ல** - வேந்தே, தங்கள் கட்டளை யேற்படுமானால், உடனே அதற்காக வேண்டிய வினைகளைத் தொடங்கி விடு வேன்.

**சர்வ** - இராசேந்திரா, எனது வாழ்த்திற்குரிய செய்தியே இது. வாழ்க நின் கொற்றம். வாழ்க நின் குலம்.

**அரை** - அரசே, நீண்ட நேரமாயிற்று.

**இரா** - ஆம், ஏனையவற்றைப் பின்னர் சிந்திப்போம்.

**(எல்லோரும் எழுதல்)**

---

## களம் 3

**இடம் : தஞ்சாவூர் புறம்படியில் படைப்பயிற்சிப் பறந்தலை.**

**நடிகர் : சிங்கப்புலியர், வீரப்புலியர், களத்து வென்றார், போர் மூட்டியார், வாள் வெட்டியார்.**

**பொழுது : காலை**

**சிங்கப்புலியர்** - அடே, வீரப்புலி, உன்கைவரிசையெல்லாம் என்னிடம் காட்டாதே. அதெல்லாம் வேறிடத்திலே வச்சுக்கோ.

**வீரப்புலியர்** - ஏய், சிங்கப்புலி, உன்கைவரிசையெல்லாம் என்னிடம் வேண்டாம். அதெல்லாம் உன் வீட்டோடு இருக்கட்டும்.

**சிங்** - என்னடா, வீட்டோடு என்கிறாயே, என்ன? இதோ இதற்குப் பதில் சொல்.

*(வாளை யுறுவுதல்)*

**வீரப்** - *(வாளை யுறுவுதல்)*

**களத்துவென்றார்** - அடே வீரப்புலி, தம்பி சிங்கம், வாளை உறையிலே போடுங்கள். நான் சொல்கிறதைக் கேளுங்கள், வாய்ச்சண்டை வாயோடிருக்கட்டும். வாட் சண்டை வேண்டாம்.

**போர்மூட்டியார்** - தம்பி, களம், நீ சும்மாயிரு. இதை விட்டுத் தான் பார்க்கவேணும், வெகுநாளைச் சண்டை.

**களத்** - சிங்கப்புலி, வீரப்புலி, உங்களுக்குள்ளே, என்னப்பா சண்டைக்குக் காரணம்?

சிங் - அண்ணா, நான் சொல்கிறதைக் கேளுங்க, கையாலாக மாட்டாத இந்த வீரப்புலி என் வீட்டுப்பேச்சை ஏன் எடுக்கிறான்?

வீரப் - அண்ணா, ஒரு சொல் கேளுங்க, வயிற்றுச்சாப்பாட்டுக்கு வழியில்லையே, பிள்ளைக்குட்டியெல்லாம் பட்டினி யால் வாடுகிறாங்களே என்று சிங்கப்புலி பெண்டு சொன்னாங்க. ஆண்பிள்ளையாயிருக்கிறவன் இதற் கென்ன பதில் சொல்லவேணும், நீங்கள் சொல்லுங்கள். பெண்டாட்டிப் பிள்ளைகளையெல்லாம் இழுத்துப் போட்டு அடிக்கிறதா?

சிங் - அடே, வாயைமூடு, நான் சொல்கிறதைக்கேளுங்க அண்ணா, என் பெண்டுபிள்ளைகளை அடிக்கிறதற்கு, இவன் யார் கேட்க?

கனத் - அப்படிச்சொல்லாதே சிங்கம். வீரப்புலி சொல்கிறதில் நீதி நேர்மை இருக்குதே.

வீரப் - அன்றைக்கு நான் இல்லாவிட்டால் ஒரு கொலை விழுந்திருக்கும். நான் குறுக்கேபாய்ந்து தடுத்தேன். சிங்கப்புலி பெண்ணு, ஒருகண்ணானபெண்ணு. சிங்கப் புலியை இழுத்துப் பிடிச்சுத் தடுத்தேன். அந்தப் பெண்ணு என்னைக் கையெடுத்துக் கும்பிட்டாள்.

கனத் - வீரப்புலி, உன் வேலையை நான் மெச்சுகிறேன். இஃதிருக்கட்டும். இதுதானா உங்கள் சண்டைக்குக் காரணம்?

வீரப் - இல்லையண்ணா, இரட்டபாடிச் சண்டையிலே இந்தச் சிங்கப்புலி எதிரியை எதிர்த்து நிற்க மாட்டாமே உயி ருக்கு அஞ்சி ஒரே ஓட்டமா ஓடி வந்துவிட்டாரு என்று என் நண்பனிடத்துச் சொல்லிக்கொண்டிருந்தேன். இதிலே என்ன தவறு, நீங்கள் சொல்லுங்கள்.

**சிங்** - நானா ஓடி வந்தேன், ஏ பேடிப்பயலே. **(வாளையுறுவுதல்)**

**வீரப்** - ஏய், சிங்கம், வேண்டாம், வாளை யுறையிலே போடு. இதெல்லாம் உன் வீட்டோடு இருக்கட்டும்.

**சிங்** - **(வாளை வீசுதல்)**

**களத்** - **(சிங்கப்புலியின் வாளை தனது வாளால் தடைசெய்து)** சிங்கப்புலி, வாளை யுறையிலேபோடு, நான் சொல்கிறதைக் கேள்.

**போர்** - தம்பி, களம், நீங்கள் சும்மா இருங்களே, இதை விட்டுத்தான் பார்க்கவேணும்.

**சிங்** - (வாளை யுறையிலே போட்டுக்கொண்டே) களத்தண்ணா, இப்போது நீங்கள் இல்லாவிட்டால் இந்தப்பயல் என் வாளுக்கிரையாயிருப்பான். திரும்பத்திரும்ப இவன் என் வீட்டுப்பேச்சை ஏன் எடுக்கிறான்? இந்தப்பயல் ஈழத்துப் போரிலே புறங்காட்டி ஓடிவந்தது யாருக்குத் தெரியாது?

**வீரப்** - சிங்கம், பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேணும். நான் அந்த ஈழத்துச் சண்டைக்கும் வர வில்லை, இழவுச்சண்டைக்கும் வரவேயில்லை.

**சிங்** - ஆமாம் மறந்துவிட்டேன், ஈழத்துச் சண்டையிலே இல்லை. இலங்கைச் சண்டையிலிருந்துதான் ஓடிவந்தான் இந்தப் பயல். (களத்துவென்றார் முதலியவர் சிரித்தல்) என்ன, சிரிக்கிறீங்கள், நான் சொல்கிறது பொய்யா?

**களத்** - இல்லவேயில்லை. யார் சொல்லுவார் பொய்யென்று? ஆனால், ஈழம், இழவு, இலங்கை எல்லாம் ஒன்றுதான் என்கிறது சிங்கத்துக்குத் தெரியவில்லையே.

**சிங் -** அப்படியா? அடிப்படியானால் இவன் எந்தச் சண்டையிலிருந்து ஓடிவந்தான் என்று சொல்கிறேன், கேளுங்கள். (சிந்தித்தல்)

**களத் -** சிங்கம், வீரப்புலியைப்பற்றிப் பேசவேண்டாம், விட்டுவிடு. அவன் எந்தச் சண்டையிலிருந்து ஓடி வந்தான் என்று எனக்குத்தெரியும். நீ ஏன், பெண்டு பிள்ளைகளை அடிக்கிறாய், அதைச்சொல்லு.

**சிங் -** உங்களுக்குத் தெரியுமா, அடே, வீரப்புலி, கேள், களத் தண்ணா சொல்கிறதை. எனக்கு நாமுகம் சரியாயில்லை.

**போர் -** சிங்கம், உனக்கு நாமுகமில்லை. சிங்கப்புலிமுகமல்லோ இருக்குது. (எல்லோரும் சிரித்தல்)

**களத் -** சிங்கம், உனக்கு நாமுகம் இல்லையென்கிறது சரியாகத் தானிருக்கிறது. பெண்பிள்ளைகளை ஏன் அடிக்கிறாய் என்கிறதற்குப் பதில் சொல்லவில்லையே.

**சிங் -** அதை ஏன் கேட்கிறீங்க அண்ணா! எல்லாம் இந்த இழவுப் போரில்லாமற்றான். அரசாங்கத்தில் போர் ஏற்பட்டால், எனக்கு வீட்டில் சண்டைகிடையாது. அரசாங்கச் சண்டை நின்றால் வீட்டுச்சண்டை தொடங்கி விடும்.

**களத் -** என்னப்பா, நீ சொல்கிறது விந்தையாயிருக்குது.

**சிங் -** எல்லாம் விந்தையாத்தானிருக்கும் உங்களுக்கு. என்னைப் போல உங்களுக்கும் நாலு பிள்ளைக்குட்டி இருந்தால் அல்லவோ தெரியும்.

**போர் -** பிள்ளைக்குட்டிக்கும் போருக்கும் என்னப்பா தொடர்பு இருக்குது?

**சிங் -** இந்தச் சின்ன செய்தி உங்களில் ஒருவருக்கும் தெரிய வில்லையே. பெரிய அரசாங்க காரியமெல்லாம்

உங்க ளுக்கு எங்கே தெரியப்போகுது? என்னைப்போல ஒரு காலாட்படை வீரனுக்குச் சண்டையில்லாக் காலத் திலே நெல் நிபந்தம் எவ்வளவு தெரியுமா? நாளொன் றுக்கு இராசகேசரி மரக்காலாலே பதக்குதான் கிடைக் கிறது. இராசராசக்காசு இரண்டு கிடைக்கிறது. இதைக் கொண்டு நான் என் பெண்டு, பிள்ளைகள் அஞ்சுபேர் எப்படிக்காலம் கடத்தமுடியும்? அரசாங்கப் போர் ஏற் பட்டுவிட்டால் என் குடும்பப்பொறுப்பு முழுதும் அரசாங்கத்துத் தலையிலே விழுந்துவிடும். அப்புறம் எனக்கென்ன, போருக்குப்போய்விட்டால் உணவைப் பற்றியோ, உடையைப்பற்றியோ கவலையேது?

**களத்** - சிங்கப்புலி, நீ சொல்கிறது மிகவும் சரிதான். படைத் தலைவனாயிருக்கிற எனக்கே அருண்மொழித் தேவன் மரக்கால் ஆறும், ஈழப் பொற்காசு இரண்டும் போத வில்லை.

**போர்** - தம்பி, களம், தண்டநாயகத்துக்கு நிபந்தம் எவ்வளவு இருக்கும்?

**களத்** - அதை ஏன் கேட்கிறீங்கள், அவர்களுக்கெல்லாம் என்ன குறைச்சல்? ஆடவல்லான் மரக்காலாலே எத் தனையோ கலம், துளைப்பொன் எவ்வளவோ, யார் கண்டா?

**சிங்** - களத்தண்ணா, உங்களை ஒரு சேதி கேட்கிறேன், மறைக்காமல் சொல்லணும்.

**களத்** - சும்மா சொல்லு சிங்கம். ஏன் மறைக்கிறேன்?

**சிங்** - அரசாங்கப் போர் எப்போதாவது வரும் என்று உங்க ளுக்குத் தோணுதா?

**களத்** - வரும், வரும், அதைப்பற்றிக் கவலைப்படாதே, நம்முடைய மன்னர் பெருமானும் அவருடைய வீர

மக்களும் சும்மாவிருப்பார்களென்று நான் நினைக்க வில்லை. சிங்கம், ஏய் வீரப்புலி, உங்களுக்கு ஒன்று சொல்கிறேன், கேளுங்கள். எத்தனையோ சண்டை வரப் போகிறது. அங்கேபோய் உங்கள் வீரத்தைக் காட் டுங்கள். உங்களுக்குள்ளேயே அடிச்சுக்கொண்டு சாக வேண்டாம்.

வீரப் அண்ணா, நீங்கள் சொல்கிறது சரிதான். ஆனால் போருக்குப்போனால் அங்கே சாவு இல்லையோ?

(பாடுதல்)

**சண்டை சச்சரவைச் சரியாகப் பார்த்தால்**
**மண்டைப் பூச்சிகள்மா ளுவதற்கே வழியாம்**
**தண்ட நாயகர்தா னைநடத்து வதெல்லாம்**
**மிண்டர் வீரர்மீ ளாதிருக்கும் வழியாம்.**

இதற்கென்ன பதில் சொல்லுங்களே, பார்ப்போம்.

**களத்** - வீரப்புலி, நீ நன்றாப் பாடுகிறாயே, உனக்கு வீரப்புலி என்று எப்படி பேர் வந்தது?

**வீரப்** - சிங்கத்துக்கு சிங்கப்புலியென்று எப்படி பேர் வந்தது? அதைக் கேளுங்கள், அப்புறம் நான் சொல்கிறேன்.

**சிங்** - களத்தண்ணா, இந்தப் பயல் இனிமேல் என்வீட்டுப் பேச்சை எடுக்காமலிருந்தால் நான் சொல்கிறேன்.

**களத்** - அவனைப்பற்றி கவலைப்படாதே, சும்மா சொல்லு.

**சிங்** - என்பேர் சிங்கப்புலி இல்லை. என் பேர் மருதன், சிங்கப்புலி என்பது எங்கள் பாட்டனார் காலத்துக்குமுன்னேயிருந்து எங்கள் குடிக்கு வழங்கிவருகிற பட்டம், என் பாட்ட னாருடைய பாட்டனோ, யாரோ, தெரியவில்லை. ஒரு ஊரிலே ஒரு சிங்கமும், ஒரு புலியும் அடிக்கடி வந்து குடிமக்களைத் தூக்கிப்போய்க் கொண்டிருந்துதாம்.

இரண்டையும் அவர் வெட்டி வீழ்த்திவிட்டாராம். இதுதான் காரணம்.

**போர்** - நான் அப்படிக் கேள்விப்படவில்லையே அப்பா, உன் பாட்டனாருடைய பாட்டன் ஒரு ஆண்சிங்கத்துக்கும் ஒரு பெண்புலிக்கும் பிறந்தவராமே.
*(எல்லோரும் சிரித்தல்)*

**சிங்** - விளையாட்டு வேண்டாம் அண்ணா, நான் சொன்னதுதான் உண்மை. வீரப்புலிக்கு என்ன காரணம்? அதைக் கேளுங்கள்.

**வீரப்** - என்பாட்டனாருக்கு நம்முடைய மன்னர் இராசேந்திர தேவருடைய பாட்டனார் இந்தப்பட்டம் கொடுத்தாராம். காரணம் என்ன இருக்கும்? அவருடைய வீரந்தான் காரணமாயிருந்திருக்க வேணும்.
*(வாள்வெட்டி வருதல்)*

**களத்** - வரவேணும், வரவேணும், வாள்வெட்டியாரே, எங்கே இவ்வளவு நாழிகைக்குமேலே?

**வாள்வெட்டியார்** - அண்ணா, தம்பி எல்லோருக்கும் வணக்கம். இராசவித்தியாதரப் பெருந்தெரு வழிவந்து, வில்லிகள் தெருப்பக்கம் திரும்பினேன். உங்கள் பேச்சுக்குரல் கேட்டது. வந்தேன். வீரப்புலி என்னகிறபட்டம் வந்ததற்குக்காரணம் தெரியவில்லை என்று வீரப்புலி சொன்னாரே. எனக்குத் தெரியுமே காரணம்.

**களத்** - என்ன, சொல்லப்பா, நீ இல்லாமல் எங்கள் பொழுது சரியாகப் போகவில்லை.

**வாள்** - வீரப்புலியின் பாட்டனார் ஒருநாள் ஒரு காட்டு வழியே போய்க்கொண்டிருந்தாராம். அப்போது ஒரு ஆள் இவர் போன திசையை நோக்கி ஓடிவந்தானாம். அந்த ஆள் நெருங்கி வருவதற்குமுன்னே வீரப்புலியின் பாட்டனார்,

ஏனப்பா ஓடிவருகிறாய் என்று கேட்டாராம். அதற்கு அவன் புலியடிச்சுவட்டைப் பார்த்து ஓர் ஆள் ஓடினான். அவனைப்பார்த்து நான் ஓடிவந்தேன் என்று சொன் னானாம். இதைக்கேட்டதும் கேட்காததுமாக வீரப் புலியின் பாட்டனார் ஒரே ஓட்டத்திலே ஊர்வந்து குதித்துவிட்டாராம். இப்படிப் புலியடியைக் கண் டோடியவனைக் கண்டோடியவனைக் கண்டோடி வந்த கல்நெஞ்சு வீரப்புலியின் பாட்டனாருக்கு இருந்ததனால் தான் அவருக்கு நம் மன்னருடைய பாட்டனார் வீரப்புலி என்கிற பட்டம் கொடுத்தாராம். **(எல்லோரும் சிரித்தல்)**

**களத்** - வாள்வெட்டி, நீ சொல்கிறதுதான் பொருத்தமாயிருக் கிறது. இதிருக்கட்டும், உனக்கெப்படி வாள்வெட்டி என்று பேர் வந்தது?

**வாள்** - என்பட்டம் என்பட்டந்தான். என்பாட்டனார் காலத்தி லிருந்து வந்ததில்லை, கங்கைபாடிச் சண்டையிலே என் வீரத்திற்கு மெச்சி இராசகேசரி இராசராச தேவர் எனக்குக்கொடுத்த பட்டம் இது. என் வீரத்திற்கு நான் கூடக் காரணமில்லை. என் வாள் தான் காரணம். என் வாள் எப்பேர்ப்பட்டது தெரியுமா? நான் வாள் வெட்டி யாயிருந்தாலும், அது வெட்டி வாள் இல்லை. இதோ பாருங்கள், இதன் கூர்மையை.
**(வாளை உரைகழித்துக்காட்டுதல்)**

**களத்** - **(தொட்டுப் பார்த்து)** சரியான வாளப்பா!

**போர்** - (தொட்டுப் பார்த்து) கூர்மையான வாளப்பா!

**சிங்** - வாள்வெட்டிக்கு மாத்திரம் இப்பேர்ப்பட்ட வாள் எங்கே கிடைச்சுது?

**வாள்** - மேலே சொல்கிறேன் கேளுங்கள். அந்த தடிகைபாடிச் சண்டையிலே -

**வீரப்** - என்ன உளறுகிறாய், கங்கைபாடிச் சண்டையிலே என்று சொன்னாயே?

**வாள்** - ஆமாம், கங்கபாடியிலேதான். சண்டை மிக மும்முர மாய் நடந்தது. என் உயிருக்கே முடிவு வந்துவிடும் போலே இருந்தது. என்ன செய்தேன் தெரியுமா? உயிர் போனாலுஞ்சரி, இருந்தாலுஞ்சரி என்று இந்த வாளை ஒரே வீச்சாய் வீசினேன். எதிரியின் இரண்டு காலும் பத்துத் தப்படிக்கப்பாலே போய்விழுந்தது.

**களத்** - ஏய், வாள்வெட்டி, இதற்குத்தானா இவ்வளவு ஆடம்பரமாப் பேசினாய்? நான் என்னமோ, தலை யைத்தான் வெட்டி வீழ்த்திவிட்டாய் என்றல்லோ நினைச்சேன்?

**வாள்** - களத்தண்ணா, அதற்கு நான் என்ன செய்யமுடியும்? தலையிருந்திருந்தால் சும்மா விட்டிருப்பேனா?

**களத்** - நீ வெட்டினபோது தலையில்லையோ?
**(எல்லோரும் சிரித்தல்)**

**சிங்** - களத்தண்ணா, இந்த வெட்டிப்பயலுக்கு எப்பொழுதும் வேடிக்கைப் பேச்சுத்தான் மிச்சம். நான் போய் வரு கிறேன். என் பெண்டு எனக்காக உணவுண்ணாமே காத்திருப்பாள்.

**களத்** - எல்லோரும் போகவேண்டியதுதான். உச்சிப்போது தாண்டிவிட்டது. சிங்கம், இனிமேல் வீட்டிலே சண்டை போடாதே.

**சிங்** - இனிமேல் வீட்டிலே சண்டையிராதண்ணா, நீங்க தான் அரசாங்கச் சண்டை வரப்போகுது என்று சொல் கிறீங்களே. இந்தப்பயல் வீரப்புலியைமாத்திரம் என் வீட்டுப் பேச்சை எடுக்க வேண்டாம் என்று சொல்லுங்கள்.

**வீரப்** - (சிங்கப்புலியை நோக்கி) நான் ஏன் இனிமேல் உன் பேச்சுக்கு வருகிறேன். அன்றைக்கு உன் பெண்ணுக் கெஞ்சிக் கேட்டதற்காக ஓடிவந்து தடுத்தேன். நான் தடுக்காமலிருந்தால் உன் பெண்டாட்டி யமலோகம் போயிருப்பாளே.

*(எல்லோரும் செல்லுதல்)*

---

## களம் 4

**இடம் :** **தஞ்சாவூரிலிருந்து வல்லத்திற்குச் செல்லும் சாலை.**

**நடிகர் :** **இராசராசப்பிச்சன், ஆதித்தன், சாத்தவேன், சங்கரதேவன், பிர்மவர்மன்.**

**பொழுது:** மாலை.

**சங்கரதேவன்** - பிர்மவர்மரே, ஆதித்தரே, இச்சாலையைப் பார்த்தீர்களா?

**பிர்மவர்மர்** - ஏன், எப்படி இருக்கிறது?

**ஆதித்தன்** - எப்படி இருக்கிறதா? வல்லம் சாலையின் வனப்பே வனப்பு ஆனால், இனிமேல் என்னாகுமோ?

**சிங்** - ஆமாம், யார் கண்டா, எப்படியாகுமோ? இராசராச தேவர் இருந்தவரையிலும் வல்லம் அரண்மனைக்கு அடிக்கடி ஓய்வுக்காகப் போய்க்கொண்டிருந்தார். சாலையும் சரி யாகக் கண்காணிக்கப்பட்டு வந்தது.

**பிர்ம** - இராசேந்திர தேவர் வல்லம் அரண்மனைக்குச் செல் கிறதில்லையோ?

**சங் -** இராசேந்திரருக்கு ஓய்வு ஏது?

**பிர்ம -** ஓ, அப்படியானால் அவருக்குத் தந்தை பிரிவால் ஏற்பட்ட மனக்கலக்கம் நீங்கிவிட்டதா? அதோ பாருங்கள், நமது நண்பர்கள் வருகிறார்கள்.
**(இராசராசப்பிச்சன், சாத்தவேள் வருகை)**

**சங் -** சாத்தரே, பிச்சரே, இவ்வளவு தொலை தாங்கள் வருவதுண்டா?

**இரா -** பிச்சன் - ஏன், வராமல்? இங்கே தென்றல் வீசுவது போல எங்கே வீசுகிறது? உலாவுவதற்கு இச்சாலை தான் ஏற்றதாயிருக்கிறது. நிழல்தருமரங்களும், புழுதியில்லாத சாலைத் தளமும் வல்லம் சாலைக்கு ஓர் தனி வனப்பைக் கொடுக்கின்றன.

**சாத்தவேள் -** நாள்தொறும் இங்கே காற்றுக்கு வந்தால் திரும்பும்போது பெருவுடையார் கோயிலுக்குப் போவதும் எளிது.

**பிர்ம -** ஆமாம், நீங்கள் சொல்வது சரியே, நானும் ஒருநாள் திருப்பதிகம் கேட்டுவந்தேன்.

**இரா.பி -** கேட்டுவந்தீர்களா? அவர்கள் பாடுவது எவ்வாறிருந்தது?

**பிர்ம -** நான் திருப்பதிகம் விண்ணப்பஞ்செய்ய இரண்டொருபேர்கள் தானிருப்பார்கள் என்று நினைத்தேன். எத்தனையோ பேர்கள் இருக்கிறார்களே?

**இரா.பி -** இராசராசதேவர் இதற்காக நாற்பத் தெட்டுப்பேர்களை ஏற்பாடு செய்துள்ளார். இவர்களுக்குப் பக்கவாத்தியர்களும் பலபேர் உண்டு. தமிழிசை பாட இன்னும் எத்தனையோ காந்தர்வர் காந்தர்விகள் இருக்கின்றனர். இவர்கள் தவிர நானூறு பணிப்பெண்

களும் இருக்கின்றனர். பெருவுடையார் கோயிலுக்குத் தெற்கிலும் வடக்கிலும் இருக்கும் தெருக்கள் இவர்களுக்காகவே எடுக்கப்பட்டவை. கொட்டி மத்தளக் காரர், வீணைவாசிப்பவர், மொரலியம், வங்கியம், பாடவியம், உடுக்கை வாசிப்பவர், முத்திரைச் சங்க முழக்குவோர் இவர்களெல்லாம் பக்கவாத்தியர். பிர்ம வர்மரே, திருப்பதிகம் பாடுவது எவ்வாறிருந்தது? அதைச் சொல்லுங்கள்.

**பிர்ம** - அதை எப்படிச் சொல்லமுடியும்? மிக இனிமையா யிருந்தது.

**இரா. பி** - அவ்வளவுதானா? நான் கேட்கும்போது என துள்ளம் உண்மையிலேயே உருகி விடுகின்றது. யான் என்னையே மறந்துவிடுகிறேன். இறைவனிடம் என துள்ளம் ஈடுபட்டுவிடுகின்றது. அப்பொழுதுதான் எனக்கு இப் பிறப்பிலும் வெறுப்பேற்படுகிறது.

**சாத்த** - பிச்சரே, இதற்குத் தங்கள் உள்ளத் தூய்மைதான் காரணம்.

**இரா.பி** - எனதுள்ளத் தூய்மை என்று சொல்வதைவிடச் செயற்கரிய செய்த சைவப் பெருமக்களாகிய திருநாவுக் கரையர் திருஞானசம்பந்தர், சுந்தரர், இவர்களுடைய அருள்வாக்கின் பெருமை என்று சொல்வதே பொருத்தம். இன்னிசைபொருந்த அவர்கள் அருளியுள்ள திருப் பாடல்களைவிட இறைவன் பெருமையைக் குறித்து நமக்கு உணர்ச்சியூட்டக்கூடிய வேறு வழியேது? என்னமோ, இராசராசதேவர், ஆரியம்பாடவும், சாம கானம்பாடவும் ஏற்பாடு செய்துள்ளார். எனக்கு அப் பாடல்கள் சிறிதும் விளங்கவேயில்லை. பொருள் விளங்காமையால் உருக்கத்திற்கும் வழியில்லை. பாடு கிறவர்களுக்காவது உருக்கம் ஏற்படுமோ, என்னிமோ, எனக்குத் தெரியவில்லை, சதாசிவனோ, ஞானசிவனோ, தருமசிவனோ, பாடும்போது கேட்டால் என்னையறியாது

என் கண்களில் நீர் சுரந்து விடுகிறது. மயிர் சிலிர்த்து விடுகிறது. சாமகானம் கேட்கும்போது ஒருவகை யுணர்ச்சியும் ஏற்படுகிறதில்லை.

சாத்த - நீங்கள் கூறுவது முழுதும் உண்மை. எனக்கும் உங்கள் உணர்ச்சியே ஏற்படுகின்றது.

ஆதித் - நானும் அதை ஒப்புகிறேன்.

பிர்ம - உங்களைப்போல் எனக்குத் தமிழறிவு அவ்வளவு இல்லாவிட்டாலும் நீங்கள் சொல்லுவது முழுவதும் உண்மையென்றே எனக்குப் புலப்படுகின்றது.

சங் - என்ன, திருப்பதிகப் பேச்சிலேயே ஆழ்ந்துவிட்டீர்கள்?

ஆதித் - சங்கர தேவரே, உங்களுக்கு அரசாங்கச் செய்தியெல்லாம் தெரியும். ஏதாவது புதிய செய்தியுண்டோ?

சங் - புதியசெய்தியென்ன? நமது வேந்தர் ஆட்சி தொடங்கிவிட்டார். இந்தக்கவலை ஒழிந்தது. நாடுமுழுதும் ஊர்ச் சபைகளுக்குக் குடவோலைத் தேர்தல் நடைபெற்று வருகிறது.

ஆதித் - ஊர்ச்சபையின் நிறைவேற்றுக் கழகத்திற்கு என்னைப் போன்றவர்கள் உறுப்பினராதல் முடியாது.

சங் - நீங்கள் சொல்வது உண்மைதான். இராசராசப்பிச்சர்களைப் போன்றவர்கள் எளிதில் உறுப்பினராகலாம்.

இரா.பி - எதனால் இப்படிக்கூறுகிறீர்கள்?

சங் - நிறைவேற்றுக் கழக உறுப்பினராதலுக்குப் பல தகுதிகள் வேண்டும். அவர்கள் காணிக்கடன் செலுத்தற்கேற்ற கால்வேலி நிலமும் சொந்தமனையும் உடையவராயிருக்க வேண்டும். உலகியலறிவும், கல்வியறிவும்

உடையவர்களாய்ப் பிறருக்கு மதிகூற வல்லவரா யிருக்க வேண்டும். முப்பத்தைந்து வயதிற்கு மேற் பட்டு எழுபத்தைந்து வயதிற்கு மேற்படாதவரா யிருக்க வேண்டும். மூன்று யாண்டுகளுக்குட்பட்டு வேறு நிறைவேற்றுக் கழகங்களில் உறுப்பினராய் இருந்திருத்தல் கூடாது. நல்லவழியில் ஈட்டியபொரு ளும் தூயவாழ்க்கையும் உடையவர்களாயிருக்க வேண்டும்.

**ஆதித்** - அம்மம்ம, அப்படியானால் என்னைப் போன்றவர் களுக்கு இவைகளில் இடமேயில்லை.

**சங்** - ஏன் இவ்வாறு சொல்கிறீர்கள்? நீங்கள், என்ன, தகாத வரா? ஒருமுறை உறுப்பினராயிருந்து கணக்குக் காட்டாதோரும் அவருடைய நெருங்கிய உறவின ரும் உறுப்பினராதல் முடியாது. ஒழுக்கமில்லாதவர் களும், தகாநடத்தையுடையோரும் கடுமையாக விலக்கப்பட்டவர்கள். ஒருக்காலும் அவர்கள் உறுப் பினராதல் முடியாது.

**இரா.பி** - வேறு ஏதாவது செய்தியுண்டோ?

**சங்** - மிகச் சிறப்பான, மிகப்பெரிய சேதி ஒன்றுண்டு.

**இரா.பி** - என்ன, போர்தானே.

**சங்** - இல்லையில்லை. ஆனால் பின்னர் போரும் ஏற்படலாம்.

**சாத்த** - போராகத்தானிருக்கவேண்டும்.

**பிர்ம** - சங்கரதேவரே, ஏன் எங்களைச் சோதிடம்பார்க்க விடுகிறீர்கள். விரைவில் சொல்லுங்கள். அதென்ன மிகச்சிறப்பான, மிகப்பெரிய காரியம்?

**சங்** - நமது மன்னர் பெருமான் மூத்த மகனார் இராசாதிராசர் முடிசூட்டு விழா.

**இரா.பி** - மிகத் தேர்ந்த காரியம். இராசேந்திர மன்னர் மிகப் பெரிய அறிவாளி. இவ்வளவு பெரிய அரசை ஒருவரே நடத்துதல் முடியாத காரியம்தான்.

**ஆதித்** - நண்பரே, போரும் ஏற்படலாமென்று எதனால் சொல்கிறீர்கள்?

**சங்** - நமது பேரரசின் வடகீழ் எல்லையில் கொந்தளிப்பு ஏற்படும்போல் தோன்றுகிறது. கலிங்க மன்னன் கப்பக் கடமை செலுத்த மறுத்துவிட்டானாம். நமது மன்னர் அவனை ஒருக்காலும் மன்னிக்க மாட்டார்.

**இரா.பி** - சங்கர தேவரே, இந்தச் செய்தியெல்லாம் உமக்கு எப்படித் தெரியவருகிறது? எங்கள் காதுகளுக்கு எட்டுகிறதில்லையே.

**சங்** - தங்களுக்கு எப்படியெட்டும், நினைவெல்லாம் திருப்பதிகத்தில் இருந்தால்? பேரரசின் நிலைமை பற்றித் தங்களுக்குச் சிறிதாவது கவலையுண்டோ? நம் மன்னர் தனது மஞ்சர், ஈழைச்சாளுக்க வேந்தர் விமலாதித்தரை அழைத்துவர தூதும் அனுப்பிவிட்டாரே.

**இரா.பி** - நண்பரே, யான் கவலைப்பட்டு என்ன ஆகப்போகிறது? ஆனால் மன்னர் பெருமான் கட்டளை பிறக்குமானால் குடிகள் செய்யவேண்டிய கடமைகளை ஒருசிறிதும் தவறாமல் ஏற்று நடத்துவேன். அவ்வளவுதான் யான் செய்யக்கூடியது.

**சங்** - யான் மாத்திரம் தங்களைவிட - என்ன அதிகம் செய்யப் போகிறேன்.

**ஆதித்** - போர் ஏற்பட்டால் தாங்கள் உடனே படையில் சேர்ந்து விடுவீர்கள். அவ்வளவுதான்.

**பிர்ம** - ஆம், ஆம், சங்கரதேவர் உடனே போருக்கும் புறப்பட்டு விடுவார். இப்பொழுது நாழி என்ன தெரியுமோ?

**சாத்த** - பொழுதுசாய்ந்துவிட்டது, வீடு திரும்ப வேண்டியதுதான்.

**இரா.பி** - கிடங்கிற்குச் சென்று கைகால் கழுவிக் கோயிலுக்குச் செல்வோம்.

**சாத்த** - கிடங்கின் நீரைவிடக் கழுநீர்ப் பொய்கையின் நீர் தான் சுத்தமானது.

**இரா.பி** - சரி பொய்கைக்கே போவோம்.
(எல்லோரும் செல்லுதல்)

---

## களம் 5

**இடம்:** தஞ்சை யரண்மனையில் திருவோலக்க மன்றம்.

**நடிகர்:** இராசேந்திரன், இராசேந்திரசோழதேவர், வல்லவரையர் வாண்டியதேவர், அரையன் இராசராசன், இராசேந்திர சோழமாவலி வாணராயர்,
வானவன்மாதேவி, பஞ்சவன்மாதேவி, அம்மங்காதேவி, நங்கை என்ற தோழி.

(இவர்கள் கீழ் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்த வண்ணம் திருவோலக்க மன்ற மாடத்தும்பர் வீற்றிருக்கின்றனர்.)

**பொழுது:** முற்பகல்.

**இராசேந்திரன்** - மாமா, வெங்கை சென்ற நம்தூதர் ஏன் இன்னும் திரும்பவில்லை?

**வல்லவரையர்** - வேந்தே, வெங்கைக் கோநகருக்கும் தஞ்சைக்கும் முப்பது காவதத்தொலையாயிற்றே. எவ்வளவு விரைவாகச் செல்லும் குதிரையும் அங்கு போய்ச்சேர ஐந்து நாளாகுமே. வெங்கை மன்னர் விமலாதித்தர் தேரில் இங்குவருவதாயிருந்தால் இன்னும் இரண்டு நாள் கூட ஆகும். எவ்வாறாயினும் அவர் இங்கு வந்துசேரத் தூதர் புறப்பட்டதிலிருந்து குறைந்தது பத்து நாட்களாவது ஆகும்.

**இரா** - தூதர் சென்று இப்பொழுது எத்தனை நாளாயின?

**வல்ல** - தூதர் புதனன்று புறப்பட்டார். இன்று வெள்ளி, அதாவது பத்தாவதுநாள். ஆகையால் இன்று பிற்பகல் வந்து விடுவாரென்று எண்ணுகிறேன்.

**இரா** - மகாதண்டநாயகரே, நம்முடைய தண்டத்தானை எவ்வாறுள்ளது?

**அரையன்** - படையெழுச்சிக்கு எப்பொழுதும் ஆயத்தமாயுள்ளது ஆனால், படைத்தலைவர், படைநாயகர், தானைத் தலைவர் முதலிய இடங்களுக்கு இன்னுஞ் சிலரைத் தேர்ந்தாக வேண்டும். இக்காரியமும் விரைவில் முடிந்துவிடும்.

**இரா** - மாவலிவாணராயரே, கடற்படை எவ்வாறுள்ளது?

**மாவலிவாணராயர்** - நாவாய் நானூறும் நல்ல நிலைமையிலேயே இருக்கின்றன. முந்நீர்ப்பழந்தீவுப் படையெழுச்சியிலும் ஈழத்துப்படையெழுச்சியிலும் பழுதான கலங்கள் எல்லாம் பழுதுபார்க்கப்பட்டுவிட்டன. படையிறக்கும் சிறுகலங்கள் பத்து நூறும் பழுதின்றியுள்ளன. கடற்படை வீரரும் கடமையில் கருத்தோடுள்ளனர்.

**இரா** - சாமந்தநாயகரே, எல்லைப்புறக் காவல்கள் எவ்வாறுள்ளன?

**வல்ல** - மன்னர்மன்ன, இளவரசர் இராசாதிராசர் இரட்டபாடி எல்லையிலுள்ளார். தங்கள் மூன்றாம் மகனார் வீர ராசேந்திரர் பாண்டிநாட்டெல்லையிலுள்ளார்.

***இரா*** - முடிசூட்டு விழா முயற்சி எந்நிலையிலுள்ளது?

**வல்ல** - முடிசூட்டுவிழா மன்றம் எடுப்பிக்கக் கட்டளை பிறப்பித்தாயிற்று. அது முடிந்தவுடன் நிமித்திகரைக் கொண்டு மங்கலநாள் குறிக்க வேண்டியதுதான்.

**வாயிற்காவலோன்** - (ஓடிவந்து வணங்கி) என்னையாளுடைய அரசரேறே, அடியேன் செய்தி கொண்டுவந்துள்ளேன்.

***இரா*** - என்ன செய்தி, தாழ்க்காது சொல்.

***வா.கா*** - நம்முடைய தூதர் திரும்பிவிட்டார். அவருடன் வெங்கை வேந்தர் விமலாதித்தரும், வெங்கை இளவரசர் இராச ராசநரேந்திரரும் வருகின்றனர்.

**(அவையில் பரபரப்பு)**

***இரா*** - மாமா, தாங்கள் கூறியதுதான் சரி. நம்முடைய மஞ்சனார் காலம் தாழ்க்கவே மாட்டார்.

**(விமலாதித்தர், நரேந்திரர், தூதர் வருகை)**

மஞ்சரே, வருக, நரேந்திரா, நீயும் உடன் வந்தனையா, மெத்தமகிழ்ச்சி. எல்லோரும் அமருங்கள் (அமர்தல்) விமலாதித்தரே, தாங்கள் வந்து சேரக்கூடிய நாளை, எனது மாமா வல்லவரையர் நிமித்திகர் கூறுவதுபோல் அள வறுத்துக் கூறிவிட்டார்.

**விமாதித்தர்** - அத்தான், இதிலென்ன வியப்பிருக்கிறது? மந்திரிக்கழகு வரும்பொருளுரைத்தலன்றோ?

***இரா*** - மஞ்சரே, தாங்கள் இவ்வளவு விரைவில் வருவீர்கள் என்று யான் எதிர்பார்க்கவில்லை. கலிங்க மன்னர் என்ன கூறுகின்றார்?

**விமலா** - கலிங்க மன்னர் கலக்கமுற்றிருக்கின்றார், அவ்வளவு தான்.

**இரா** - ஏனோ?

**விமலா** - தாங்கள் கலிங்கத்தை வென்று மகேந்திர மலையில் வெற்றித்தூண் நாட்டிவந்ததிலிருந்து அவர் நிலை இரங்கத்தக்கதாகவே இருக்கின்றது. மதுரமண்டலத்து மன்னன், கோசலநாட்டு வேந்தன், இந்திர ரதன், ஒட்டரநாட்டரசன், தண்டபுத்தியாளும் தன்மபாலன், தென்லாடத்தரசன் இரணசூரன், வடலாடத்தரசன் கோவிந்த சந்திரன், இவர்களுக்கெல்லாம் நாயக னாய் வங்கப் பேரரசையாளும் மகிபாலன் ஆகிய எல்லோரும் கலிங்க மன்னரை மிகவும் இழித்துப் பேசிவருகின்றனர். காரணம் அவர் தங்களுக்குக் கீழ்ப் படிந்து கப்பக்கடமை செலுத்திவருவதுதான்.

**இரா** - ஓகோ, இம்மன்னர் மன்னர்களுக்கெல்லாம், ஒருவன் தமிழ்வேந்தனுக்குக் கட்டுப்பட்டிருத்தல் இழிவாகத் தோன்றுகிறதோ?

**நரேந்திரர்** - என் தந்தையார் கூறுவது முற்றிலும் உண்மை. இந்த வடவர் செருக்கை யடக்கினாலொழியக் கலிங்கம் நம்மை விட்டுக் கழன்றுவிடும் என்பதுறுதி.

*(அம்மங்காதேவி நரேந்திரனை நோக்குதல்)*

**நங்கை** - (அம்மங்காதேவியைப் பார்த்து) தேவி, என்ன, இங்கு மங்கும் திரும்பாது ஒரே நோக்காய்ப் பார்க்கின்றீர்கள்?

**அம்மங்காதேவி** - எனது அத்தை கணவர் விமலாதித்தர் சிறந்த வீரர்.

**நங்** - உங்கள் அத்தை மகன் நரேந்திரர் வீரர் இல்லையோ?

**அம்** - என்னிடம் பேசாதே, சும்மாயிரு.

**(இவர்கள் பேச்சைக் கேட்டு நரேந்திரன் மேல் நோக்கி அம்மங்காதேவியைப் பார்த்தல், தேவி நரேந்திரனைப் பார்த்துத் திடீரெனத் தன்முகத்தைத் திருப்பிக்கொள்ளுதல்)**

**இரா** - மஞ்சரே, நரேந்திரன் நவில்வது நன்றாயிருக்கின்றது.

**விமலா** - நன்றோ, அன்றோ, நானறியேன், தங்கள் சித்தம் அத்தான்.

**இரா** - யான் மோனைத்தொடர் ஒன்றுகொண்டே மொழிந்தேன், ஆனால் மஞ்சரே நீங்கள் என்னையுமிஞ்சி மோனைத் தொடரும், எதுகைத் தொடரும் எழில்பெறப் பேசுகின்றீர்கள்.

**நரேந்** - தமிழ்யாப்பின் இனிமைபற்றிப் பேச இதுவா சமயம் மாமா! தமிழன் வீரத்தை அவ்வடவர் உணரவேண்டாமா?
**(நன்று, நன்றெனக் கைகொட்டி எல்லோரும் மகிழ்ச்சி யாரவாரஞ் செய்தல்.)**
**(மாடத்தும்பர் உள்ள மாதரனைவரும் கீழ்நோக்கி மகிழ்தல். சிரித்த தேவி மாத்திரம் தன்முகத்தைத் திருப்பிக் கொள்ளுதல்.)**

**நங்** - தேவி, அடிக்கடி ஏன் முகத்தைத் திருப்புகிறீர்கள்? கழுத்துப்பிசகிக்கொள்ளும்.

**அம்** - அதைப்பற்றி உனக்கென்ன கேள்வி, அதோ, தூணின் மேலுள்ள ஓவியத்தைப் பார்த்தேன்.

**நங்** - ஆம் தேவி, அந்த ஓவியம் நரேந்திரர் போலவே இருக்கிறது.

**அம்** - நங்கை, எனக்குச் சினமூட்டாதே, இங்கே என்னோடு போட்டிபோடவா வந்திருக்கிறாய்?

**நங்** - ஐயோ, உங்களோடா? நரேந்திரரைக் குறித்தா?

**அம் -** வாயை மூடு, என்னப் பேச்சுப் பேசுகிறாய்?

**பஞ்சவன்மாதேவி -** அம்மங்கா, சிரித்த முகத்தில் ஏன் சினம் தோன்றுகிறது?

**அம் -** இல்லையம்மா, நங்கை எனக்கு அடிக்கடி சினமூட்டு கிறாள்.

**வானவன்மாதேவி -** நங்கா, அடிக்கடி அம்மங்காவுக்கு ஏன் ஆத்திரமூட்டுகிறாய், நாணத்தால் அவள் அழுதாலும் அழுதுவிடுவாள்.

**அம் -** இல்லை, பாட்டி, எனக்குத் தொந்தரை கொடுப்பதுதான் இவள் அலுவல்.

**இரா -** மாமா, நரேந்திரன் கூறுவதைப்பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**வல்ல -** நரேந்திரன் சிறுவன். இளங்கன்று பயமறியாது. இருந்தாலும் வடமன்னர் செய்கையால் கலிங்க மன்னன் கப்பக்கடமை செலுத்தத்தவறினால் அது கருதவேண்டிய செய்திதான்.

**விமலா -** கலிங்க மன்னரைப்பற்றி எனக்குச் சிறிதும் கவலை யில்லை. இந்திரரதன், தன்மபாலன், இரணசூரன், கோவிந்த சந்திரன் இவர்களைப்பற்றியும் கவலை யில்லை. ஆனால் வங்கப்பேரரசன் மகிபாலன் நம்மை மதியாதது தான் எனக்கு மயக்கத்தைக் கொடுக் கின்றது.

**நரேந் -** மயக்கமா? தந்தையே, இது என்னபேச்சு? நம் மரபிற்கு இதைவிட என்ன ஏச்சுவேண்டும்! தமிழ் மறவர் தண் டெடுத்தால், வடமன்னர் தலைகள் சிதற வேண்டாமா!

**(எல்லோரும் மகிழ்ச்சியாரவாரஞ் செய்தல்; அம்மங்காதேவி நரேந்திரனை நோக்குதல்)**

**நங்** - தேவி, சற்று என்னைத் திரும்பிப்பார்த்தல் கூடாதோ?

**வான** - தேவி - நங்கா, நீ என்ன, நரேந்திரனா?

**அம்** - நான் அவரைப் பார்க்கவில்லை பாட்டி.

**நங்** - தேவி நரேந்திரரைப் பார்க்கவேயில்லை. அவர் பேச்சைத் தான் கேட்டதுபோலத் தோன்றுகிறது.

**அம்** - நங்கா, இனிமேல் என் பேச்சையெடுத்தால் தெரியுமா?

**நங்** - உங்கள் பேச்சை ஏன் எடுக்கிறேன்? நரேந்திரர் பேச்சை யல்லவா எடுத்தேன்.

**பஞ் . தேவி** - நங்கா, நீ ஒருவர் பேச்சுக்கும் போகாதே.

**நங்** - நரேந்திரருக்கும், அம்மங்கா தேவியாருக்கும் பேச்சு நடக்கட்டுமே. நான் ஏன் குறுக்கே போகிறேன்?

**அம்** - அம்மா, பாட்டி, பார்த்தீர்களா இவள் குறும்பை, நான் பேசுகிறேனா?

**வா.தேவ** - நங்கா, நீ குறும்பாகத்தான் பேசுகிறாய். என்பேரன் நரேந்திரனை என்பேர்த்தி அம்மங்கா பார்த்தாள். நரேந்திரனும் அவளைப்பார்த்தான். இதில் பேச்சுக் கிடமேது?

**இரா** - மஞ்சரே, தங்கள் மஞ்சன் பேச்சைக்கேட்டால் வடவர் அஞ்சுவரன்றோ?

**இராசேந்திரசோழதேவன்** - தந்தையே, இனி பேசிக்கொண்டே செல்லுதலிற் பயனில்லை. செயல், செயல் தான் பய னளிக்கும் நரேந்திரன் கூறுவதுதான் சரி.

**இரா** - மாமா, தங்கள் முடிவென்ன?

**வல்ல** - தங்கள் மஞ்சர் கூற்றும், மஞ்சர் மஞ்சன் கூற்றும் சரிதான். ஆனால் எக்காரியத்தையும் நாம் கோவியல் முறைப் படியே செய்தாகவேண்டும்.

**இரா** - ஆம், அரசியல் பிழைப்பது சோழர் குலத்திற்குப் பழியாகும். முதற்கண் மகிபால மன்னருக்குத் தூது அநுப்புவோம்.

**வல்ல** - தூது கொண்டுபோகும் செய்தியாது?

**இரா** - இது சிந்திக்க வேண்டியதே. வடமன்னர் நம்மை மதிக்கவில்லையென்றால், அது ஒரு பெருங்குற்ற மாகுமா?

**நரேந்** - மாமா, வடவர் நம்மை மதிக்காதது ஒரு பெருங் குற்றமாகாதுதான். ஆயினும், வெங்கைக்கு ஒற்றர் கொண்டுவருஞ் செய்திகளை ஒன்று சேர்த்துப்பார்த் தால் உடனே ஆவன செய்யாவிடில் சோழப் பேரர சிற்கே ஏதம் விளையும் என்பதுறுதி.

**விமலா** - நரேந்திரன் கூறுவது உண்மையே.

**இரா.சோ.தே** - வடமன்னர் எல்லோருக்குமே நாம் இறுதி யோலை அநுப்பினாலென்ன?

**இரா** - மாமா, தங்கள் கருத்தென்ன?

**வல்ல** - தூது கொண்டுபோக வேண்டிய செய்தியைக் குறித்துத் தான் யான் சிந்திக்கிறேன். வங்க மன்னன் மகிபாலன் சோழப் பேரரசிற்கெதிராகச் செய்துவரும் சூழ்ச்சி களை உடனே நிறுத்த வேண்டும். இல்லையேல் போர் என்று,அறிவிப்போமா?

**இரா** - தூது அனுப்புவோம், ஆனால் போரைப்பற்றிக் குறிப் பிட எனக்கு எண்ணமில்லை. நம் அலுவலாளர் சிலர்

இமயத்திற்குச் செல்ல வழிவிடுமாறு மகிபால மன்னரைக் கேட்போமே.

**வல்ல** - அவ்வாறே கேட்போம். தங்கள் கருத்து யாது?

**இரா** - சயங்கொண்ட சோழமண்டலத்தில் கோநகர் ஒன்றும் என் ஒப்பற்ற தந்தையைப் பின்பற்றி கற்றளி ஒன்றும் எடுப்பிக்கக் கருதியுள்ளேன். அம்மண்டலத்து மக்கள் வறுமையையகற்ற எக்காலும் நீர்வற்றாத ஓர் பெரும் ஏரியையும் தோண்டக்கருதியுள்ளேன்.

**வல்ல** - கருதுவது சரியே.

**இரா** - கற்றளிக்குத் திருமேனிகள் செய்ய இமயத்திலிருந்து கல்லும், ஏரிநீரைத் தூய்மை செய்ய கங்கை நீரும் கொண்டுவருதல் வேண்டும்.

**வல்ல** - செல்லுகின்ற அலுவலாளருக்குத் துணையாகப் படைப்பகுதியொன்றும் உடன் செல்லுதல் வேண்டும்.

**இரா** - ஆம், இவற்றைக்குறித்து வழிகேட்டு மகிபாலமன்னருக்கு விரைவில் தூது அனுப்புவோம்.

**வா.கா** - **(ஓடிவந்து வணங்கி)** எனையாளும் வேந்தர் பெருமானே, நமது வணிகர் ஒருவர் திருமுன்னர் வர விரும்புகிறார்.

**இரா** - வரச்சொல். **(வாயிற் காவலோன் செல்லுதல்)**

**வணிகர்** - **(வந்து வணங்கி நின்று)** என்னையாளுடைய நாயகன், இராசேந்திர சோழதேவ மன்னருக்கு அடியேனுடைய விண்ணப்பம். தங்கள் ஆட்சியிலா அடியேனுக்கு இந்நிலை ஏற்பட வேண்டும்?

**இரா** - என்ன ஏற்பட்டது? விரைவிற் சொல்லும்.

**வணி** - அடியேனுக்கு , - அடியேனுக்கு, - அடியேனுக்கு -

**இரா** - விரைவிற் கூறுகின்றீரா, என்ன?

**வணி** - இருபதாண்டுகளாகச் சீனத்துடன் வணிகம் செய்துவரு கிறேன். தங்கள் ஆட்சியிலா இப்படி நேர வேண்டும்?

**இரா** - நேர்ந்ததென்ன, விரைவிற் கூறும்.

**வணி** - எனது மரக்கலமே கொள்ளை போய்விட்டது.
**(எல்லோரும் என்ன, என்ன, என்று வினாதல்)**

**இரா** - எங்கே, எப்பொழுது?

**வணி** - சீனத்திற்குச் சென்று திரும்பி வரும்போது தலைத்தக் கோலத்துறையில் எனது மரக்கலம் நங்கூரம் பாய்ச்சியது. அங்கு ஒரு நாள் தங்கிய பிறகு இலாமுரிநாட்டை நோக்கிப் புறப்பட்டேன். சில படகுகள் என் மரக் கலத்தைத் தொடர்ந்தன. முதலில் யான் அவைகளைச் சீனப்படகுகள் என்று நினைத் தேன். கதிரவன் மறையும் நேரம் அப்படகுகள் என் மரக்கலத்தையணுகின. முகமூடியணிந்திருந்த பலர் அப்படகுகளிலிருந்து கிளம்பி எவ்வாறோ எனது மரக்கலத்தில் ஏறிவிட்டனர். எனது மாலுமிகள் நேர்ந்த இடையூறு இன்னதென்று உணரு முன்னரே அவர்கள் மரக்கலத்திலிருந்த விலையுயர்ந்த பண்டங்களனைத் தையும், வாரிக்கொண்டு படகுகளில் தப்பிச் சென்று விட்டனர்.

**இரா** - வணிகரே, சென்றுவாரும். நீர் இழந்த பொன் அத் தனைக்கும் ஈடு பண்ணுவோம்.

**வணி** - பத்தாயிரம் துளைப்பொன் மதிப்பிற்குரிய பண்டங் களை இழந்துவிட்டேன்.

**இரா** - கவலை வேண்டாம். நீர் செல்லலாம். சாமந்த நாயகரே பண்டாரத் தலைவருக்குக் கட்டளை பிறப்பிக்கவும்.

*(வணிகர் செல்லுதல்)*

**வல்ல** - அரசே, இது சீனர் செய்கையன்று. தங்கள் தந்தையார் சீனத்தரசருக்கு தூதுக்குழு அனுப்பிய நாளிலிருந்து சீனர் சோழப்பேரரசின் உறவைப் பெரிதும்மதித்து நடந்து வந்திருக்கின்றனர்.

**மாவலி** - வேந்தே, இது சீனர் செய்கையன்று. கடாரப்பேரரசன் சங்கிராம விசயோத்துங்க வர்மன் செய்கையாகும்.

**இரா** - மாவலிவாணராயரே, கடற் கொள்ளைக் கூட்டத்தாருக்கு கடாரப்பேரரசன் எவ்வாறு பொறுப்பாளியாகக் கூடும்?

**மாவலி** - அரசரேறே, சென்ற சில திங்களாக நமது மாலுமிகள் இவ்வித இன்னல்களுக்கு ஆளாகிவருகின்றனர். இவைகளுக்கெல்லாம் திருவிசயம் என்னும் கடாரப்பேரரசை இப்பொழுது ஆண்டுவரும் சங்கிராம விசயோத்துங்க வர்மனே பொறுப்பாளி என்று நமது ஒற்றர் பலரும் அறிவித்து வருகின்றனர்.

**இரா** - சாமந்த நாயகரே, இதற்கென்ன கூறுகின்றீர்கள்? மகிபாலனும், சங்கிராம விசயோத்துங்க வர்மனும் நம்மைக் கிள்ளுக்கீரையாக மதித்து விட்டனர் அன்றோ!

**நரேந்** - ஆம், ஆம், கொட்டினாற்றான் தேள், கொட்டாவிட்டால் வெறும் பிள்ளைப்பூச்சிதான்.

**இரா-சோ-தே** - தந்தையே, இப்பொழுது இருபேரரசுகள் நம்மை எதிர்த்து நிற்கின்றன. நமது தண்டத்தானைக்கும் கடற்படைக்கும் அரிய வாய்ப்புகள் ஏற்படப் போகின்றன.

**இரா** - நமது பேரரசிற்கே பெருஞ் சோதனைக்காலம் வரு கிறதென்றே யான் கருதுகிறேன்.

**அரை** - சோழர்குல தெய்வமே, சோதனையில் வெற்றி பெறு வோம் என்பதுறுதி.

**வல்ல** - சங்கிராம விசயோத்துங்க வர்மனுக்குத் தூதனுப்ப வேண்டியதில்லை, ஓலையனுப்பி வணிகர் இழந்த பொருளுக்கு ஈடும், இனி இவ்வாறு நடைபெறா திருத்தற்குக் கோவியல் முறைப்படி தக்க உறுதிப் பாடும் கேட்போம்.

**மாவலி** - கேட்பது நன்றே, ஆனால் கடாரப்பேரரசன் இசை வான் என்று யான் நினைக்கவில்லை.

**இரா** - இசையாவிடில் அவன் நமது இசையைக் கேட்கும் படி செய்வோம். செய்யாவிடில் அது நமக்கு பெரும் வசையாகும்.

**(எல்லோரும் ஆம், ஆம், என்று கூறுதல்)**

பகலமுதிற்கு நேரமாயிற்று, பிற்பகல் கூடிப்பேச வேண் டிய அனைத்தும் பேசி, சிந்திக்க வேண்டிய அனைத்தும் சிந்தித்துத் தேரவேண்டியவற்றைத் தேர்வோம். மஞ்சரே, ஒரு திங்களாவது தாங்கள் தஞ்சையில் தங்கிச்செல் லலாமன்றோ?

**விமலா** - இதற்கு நமது தற்பொழுதைய நிலை இடங் கொடாதே. நரேந்திரனும் இங்குள்ளான்.

**இரா** - ஆம், தாங்கள் விரைவிற் புறப்படவேண்டியதுதான். நரேந்திரனாவது இங்கே சிலநாட்கள் தங்கிச்செல்ல லாம் என்று நினைக்கிறேன்.

**விமலா** - நரேந்திரனின்றி வெங்கை அரசியற்றேர் ஓடாது. இருப்பினும் அவன் சில நாட்கள் தங்கி வரலாம்.

**நங்** - தேவி, தங்களுடைய சினந்த முகம் மலர்ந்த முகமாய் மாறி விட்டதே, எதனால்?

**அம்** - பொய் புகல்வதுதான் உன் தொழில், வாயைமூடு.

**வா.தேவி** - நங்கா, நரேந்திரனிடம் நீ அம்மங்காவைப்பற்றி ஒன்றும் கூறிவிடாதே.

**அம்** - பாட்டி, என்னை ஏளனம் செய்வதில் உங்களுக்கு என்ன அவ்வளவு மகிழ்ச்சி?

**பஞ்.தேவி** - அம்மங்கா, நீ பாட்டிக்குப் போட்டியாய் ஒன்றும் பேசக்கூடாது

**அம்** - ஏன் அம்மா?

**பஞ்.தேவி** - பேர்த்தியைப்பற்றியோ, பேரனைப்பற்றியோ பேச அவர்களுக்கு எல்லா உரிமையுமுண்டு, தெரியுமா?

**அம்** - சரி, ஆடவரெல்லோரும் எழுந்துவிட்டனர். நாமும் போவோம். வருங்காலமாகிய பெண் வயிற்றில் என்னென்ன பிறக்குமோ, யார் கண்டார்கள்?

**வா.தேவி** - யாருக்குந் தெரியாதுதான். ஆனால் எனக்கொன்று தெரியும். உன் வயிற்றில் நரேந்திரனுக்கு ஒரு ஆண் குழந்தை பிறப்பான்.

**அம்** - பாட்டி, ஏன் வீணாகப் பேசுகின்றீர்கள்? உங்கள் பேச்சை இனி என்னாற் பொறுக்கமுடியாது.

**பஞ்.தேவி** - அம்மங்கா, நான் சொன்னதை உடனே மறந்து விட்டாயே.

**இரா** - மாமா, பிற்பகலில் யான் தேர்ந்த ஒற்றர்கள் சிலரைப் பார்க்க வேண்டும்.

**வல்ல** - அழைத்து வருகின்றேன்.

**(எல்லோரும் எழுந்து செல்லுதல்)**

---

# அங்கம் - இரண்டு

## களம் 1

**இடம் :** **தஞ்சை அரண்மனையிலுள்ள படைப் பயிற்சிச் சதுக்கமும், சதுக்கத்திலுள்ள களிக்கூடமும்.**

**நடிகர்:** **வல்லவரையர்வாண்டியதேவன், அரையன் இராசராசன், இராசேந்திரசோழ மாவலி வாணராயர், இராசராச ஈழத்தரையர், (இவர்கள் களிக்கூடத்தில் அமர்ந்துள்ளனர்) களத்துவென்றார், கங்கைநாடர், தஞ்சைராயர், மூவரையர், பொன்னாரம் பூண்டார். (இவர்கள் சதுக்கத்தில் நிற்கின்றனர்) ஏவலாளர் இருவர் (களிக் கூடத்து வாயிலில் நிற்கின்றனர்)**

**பொழுது : மாலை.**

**வல்லவரையர்** - தானைநாயகங்களே, போர்மூளும் என்பதுறுதி. வங்க மன்னனோ கடாரத்தரசனோ நமக்கு இசைந்து வருவார்கள் என்று யான் கருதவில்லை.

**அரையன்** - யானும் அவ்வாறே நினைக்கின்றேன்.

**மாவலிவாணராயர்** - எனது கருத்தும் அதுவே.

**ஈழத்தரையர்** - எல்லாம் இரண்டொரு திங்களில் தெரிந்துவிடும்.

**வல்ல** - எவ்வாறாயினும் நாம் நமது படைகள் அனைத்தையும் ஆயத்தமாய் வைத்திருக்கவேண்டும், நம்மையுடையார் இராசேந்திர தேவர் ஆணை பிறந்த விநாடியே அவை போர்க்கோலம் பூண்டு புறப்பட வேண்டும்.

**அரை** - ஆம், படைத்தலைவர், படைநாயகம், தானைத்தலைவர் முதலிய இடங்களுக்கு இப்பொழுது சிலரைத் தேர்ந்து விடுவோம்.

**மாவலி** - கடற்படைக்கும் சிலரைத் தேர்ந்தாக வேண்டும்.

**ஈழத்** - வேளைக்காரப் படைப்பகுதிக்கும் சிலர் வேண்டும்.

**வல்ல** - (ஓலைகள் நீட்டி) இதோ இந்த விண்ணப்பங்களைப் பாருங்கள்.

**அரை** - (ஓலையைப் பெற்று) நூற்றுக்கு மேல் இருக்கும் போல் தெரிகிறது. இவர்களிற் சிலரையாவது இன்று தேர்ந்து விடுவோம்.

**வல்ல** - சரி, ஒவ்வொருவராக அவர்களை அழைப்போம். தேர்ந்தெடுத்தல் முழுதும் உங்கள் பொறுப்பு.

**அரை** - அடே, ஏவலோய், சதுக்கத்திற்குச் சென்று களத்து வென்றார் என்பவரை அழைத்துவா.

**ஏவலாளர்** - ஆணை. (செல்லுதல்)

**வல்ல** - விண்ணப்பக்காரர்களைச் சரியாகச் சோதனை செய்யுங் கள். ஆட்களைத் தேர்வதிற்றான் நம்முடைய வெற்றி இருக்கிறது.

**களத்துவென்றார்** - (வந்து படை வணக்கம் செலுத்தி நிற்றல்)

**அரை** - உம்முடைய பெயரென்ன?

**களத்** - முருகன்.

**அரை** - களத்துவென்றார் என்பது உம்பெயரில்லையா?

**களத்** - அது என்னுடைய பட்டம். என்னுடைய பாட்டனார் காலத்திற்கு முன்பிருந்து எங்களுக்கு வழிவழியாக வருகிற பட்டம். அவர் ஒரு போரிலே தானை நாயகமாயிருந்து வெற்றிபெற்றதற்கு நம்மையாளுடைய மன்னர் முன்னோரால் அளிக்கப்பட்டது.

*அரை* - அப்படியா, மெத்த மகிழ்ச்சி, உம்முடைய படைப்பதவி என்ன?

**களத்** - படைத்தலைவன்.

*மாவலி* - உம்தகுதிக்கோ, திறமைக்கோ, ஏதாவது சான்று வைத்திருக்கிறீரா?

**களத்** - இதோ (ஓலை நீட்டுதல்)

*மாவலி* - (ஓலையைப்பெற்று வாசித்தல்)

**இராசராசயாண்டு இருபது,**
**ஐப்பசித் திங்கள்.**

ஈழத்துப் போரிலே, மிக்க வீரத்தோடு தன்படையை நடத்திப் பகைவரின் அணிவகுப்பைப் பிளந்துசென்று நம் வெற்றிக்கு அடிகோலிய நூற்றுவர் தலைவன், படைத்தலைவன் முருகன்களத்துவென்றாருக்கு இவ் வோலைச் சான்று அளித்தோம்.

**இப்படிக்கு.**

**உடையார் இராசராச தேவர் ஆணைப்படி,**
**தானைநாயகம், ஈராயிரவன் பல்லவரையனான**
**மும்மடிச்சோழ போசன் கையெழுத்து.**

வல்ல - சரி, களத்துவென்றாருடைய வேறு தகுதிகளைச் சோதியுங்கள்.

**அரை** - களத்துவென்றாருடைய உடற்கட்டு நன்றாயிருக்கின்றது. ஒன்பது சாண் உயரமும், பரந்தமார்புமுள்ளவராயிருக்கின்றார். ஈழத்தரையரே, சில கேள்விகள் கேளுங்கள்.

**ஈழத்** - நம்முடைய தானையின் பிரிவுகள் யாவை?

**களத்** - கடற்படை நீங்கலாக, தரைப்படையில், யானை, குதிரை, காலாள் என்ற மூன்று பிரிவுண்டு.

**ஈழத்** - படைக்கலங்கள் யாவை?

**களத்** - வில், வேல், வாள்.

**ஈழத்** - நூற்றுவர் தலைவன் பெயரென்ன?

**களத்** - படைத்தலைவன்.

**ஈழத்** - ஆயிரவர் தலைவன்?

**களத்** - படைநாயகம்.

**ஈழத்** - தானைத் தலைவரென்று யாருக்குப் பெயர்?

**களத்** - இருபத்தையாயிர வீரர் தலைவருக்கு.

**ஈழத்** - தானைநாயகம் என்பது யார்?

**களத்** - நூறாயிரம் வீரர்களுக்குத் தலைவர்.

**ஈழத்** - மகாதண்டநாயகம் என்பது யார்?

**களத்** - யானை, குதிரை, காலாள் ஆகிய மூன்று பிரிவுகளையுங் கொண்ட முழுத்தானைக்குத் தலைமை தாங்குகிறவர்.

**ஈழத் -** சாமந்தநாயகம் என்பவர் யார்?

**களத் -** படையமைச்சர்.

**வல்ல -** போதும், மற்றவர்களைச் சோதனை செய்யுங்கள்.

**அரை -** (மற்றவர்களைக் கலந்து) களத்து வென்றார், இன்று முதல் உமக்குப் படைநாயகப் பதவி அளிக்கப் படுகின்றது. இதோ, இந்த ஓலையை மூன்றாந் தானைத் தலைவரிடங் கொடுத்துப் படைநாயக மாகப் பதிவு செய்து கொள்ளும்.

**களத் -** (ஓலை பெற்றுப் படைவணக்கம் செலுத்திச் செல்லுதல்)

**அரை -** ஏவலோய், கங்கை நாடர் என்பவரை அழைத்துவா.

**ஏவ -** (வணங்கி) ஆணை.

**வல்ல -** தானை நாயகங்களே, சிறிது கடினமான கேள்விகளைக் கேளுங்கள். இப்பொழுது நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு வெறும் படைவீரனே விடையளித்துவிடுவான்.
(கங்கை நாடர் வந்து படை வணக்கம் செலுத்தி நிற்றல்)

**அரை -** உம்பெயரென்ன?

**கங்கை -** சிவன்சேவடி.

**அரை -** கங்கைநாடர் என்பது உமது பட்டமோ?

**கங்கை -** ஆம், சோழன் கரிகாற்பெருவளத்தான் வடநாட்டிற் படையெடுத்துச் சென்ற காலமுதல் எங்கள் குடிக்கு வழிவழியாய் வருகிற பட்டமிது.

**அரை -** மெத்த மகிழ்ச்சி, உம்முடைய படைப்பதவி என்ன?

**கங்கை** - படைநாயகம்.

**மாவலி** - உமது தகுதிக்கு ஏதாவது சான்றுண்டா?

**கங்கை** - இதே, (ஓலை நீட்டுதல்)

**மாவலி** - (ஓலையைப் பெற்று வாசித்தல்)

**இராசராச யாண்டு,**
**பத்தொன்பது, மார்கழி.**

''இரட்டபாடியிலே, எதிரிகளின் யானைகள் நமது வலசாரிக்காலாட்படையைத் துவைத்தபோது அவற்றின்மீது தன் கீழுள்ள ஆயிரம் வேற்படைவீரரை ஏவித் தானும் அவர்களுக்கு வழிகாட்டியாக முன்னேறித் தாக்கி அவ்யானைகள் புறங்காட்டியோடும் படி செய்த ஆயிரவர் தலைவன். படை நாயகம், சிவன் சேவடி கங்கை நாடருக்கு இவ்வோலைச்சான்று அளித்தோம்.

இப்படிக்கு.

**உடையார் இராசராச தேவர் ஆணைப்படி**
**தானைநாயகம் ஈராயிரவன் பல்லவரையனான**
**மும்மடி சோழ போசன் கையெழுத்து.**

**அரை** - ஈழத்தரையரே, இனி உங்கள் அலுவலை மேற்கொள்ளுங்கள்.

**ஈழத்** - கங்கை நாடரே, யான் இப்பொழுது சிலகேள்விகள் கேட்பேன், அவற்றிற்கு மிகச்சுருக்கமாக விடைதர வேண்டும்.

**கங்கை** - கூடுமானவரையில் முயல்கின்றேன்.

**ஈழத்** - நம் மன்னர் பெருமானுடைய மெய்க்காவற் படைக்குப் பெயரென்ன?

**கங்கை** - பரிவார மெய்க்காப்பாளர்.

**ஈழத்** - மெய்க்கவல் குதிரைப்படைக்கு?

**கங்கை** - உடனிலைக் குதிரைச்சேவகர்.

**ஈழத்** - இவற்றின் கடமையாது?

**கங்கை** - மன்னர் பெருமான் செல்லுமிடமெல்லாஞ் சென்று எதிர்பாராவண்ணம் நேரக்கூடிய இடையூறுகளை யெல்லாந் தவிர்த்து அவரைக்காப்பது.

**ஈழத்** - பண்டிதச் சோழ தெரிந்தவில்லிகள் என்பவர் யார்?

**கங்கை** - நம்மையாளுடைய உடையார் இராசேந்திர தேவரால் தேர்ந்தெடுக்கப்பெற்ற சிறந்த வில்வீரர்படை.

**ஈழத்** - நம்மையாளுடையமன்னருக்குப் பண்டிதச் சோழர் என்ற பெயர் எதனால் வந்தது?

**கங்கை** - தமிழ் இலக்கிய இலக்கணங்களையெல்லாங் குற்ற மறக் கற்றுத் துறைபோகிய காரணத்தால் நம்பி யாண்டார் நம்பி, சர்வசிவ பண்டிதர், அமிதசாகரர் முதலிய புலவர் பெருமக்களால் இப்பட்டம் நம் மன்னர் பெருமானுக்கு அளிக்கப்பெற்றது.

**வல்ல** - போதும், இவருக்கு என்ன பதவி கொடுக்கலாம்?

***(அரையன், மாவலி, ஈழத்தரையர் மூவரும் சிந்தித்தல்)***

**அரை** - கங்கைநாடர் இப்பொழுது படைநாயகமாயிருக்கின்றார், தானைத்தலைவர் பதவி கொடுக்கலாம் என்பது எங்க ளுடைய முடிவு.

**வல்ல** - சரி, அவ்வாறே செய்யுங்கள்.

**அரை** - கங்கை நாடரே, இன்றுமுதல் நீர் தானைத்தலைவர் என்ற பெரும்பதவியை ஏற்கின்றீர். இந்த ஓலையை இரண்டாம் தானை நாயகத்தினிடம் கொடுத்துத் தானைத்தலைவராகப் பதிவு செய்து கொள்ளும்.

*(ஓலை கொடுத்தல்) (கங்கைநாடர் படைவணக்கம் செலுத்திச் செல்லுதல்)*

அடே, ஏவலோய், தஞ்சைராயர் என்பவரை விரைவில் அழைத்துவா.

**ஏவ** - *(வணங்கி)* ஆணை. *(செல்லுதல்)*

வல்ல - ஈழத்தரையரே, நேரமாகின்றது, கேள்விகளைச் சுருக்கிக்கொள்ளுங்கள். இரண்டொரு கேள்விகளுக்கு மேல் கேட்கவேண்டாம்.

*(தஞ்சைரார் வந்து படைவணக்கம் செலுத்தி நிற்றல்)*

**அரை** - உம்முடைய பெயர்?

**தஞ்சை** - செம்பியன் தஞ்சைராயர்.

**அரை** - தஞ்சைராயர் என்பது பட்டமோ?

**தஞ்சை** - ஆம், எனது மூன்றாம் பாட்டனாருக்குத் தஞ்சையைப் பாதுகாத்ததற்காக நம்மையுடையார் இராசேந்திர தேவர் மூதாதையரால் கொடுக்கப்பட்ட பட்டம். அது எங்கள் குடிக்கு வழிவழியாக வழங்கி வருகிறது.

**அரை** - உமது தகுதிக்குச்சான்று யாதாவதுண்டோ?

**தஞ்சை** - *(ஓலை நீட்டுதல்)* உண்டு.

**மாவலி** - *(ஓலை பெற்று வாசித்தல்)*

**இராசராச யாண்டு,**
**பதினேழு, சித்திரைத்திங்கள்**

''முந்நீர்ப்பழந்தீவுப் படையெழுச்சியிலே, மேற்குச் சூறாவளி யால் கடலில் மூழ்கிய நமது போர்க்கலம் ஒன்றி

விருந்த நானூறு வீரர்களையும் ஒருவர் தவறாது காப்பாற்றிக் கரைசேர்த்த போர்க்கலத்தலைவன் செம்பியன் தஞ்சை ராயருக்கு இவ்வோலைச் சான்று அளிக்கப் பெற்றது.''

இப்படிக்கு,

உடையார் இராசராச தேவர் ஆணைப்படி
தாளைநாயகம் ஈராயிரவன் பல்லவரையனான
மும்மடி சோழ போசன் கையெழுத்து.

**அரை** - தஞ்சைராயரே, நீர் நமது கடற்படையில் போர்க்கலத் தலைவரோ?

**தஞ்சை** - ஆம்.

**அரை** - மாவலிவாணராயரே, நீங்கள் சில கேள்விகள் கேளுங்கள்.

**மாவலி** - தஞ்சைராயரே, நீர் நமது கடற்படையில் போர்க்கலத் தலைவராயிருப்பதால் கடற்படை பற்றிய செய்தி முழுதும் உமக்குத் தெரிந்திருக்கும். கடற்படை வீரர்களின் பல பதவிகளையும் சுருக்கமாகக் கூறும் பார்ப்போம்.

**தஞ்சை** - கடல் வீரனுக்குப் போர்க்கல வீரன் என்று பெயர். போர்க்கலம் ஒன்றிலுள்ள நானூறு வீரர்களுக்குத் தலைவன் போர்க்கலத் தலைவன். பத்துப் போர்க்கலங்களுக்குத் தலைவன் போர்க்கலநாயகம். நூறுபோர்க்கலங்களுக்கு, அதாவது நாற்பதினாயிரம் கடல் வீரர்களுக்குத் தலைவன் கடற்றானை நாயகம். கடற்படை முழு திற்கும் தலைவர் கடற்றானை மகாநாயகம். நம்மை யுடையார் இராசேந்திர மன்னருடைய மகாநாயகமாகத் தாங்கள் விளங்குகிறீர்கள்.

**அரை** - (மற்றவர்களைக் கலந்து) தஞ்சைராயரே, இன்றுமுதல் நீர் போர்க்கல நாயகம் என்னும் பதவியை ஏற்கின்றீர்.

இவ்வோலையை முதற் கடற்றானை நாயகத்தினிடம் கொடுத்துப் போர்க்கலநாயகமாகப் பதிவு செய்து கொள்ளும். (ஓலையைக் கொடுத்தல்) (தஞ்சைராயர் ஓலையைப் பெற்று படைவணக்கஞ் செலுத்திச் செல்லுதல்)

**அரை** - அடே, ஏவலோய், மூவரையர் என்பாரை அழைத்துவா.

**ஏவ** - ஆணை. (செல்லுதல்)

**வல்ல** - பொழுதாகிறது. இன்னும் இரண்டுபேர்களை இன்று தேந்தால்போதும். ஏனையதேர்வுகளை நாளை வைத்துக் கொள்வோம்.
**(மூவரையர் வந்து படை வணக்கம் செலுத்தி நிற்றல்.)**

**அரை** - உமது பெயரென்ன?

**மூவரை** - வடிவேலன் மூவரையன்.

**அரை** - மூவரையன் என்பது பட்டந்தானே? இப்பட்டம் வந்த வரலாறு என்ன?

**மூவரை** - எனது மூதாதையரில் ஒருவர் சேர சோழ பாண்டிய மண்டலம் மூன்றிலும் நடந்த போர்களில் காட்டிய வீரத்திற்காக நம்மையுடையார் இராசேந்திர மன்னர் முன்னோரால் அளிக்கப்பட்ட பட்டமிது.

**அரை** - மெத்த மகிழ்ச்சி, உம்முடைய தகுதி என்ன?

**மூவரை** - இதோ. (ஓலை நீட்டுதல்)

**மாவலி** - (பெற்று வாசித்தல்) **இராசராச யாண்டு, பதினாறு, மார்கழித்திங்கள்.**

''கலிங்கப்போரிலே நமது இடசாரிவேற்படையைப் பிளந்து நுழைந்த பகைவரின் குதிரைப் படையைத் தன்கீழுள்ள வாட்படை வீரர் நூற்றுவரைக்கொண்டு

வெட்டி வீழ்த்திப் பகைவர்களைப் புறங்கண்ட நூற்றுவர் தலைவன் படைத்தலைவன் வடிவேலன் மூவரைய ருக்கு இவ்வோலைச் சான்று அளிக்கப்பெற்றது.

இப்படிக்கு,

உடையார் இராசராசதேவர் ஆணைப்படி
மகாதண்டநாயகம் அப்பிரமேயன்
கையெழுத்து.

**ஈழத்** - மூவரையரே, இப்பொழுது யான் கேட்கப்போகும் கேள்விகளுக்குச் சுருக்கமாக விடைபகர வேண்டும்.

**மூவரை** - ஆணைப்படி.

**ஈழத்** - நாம் வென்ற நாடுகளில் காவலுக்காக வைத்திருக்கும் படைகளுக்குப் பெயரென்ன?

**மூவரை** - நிலைப்படைகள்.

**ஈழத்** - மூலப் பரிவார விட்டேறு என்றால் என்ன?

**மூவரை** - நான்றாகத் தேர்ந்து பொறுக்கியெடுக்கப்பட்ட வேற்படைவீரர்பகுதிக்குப் பெயர்.

**ஈழத்** - அந்தளகத்தாளர் என்று யாருக்குப் பெயர்?

**மூவரை** - மெய்யுறைபூண்ட வீரர்களுக்குப் பெயர்.

**அரை** - *(மற்றவர்களைக் கலந்து)* மூவரையரே, இன்றுமுதல் உமக்கு படைநாயகம் என்னும் பதவியளிக்கப்படு கின்றது. இவ்வோலையை இரண்டாம் தானைத் தலைவ ரிடம் கொடுத்துப் பதிவுசெய்து கொள்ளும். *(ஓலை கொடுத்தல்) (மூவரையர் படை வணக்கம் செலுத்திச் செல்லுதல்)* ஏவலோய், பொன்னாரம் பூண்டாரை அழைத்துவா.

**ஏவ -** ஆணை. **(செல்லுதல்)**

**வல்ல -** இத்தேர்வுடன் இன்று நிறுத்திக்கொள்வோம்.
**(பொன்னாரம்பூண்டார் வந்து படைவணக்கம் செலுத்தி நிற்றல்)**

**அரை -** உம்முடைய பெயர் என்ன?

**பொன் -** மாதேவன் பொன்னாரம்பூண்டார்.

**அரை -** பொன்னாரம் பூண்டார் என்றபட்டத்தின் வரலாறு என்ன?

**பொன் -** நம்மையுடையார் இராசேந்திர மன்னர் முன்னோரால் எனது மூதாதையர் ஒருவருக்கு அவர் போர்களில் காட்டிய வீரத்திற்காகப் பொன்னாரம் ஒன்று அளிக்கப்பெற்றது. அந்நாள் தொட்டு இப்பட்டம் எங்கள் குடிக்கு வழி வழியாக வழங்கி வருகிறது. இதற்குச் சான்றாகச் செப் பேடு ஒன்றும் என்னிடமுள்ளது.

**அரை -** அஃதிருக்கட்டும், உம்முடைய தகுதிக்கு ஏதாவது சான்றுண்டோ?

**(பொன்னாரம் பூண்டார் ஓலை நீட்டுதல்)**

**மாவலி - (ஓலையைப் பெற்று வாசித்தல்)**

**இராசராச யாண்டு,**
**பதினைத்து, வைகாசித்திங்கள்.**

''சங்கபாடிப் போரிலே, பகைவரின் மகாதண்டநாயகம் ஏறிவந்த யானைமீது எண்ணிறந்த அம்புகளையெய்து போர்க்களத்தைவிட்டு அவ்யானை புறங்காட்டி ஓடும் படி செய்த, விற்படைவீரன் மதேவன் பொன்னாரம் பூண்டாருக்கு இவ்வோலைச் சான்று அளிக்கப்பெற்றது.

**இப்படிக்கு,**

**உடையார் இராசராசதேவர் ஆணைப்படி**
**மகாதண்டநாயகம் அப்பிரமேயன்**
**கையெழுத்து.**

**அரை** - பொன்னாரம் பூண்டாரே, நீர் வெறும் விற்படை வீரர் தானோ?

**பொன்** - ஆம்.

**அரை** - நமது படைகளைப் பற்றிய விவரம் ஏதாவது உமக்குத் தெரியுமா?

**பொன்** - ஏதோ சிறிது தெரியும்.

**அரை** - ஈழத்தரையரே, இவருக்குத் தகுந்த சில கேள்விகள் கேளுங்கள்.

**ஈழத்** - பொன்னாரம் பூண்டாரே, ஒரே கேள்வி கேட்கின்றேன். அதற்கு விடையளித்துவிட்டால் உம்முடைய பதவி யுயரும்.

**பொன்** - தெரிந்த மட்டுங் கூறுகிறேன். தகுதியிருந்தால் பதவி கொடுங்கள். வெறும் விற்படை வீரனாக நம்மை யுடையார் இராசேந்திர தேவ மன்னருக்கு ஊழியஞ் செய்வதும் எனக்கு மகிழ்ச்சியே.

**ஈழத்** - நல்லது. வேளைக்காரப்படையென்றால் என்ன? கூறும் பார்ப்போம்.

**பொன்** - உற்றிடத்துயிர் வழங்கும் வலங்கை வேளைக்காரப் படையென்பது அதன் முழுப்பெயராகும். நமது தானையில் இத்தகைய படைகள் பதினான்குள்ளன. இன்னவாறு செய்வேன், செய்யா தொழியின், இன்ன கேடுறுவேன் என வஞ்சினம் உரைத்துச் சொன்ன சொற்படி நடப்பவர் இப்படைவீரர். மன்னர் பெரு மானைக் கண்ணினைக் காக்கின்ற இமைபோலக் காப்பவர். தம் சோர்வால் அரசருக்கு ஏதாவது ஏதம் விளையுமானால் தாமும் உடனே தம்முயிரை விடுவர்.

**ஈழத்** - மொத்த மகிழ்ச்சி, இப்பொழுது இப்படையின் தலைவர் யார்?

**பொன்** - தாங்களே.

**ஈழத்** - என்படையில் சேர்ந்துகொள்ள உமக்கு விருப்ப முண்டோ?

**பொன்** - ஆணைப்படி நடக்கச் சித்தமாயுள்ளேன்.

**அரை** - ***(மற்றவர்களைக் கலந்து)*** பொன்னாரம் பூண்டாரே, இன்று முதல் நீர் படைநாயகமாகப் பதவி ஏற்கின்றீர். உம் முடைய தகுதியை நோக்கிப் படைத்தலைவன் பத விக்கு மேற்பட்ட படைநாயகப்பதவி உமக்கு அளிக்கப்படுகின்றது. இவ்வோலையை நமது நான்காம் தானைத் தலைவரிடம் கொடுத்துப் படைநாயகமாகப் பதிவு செய்து கொள்ளும். ***(ஓலை கொடுத்தல்)***

**பொன்** - ***(ஓலை பெற்றுப் படைவணக்கஞ் செலுத்திச் செல்லுதல்)***

**வல்ல** - தானைநாயகங்களே, இன்று உங்களுக்குக் கடுமையான வேலை. இத்துடன் தேர்வை நிறுத்திக்கொள்வோம். இன்னுஞ்சில நாட்களில் ஏனைத் தேர்வுகளை முடித் தாகல் வேண்டும்.

**அரை** - ஆம், இனிக் காலந்தாழ்த்தக் கூடாது.
***(எல்லோரும் செல்லுதல்)***

---

## களம் 2

**இடம் :** **தஞ்சை அரண்மனையிலுள்ள பூங்கா.**

**நடிகர் :** **இராசராசநரேந்திரன், அம்மங்காதேவி, நங்கை, மங்கை என்ற தோழிகள்.**

**பொழுது:** **இரவு முதல் யாமம்.**

**நரேந்திரன் - (உலாவிக்கொண்டு)** ஒய்வற்ற உள்ளமே, ஏன், இவ்வாறு என்னை உலாவச்செய்கின்றாய்? ஆடிடுங் கறங்கு போல் ஓடியுழல்வதுதான் உனதியற்கை போலும். அமைதியைநாடி, அமைதியானபோழ்தில், அமைதியான இடம்நோக்கி வந்தேன். ஈண்டும் உன் குரங்குத் தொழிலை மீண்டும் மீண்டும் என்னிடம் காட்டுகின்றாய்! நல்லது, உனக்கு அறிவுச்சுடர் கொளுத்து கின்றேன். இதோ பார், எழிலொழுகும் இப்பூம் பொழிலை. என்னருமைப் பாட்டனார் இராச ராச தேவ ருடைய மதிநுட்பமே, நுட்பம்! அரண் மனையின் நடுவில் ஓர்பூங்கா, பூங்காவின் நடு வில் ஓர் பொய்கை, பொய்கையின் நடுவில் ஓர் ஆழிமன்றம், ஆழிமன்றத்தின் நடுவில் ஒரு மேடை, மேடைக்குச் செல்ல ஓர் மாடப்பாலம்! தூங்குவது போன்ற பூங்கொடிகள்! ஏங்கி விழிப்பதுபோலும் பூஞ் செடிகள்! இவற்றினூடே பன்னிறப் பூக்கள் வேய்ந்த பாயல் போன்ற வழியிடங்கள். அவற்றின் இடை யிடையே அமர்வதற்கு அரிமாசுமந்த வெள்ளிய மேடை கள். எப்போதும் நீர் தெளிக்கும் பளிங்குச் சுனைகள். சுனைகளைச் சுற்றிலும் கண்கவர் வனப்புடைய உயி ரோவியம் போன்ற கற்படிமங்கள். ஏ, கள்ளமான உள்ளமே, இனி என்னிடம் உன் கைவரிசையைக் காட்டாதே. ஆகா, அதோ பார், மயில்கள் ஆடுகின்றன, குயில்கள் கூடு கின்றன, கிளிகள் ஊடுகின்றன. அதோ, புள்ளி மான்கள் துள்ளிவிளையாடுகின்றன. இதோ பார், இப்பூக்களை : மல்லிகை, முல்லை, மாதவி, பாதிரி, தாதகி, கூவிளம், மந்தாரம், சண்பகம், இலைஞ்சி, கோங்கம், கரந்தை, கொன்றை, நீலம், வாகை, குவளை, புன்னாகம், அலரி, சிவந்தி, பவளமல்லிகை, எத்தனை விதப்பூக்கள்! தாதவிழ்ந்து கமழும் இப்பூக்களின் தேனையுண்டு மூசுவண்டு முரலி பாடுவதைக்கேள். சரி, உனக்கு அறிவு வந்தது. வா, போய் பொய்கைக் கரையில் உட்கார்வோம். **(போய் அமர்ந்து சிந்தனையில் ஆழ்தல்)**

***(பொய்கையின் எதிர்க்கரைப்பக்கம், அம்மங்காதேவி, நங்கை, மங்கை வருதல்.)***

**நங்கை** - மங்கா, நீ மல்லிகைப்பூவைப் பறி, நான் முல்லையைக் கொய்கிறேன். தேவி சண்பகத்தைக் கொய்யட்டும்.

**அம்மங்காதேவி** - நங்கா, என்னாற்கொய்ய முடியாது. நீங்களே கொய்யுங்கள். நான் பொய்கைக்கரையில் உட்கார்ந் திருக்கின்றேன். **(போய் உட்கார்தல்)**

**மங்கை** - **(பூவைக் கொய்துகொண்டே)** நங்கா, தேவிக்கு உடல் நலமிலையென்று தெரிகிறது. சில நாட்களாகவே, தேவியின் மனமும் சிறிது கலக்கமடைந்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது.

**நங்** - சிறிது கலக்கமென்ன, முழுதுங்கலக்கந்தான். நல்ல வேளையாக நினைப்பூட்டினாய். வா, போய்த் தேவியைக் கேட்போம்.

**(இருவரும் சென்று அம்மங்காவின் இருபக்கத்திலும் அமர்தல்)**

**அம்** - ஏன் இவ்வளவு விரைவில் திரும்பிவிட்டீர்கள்?

**நங்** - தேவி, தங்களுக்குச் சிலநாட்களாகவே உடல் நல மில்லையென்று தோன்றுகிறது.

**அம்** - என் உடம்பைப்பற்றி உங்களுக்குக் கவலை வேண்டாம், நன்றாகத்தானிருக்கிறேன்.

**நங்** - தேவி, என்னைப் பொறுத்தருளவேண்டும். தங்களுக்குச் சிறிதும் மனக்கலக்கம் வேண்டாம். தங்கள் விருப்பம் விரைவில் நிறைவேறும்.

**அம்** - நங்கா, அன்று நீ, என் தாயார், பாட்டியார் முன்னிலை யில் என்னை ஏளனம் செய்தது என் மனதைவிட்டு இன்னும் அகலவில்லை.

**நங்** - தேவி, அப்பொழுது விளையாட்டிற்காகப் பேசினேன். இதை மனதிற்கொள்ளலாமா? இதற்காகவா வருந்து கிறீர்கள்?

**அம்** - இல்லை, இல்லை, அன்று நான் அவரைப்பார்த்தது தவறு.

**மங்** - யாரைப்பார்த்தது?

**நங்** - நீ சும்மாயிரு, உனக்கு ஒன்றுந்தெரியாது. தேவி, பார்த்ததில் தவறு என்ன இருக்கிறது? எல்லோருந்தான் பார்த்தோம். அவரைப் பார்க்காமல் எப்படியிருக்க முடியும்? அதிலும் நீங்கள்...

**அம்** - நான் பார்த்ததுதான் தவறு. நான் பார்த்திராவிடில் அவர் என்னைப்பார்த்திருப்பாரோ? அவருடைய முதல் நோக்கு என்னைக் கொன்றதுபோலுமிருந்தது. இரண்டாவது நோக்கு எனக்குயிரைத்தந்து எனதுள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது.

**நங்** - தேவி, உங்கள் உடம்பும் இவ்வளவு விரைவில் மெலிந்துவிட்டதே? அவரை அடிக்கடி நினைந்து வருந்த வேண்டாம். எப்படியும் தங்கள் விருப்பம் நிறைவேறி விடும். இதற்காக ஏன் கவலைகொள்ள வேண்டும்?

**அம்** - நங்கா, நீ எவ்வளவு ஆறுதல் கூறினாலும் எனதுள்ளம் தேறுதல் அடையாது. எனதுள்ளத்தில் நிகழும் போராட்டத்தை நீ அறிந்துகொள்ளவும் முடியாது.

**நங்** - தேவி, தேவி, கவலைக்கிடங்கொடுக்கவேகூடாது. இப்பொழுதே உங்கள் உடம்பு துரும்பாயிருக்கின்றது. இனியும் கவலைக்கிடங்கொடுத்தால் என்ன நேருமோ. கடவுள் உங்களைக் கலங்கவிட மாட்டார். விரைவில் உங்கள் விருப்பம் நிறைவேறிவிடும். சற்றுநேரம் மன மகிழ்ச்சியோடு இங்கே பொழுதுபோக்கிச் செல்வோம். மங்கா, நீ போய் வீணையை எடுத்துவா, தேவியின் பாடலைக்கேட்டு நாளாயிற்று. **(மங்கை செல்லுதல்)**

**அம்** - என்னால் பாடமுடியாது. நிலவு பளீரென எரிக்கின்றது. தென்றலும் வீசுகின்றது. ஆனால் என மேனியில் வேர்வை தோன்றுவதைப்பார்.

**மங்** - *(வீணையுடன் திரும்பிவந்து வீணையைப் பொய்கைக் கரையில் வைத்து அமர்தல்)*

**நங்** - (தேவியின் உடம்பைத் தொட்டுப்பார்த்து) ஆம், தேவி, வேர்வையும் வெப்பு நோயும் சேர்ந்து உண்டாயிருப்பது போலத்தோன்றுகிறது. மங்கா, நீ பொய்கையிலிருந்து ஒரு தாமரைப்பூ கொண்டுவந்து தேவிக்கு விசிறிவிடு.

*(மங்கை தாமரைப்பூ கொண்டுவந்து விசிறுதல்)*

தேவி, ஒருபாடல் பாடினீர்களானால் உங்கள் உள்ளம் குளிரும். உடலுங்குளிரும். எங்களுக்கும் இன்பம்.

**அம்** - இதோ பொய்கையில் மிதக்கும் தாமரை இலைகளில் முத்துகள் போல் உருளும் நீர்த்துளிகளைப்பாருங்கள். அவைகளைப்போலவே ஒன்றிலும் ஒட்டாமல் என துள்ளம் உருளுகின்றது.

**மங்** - தேவி, நான் தங்கள் பாடலைக் கேட்டு எத்தனையோ நாட்களாகிவிட்டன.

**அம்** - அதோ, வானத்தில் தோன்றும் விண்மீன்களைப் போன்று இதோ, இப்பூமரத்தின் இருண்ட இலைகளுக்குக்கீழ் ஆயிரம் ஆயிரமாக உலவும் மின்மினிகளைப் பாருங்கள் அவைகளைப் போலவே எனதுள்ளம் உலவுகின்றது.

**நங்** - தேவி, தங்களைக் கெஞ்சிக்கெஞ்சிக் கேட்கின்றோம், ஒரே ஒரு பாடல்பாடக்கூடாதா?

**அம்** - கெஞ்சினாலும், கொஞ்சினாலும், மிஞ்சினாலும் என் னாற் பாடமுடியாது. வீணே என்னைத்தொந்தரவு செய்யாதீர்கள்.

நங் - அப்படியானால் வீணாக ஏன் இங்கே உட்கார்ந்திருக்க வேண்டும்? வாருங்கள் உள்ளே போவோம். உங்கள் நன்மைக்காகவே உங்களைப் பாடச்சொன்னேன். சினந்துகொள்கிறீர்கள். எழுந்திருங்கள், உள்ளே போவோம். *(நங்கை எழுதல்)*

அம் - நங்கா, கீழே உட்கார், எனக்குமேல் உனக்குச் சினம் மூக்கில் நிற்கின்றதே.

நங் - பாடினாற்றான் உட்கார்வேன்.

அம் - சரி, உட்கார், பாடுகின்றேன். *(வீணையிசைத்துப் பாடுதல்)*

*(பூங்காவின் குயிலை விளித்து)*

உன்னை உகப்பன்குயிலே உன்துணைத் தோழியும் ஆவன்
பொன்னை அழித்தநன் மேனிப்புகழில் திகழும் அழகன்
மன்னன் பரிமிசைத் தஞ்சை போந்து நமதிடம் வாழ்வோன்
என்னை யடையும் படிக்கோர் இசையெடுத்
தியம்பிக் கூவாய்.

*(நெஞ்சை விளித்து)*

வாழியென் னெஞ்சமே நரேந்திர
வள்ளல் தனைநீ யடைந்தனை
ஆழியான் நெஞ்சுனை அடையவென்
அத்தை தனையன் அருளுமோ,
ஊமையு முந்துறும் உரவோன்
வெங்கை தலைவன் றனுள்ளம்
ஏழையென் பெண்மைக் கிரங்குமோ
என்னை, சிறிதும் அறிகிலேன்.

நங் - ஆகா, ஆகா, தேவி, தங்கள் இனிய குரலும், இசையும் யாழையும் பழிக்கின்றன. பாடல்களில் பொருந்திய இரக்கத்தையும் உருக்கத்தையும் என்னென்று கூறு

வேன் ! நமது பெருவுடையார் கோயிலில் நாடொறும் பாடுகின்ற காந்தர்விகள் கூட இவ்வாறு பாடமுடியாது.

மங் - தேவி, இப்பொழுதுதான் என்மனம் குளிர்ந்தது.

நங் - என்னருமைத் தேவி, தேவமாதர் பாடும்போது ஓவியமும் உவகைபூக்கும், கல்லுமுருகும், கனலும் புனலாகும், பட்டமரந் தழைக்கும் என்பார்கள். இவற்றின் உண்மை யினை இப்பொழுதானுணர்ந்தேன்.

அம் - நங்கா, நினது புகழ்மாலை எனக்கு வேண்டாம். பாடல் களின் கருத்து உனக்குப் புலனாகின்றதா?

நங் - அதையேன் கேட்கின்றீர்கள், நரேந்திர தேவர் இப் பொழுது இங்கேயிருந்தால் என்ன செய்வார் தெரியுமா?

அம் - என்ன செய்வார்? என் இசையில் ஈடுபட்டுவிடுவார். அவ்வளவுதான்.

நங் - அவ்வளவுதானா? நன்றாய்ச் சொன்னீர்கள்! அதற்கு மேலும் போவார். இருக்கட்டும் இன்னும் ஒருபாடல் பாடுங்கள்.

அம் - பாடமுடியாது, வேண்டுமானால் வீணையிசை மாத் திரங் கூட்டுகின்றேன். (தேவி, வீணையிசைத்தல்)

நரேந் - (நிமிர்ந்து உட்கார்ந்து) தனியிடம் என நினைந்து பூங்கா விற் புகுந்தேன். பொய்கையின் அக்கரையில் பூவையர் மூவர் அமர்ந்துள்ளனர். அவர்களில் ஒருத்தி இசைப் பெருக் கெடுத்தோட இனியகுரலில் பாடினாள். பாடி முடித்த இரண்டு பாடல்களின் கருத்தும் என்னைச் சுட்டுவது போலவன்றோ தோன்றுகிறது. ஆ! இப் பொழுது எழும் வீணையின் இசை திருநாவுக்கரசு நாயனார் நீற்றறையிலிருந்து பாடிய அரும் பாடல் களின் இசையோடு ஒட்டியிருக்கின்றதே. இவ்விசைக் குப் பொருந்தப் பாடிப்பார்ப்போம். (பாடுதல்)

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசுதெ ன்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசனெந்தை யிணையடி நீழலே.**

ஆகா, இப்பொழுதுள்ள இவ்விடத்தின் காட்சியை அப்படியேகண்டுகூறியது போலவன்றோ உள்ளது இவ்வருட் பாடல். பொய்கையில் இரண்டு அழகிய பறவைகள் நீந்திவருகின்றனவே. அவற்றைப்பார்ப்போம் - இரண்டும் இணைபிரியாது சேர்ந்துவருகின்றன - ஓகோ, ஒன்று அன்னச்சேவல், மற்றது அன்னப்பேடு. என்ன ஒத்த அன்பு, எவ்வளவு ஒத்த பண்பு! இவை தலைவனும் தலைவியுமாகவே காட்சியளிக்கின்றன. (அம்மங்கா தேவியின் நினைவு வருதல்) ஓகோ, அக்கரையில் வீணை வாசிக்கின்ற பாவை அம்மங்கா தேவியோ? ஆம், ஆம், அவளேதான். பக்கத்திலுள்ளவர் தோழிகள். தோழிகள் ஏன் என்னை நோக்கி வருகின்றனர்? அருகே வந்தால் என்ன செய்வேன்? - சரி, தூங்குவதுபோலப் பாசாங்கு செய்கின்றேன். அருகே வந்து என்ன செய்வார்கள், பார்ப்போம் (படுத்தல்)

**நங்** - தேவி, நாம் இங்கே செய்யவந்த அலுவலை அறவே மறந்துவிட்டோம். நீங்கள் இங்கேயே இருங்கள், நாங்கள் பூக்கள் கொய்து வருகிறோம்.

**அம்** - சரி, விரைவில் வாருங்கள். நேரமாயிற்று.
**(நங்கை, மங்கை இருவரும் எழுந்து செல்லுதல்)**

**நங்** - மங்கா, அதோ அக்கரையில் யாரோ ஒருவர் பாடிய குரல் உனக்குக் கேட்டதா?

**மங்** - கேட்டது. பாடியவர் யார்?

**நங்** - நல்லவேளையாக தேவி வீணை இசையிலேயே ஆழ்ந்து விட்டாள். தேவிக்கு அவர்பாடியது கேட்டிராது.

மங் - நல்லவேளையாக என்று ஏன் சொல்கிறாய்? தேவிக்கு அவர் பாடிய குரல் கேட்டாலென்ன?

நங் - அங்கே பாடியவர் நரேந்திரர் போலத்தோன்றுகிறது. எனக்கு அவர் குரல் நன்றாய்த் தெரியும். அன்று திருவோலக்க மன்றத்தின் மாடத்தின்மேல் நாங்கள் இருந்த போது அவர் பேசியதைக் கேட்டிருக்கிறேன். அப்போது தான் அம்மங்கா தேவிக்கு அவர்மேல் காதல் பைத்தியம் பிடித்தது. இப்பொழுது நான் சொல் கிறபடி நீ நடந்தால் நாம் இருவரும் ஒரு சரியான வேலை செய்யலாம்.

மங் - சொல்கிறபடியே செய்கிறேன். என்ன வேலை, சொல்.

நங் - நீ இங்கேயே நில், நான் போய் அவர்தானா என்று பார்த்து வருகிறேன். அவராயிருந்தால் நமது காரியம் கைகூடும்.

மங் - என்ன வேலை அதைச் சொல்.

நங் - இரு, இதோ வந்துவிட்டேன். (போய்த் திரும்பி வந்து) ஆம், அவரேதான். என் வேலையைச் சொல்கிறேன். கேள். எப்படியாவது ஒரு தந்திரம்பண்ணித் தேவியை அவர் படுத்திருக்கின்ற இடத்திற்கு அழைத்துக் கொண்டு போய் விட்டு நாம் திடீரெனப் பூஞ்செடி களில் மறைந்து கொள்வோம். அதன் பிறகு என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.

மங் - அவர் படுத்திருக்கிறாரா?

நங் - பாடிக் கொண்டிருந்தவர், இப்பொழுது தூங்கிக் கொண்டிருக்கிறார். காரணம் தெரியவில்லை. இஃதிருக் கட்டும், நான் சொல்கிறதைக்கேள். நான் இங்கேயே நிற்கிறேன், நீ போய்த் தேவியிடம் எனக்கு வண்டு கொட்டிவிட்டது என்று சொல். உடனே தேவி இங்கு அலறிக்கொண்டு வருவாள். அவளை நரேந்திரர் பக்கம் விட்டு நாம் மறைந்து கொள்வோம்.

மங் - சரியான சூழ்ச்சி, இதோ போய்த் தேவியை அழைத்து வருகிறேன். (மங்கை சென்று அம்மங்காவுடன் திரும்புதல்)

அம் - நங்கா, எங்கே இருக்கின்றாய்? வண்டா கொட்டி விட்டது?

நங் - ஆம், தேவி, இதோ இங்கே வாருங்கள்.

(நரேந்திரர் படுத்திருக்கும் பக்கம் செல்லுதல்)

(சென்றவுடன் தேவியை அங்குவிட்டு இருவரும் மறைதல்)

அம் - நங்கா, எங்கே இருக்கின்றாய்? மங்கா, நங்கா எங்கே? (திரும்பிப்பார்த்து) எங்கே மங்காவையும் காணோம்? இதென்ன இவர்கள் எங்கேயோ திடீரென மறைந்து விட்டார்களே!

(தூங்குவது போலுமிருந்த நரேந்திரன் எழுந்து)

நரேந் - அம்மங்கா, இது பூங்கா, இங்கே, நங்கா, மங்கா ஒருவரையுங்காணோம்.

அம் - (நடுக்குற்று) ஐயா, தாங்கள் யார்? மகளிர் விளையாடும் பூஞ்சோலையில் தங்களுக்கு என்ன வேலை?

நரேந் - தேவி, என்னைத் தெரியவில்லையா? யான்தான் நின் அத்தைமகன் இராசராச நரேந்திரன். நீதான் என் மாமன் மகள் அம்மங்காதேவி.

அம் - (நரேந்திரன் குரலையுணர்ந்ததும் ஓடிக்கொண்டே) அடி நங்கா, மங்கா, எங்கே போய்த் தொலைந்துவிட்டீர்கள்?

நரேந் - (பின்தொடர்ந்து) தேவி, அவர்கள் போனதைப்பற்றி ஏன் கவலை? எனக்கு ஒரே கேள்விக்கு நின்விடை வேண்டும்.

அம் - (நடந்துகொண்டே) என்னைக் கேள்விகேட்கத் தங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?

**நரேந்** - **(பின்தொடர்ந்து) அதைத்தான் முதலிற் கூறிவிட்டேனே, வேண்டுமானால் திரும்பக்கூறுகிறேன். ஆனால் நீ நடந்துகொண்டேயிருந்தால் என்னாற் கூறமுடியாது.**

**அம்** - **(குனிந்த வண்ணம் நின்று)** நான் போகவேண்டும். யான் இங்கே நிற்கமுடியாது.

**நரேந்** - ஒரே கேள்விக்கு விடையளித்து நீ செல்லலாம்.

**அம்** - எனக்கு விடை தெரியாது. ஆடவரொருவரோடு நான் தனியாக நிற்பதைப் பார்த்தால் என்ன நினைப்பார்கள்?

**நரேந்** - கேள்வியைத் தெரிந்துகொள்வதற்கு முன்னர் விடை தெரியாது என்று எவ்வாறு கூறலாம்?

**அம்** - எனக்குக் கேள்வியைக் கேட்கவும் விடையளிக்கவும் விருப்பமில்லை. யான் செல்கின்றேன்.

**நரேந்** - தேவி, இது நினது உள்ளத்தின் உள்ளேயிருந்து வருகின்ற பேச்சில்லை.

**அம்** - எனது உள்ளத்தைத் தாங்கள் எவ்வாறு ஆழம் பார்த்தீர்களோ?

**நரேந்** - எத்தனையோ வழிகளிற் பார்த்துவிட்டேன், அவற்றைச் சொல்கிறேன், கேள். **(வழிமறித்து நிற்றல்)**

**அம்** - வேண்டாம், யான் செல்கின்றேன். வழிவிடுங்கள்.

**நரேந்** - எனக்கு வழிசொல்லிச் செல்.

**அம்** - யான் எப்படித் தங்களுக்கு வழிசொல்ல முடியும்?

**நரேந்** - நீ சொல்ல வேண்டியதில்லை. என் வழியும் நின் வழியும் ஏறக்குறைய ஒன்றேதான்.

அம் - (புன்முறுவல் பூத்து) நன்றே மொழிந்தீர்கள், சரி எனக்கு வழிவிடுங்கள்.

நரேந் - விழி யொன்று கூற வழியொன்று கேட்கின்றாய்.

அம் - பழியொன்றுசார வழிநின்று யான் பேசேன்.

நரேந் - தேவி, உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவது சோழர்குலப் பெண்மணிக்கு அணிகலமாகாது.

அம் - 'பேதைமை என்பது மாதர்க்கணிகலம் ' என்பது தாங்கள் அறியாததொன்றோ?

நரேந் - தேவி, ஔவை மூதாட்டி நீ கொண்ட பொருளில் அதனைச் சொல்லவில்லை.

அம் - ஔவையார் கொண்ட பொருளென்ன? கூறவேண்டும்.

நரேந் - நீ கொண்ட பொருள், 'அறியாமை என்பது மாதர்க்கு அணிகலம்' என்பதாகும். ஔவையார் கொண்ட பொருள், 'அறிந்தும் அறியாதவர்போல் அடங்கி யிருக்குங்குணம் மாதர்களுக்கு அணிகலம்' என்பதாகும்.

அம் - அவ்வாறானால், அறிந்தும் அறியாதவள்போல் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுதல் சோழர் குலப்பெண்மணிக்கு அணிகலம் ஆகுமா, ஆகாதா, என்பதனைச் சிந்தித்துப் பாருங்கள்.

நரேந் - ஆம், ஆம், தேவி, நீ என்னை வென்றுவிட்டாய், ஆயினும் நீ என்னிடம் அகப்பட்டுக்கொண்டாயே?

அம் - எவ்வாறு?

நரேந் - 'இது நினது உள்ளத்தின் உள்ளேயிருந்து வருகின்ற பேச்சில்லை' என்ற எனது சொற்களில் அகப்பட்டாய்.

அம் - மிகவும்சரி, எனதுள்ளத்தை எவ்வாறு உணர்ந்தீர்களோ?

நரேந் - அன்று திருவோலக்க மன்றத்தில் அமைச்சர் முதலா யினரோடு அமர்ந்து அரசியல் வாதில் யான் கலந்து கொண்டபொழுது மாடத்தும்பர் இருந்த நீ என்னைப் பார்த்துப் புன்முறுவல் பூக்கவில்லையா?

அம் - இதில் வியப்பென்னவிருக்கிறது? தங்கள் பேச்சைச் செவிமடுத்த எல்லோருமே மகிழ்ச்சியாரவாரஞ் செய்த னர். யானும் மகிழ்ச்சியுற்றேன்.

நரேந் - நல்லது, சற்றுமுன் நீ பொய்கையின் அக்கரையி லிருந்து பாடிய பாடல்களினால் என்மீது உனக்குள்ள காதலைப் புலப்படுத்தவில்லையா?

அம் - பாடல்கள் பாடினால் காதல் என்று சொல்லிவிடலாமா?

நரேந் - நீ பாடியவை வெறும் 'வெள்ளைப்பாடல்கள் தாமே'. எனக்குப்பொருள்விளங்காதா? முதலிற் குயிலை உன் துணைக்கழைத்து என்னிடம் தூது சென்று கூவச் சொன்னாய். பின் உன் நெஞ்சு என்னை அடைந்ததற் காக அதனை வாழ்த்திப்பாடினாய். இவைகளுக்கு என்ன விடை கூறப்போகின்றாய்?

அம் - ஏதோ, பேதைமையினாற் காதல் கொண்டேன். என்னை மன்னிக்க வேண்டும். யான் செய்தது பெருந் தவறு.

நரேந் - காதலின் முடிவு மணம் என்பது நீ அறிந்ததொன்று தானே? இதற்குத்தான் நின் விடை வேண்டும்.

அம் - இதற்கு யான் விடை கூற முடியாது. என் மணம் என் சொந்தப் பொறுப்பன்று.

நரேந் - என்ன, நீ கூறுவது விந்தையாயிருக்கின்றது.

**அம்** - இதில் விந்தை என்ன விருக்கின்றது? என் தந்தையின் ஒப்பமின்றி ஓரணுவும் இங்கு அசையக்கூடாது, அசைந் தால் அது நிந்தையாக முடியும்.

**நரேந்** - உன்பேச்சில் எதுகைத் தொடையும் மோனைத்தொடை யும் ஒன்றையொன்று தொடர்கின்றன. நீ பண்டிதச் சோழன் பாவையன்றோ?

**அம்** - தங்கள் பேச்சில் மோனையழகே முனைந்து நிற்கின்றது. தங்கள் பண்டிதச் சோழன் தங்கையின் தனயன் அன்றோ? வெங்கைக் குரிசில் அன்றோ?

**நரேந்** - நின்னைப் பேச்சில் வெல்லுதல் என்னால் முடியாது. சரி பேச்சை மாற்ற வேண்டாம். நின் தந்தை இசைந்தால் நீ மணத்திற்கு உடன்படுவாயன்றோ?

**அம்** - என் தாயின் ஒப்பமும் வேண்டும்.

**நரேந்** - நின் தாயும் ஒப்புவதாக வைத்துக்கொள்.

**அம்** - அதன்பிறகு என் பாட்டியாருடைய ஒப்பமும் வேண்டும்.

நரேந் - உன்னுடைய கொள்கை வெகு நன்றாயிருக்கின்றது! தலைவனும் தலைவியும் தமது விருப்பப்படி மணந்த தமிழ் நாட்டில் நீ ஒரு புதுமைப் பெண்ணாய்த் தோன்றியிருக்கின்றாய்! உன் உலகவாழ்விற்கேற்ற ஒரு வாழ்க்கைத் துணைவனைத் தேர்ந்து கொள்வ தற்கு உனக்கு உரிமை இல்லை. உன் தந்தை, தாய், பாட்டியார் இவர்கள் விருப்பத்திற்கு நீ ஒருப்பட வேண்டும். அதாவது அவர்களுடைய எண்ணங்களுக்கு நீ அடிமை.

**அம்** - அடிமையென்று யார் சொன்னார்கள்? முடிவில் என் ஒப்பமும் வேண்டுமே. என்விருப்பமும் என்பெற்

றோர்கள் விருப்பமும் ஒருப்பட்டேயிருக்கும். கல்வி கேள்விகளிலும், கலையறிவு ஒழுக்கங்களிலும் நிறை வெய்தியுள்ள ஒரு குடும்பத்தில் வேற்றுமை யுணர்ச்சிக் கிடமேயின்று.

**நரேந் -** சரி, நின் முடிவுதான் என்ன? அதைச்சொல்.

**அம் -** எனது இளமையின் காரணமாகப் பொறிவழிப்பட்டு யான் தங்களைக் காதலித்தேன். ஆனால்...

**நரேந் -** ஆ! (மயங்கி வீழ்தல்)

**அம் -** (பக்கத்தில் அமர்ந்து நரேந்திரன் முகத்தைத் தடவி) நரேந்திர மன்ன, வெங்கை வீர, யான் என்ன கூறிவிட்டேன், இவ்வாறு மயங்கி வீழ்ந்து விட்டீர்கள்? என் பேச்சை முற்றிலும் கேட்காமல்...

**நரேந் -** (கண்ணை விழித்து அம்மங்காதேவியின் கையைப் பிடித்து) என்ன கூறிவிட்டேனா. உன் கூற்றின் பொருளென்ன? உன் கூற்று எனக்குக் கூற்றமே. பொறி வழிப்பட்டுத்தானே நீ என்னைக் காதலித்தாய்? அனால் அறிவு வழிப்பட்டும் அதனைத் தவறு என்றுணர்ந்தாய். ஆகையின் உன் அறிவுக்கு யான் ஏற்ற மணாள னாய்த் தோன்றவில்லை.

**அம் -** என்னுடைய 'ஆனால்' என்ற சொல்லுக்குத் தாங்கள் இவ்வளவு விரிவுரை கொள்வீர்கள் என்று யான் கருத வில்லை. ஆடவர்மனமே இவ்வாறு தேடரிய பொருளையே நாடுகின்றது. இதற்கு யான் என் செய்வேன்.

**நரேந் -** ஆம், ஆம், தேடரிய பொருளாகிய நின்னை என்மனம் நாடுகின்றது. எனக்கு நீ அரியபொருள்தான், உண்மை உண்மை, அந்தோ! (கீழே சாய்தல்)

அம் - வெங்கை வீரரே, மறுபடியும் எனது சொற்களைத் திரிபாகக் கொண்டுவிட்டீர்களே. நேரான பொருளை நோக்குங்கள்.

நரேந் - (எழுந்து நின்று) சரி, நின் சொற்களுக்கு நீயே விரிவுரை கூறு பார்ப்போம்.

அம் - யான் 'ஆனால்' என்று தொடங்கிய வாக்கியத்தை முடிக்கின்றேன், கேளுங்கள்: ஆனால் இப்பொழுது யான் எனதறிவின் வழிப்பட்டுத் தங்களை எனது மணாளராக ஒப்புகிறேன். சரியாகக் கேளுங்கள்: பொறிவழிப் பட்டுத் தங்களைக் காதலித்தேன், அறிவுவழிப் பட்டுத் தங்களை என் வாழ்க்கைத் துணைவராக, என் உயிர்த் தலைவராக ஏற்கின்றேன். 'பொறி' என்ற சொல்லை ஊழ், விதி என்ற பொருளில் யான் கூறி னேன். இதனைத் தாங்கள் தவறாகக் கொண்டு விட்டீர்கள்.

நரேந் - ஆவியே, அமிழ்தே, அளப்பருந் தமிழே,

காவியச் சுவையே, கலைபயில் மயிலே,

ஓவிய உருவே, உனைநினைந் துருகா

தேவியே தெளிந்தேன், திறமுணர்ந் தனனே.

அம் - எனதாருயிர்த் தலைவ, ஓர் வேண்டுகோள் : என் ஒப்ப மின்றித் தாங்கள் என்னைப் பிரிந்து யாண்டும் ஏகல் கூடாது. இதற்குத் தங்கள் வாக்குறுதி வேண்டும்.

நரேந் - நின் விருப்பத்தைக்கடவேன், உறுதியாய் நம்பு.

அம் - நாழிகையாயிற்று, நான் போய் வருகிறேன். நீங்களும் புறப்படுங்கள். என் தோழிகள் என்னை விட்டுப் பிரிந்திராவிடில் நாம் இத்துணை நாழி இங்குப் பேசி யிருக்க முடியாது.

நரேந் - சற்று நில். நமது காதலை நினது பெற்றோருக்குத் தெரிவிப்பது எவ்வாறு? நினது தோழிகள் இங்கு எங்காவது மறைந்திருந்து நமது உரையாடலைக் கேட்டிருந்தால், அவர்களே அறிவித்துவிடுவார்கள். இதற்கு ஒருவழி நீதான் சொல்லவேண்டும்.

**அம்-** அது தங்களுடைய பொறுப்பு. என்னால் ஒன்றும் சொல்ல முடியாது.

**நங் -** (மறைந்திருந்தபடியே) தேவி, தேவி, நாழிகையாகி விட்டது நாங்கள் நிறையப் பூக்கள் பறித்திருக்கிறோம். தங்கள் தாயாரும் பாட்டியாரும் தங்களை விரைவில் அழைத்து வரச் சொல்கிறார்கள்.

**அம் -** சரி, வழி பிறந்துவிட்டது. யான் சென்று வருகிறேன்.

**நரேந் -** சரி சென்றுவா, மற்றொரு முறை நின்னை யான் எப்பொழுது பார்க்க முடியும்?

**அம் -** தாங்கள் இங்கேதானே இருக்கப்போகிறீர்கள்? அல்லது வெங்கைக் கோநகர் புறப்படப்போகின்றீர்களோ?

**நரேந் -** இனி வெங்கைக் கோநகருக்கு உன்னையழைத்துக் கொண்டுதான் செல்வேன். சென்றுவா, இது என் காதலின் அடையாளம். (முத்தங்கொடுத்தல்)

**(இருவரும் எதிர்த்திசைகளிற் செல்லுதல்)**

---

## களம் 3

**இடம் :** **தஞ்சைப் புறம்படியில் சிங்கப்புலி இல்லிற்குப் பக்கத்தில் படைப்பயிற்சிப் பறந்தலை.**

**நடிகர் :** **சிங்கப்புலியர், போர்முட்டியார், வீரப் புலியர், களத்துவென்றார், வாள்வெட்டியார், அஞ்சுகம்.**

**பொழுது :** **காலை.**

**சிங்கப்புலி -** போர்முட்டியண்ணா, எங்கே இவ்வளவு காலையிலே புறப்பட்டீங்க.

**போர்முட்டியார்** - யார்? சிங்கப்புலியா? தம்பி சிங்கம், என்ன சேதி?

**சிங்** - ஏது, இப்பவே தடுமாற்றந்தான் போலிருக்குத் தங்களுக்கு?

**போர்** - ஆமா, தம்பி, வயதாய்விட்டுதில்லையோ? இனிமேல் எல்லாம் அப்படித்தான். கிடங்குக்குப் போய்வருகிறேன். சரி, வருகிறேன் அப்பா.

**சிங்** - போய் வாருங்க, அண்ணா.

**போர்** - தம்பி சிங்கம், உன்னை ஒரு சேதி கேட்கணு மென்றிருந்தேன். மறந்துவிட்டேன்.

**சிங்** - என்ன சேதி, நல்லாக் கேளுங்கள்.

**போர்** - ஒரு திங்களுக்கு முன்னாலே, இந்த இடத்திலேதான், அந்தப்பயல் வீரப்புலி உன்னைப்பற்றி என்ன பேசினான், பார்த்தியா?

**சிங்** - அது கிடக்கட்டுங்க. அந்தப்பயல் இனிமேல் என் வீட்டுப் பேச்சை எடுக்கவே மாட்டான். களத்தண்ணா அவனுக்கு நல்ல புத்திகட்டி விட்டாருங்க.

**போர்** - அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்ல வரவில்லை அப்பா, குடும்பம் என்றால் சண்டை சச்சரவு இல்லாமலாவிருக்கும்?

**சிங்** - வேறென்ன சேதிங்க?

**போர்** - ஒன்றுமில்லையப்பா, அதுகிடக்கட்டும்.

**சிங்** - சும்மா, மறைக்காமல் சொல்லுங்க அண்ணா.

**போர்** - அந்தப்பயல் வீரப்புலிதான், இப்படி நாலுபேர் நடுவே நீ இரட்டபாடிச் சண்டையிலிருந்து ஓடிவந்ததைச் சொல்லலாமா? வீரனுக்கு வீரன் இப்படி ஏளனமாப்

பேசலாமா? இதுதான் என் உள்ளத்திலே உறுத்திக் கொண்டே இருக்குது?

**சிங்** - ஆமாம் அண்ணா, அதுதான் எனக்கும் உறுத்திக் கொண்டே இருக்குது. அந்தப்பயல் இப்போது என் கையிலே அகப்பட்டால் தீர்ந்தேவிட்டான் என்று நினைத்துக் கொள்ளுங்கள். அன்றைக்குக் களத்தண்ணா தடுத்து விட்டாரு.

**போர்** - அதை மறந்துவிடு, தம்பி, சண்டைவேண்டாம், அவன் கூடச் சண்டைக்குப்போனால் அவன் திரும்பத்திரும்ப இரட்டபாடியைப்பற்றியே பேசுவான்.

**சிங்** - அதுவுஞ் சரிதான்.

*(தொலையில் வீரப்புலி வருதல்)*

**போர்** - தம்பி, சிங்கம், அதோ வீரப்புலி வருகிறான். நீ வீட்டுக்குப்போய்விடு. அந்தப்பயலுக்கு நான் புத்தி புகட்டிப் போகச்சொல்கிறேன். நீ இப்பொழுது இருக்கிற நிலையிலே அவனைப்பார்த்தால் வம்பு வளர்ந்துவிடும்.

*(சிங்கப்புலி வீட்டிற்குப் போதல்)*

*(தனக்குள்ளாக)* இந்தப்பயல்களை முட்டவிடாமலிருந் தால் என்பட்டம் போர்மூட்டியில்லை. வயதாய்விட்ட தென்று படையிலிருந்து விலகிவிட்டால் எனக் குள்ள மரியாதை எங்கே போச்சு. என்னைக்கண் டால் இந்தப் பசங்கள் கொஞ்சமாவது மதிக்கிறாங் களா? அடுத்தாற்போல் களத்துவென்றாரைக் கண்டால் என்ன வணக்கம், என்ன பணிவு?

**வீரப்புலி** - *(அண்மையில் வந்து)* போர்மூட்டி யண்ணா, எங்கே இவ்வளவு காலையிலே வெளிக்கிளம்பி விட்டீர்கள்?

போர் -என்னமோப்பா 'உங்கள் காட்டிலேதான் மழை பெய்யுது. போர் வந்துவிட்டது. உங்களுக்கு என்ன குறைச்சல்?

வீரப் - என்ன இப்படிச் சொல்கிறீர்கள்?

போர் - ஆமப்பா, ஆமா, போர் வந்துவிட்டதென்றால் வீட்டில் இருக்கிற எனக்கா அதிக நிபந்தம் அளக்கப் போகிறாங்கள்?

வீரப் - எங்களுக்கு மாத்திரம் என்ன அதிகமா அளந்து விடப்போகிறார்கள்?

போர் - இஃதிருக்கட்டும், அதோ தெரியுதே, அதுதானே சிங்கப்புலி வீடு?

வீரப் - ஆமா, அதைப்பற்றி என்ன இப்போது உங்களுக்கு நினைவு வந்துவிட்டது?

போர் - ஒன்றுமில்லை, சும்மாகேட்டேன்.

வீரப் - சும்மா மறைக்காமல் சொல்லுங்க அண்ணா.

போர் - வா, நடந்துகொண்டே பேசுவோம். (சிங்கப்புலி வீட்டை நோக்கிச் செல்லுதல்) அன்றைக்கு அத்தனைபேர் நடுவே அந்தப் பயல் சிங்கப்புலி உன்மேல் பாய்ஞ்சு பாய்ஞ்சு வந்தானே, வயதிலே மூத்தவன் என்று மதிக்கா மல் நீ உன் வாளை வீசியிருந்தால் அவன்கதி என்னா யிருக்கும்?

வீரப் - என்னிடம் அவன் ஒருவீச்சுக்கு நிற்பானா? என்னமோ, அன்றைக்குக் களத்தண்ணா தடுத்துவிட்டாரு.

போர் - மெள்ளப்பேசு, அவன் வீட்டுக்குப் பக்கத்தில் வந்து விட்டோம்.

**வீரப் -** என்ன அண்ணா மெள்ளப் பேசுகிறது? இந்தப் பயலுக்கு நான் அஞ்சுகிறவனா? இவன் இரட்டபாடியிலிருந்து ஓடிவந்தவன்தானே.

**(சிங்கப்புலி வீட்டிலிருந்து வாளுடன் வெளியே பாய்ந்து வருதல்)**

**போர் -** அடோ, சிங்கம், சும்மாயிரு, வேண்டாம்.

**வீரப் -** போர்மூட்டியண்ணா, நீங்கள் சும்மாயிருங்கள், கையில் வாள் இல்லாவிட்டாலும் இவனை ஒருகைபார்த்து விடுகிறேன்.

**சிங் -** என்ன சொல்கிறான் இந்தப்பயல்?

**(வாளை வீசவீச வீரப்புலி அதனைக்கையால் தடுத்தல், தடுக்கப்பட்ட வாள் காலிற்பட குருதிவருதல்)**

**வீரப் -** (தரையில் உட்கார்ந்து புண்ணைக் கையால் மூடிக்கொண்டு) அடே சிங்கம், உன் கோழைத்தனத்தை என்னிடம் காட்டி விட்டாயே, வீரனாயிருந்தால் -

**(களத்துவென்றாரும், வாள்வெட்டியும் வருதல்)**

**களத்துவென்றார் -** அடே சிங்கம், வீரப்புலி, என்ன கதை இது? அன்றைக்கு உங்களுக்கு எவ்வளவு புத்தி புகட்டியும் பயனில்லையே. போர்மூட்டியண்ணா, எல்லாம் உங்கள் வேலையாத்தானிருக்கும்.

**போர் -** தம்பி களம், இப்படியெல்லாம் பேசாதே. நான் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் இந்தப்பசங்கள் கேட்கவில்லை. இதற்கு யார் என்ன பண்ணுகிறது?

**களத் -** வீரப்புலி காலிலே அதிகமாகக் குருதிவருகுதே. எலும்பு முறிந்திருக்கும்போல் தெரிகிறது. அடேசிங்கம், வீட்டிலேயிருந்து கொஞ்சம் குவளையிலே தண்ணீரும், சுண்ணாம்பும், துணியுங் கொண்டுவா. வாள் வெட்டி, நீ

போய் சிங்கப்புலி கொல்லையிலிருந்து எலும் பொட்டிப் பச்சிலை கொஞ்சம் பறிச்சுக்கொண்டுவா.

(வாள்வெட்டி செல்லுதல்)

சிங் - (வீட்டிலிருக்கும் தன் மகளைக் கூப்பிடுதல்) ஏ குட்டி, அஞ்சுகம், குவளையிலே தண்ணீரும், துணியும், கொஞ்சம் சுண்ணாம்பும் கொண்டுவா.

அஞ்சுகம் - (வெளியே எட்டிப்பார்த்து) எதுக்காக, அப்பா?

சிங் - விரைவிலே கொண்டுவா, சொல்கிறேன்.

(வாள்வெட்டி பச்சிலையுடன் திரும்புதல்)

களத் - கொண்டுவந்துவிட்டாயா? சரி, அதை நன்றாக் கசக்கு.

(அஞ்சுகம் தண்ணீர் முதலியன கொண்டுவருதல்)

சிங்கப்புலி, இந்தப் பெண்யார்? உன்மகளா? பேர் அஞ்சுகமா?

சிங் - ஆமாம்.

களத் - ஏ, பெண்ணே அஞ்சுகம், நான் சொல்கிறதைக் கேள். தண்ணீராலே முதலிலே அவர் புண்ணைக் கழுவு. அப்புறம் சுண்ணாம்பைத் தண்ணீரிலே கரைத்து அதனால் புண்ணைக்கழுவு.

அஞ் - எனக்கு இதெல்லாம் தெரியாதுங்க.

களத் - சும்மாக் கழுவு அஞ்சுகம், கூச்சப்பட வேண்டாம், உனக்குப் புண்ணியம்.

சிங் - அஞ்சுகம், சும்மாக் கழுவு, அண்ணாச் சொல்கிறாரே.

(அஞ்சுகம் உட்கார்ந்து புண்ணைக் கழுவுதல்)

**வீரப் -** அப்பப்பா, அம்மம்மா, அதிகமா நோகுதே.

**வான் -** வீரப்புலி, காலையாட்டாமல் சும்மா இரு, ஒரு பெண்ணுப் புண்ணைக் கழுவும்போதா உனக்கு நோகுது?

**(எல்லோரும் சிரித்தல், வீரப்புலியும் சிரித்தல்) (அஞ்சுகம் நாணுதல்)**

**களத் -** இந்தப்பசங்கள் கிடக்கிறாங்க, நீ சும்மாக்கழுவு, அஞ்சுகம். உனக்குக் கோடிபுண்ணியம். வாள்வெட்டி, கொண்டுவா பச்சிலையை. **(வாள்வெட்டிப் பச்சிலையைக் கொடுத்தல்) (களத்துவென்றார் அதைப்பெற்று)** அஞ்சுகம், இந்தப் பச்சிலையைப் புண்மேலே வச்சு அந்தத் துணியாலே நன்றாகக்கட்டிவிடு.

**அஞ் -** எனக்குக் கட்டத் தெரியாதுங்கள். நீங்களே கட்டி விடுங்கள்.

**வாள் -** அஞ்சுகத்துக்குக் கட்டத்தெரியாது. வீரப்புலியைக் கட்டச்சொல்லிப்பாருங்கள். அஞ்சுகத்துக் கழுத்திலே கூட கயிறு கட்டிவிடுவான்.

**களத் -** சும்மா இரு அப்பா, ஏளனம் செய்கிறதுதான் உனக்கு வேலை. **(துணியைப் பெற்று, முறிந்த எலும்பை நகர்த்தி ஒன்றாய்ச்சேர்த்துக் கட்டுதல்)** வீரப்புலி, எங்கே எழுந்து நட, பார்ப்போம். **(வீரப்புலி எழுந்து நடத்தல்)** சரி, இன்னும் ஏழுநாளிலே ஆறிவிடும். வீரப்புலி, இன்னுஞ் சிலநாள் வரையிலும் நீ படைப்பயிற்சிக்கு வர வேண்டாம். **(அஞ்சுகம் வீடு திரும்புதல்)** எந்தப்புண்ணையும் நான் ஆற்றி விடுவேன். உங்கள் இரண்டு பேருடைய மனப்புண்ணை ஆற்றுவதுதான் கடினமாயிருக்குது.

**சிங் -** வீரப்புலி வாயை அடக்கமா வச்சிருந்தால் எல்லாம் ஆறிவிடுங்க.

களத் - இப்படியெல்லாம் அது ஆறாதப்பா. நீயும் உன்கையைச் சும்மாவைத்திருக்கமாட்டாய். வீரப்புலியும் தன் வாயைச் சும்மாவைத்திருக்கமாட்டான். உங்கள் மனப்புண்ணை ஆற்றுகிறதாயிருந்தால் அதற்கு ஒரே வழிதானுண்டு.

போர் - தம்பி, களம், அந்த வழி எனக்குத் தெரியும்.

களத் - நீங்கள் சும்மா இருங்கள் அண்ணா, உங்களுக்குத் தெரியாது. புண்ணைப் பெரிசு பண்ணத்தெரியுமே ஒழிய ஆற்றுகிற வழியா உங்களுக்குத் தெரியும்? வயதாய் விட்டதே. ஓரிடத்தில் சும்மா விழுந்து கிடந்தால் என்ன?

போர் - களம், இப்படிக் கோபமாய்ப் பேசுவதாயிருந்தால் நான் வாயை மூடிக்கொள்கிறேன்.

வாள் - களத்தண்ணா, உங்களாலே ஆகாத காரியம் ஒண்ணுமில்லை.

களத் - சிங்கப்புலியும் வீரப்புலியும் நான் சொல்கிறபடிச் செய்கிறதாக முதலில் வாக்குக்கொடுக்கட்டும், அவர்களுக்குள் நான் சந்து பண்ணி வைக்கிறேன்.

போர் - சந்துபண்ணிவைக்கிற தந்திரம் உனக்குத்தான் தெரியும்.

வாள் - பிரித்துவைக்கிற தந்திரம் போர்மூட்டியண்ணாவுக்குத் தெரியும்.

போர் - ஏ, வாள்வெட்டி, நீ சும்மா இருக்கமாட்டே?

களத் - இப்பொழுது வீரப்புலி காலின் சந்துயிரை எப்படி ஒன்றாய்ச்சேர்த்தேன். அதேமாதிரியே இவர்களுக்குள் சந்துசெய்துவைத்து விடுவேன், ஆனால் -

போர் - தம்பி களம், சந்துயிர் என்றால் என்ன?

**களத்** - உங்களுக்குக்கூடத் தெரியாதா? சந்துயிர் என்றால் எலும்புக்குப்பேர். இப்படித்தான் நம் தமிழ்மொழி யிலேயிருந்து ஒவ்வொரு சொல்லாய் மறைந்துவரு கிறது. அந்தந்த இடத்தை வடமொழி வந்து எடுத் துக்கொள்கிறது. வடவருக்கு நம்நாட்டில் இடம் கொடுக்கக் கொடுக்க நமது மொழியே மாறி வருகிறது. இஃதிருக்கட்டும், என்ன சிங்கப்புலியும் வீரப்புலியும் வாயை மூடிக்கொண்டே இருக்கிறாங்கள்.

**சிங்** - சந்து செய்கிறதாயிருந்தால் செய்யுங்கள். ஆனால் அது பொருத்தமாய் இருக்கவேணும்.

**களத்** - எல்லாம் பொருந்தும் தம்பி, மனப்பொருத்தம் இருந் தால். வீரப்புலி, நீ என்ன சொல்கிறாய்?

**வீரப்** - அண்ணா, நீங்கள் சொல்கிறதுதான் எனக்கு ஆணை.

**சிங்** - எனக்கும் உங்கள் சொல்லுதான் ஆணை.

**களத்** - அப்படிச் சொல்லு சிங்கம். நான் இப்போது சொல் கிறதுதான் ஒரேவழி. உன் மகள் அஞ்சுகத்தை வீரப் புலிக்கு மணம்செய்து கொடுத்துவிடு.

**சிங்** - இதெல்லாம் முடியாது. இந்தப்பயலுக்கா? என் மகள் அஞ்சுகத்தையா?

**களத்** - என்னப்பா, என் சொல்தான் ஆணை என்று சொன்னாய், உடனே மாறிவிட்டாயே? நாழிகையாகிறது. எல்லோரும் இங்கே உட்கார்வோம். **(எல்லோரும் அமர்தல்)**

**சிங்** - இல்லை அண்ணா, என்பெண்டு என்ன சொல்வாளோ, அஞ்சுகந்தான் உடன்படுவாளோ, இதெல்லாம் தெரிய வேண்டாமா? அதோடு நான் இருக்கிற நிலையிலே மணம் என்று சொன்னால் பணம் வேண்டாமா?

**வான்** - இதற்கெல்லாம் அஞ்சாதே, சிங்கம், களத்தண்ணா இதற்கெல்லாம் வழிவச்சிருப்பாரு.

**களத்** - என்னிடத்தில் வழி என்னயிருக்குது? சிங்கப்புலி, உன்னிடத்திலே இருக்கிற காசையெல்லாம் பொறுக்கிப் போட்டுச் சுருக்கமா மணத்தை முடித்துவிடலாம்.

**சிங்** - இருங்கள், நான் போய் என் பெண்டையும் மகளையும் கேட்டுவருகிறேன்.

**களத்** - நில், வீரப்புலியையும் கேட்டுவிடுவோம். வீரப்புலி என்னப்பா உன்சேதி?

**வான்** - வீரப்புலிக்கு இனிமேல் என்ன நோவு? எல்லாம் நீங்கள் சொல்கிறபடிதான்.

**வீரப்** - என்னிடத்திலே ஒரு காசுகூட இல்லையண்ணா.

**களத்** - காசுகிடக்கட்டும், காசு. பெண்பிடிச்சிருக்குதா, இல் லையா, அதைச் சொல்லப்பா.

**வீரப்** - எல்லாம் நீங்கள் சொன்னால் சரிதான்.

**களத்** - உனக்குப் பெண் பிடிச்சிருக்கிறதா என்பதைப்பற்றி நானா சொல்லவேணும்? அஞ்சுகம் என்றால் என்ன தெரியுமா, உனக்கு? அஞ்சுகம் என்றால் கிளி. சிங்கப் புலியின் மகள் கிளியென்றால் கிளிதான்.

**வீரப்** - சரிதான், அண்ணா

**களத்** - சிங்கம், நீ போய் உன் பெண்டையும் மகளையும் கேட்டுவா.

**சிங் -** கேட்டுவருகிறேன். ஆனால் பணத்துக்கு என்ன செய்கிறது? வீரப்புலியும் ஒரு காசுகூட இல்லை என்கிறான்.

**களத் -** நீ போய்வா, அதற்கெல்லாம் நான் வழி சொல்கிறேன். *(சிங்கப்புலி செல்லுதல்)*

போர்மூட்டி அண்ணா, என் ஏற்பாடு எப்படி?

**போர் -** நீ போடுகிற முடிச்சையாராலும் அவிழ்க்க முடியாது.

**களத் -** உங்களால்கூட முடியாதா?

**போர் -** சிங்கப்புலியும், வீரப்புலியும் மாமனும் மருகனுமாப் போய்விட்டால், அப்புறம் அதை ஆர் அசைக்கமுடியும்?

**வாள் -** குருதிக்கலப்பு ஏற்பட்டுவிட்டால் அப்புறம் முடிச்சு உறுதியாய்ப்போய்விடும். அதை எத்தனை போர்மூட்டி யார் வந்தாலும் அவிழ்க்க முடியாது.

**போர் -** அடே வாள்வெட்டி, என்தொழில் போர் மூட்டுகிற தென்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா?

**வாள் -** பின் எதனால் உங்கள் குடிக்கு இந்தப் பட்டம் வந்திருக்குது?

*(சிங்கப்புலி திரும்பிவருதல்)*

**களத் -** என்ன, சிங்கம், இரண்டுபேருக்கும் உடன்பாடுதானே?

**சிங் -** என் பெண்டு சரியென்று சொல்கிறாள். அஞ்சுகம் வாயை மூடிக்கொண்டு ஒன்றும் சொல்லமாட்டேன் என்கிறாள். இன்னொரு சேதி, எங்கள் இரண்டு பட்டமும் புலியென்று முடியுதே அதற்கென்ன செய்கிறது என் கிறாள் என் பெண்டு.

களத் - இதெல்லாம் என்னைக்கேள் சொல்கிறேன். ஒரே பட்டத்துக்குள் மணம் செய்யக்கூடாதுதான். ஆனால் உங்கள் பட்டந்தான் வெவ்வேறாயிருக்குதே. ஒன்று சிங்கப்புலி, இன்னொன்று வீரப்புலி. அஞ்சுகம் ஒன்றும் சொல்லமாட்டாள்தான். தன் மணத்தைக் குறித்து ஒரு பெண் வாயை மூடிக்கொண்டிருந்தால் அவள் உடன் படுகிறாள் என்றுதான் கொள்ளவேணும். விருப்ப மில்லையென்றால் உடனே வாயைத்திறந்து சொல்லி விடுவாள். அஞ்சுகத்துக்கு உடன்பாடுதான் என்பது எனக்குத் தெரியும். வேண்டுமென்றுதான் நான் அஞ்சுகத்தை வீரப்புலி புண்ணைக் கழுவச் சொன் னேன். பிடிவாதமாக அவள் அப்பொழுது மறுத்திருந் தால் நான் போட்ட இந்தத் திட்டம் நிறைவேறி யிராது. கழுவும்போதும் புன்முறுவலோடுதான் கழுவி னாள். அதோடு வீரப்புலியும் நல்ல உடற்கட்டும் கவர்ச்சியான முகமும் உள்ளவனாகத்தானே இருக் கிறான்.

சிங் - எல்லாம் சரிதான், களத்தண்ணா, என் பெண்டு பணத்தைப்பற்றியும் கேட்டாள். அதைச்சொல்ல மறந்துவிட்டேன்.

களத் - பணம் பணம் என்று பறக்கிறாயே, சிங்கம், பணமா பெரிது? இப்பேர்ப்பட்ட மருமகன் உனக்குக் கிடைக்க வேணுமே, அதைச் சொல்லு.

சிங் - அப்படியானால் நடக்காது. எங்கேயே தொடங்கி எங்கேயே கொண்டுவந்து விட்டீர்களே.

களத் - ஏ, சிங்கம், இனிமேல் உன்னோடுபேச என்னால் முடியாது. போரோ வரப்போகிறது. வந்துவிட்டால் தான் உனக்கு ஒரு குறைவுமில்லை என்று சொன்னாய்.

சிங் - போர் அப்புறமல்லோ வரப்போகுது. மணமுடிக்கிற தற்கு இப்போது பணத்துக்கு எங்கே போகிறது? இதைச்

சொல்லமாட்டேன் என்கிறீர்கள். மேலே மேலே பேசிக் கொண்டே போகிறீர்கள்.

**களத் -** சிங்கம், இப்போது என் படைப்பதவி என்ன, உனக்குத் தெரியுமா?

**சிங் -** படைத்தலைவர் தானே?

**களத் -** அதுதான் இல்லை. இப்பொழுது நான் படைநாயகம். என்கீழ் ஆயிரம் வீரர்கள், பத்து படைத்தலைவர்கள், இவர்கள் எல்லோரும் நான் சொல்கிறபடி ஆட வேண்டும். படைக்கு ஆள் சேர்க்கிறதற்கும் எனக்கு முழு உரிமை உண்டு. உன் மக்கள் இரண்டுபேர் பெரிய பையன்கள்தானே?

**சிங் -** ஒருத்தனுக்கு இருபத்திரண்டு வயதாகிறது. இன்னொரு பயலுக்கு இருபது ஆகிறது. மற்ற இரண்டு பேரும் பொடியன்கள்.

**களத் -** இன்றைக்கே பெரிய பையன்களை என்படை வீட்டிற்கு அழைத்துவா. ஏதாவது ஒரு படையில் அவர்களைச் சேர்த்துவிடுகிறேன். அஞ்சுகத்துக்கும் ஒரு பெரிய அலுவல் பார்த்துக் கொடுக்கிறேன்.

**வான் -** இதென்ன பெண்ணுக்குமா வேலைவாங்கிக் கொடுக்கிறேன் என்று சொல்கிறீங்கள்?

**களத் -** ஆமப்பா, ஆமாம். சிங்கப்புலி, இதைக்கேள். நான் படைநாயகமானதிலிருந்து நம்மையாளுடையார் இராசேந்திர மன்னர் அரண்மனை மேற்காவலும் என்னிடம் வந்திருக்கிறது. அரண்மனைக் காவலாளர்கள், ஏவலாளர்கள், அலுவற் பெண்டுகள், பாங்கிமார்கள், தோழிமார்கள் முதலிய எல்லோரும் எனக்கு நன்றாய்ப்பழக்கம். நம்மன்னர் பெருமான் மகள் அம்மங்கா தேவியாருக்கு இன்னும் சில தோழிகள்

வேண்டுமாம். அஞ்சுகத்தை ஒரு தோழியாகச் செய்து விடலாம் என்பது எனது எண்ணம்.

**வாள்** - பையன்களையும் படையிலே சேர்த்து விடுகிறேன் என்கிறீர்கள். பெண்ணுக்கும் பெரிய வேலை வாங்கிக் கொடுக்கிறேன் என்கிறீர்கள். சிங்கப்புலி காட்டிலே தான் மழை பெய்யப்போகுது. வீரப்புலிக்கும் இனி மேல் என்ன குறைச்சல்?

**களத்** - சிங்கப்புலி, இப்போது என்ன சொல்கிறாய்?

**சிங்** - மணத்தை முடிச்சுவிடலாம் அண்ணா.

**போர்** - சிங்கம், மணவிருந்து சரியானவிருந்தாய் இருக்க வேணும்.

**சிங்** - எனக்கு ஒரே மகள்தான். அவளுக்கு மணத்தை நல்லா செய்து பார்க்காமல் இந்தக் காசு எனக்கு எதற்காக விருக்குது?

**வாள்** - பார்த்தீர்களா, களத்தண்ணா, சிங்கப்புலியிடம் காசு இல்லையென்று நினைச்சோமே?

**சிங்** - ஏனப்பா வாள்வெட்டி, ஒரு பெரிய குடித்தனக் காரனிடத்திலே அதற்கென நாலுகாசு இல்லாமலா யிருக்கும்?

**களத்** - சரி, எல்லோரும் வாருங்கள், சிங்கப்புலி வீட்டிற்குப் போவோம். இப்பொழுதே வெற்றிலைப்பாக்கும் மாற்றிக் கொள்ள வேணும். வீரப்புலிக்குத்தான் தாய், தகப்பன், உடன்பிறந்தான் ஒருவரும் இல்லை. எல்லாம் என் பொறுப்புத்தான்.

**(எல்லோரும் சென்று சிங்கப்புலி வீட்டுத் திண்ணையில் அமர்தல், சிங்கப்புலி உள்ளேசென்று ஒரு தட்டில் வெற்றிலை பாக்கு கொண்டுவந்து வைத்து களத்துவென்றாருடன் மாற்றிக்கொள்ளுதல்)**

**களத் -** சரி சிங்கம், இனிமேல் ஒரு நல்லநாள் பார்த்து மணத்தை முடித்துவிடுவோம். உன் பையன்கள் எங்கே?

**சிங் -** கிடங்குக்குப் போன பசங்கள் இன்னும் வரவில்லை. பிற்பகலிலே அவர்களை உங்களிடம் அழைத்து வருகிறேன். இங்கே எல்லோரும் சிறிதுநேரம் தங்குங் கள். காலையுணவு பார்த்துவிட்டுப் போகலாம்.

**களத் -** இந்தச் செலவெல்லாம் உனக்கு வேண்டாம். மணம் முடியட்டும். அப்புறம் பார்த்துக் கொள்வோம்.

**சிங் -** அப்படிச் சொல்லாதீர்கள். என் பெண்டு எல்லோரும் சாப்பிட்டுத்தான் போகவேண்டுமென்று சொல் கிறாள். அஞ்சுகமும் அதற்குமேல் பிடிவாதம் பண்ணு கிறாள்.

**களத் -** அப்படியானால் சரி, உன் விருப்பப்படி செய்.

***(சிங்கப்புலி வீட்டிற்குள் செல்லுதல்)***

வீரப்புலி, உன் தாய் தகப்பன் இறந்துபோய் எத்தனை யாண்டு இருக்கும்?

**வீரப் -** இராசராச தேவ மன்னர் இறந்துபோகிறதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னே ஒருவர் பின் ஒருவராக இறந்து போனார்கள்.

**வாள் -** களத்தண்ணா, என்னைக் கொஞ்சம் கரையேற்றி விடக்கூடாதா?

**களத் -** உன்னை எப்படியப்பா நான் கரையேற்றிவிட முடியும்? உன்விளையாட்டுப் புத்தியாலும், கோழைத் தனத்தாலும் எல்லாவற்றையும் கெடுத்துக்கொண்டாய். நீ படைத்தலைவன்பதவிக்கு விண்ணப்பம் செய்தாயே, அது என்னவாச்சு?

**வாள்** - அதையேன் அண்ணா கேட்கிறீங்கள்? உங்கள் தேர்வுக்கு மறுநாள் களரிக்கூடத்திற்கு வர எனக்கு ஆணைவந்தது. நானும் குறித்தபொழுதிலே தவறாமல் தான் போயிருந்தேன்.

**களத்** - என்னாச்சு, அதைச் சொல்லு.

**வாள்** - அங்கே உட்கார்ந்திருந்த தானைநாயகங்களிலே ஒருவர் என்னை உற்றுப்பார்த்தார். என் உயிர் என் உடம்பிலே இல்லை அண்ணா.

**களத்** - ஏன் அப்பா அப்படி?

**வாள்** - காரணம் முதலிலே எனக்குத் தெரியவில்லை. கொஞ்ச நேரம் கழித்துத்தான் தெரிஞ்சுது.

**களத்** - என்ன காரணம் ? என்ன செய்தாய்?

**வாள்** - உள்ளே போனவுடனே படை வணக்கம்செய்ய மறந்துவிட்டேன்.

**களத்** - அடே மடையா, ஏன் மறந்தாய்?

**வாள்** - நான் என்ன செய்கிறது. உள்ளே போனவுடனே உடம்பே நடுங்கிவிட்டது.

**களத்** - அப்புறம் என்ன நடந்தது, அதைச் சொல்.

**வாள்** - ஒருவர் என் பேர் என்ன என்று கேட்டார். நான் என் சொந்தப்பேரையும் மறந்துவிட்டு எல்லோரும் என்னை அழைக்கிறபடி வாயாடி வாள்வெட்டி என்று சொன்னேன்.

**(எல்லோரும் சிரித்தல்)**

**போர்** - தம்பி களம், இவன் எதற்கும் பயன்படமாட்டான்.

**வாள்** - வாள்வெட்டி என்கிறது உன்பட்டமா என்று ஒருத்தர் கேட்டாரு. தடுமாற்றத்திலே அதையும் மறந்து வெட்டி வாள் என்று சொல்லிவிட்டேன்.
*(எல்லோரும் சிரித்தல்)*

**களத்** - அதற்குமேலே என்ன நடந்தது?

**வாள்** - ஒருவர் உன்தகுதிக்கு ஏதாவது சான்று வைத்திருக் கிறாயா என்று கேட்டாரு. நான் என்னிடத்தில் சான்று இல்லை, வேலும் வாளும் மாத்திரம் இருக்குது என்று சொன்னேன். இதைக்கேட்டதும் அவர்கள் எல்லோரும் சிரித்தாங்க. எதற்காகச் சிரித்தாங்க என்று எனக்கு விளங்கவில்லை. சான்று என்கிறது என்ன படை, எனக் குத் தெரியவில்லையே?

**களத்** - சரி, மேலே என்ன நடந்தது அதைச் சொல்லு.

**வாள்** - மேலே ஒன்றும் நடக்கவில்லை அண்ணா, எல்லாம் கீழேதான் நடந்தது. இன்னொருவர் ஒருகேள்வி கேட்டாரு. அப்பா! என்ன கேள்வி!

**களத்** - கேள்வி என்ன? விடை என்ன சொன்னாய்?

**வாள்** - தூசிப்படை என்றால் என்ன என்று கேட்டார். நான் படை செல்லும்போது கிளம்புகிற புழுதிப்படை என்று சொன்னேன்.

**போர்** - தம்பி களம், இது என்ன படைப்பா?

**களத்** - *(சிரித்து)* நன்றாகப் பதில் சொன்னாயப்பா? தூசிப்படை என்கிறது பெரும் படைக்கு முன்னே எச்சரிக்கைக்காகச் செல்லுகிற முன்னணிப்படை.

**வாள்** - முடிவிலே ஒரு கேள்வி அதே தானைநாயகம் கேட்டார்.

**களத் -** என்ன, அதையும் சொல்லு.

**வாள் -** கடைக்கூழைப்படை என்றால் என்ன என்று கேட்டார். நான் கோழைகள் சேர்ந்தபடை என்றேன். இதைக் கேட்டதும் அவர்களே சிரித்துவிட்டாங்க.

**களத் -** சிரிக்காமலா இருப்பார்கள் உன்பதிலைக்கேட்டு? கடைக் கூழைப்படை என்பது பெருந்தானைக்குப்பின்புறத்தில் வெகு தொலையில் எச்சரிக்கைக்காக வருகிற சிறுபடை.

**வாள் -** இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும் அண்ணா?

**போர் -** தம்பி, களம், இதெல்லாம் எனக்கே தெரியவில்லையே, இவனுக்கு எப்படித் தெரியும்?

**களத் -** வாயாடி வாள் வெட்டி என்கிற பெயர்தான் உனக்கு மிகப் பொருத்தம். காரியத்தில் ஒரு பயனுமில்லை. விண்ணப்பந்தான் செய்தாயே, என்னிடத்தில் முன்னால் வந்து தெரிவித்திருந்தால் நான் உனக்கு எல்லாம் சொல்லிக்கொடுத்திருக்க மாட்டேனா?

**வாள் -** நீங்கள் சொல்லிக்கொடுத்திருந்தாலும் என்னால் பதில் சரியாகக் கூறியிருக்க முடியாது. இப்போது எனக்குப் போதாதகாலம் அண்ணா. தொடுகிற காரியம் ஒன்றும் துலங்கவில்லை.

**களத் -** அடே வாள் வெட்டி, உன் மடைத்தனத்திற்குக் காலத்தை ஏன் நொந்துகொள்ளுகிறாய்? படைவீரனாயிருக்கிறவன் காலத்தையோ, கோலத்தையோ, ஒருக்காலும் குறை சொல்ல மாட்டான்.

**சிங் -** **(வெளியே வந்து)** எல்லோரும் எழுந்திருங்கள், உணவு படைத்தாச்சு. ஏதோ ஏழை வீட்டில் உள்ளதைத்தான் உண்ணவேணும்.

**(எல்லோரும் உள்ளே செல்லுதல்)**

---

## களம் 4

**இடம்:** தஞ்சையில் வானவன்மாதேவிப் பெருந் தெருவையடுத்த பூங்கா.

**நடிகர்:** இராசராசப்பிச்சன், ஆதித்தன், சாத்தவேள், சங்கரதேவன்,

**பொழுது:** மாலை.

*(இராசராசப்பிச்சன், ஆதித்தன், சாத்தவேள் மூவரும் ஒரு மேடையில் அமர்ந்து பேசிக்கொண்டிருத்தல்)*

**ஆதித்தன்** - நாழிகையாய்விட்டதே, ஏன் இன்று சங்கரதேவரும் பிர்மவர்மரும் வரவில்லை.

**சாத்தவேள்** - நான் வரும்போது பிர்மவர்மரைப் பார்த்தேன். வீட்டில் ஏதோ அலுவல் இருக்கிறது, இன்று வரமுடியாது என்று சொன்னார். சங்கரதேவர் வரத் தவற மாட்டாரே?

**இராசராசப்பிச்சன்** - சங்கரதேவர் வந்தாரானால் நமக்கு அரசாங்கச் செய்திகள் சொல்லுவார்.

**ஆதித்** - இப்பொழுது நமது அரசாங்கம் இருக்கிற நிலையிலே அவர் படையில் சேர்ந்துவிடுவாரென்றே நினைக்கிறேன்.

**இராச** - நீங்கள் சொல்கிறது சரிதான். நமது அரசாங்கம் என்றால் சங்கர தேவர் உயிராகத்தானிருக்கிறார்.

*(சங்கரதேவர் படையுடுப்பில் சற்றுத் தொலைவில் வருகிறார்)*

**சாத்த** - இதோவந்துவிட்டாரே சங்கரதேவர், ஆனால் என்னமோ ஒரு புதிய கோலத்தில் வருகிறார்.

**ஆதித்** - ஒகோ நாம் எதிர்பார்த்தபடி அவர் படையில் சேர்ந்து விட்டார். அவர் உடுத்தியிருப்பது படையுடுப்பு.

**சங்கரதேவன்** - (அருகில் வந்து) நண்பர்களே உங்கள் எல்லோருக்கும் வணக்கம்.

**ஆதித், சாத்த, இராச** - வணக்கம்.

**ஆதித்** - தேவரே, தங்களை இந்த உடையில் பார்ப்பது எனக்கு அளவற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

**சங்** - (அமர்ந்து) நம்மையாளுடைய இராசேந்திர தேவருக்கு ஊழியம் செய்யாமல் இந்த உடம்பு எதற்கு இருக்கிறது?

**இரா.பி** - தேவரே, அரசாங்கப் போர்ச்செய்திகள் எவ்வாறு இருக்கின்றன?

**சங்** - விரைவில் போர் ஏற்படும் என்றே தெரிகிறது. நமது தரைப்படையும், கடற்படையும் மிகப் பெரியனவாய் விட்டன. இரட்டபாடி படையெடுப்பின்போது நமது மன்னர் ஒன்பது நூறாயிரம் வீரர்களை நடத்திச் சென்றார். இப்பொழுது நமது தரைப்படையில் பதினைந்து நூறாயிர வீரர் இருக்கின்றனர். கடற் படையில் ஐந்து நூறாயிர வீரர் இருக்கின்றனர். முந்நீர்ப் பழந்தீவுப் படையெடுப்பிலோ, ஈழத்துப் படையெடுப்பிலோ, இருநூறாயிரம் கடற்படை வீரர்களுக்குமேல் ஈடுபட்டதில்லை.

**இரா.பி** - அவ்வாறானால் விரைவில் போர் வந்துவிடும் என்று சொல்லுங்கள்.

**சங்** - வங்கத்திலிருந்தும் கடாரத்திலிருந்தும் செய்தி வந்த பிறகுதான் போர் உண்டோ இல்லையோ என்பது உறுதியாகும். ஆனால் அமைச்சர் முதலாயினோர் போர் மூளும் என்று கருதியே காரியம் நடத்தி வருகின்றனர்.

இல்லாவிட்டால் படைகளை இவ்வளவு பெருக்க வேண்டியதில்லையே.

**ஆதித்** - வங்க மன்னரும் கடாரத்தரசரும் பெரிய வீரர்களா?

**சங்** - அவர்கள் வீரத்தைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் வங்கமன்னன் மகிபாலனுக்குக் கலிங்க மன்னன், மதுரமண்டலத்து மன்னன், கோசலநாட்டு மன்னன், ஒட்டரநாட்டு மன்னன், தண்டபுத்தி மன்னன், தென்லாடத்து மன்னன், வடலாடத்து மன்னன் இத்தனை பேருடைய உதவியும் இருக்கிறது. கடாரத்தரசன் ஓர் பேரரசன். அவனுக்குக்கீழ் மானக்கவாரம், இலாமுரி நாடு, பண்ணை, சாவகம், தலைத்தக்கோலம், இலங்கா சோகம் முதலியவற்றையாளும் சிற்றரசர் இருக்கின்றனர்.

**இரா.பி** - சரி, சரி, மிகப்பொரிய போர்கள்தான் நடக்கப் போகின்றன.

**சங்** - நம் மன்னர் செய்தி போர்களோடு நின்றுவிடவில்லை. இராசேந்திர மன்னர் எக்காரியம் செய்தாலும் அரை குறை என்பது கிடையாது.

**ஆதித்** - வேறு என்ன காரியம் நடைபெறுகிறது?

**சங்** - சயங்கொண்ட சோழ மண்டலத்தில் மிகமிகப் பெரிய காரியங்கள் நடைபெறுகின்றன.

**இரா.பி** - போரைவிடப் பெரிய காரியங்கள் என்ன நடை பெறக்கூடும்?

**சாத்த** - தேவரே, என்ன காரியங்கள், விரைவிற் சொல்லுங்கள்.

**சங்** - சயங்கொண்ட சோழ மண்டலத்தில் மிகமிகப்பெரிய திட்டத்தில் மூன்று காரியங்கள் நடைபெற்றுவரு

கின்றன. ஒன்று புதிய கோநகர், இரண்டாவது நமது பெருவுடையார் கோயிலைப்போன்ற ஓர் கற்றளி, மூன்றாவது அம்மண்டலத்தின் பஞ்சத்தைப் போக்க மிகப்பெரியதோர் ஏரி.

**இரா.பி** - ஆகா, இராசேந்திர மன்னர் அப்பனுக்குத் தப்பாது பிறந்த தவப்புதல்வர்தான். ஆனால் தஞ்சை இருக்கும்போது புதிய கோநகர் எதற்கோ தெரியவில்லை.

**சங்** - இது எனக்கும் விளங்கவில்லை.

**சாத்த** - இராசேந்திர மன்னருடைய உள்ளத்தை நாம் எவ்வாறு உணரமுடியும்?

**ஆதித்** - நீங்கள் கூறிய இம்மூன்று திட்டங்களையும் முடிப்பதற்குப் பல்லாயிரக்கணக்கில் வேலையாட்கள் வேண்டியிருக்குமே?

**சங்** - புள்ளிவிவரம் எனக்குச் சரியாகத் தெரியாது. இருப்பினும் கேள்விப்பட்டதைச் சொல்கின்றேன். கேளுங்கள். சிற்பிகள் ஐயாயிரம் பேர், கொல்லர் பதினாயிரம் பேர், தச்சர் ஐம்பதினாயிரம் பேர், கற்றச்சர் ஐம்பதினாயிரம் பேர், கொத்தர் ஒரு நூறாயிரம்பேர், ஆட்கள் மூன்று நூறாயிரம், சிற்றாட்கள் பத்து நூறாயிரம், கண்காணிகள் பதினாயிரம் பேர், இன்னும் வேறு அலுவலாளர் எத்தனை ஆயிரவரோ?

**இரா.பி** - அம்மம்ம, இத்தனை நூறாயிரம்பேர் எதற்காக?

**சங்** - பிச்சரே, இதெல்லாம் உமக்கு விளங்காது.

**சாத்த** - எனக்கும் விளங்கவில்லைதான்.

**ஆதித்** - தேவரே, மேலே சொல்லுங்கள்

**சங்** - நமது பெருவுடையார் கோயிலைப்போன்ற ஒரு கற்றளி, தஞ்சையைவிடப் பெரியதான கோநகர்,

ஒன்றரைக் காதத்திற்குமேல் நீளமுள்ள ஏரி, ஏரிக்கு தண்ணீர்வர வெள்ளாற்றிலிருந்தும், கொள்ளிடத்தி லிருந்தும் ஆறு காத நீளமுள்ள கால்வாய்கள், இத் தனை பெரிய திட்டங்களையும் விரைவில் முடிப் பதற்கு எத்தனை நூறாயிரம் அலுவலாளர் வேண்டி யிருக்குமென்பதை எண்ணிப்பாருங்கள். இத்திட்டங் களையெல்லாம் விரைவில் நிறைவேற்றிவைப்ப தற்கு நம்மையாளுடைய இராசேந்திர மன்னர், உத்தம சோழப்பிரம்ம மாராயன் அருள்மொழி என்பவரை மேற்பார்வை நாயகமாக ஏற்படுத்தியுள்ளார்.

**இரா.பி** - இத்திட்டங்களை எல்லாம் என் மனதால் நினைக்கவும் முடியவில்லை. வேறு ஏதாவது செய்தியுண்டோ?

**சங்** - மற்றொரு மகிழ்ச்சியான செய்தியைப்பற்றி நேற்றுத்தான் கேள்விப்பட்டேன்.

**ஆதித்** - அதென்ன?

**சங்** - நரேந்திரன் அம்மங்காதேவி, திருமணம்.

**இரா.பி** - நரேந்திரன் என்பவர் யார்?

**சங்** - இராசராசமன்னர் ஏற்படுத்திப்போன அரசியல் திட்டத் தின் தொடர்ச்சிதான் இத்திருமணம்.

**இரா.பி** - நரேந்திரன் யார் என்று கேட்கின்றேன். தேவரே, வேறு என்னமோ சொல்லுகிறீர்கள்.

**சங்** - சொல்லுகிறேன் கேளுங்கள். கீழைச் சாளுக்கிய மன்னர் விமலாதித்தருக்கு இராசராச மன்னர் தமது மகள் குந்தவ்வையாரை மணம் செய்து கொடுத்தார் என்பது தங்களுக்குத் தெரிந்த செய்திதானே.

**இரா.பி** - தெரியும்.

**சங்** - விமலாதித்தருக்கும் குந்தவ்வையாருக்கும் பிறந்தவர்தான் இராசராச நரேந்திரர். அம்மங்காதேவி தனது அத்தை மகனை மணந்துகொள்ளப் போகிறாள்.

**இரா.பி** - ஓகோ, இது மிகவும் நல்ல செய்திதான்.

**ஆதித்** - இராசராசமன்னரின் அரசியல் திட்டத்தின் தொடர்ச்சிதான் இத்திருமணம் என்றீர்களே, அதென்ன?

**சங்** - நமது நாட்டிற்கும் வெங்கை நாட்டிற்கும் இருந்த பகைமை நீங்கிற்று, உறவு உண்டாயிற்று. இத்திரு மணத்தால் உறவு நீடிக்கப்போகிறது. வங்கத்திற்குச் செல்லும் வழியில் வெங்கைநாடு இருப்பதால் வங்கத் தின்மேல் படையெடுக்கநேரின் வெங்கையிலிருந்தே நேராகப் படையெடுக்கலாம்.

**சாத்த** - தேவரே, திருமணச் செய்தி தங்கள் காதிற்கு எவ்வாறு எட்டியது? வேறு யாருக்கும் தெரியவில்லையே?

**சங்** - காதலால் ஏற்பட்ட திருமணம் இது. அம்மங்காதேவியின் தோழிகள் மூலம் முதலில் இச்செய்தி அவள் தாய் பஞ்சவன் மாதேவிக்கு எட்டியது.

**இரா.பி** - தங்கள் காதிற்கு எவ்வாறு எட்டியது, அதைச் சொல்லுங்கள்.

**சங்** - எங்கள் படைஞருக்கெல்லாம் படைநாயகமாகக் களத்தில் வென்றார் என்பவர் ஒருவர் இருக்கிறார். அவர் சரியான பேர்வழி. அரண்மனைச் செய்திகள் எல்லாம் அவருக்கு எப்படியோ எட்டிவிடுகின்றன. அவரிடமிருந்துதான் எனக்கும் இச்செய்தி எட்டியது.

**ஆதித்** - முடிசூட்டு விழா, திருமண விழா, புதிய கோநகர், கற்றளி, ஏரி, எல்லாம் நல்ல செய்திகள்தாம். சரி, நாழிகை யாயிற்று, வீடு திரும்பவேண்டியதுதானே?

**இரா.பி** - நான் பெருவுடயார் கோயிலுக்குச் சென்று வருகிறேன்.

**சாத்த** - ஆமாம் திருப்பதிகம் கேட்கவேண்டும்.

**சங்** - உங்களுக்குத் திருப்பதிகப்பித்து நன்றாகத் தலைக்கேறி விட்டது. நமது அரசாங்கம் தலை கவிழ்ந்தாலும் உங்களுக்குக் கவலையேகிடையாது. எப்பொழுதும் பெருவுடையார் கோயில், திருப்பதிகம் இந்தப் பேச்சுத்தானா?

**இரா.பி** - சங்கரதேவரே, படையிற் சேர்ந்தால் உடனே குணம் மாறி விடுகிறதே, எதனால்?

**சங்** - பிச்சரே, தாங்கள் கூறுவது எனக்கு விளங்கவில்லை.

**இரா.பி** - அரசாங்கத்தைப்பற்றி எங்களுக்குக் கவலையே கிடையாது என்கிறீர். திருப்பதிகப்பித்து என்கிறீர். இவைகள் தங்களுடைய வாயிலிருந்து வரக்கூடிய சொற்களா?

**சங்** - திருப்பதிகப்பித்து என்றவுடன் தங்களுக்கு ஏன் இவ்வளவு படபடப்பு?

**இரா.பி** - பொறுமையாய்க் கேட்பதாயிருந்தால் திருப்பதிகப் பித்தைப்பற்றி இரண்டொரு சொற்கள் கூறுகின்றேன்.

**சங்** - என்ன, சொல்லுங்கள்.

**இரா.பி** - பெருவுடையார்கோயிலைப்பற்றியும் சிறிது கூறவிரும்பு கிறேன்.

**சங்** - சரி, சரி, சொல்லுங்கள்.

**இரா.பி** - எனது பெயர் இராசராசப்பிச்சன் என்பது தங்களுக்குத் தெரியும்.

**சங் -** என்ன, தங்களைப்பற்றியா விளக்கம்?

**இரா.பி -** என் பெயரை விளக்கித்தான் பெருவுடையார் கோயிலுக்கும் திருப்பதிகப் பித்திற்கும் செல்லவேண்டும்.

**சங் -** சரி, அப்படியே செய்யுங்கள்.

**இரா.பி -** நான் குழந்தையாயிருந்தபோது எனது பெற்றோர் எனக்கிட்டபேர் நம்பியாரூரன் என்பது. எனது இளமையிலேயே நம்மையாளுடைய இராசராச தேவ மன்னர்பால் எனக்கு எல்லையிகந்த அன்பு ஏற்பட்டது. காரணம், அவர் எடுப்பித்த பெருவுடையார் கோயிலும், அக்கோயிலில் திருப்பதிகம் ஓதச்செய்த ஏற்பாடுமே. பெருவுடையார் கோயில், திருப்பதிகம், என்ற சொற்கள் அடிக்கடி என் வாயிலிருந்து வெளிவருவதைக்கண்ட என் தந்தையார் பெரிய அரசியல் அலுவலாளர் ஒருவர் உதவியினால் என்னை இராசராச தேவ மன்னர் பெருமான் முன்னிலையில் கொண்டு நிறுத்தி என்னைப் பற்றிச் சிலசொற்கள் விண்ணப்பித்தார். அப்பொழுது யான் கண்ட காட்சி கண்கொள்ளாக்காட்சி. அதை நினைக்கும்போது - **(பிச்சர் கண்களில் நீர் ததும்புதல்)**

**சங் -** பிச்சரே, கலக்கம் வேண்டாம். மேலே சொல்லுங்கள்.

**இரா.பி -** அந்தோ, அவருடைய தோற்றம் இறைவனது தோற்றம் போலவே இருந்தது. அவருடைய தாமரைக் கண்கள் மலர்ந்து என்னை நோக்கின. அவருடைய புனித வாயிலிருந்து 'இராசராசப் பிச்சன்' என்ற சொற்கள் தோன்றின. அந்நாளிலிருந்து நம்பியாரூரன் என்ற எனது இளமைப்பெயர் மறைந்தது. இராசராசப்பிச்சன் என்ற பெயர் நிலைத்தது. நம்மையாளுடைய மன்னன் பெருமான் இராசராச தேவர் தமது முழு அன்பிற்குத் தகுதியுடைய பலதுறைப் பெரியார்களுக்குத் தம்முடைய பெயரையே பட்டமாக அளித்துள்ளார். அடியேனுக்கும் அவ்வாறே அருள்புரிந்தார்.

**சாத்த** - இராசராசப் பிச்சரே, பிச்சர் என்றால் என்ன, அதை விளக்க வேண்டும்.

**சங்** - ஆம், அதையுஞ் சொல்லுங்கள்.

**இரா.பி** - பிச்சன் என்றால் பித்தன் என்றுதான் பொருள். இதை இலக்கணத்தில் போலி என்பார்கள். இராசராசப் பித்து எனக்கேற்பட்டதால் நம்மையாளுடைய இராசராச தேவர் என்னை இராசராசப்பிச்சன் என்றார். உண்மையில் இராசராசதேவரும் ஒரு பித்தர்தான். அவருடைய இறையன்பிற்கு எல்லையேது? பெருவுடையார் கோயிலைப்போன்ற ஒரு கற்றளியை இந்நிலவுலகில் காண முடியுமா? திருப்பதிகம் ஓதச்செய்த ஏற்பாடுதான் எப்பேர்ப்பட்டது!

**சங்** - பிச்சரே, இராசராச தேவர் எதனால் இந்தத்திருப்பதிக ஏற்பாடு செய்தார்?

**இரா.பி** - சொல்கிறேன் கேளுங்கள் : ஓர்நாள் மன்னர் பெருமான் திருவாரூர் சென்று இறைவனை வழிபட்டார். அப்போது அங்குப் போந்த அடியாருட் சிலர் இறைவன் திருமுன்னர் மூவர் திருப்பதிகங்களில் ஒவ்வொன்று விண்ணப்பம் செய்யக்கேட்டனர். அவைகளைக் கேட்டதும் மன்னர் பெருமான் கைகளிரண்டும் தலை மீதேறின. கண்கள் நீர்வார்த்தன. நெஞ்சம் நெக்குருகிய மன்னர் உடனே மூவர் தேவார முழுமையுங் கேட்டின்புற விரும்பினார். திருநாரையூரில் ஆதிசைவ மரபினரான நம்பியாண்டார் நம்பி என்ற பெரியார்வாழ்ந்து வந்தனர். அவர் உதவியினால் தில்லையில் பொன்னம்பலத்தின் மேற்றிசையில் உள்ள ஓர் அறையிலிருந்து தேவாரத் திருவேடுகளை எடுத்துத் திருமுறைகளாக வகுத்தார். அத்திருப்பதிகங்கள் தாம் இப்பொழுது பெருவுடையார் கோயிலில் விண்ணப்பஞ் செய்யப்படுகின்றன.

**சங்** - பிச்சரே, திருப்பதிகங்கள் அவ்வளவு பெருமை பொருந்தி யனவா?

**இரா.பி** - திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், சுந்தர மூர்த்தியும் அருளிய திருப்பதிகங்களின் பெருமையை என்னைப்போன்ற சிற்றறிவினரால் சொல்லுதல் இய லாது. மூவரும் இறைவன் அருளால் செயற்கரிய செய்த சைவப் பெருமக்களாவர்.

**சாத்த** - பிச்சரே, தங்கள் பேச்சில் எனதுள்ளம் என்னையறியா மல் ஈடுபட்டுவிடுகின்றது. நமது சைவ சமயத்தைப் பற்றியும் எனக்குச்சரியாக ஒன்றுந்தெரியாது. அதைப் பற்றிச்சிறிது விளக்குவீர்களோ?

**ஆதித்** - அதிக நேரமாய்விட்டதே.

**சங்** - ஆனால் ஆகட்டும். எனக்கும் நமது சமயத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள ஆவலாயிருக்கின்றது. பிச்சரே அருள் கூர்ந்து சிறிது விளக்க வேண்டுகிறேன்.

**இரா.பி** - சங்கரதேவரே, தாங்களே இவ்வாறு கேட்கும்போது யான் மறுப்பேனா? ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சுருக்கமாகக் கூறுகின்றேன், கேளுங்கள்: கடவுளறிவு கைவரப்பெறாமல் காரிருளில் மக்கள் உழன்றுவந்த மிகப் பழங்காலத்தே முதன்முதலில் நந்தமிழ்மக்கள் தமது பொறியறிவையும், பகுத்தறிவையும் தாண்டி எல்லா, உயிர்களிலுங்கலந்து எல்லா உலகங்களுக்கும் முதற் காரணமாக விளங்குகின்ற பரம்பொருள் ஒன்று உண்டெனக் கண்டு அதற்குச் சிவம் என்ற பெயர் கொடுத்தனர். இதனையே தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார்,

> **பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்**
> **செம்பொருள் காண்பதறிவு.**

என்ற குறளில் 'செம் பொருள்' என்று சிறப்பித்தார். அப்பழங்காலத்தே நமது தமிழ் நாடு இமயத்திற்கு அப்பால்வரை பரவியிருந்தது. தமிழ் மக்கள் தாம் கண்ட சிவமாகிய செம்பொருளுக்குப் பின்னர் வடிவு ஏற்படுத்தியும், கோயில் எடுப்பித்தும் வழிபட்டு வருவாராயினர். இடைக்காலத்தே இந்நாட்டிற் குடியேறிய ஆரியர் என்ற கூட்டத்தினரிற் சிலர் இக்கடவுள் வழிபாட்டைப் பின்பற்றத் தொடங்கினர். பிறகு அவர்கள் தமிழ்மக்களின் சிவ வழிபாட்டு முறைகளையும் கொள்கைகளையும் தமது இரண்டாவது நூலாகிய யசுர் வேதத்தில் மொழிபெயர்த்து அமைத்துக் கொண்டனர். முதலில் ஐம்பூதங்களை வழிபட்டுவந்த இவர்கள் சிவவழிபாட்டின் பெருமையை உணர்ந்த பின்னர் அதனை அடிப்படையாகக்கொண்டு வேறு வேறு சமயங்களைத் தோற்றுவிக்கத்தொடங்கினர். இதனால் சமயங்கள் பெருகின. திருமால் வழிபாடு முதலியனவும் உண்டாயின. சிவ வணக்கத்தின் பழமையைக் குறிப்பதற்கே திருநாவுக்கரசு நாயனார் திருவாரூர் முதல் திருத்தாண்டகத்தில் 'ஒருவனாய் உலகேத்த நின்றநாளோ, ஒருருவே மூவுருவமான நாளோ' எனக் கூறி-ருளினார். காத்தற்றொழில் மேற்கொண்ட திருமாலும், படைப்புத்தொழில் மேற்கொண்ட பிரமனும் அடிமுடிதேடியும் அறிய முடியாக்கடவுள் என்ற கதை சிவவணக்கத்தின் தொன்மையைக் காட்டுவதற்கு எழுந்ததேயாகும். முதலில் வடகயிலை முதல் தென்குமரி வரை சிவன் கோயில்கள் தோன்றலாயின. தமிழ்நாடு வேங்கட முதல் குமரிவரையாகக் குறுகியபின்னர் சிவ வணக்கம் இத்தென்னாட்டிலேயே சிறப்பாக நிலைத்தது. அதனாற்றான் தமிழ்நாட்டில் மாத்திரம் எண்ணிறந்த சிவன்கோயில்கள் காணப்படுகின்றன. இத்தனைப் பெருங்கோயில்களை எந்நாட்டிலும் காண முடியாது. இவைகள் காலப்போக்கால் அழியாவண்ணம் நம்மையாளுடைய இராசேந்திர மன்னருடைய அருமைத் தந்தையார் இராசராச தேவரும் அவருடைய முன்னோரும் அவற்றைக் கற்றளிகளாக மாற்றினர்.

புறச்சமயங்களின் நெருக்குதலால் சிவவணக்கத் திற்கு இன்னல்கள் தோன்றிய காலத்துத் திருநாவுக் கரையர், திருஞான சம்பந்தர், சுந்தரர் ஆகிய பெரியார்கள் தோன்றினர். இவர்கள் இன்னிசை நிரம்பிய தமது அருட்பாடல்களால் இக்கோயில்களுக்குப் புத்துயிர் அளித்தனர். சிவபரம்பொருளை வழிபடுவதற்கு இசை யமுதம் ததும்பும் இவ்வருட்பாடல்களே ஏற்றவழி யாகும். இதனாற்றான் இராசராச தேவர் கோயில் தோறும் திருப்பதிகங்கள் ஓதுவதற்கு ஏற்பாடுகள் செய்துவைத்தார். சைவப்பெருமக்களாகிய இம் மூவரும் சிவனருளை முழுதும் பெற்றவர்களாதலால் இறந்தவரையும் பிழைக்கவைக்கும் பேராற்றல் படைத்த வராய்த் திகழ்ந்தனர்.

**சங் -** இறந்தவர்களைப் பிழைக்கவைத்தனரா?

**இரா.பி -** தேவரே, என்ன, திடீரெனத் தங்களுக்கு ஐயம் தோன்றிவிட்டது?

**ஆதித் -** எனக்கும் ஐயமே.

**சாத்த -** பிச்சரே, தாங்கள் கூறுவதை நான் முழுதும் நம்புகிறேன், மேலே சொல்லுங்கள்.

**இரா.பி -** மூவரும் எத்தனையோ செயற்கரிய காரியங்கள் செய்துள்ளனர். இவற்றிற்கு அவர்கள் பாடியுள்ள பாடல்களே சான்று பகருகின்றன. திருஞானசம்பந்தர் மூன்றாம் வயதில் பாடினார் என்பதனை நீங்கள் நம்புகிறீர்களா?

**சங் -** இதனை எவ்வாறு நம்பமுடியும்? மூன்று ஆண்டுகளுக் குள் இலக்கிய இலக்கணம், செய்யுள் செய்யும் இலக் கணம் இவற்றையெல்லாம் எவ்வாறு கற்றுக் கொள்ள முடியும்?

**இரா.பி** - பாண்டியன் மாதேவிமங்கையர்க்கரசியரை விளித்துத் திருஞானசம்பந்தப்பிள்ளையார் பாடுவதைக் கேளுங்கள்.

*(பாடுதல்)*

**மானினேர் விழி மாதராய் வழுதிக்கு மாபெருந் தேவிகேள்**
**பானல் வாயொரு பாலனீங் கிவன் என்றுநீ**
**பரிவெய்திடேல்**
**ஆனைமா மலை யாதியாய இடங்களிற்பல அல்லல் சேர்**
**ஈனர்கட் கெளியே னலேன் திருவால வாயரன் நிற்கவே.**

இதன் பொருள் விள்குகின்றதா உங்களுக்கு?

**சாத்த** - கேள்வி கேட்கவேண்டாம், சொல்லுங்கள்.

**இரா.பி** - பாண்டியன் மாதேவியே கேள், யான் பாலன் என்று நீ கவலை கொள்ள வேண்டாம் என்று தொடங்கிக் கூறிச் செல்கின்றார். ஆகவே, இவை பாலன் பாடிய பாடல்களாகும். அவர் பாடிய பதிகங்களையெல் லாம் இவ்வாறு துருவிப் பார்த்தால் அவர் செய்த செயற்கரும் செயல்களெல்லாம் விளங்கும்.

**சாத்த** - திருநாவுக்கரசர் பாடல்களிலிருந்து இவ்வாறு அறிதல் முடியுமா?

**இராச** - திருநாவுக்கரசர் தாம் பாடிய முதற்பதிகத்திலேயே இறைவன் தமக்குச் சூலைநோய் உண்டுபண்ணித்தம்மை யாட்கொண்டதைத் தெரிவிக்கின்றார். திருநீலக்குடித் திருப்பதிகத்தின் ஒருபாடலில் இறைவன் நாமத்தின் துணைகொண்டு தாம் கல்லின்மேல் மிதந்து கடலைக் கடந்து கரையேறிய செய்தியைத் தெரிவிக்கின்றார்.

**ஆதித்** - சுந்தரர் இவ்வாறே தமது செயல்களைத் தெரி வித்திருக்கின்றாரா?

**இரா** - சுந்தரமூர்த்தியின் பதிகங்களை ஆராய்ந்தால் ஏறக் குறைய அவருடைய வரலாறு முழுவதையும் அறிந்து

கொள்ளலாம். அவரது திருமணத்தின்போது இறைவன் எழுந்தருளி ஆவணங்காட்டித் தம்மை தடுத்தாட் கொண்டதை, 'அன்று வந்தெனை யகலிடத்தவர்முன் ஆளதாகவென்று ஆவணங்காட்டி, நின்று வெண்ணெய் நல்லூர் மிசையொளித்த' என்று கூறுவதிலிருந்தும், 'பித்தர்' என்று தொடங்கும் முதற் பதிகத்திலிருந்தும் தெரிந்துகொள்ளலாம். இறைவன் தமக்குத் தோழனாகிப் பரவையையும் சங்கிலியையும் மணம் செய்வித்த செய்தியைச் சில பாடல்களில் தெரிவித்திருக்கின்றார்.

*(பாடுதல்)*

ஏழிசையா யிசைப்பயனா யின்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான் செய்யுந் துரிசுகளுக்குடனாகி
மாழையொண்கண் பரவையைத் தந்தாண்டானை மதியிலா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே.

வங்கமலி கடல் நஞ்சை வானவர்கள் தாமுய்ய
நுங்கியமுதவர்க்கருளி நொய்யேனைப் பொருட்படுத்துச்
சங்கிலியோ டெனைப்புணர்த்த தத்துவனைச் சழக்கனேன்
எங்குலக்கப் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே.

சாத்த - பிச்சரே, உமது அறிவாற்றல் அளப்பரியதாயிருக் கின்றது. உமது இசையும் உருக்கத்தோடு பொருந்திய தாயிருக்கிறது.

சங் - பிச்சரே, இப்பெரியார்கள் வாழ்ந்த காலம் எது?

இராச - திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் ஒரே காலத்தில் இருந்தவர்கள். இன்றைக்கு முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு இவர்கள் தமிழ்நாட்டின் தவப்பயனாய்த் தோன்றித் தமது இன்னிசை நிரம்பிய அருட்பாடல் களால் சிவ வணக்கம் பொலிவுறச் செய்தனர். இவர் களுடைய காலத்திற்கு அறுபது அல்லது எழுபது ஆண்டுகளுக்குப்பின்னர் சுந்தரமூர்த்தி தமிழ் நாட்டில் தோன்றினார். ஆகையினால் தமது பாடல்களில்

திருநாவுக்கரசரையும், திருஞானசம்பந்தரையும் ஆர்வத்தோடு குறிப்பிட்டிருக்கின்றார். 'நாளுமின்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தனுக்கு' என்று ஒரு பாடலிலும், 'நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தன், நாவினுக்கரையன்' என்று ஒரு பாடலிலும், 'நல்லிசைஞான சம்பந்தனும், நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ் மாலை' என்று ஒரு பாடலிலும், 'நாவின் மிசையரையன்னொடு தமிழ்ஞானசம்பந்தன்' என்று ஒரு பாடலிலும் கூறியிருப்பதைப் பாருங்கள்.

**சாத்த** - திருநாவுக்கரசர்மீதும் திருஞானசம்பந்தர் மீதும் சுந்தரமூர்த்திக்குள்ள ஆர்வத்தையும் அன்பின் பெருக்கையும் என்னென்று கூறுவது!

**இராச** - தமிழ் மொழியிலும், தமிழ் இசையிலும் சைவப் பெருந்தகையார் இடத்தும் சுந்தரருக்குள்ள ஈடுபாட்டினை என்னென்று கூறமுடியும்! இறைவன் அருளை முழுதும் பெற்ற இப்பெருமக்கள் கோயில் தோறுஞ்சென்று தமிழிசையமுதமாரியைப் பெய்தனரென்றால், இராசராசதேவ மன்னர் அவர்களுடைய அருட்பாடல்களில் ஈடுபட்டுப் பெருவுடையார் கோயிலிலும், பிற கோயில்களிலும் திருப்பதிகம் ஓத ஏற்பாடுகள் செய்ததில் வியப்பென்ன இருக்கிறது? சங்கர தேவரே, இத்துடன் நிறுத்திக்கொள்ளுகின்றேன். அதிக நேரமாயிற்று. கோயிலுக்குச் செல்லுவோம் வாருங்கள்.

**சங்** - இராசராசப் பிச்சரே, உமக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகின்றேன்? உமது இனிய சொற்களைக் கேட்டு எனது கடின சித்தமுமம் கலங்கிவிட்டது. எனதறியாமையால் திருப்பதிகப்பித்து என்று கூறியதைப் பொறுத்தருள வேண்டும்.

**ஆதித்** - எனதுள்ளமுங் கரைந்து விட்டது.

**சாத்த** - பிச்சரே, தங்களுக்கு யான் அடிமையாகி விட்டேன்.

**இராச** - அடிமை என்று கூறவேண்டாம். யானும் தங்களைப் போன்றவனே. செல்வோம் வாருங்கள் (எழுந்து செல்லுதல்)

---

## அங்கம் - மூன்று

### களம் - ஒன்று

**இடம்:** **தஞ்சை அரண்மனையில் திருவோலக்க மன்றம்.**

**நடிகர்:** **இராசேந்திரன், இராசேந்திர சோழதேவர், வல்லவரையர் வாண்டியதேவர், அரையன் இராசராசன், இராசேந்திர சோழமாவலி வாணராயர், இராசராசஈழத்தரையர், கிருட்டினன் இராமன்.**

**பொழுது: காலை**

**இராசேந்திரன்** - சாமந்த நாயகரே, தனைநாயகங்களே, வங்கத்திற்குச் சென்ற நம் தூதர் கிருட்டினன் இராமன் திரும்பி விட்டார்.

**வல்லவரையர்** - எப்பொழுது திரும்பினார்? கொண்டுவந்த செய்தி யாது?

**இரா** - தூதைரையே கேளுங்கள், நிகழக்கூடிய இடையூறுகளை எதிர்பார்த்தே என்னருமைத்தந்தை காலமுதல் தானை நாயகமாக விளங்கிச் சிறந்த அறிவாற்றலோடு பணி யாற்றி ஓய்வு பெற்ற சேனாபதி கிருட்டினன் இராமனை வங்கமன்னன் மகிபாலனிடத்து நாம் தூது அனுப்பி

னோம். தூதரே, தாங்கள் கொண்டுவந்துள்ள செய்தியை எல்லோரும் அறியும்படிச் சொல்லுங்கள்.

**கிருட்டினன்** - சாமந்த நாயகரே, தானை நாயகங்களே, நம்மையாளுடைய இராசேந்திர தேவ மன்னரிடம் வங்க மன்னன் மகிபாலன் கூறிய விடையைக் கூறிவிட்டேன். மன்னர் பெருமான் கட்டளைப்படி இப்பொழுது உங்களுக்கும் கூறுகின்றேன். சோழப்பேரரசின் தூதர் வந்திருக்கிறார் என்றவுடனேயே வங்க மன்னர் தமது அரசவையைக் கூட்டினார். அவரது அமைச்சர் களும் தானை நாயகங்களும் அத்தாணி மன்றத்தில் இருமருங்கும் அமர்ந்திருந்தனர். என்னைக் கண்ட வுடன் அவர்கள் எல்லோரும் எழுந்து முகமன் கூறி வரவேற்றனர்.

**வல்ல** - நமது மன்னர் பெருமானுடைய புகழ் அவர்களுக்கு எட்டாமலிருக்க முடியுமா?

**கிருட்** - எனது பேச்சை மொழிபெயர்த்துக்கூற நமது மொழி யுணர்ந்தோர் ஒருவர் இருந்தார். அவர் இல்லாவிடில் எனது தூது பயனற்றதாய் முடிந்திருக்கும். மகிபால மன்னரும் எனக்கு முகமன் கூறி யான் வந்த காரியம் யாதென வினவினார். யான் அவரிடம் கூறிய சொற் களைச் சிறிதும் மாற்றாமல் சொன்ன வண்ணமே கூறுகின்றேன் கேளுங்கள். மொழிபெயர்ப்பாளரும் சரியாகவே மொழிபெயர்த்திருப்பார் என்பது எனது எண்ணம். யான் கூறியது இது : ''வங்கப் பேரரசையாளும் மகிபால மன்னரே, தமக்குச் சோழப்பேரரசையாளும் உடையார் இராசேந்திர தேவ மன்னர் அன்புடன் விடுக் கும் செய்தியாவது: சயங்கொண்ட சோழ மண்டலத் தில் நாம் புதியகோநகர் ஒன்றும், கற்றளி ஒன்றும் எடுப் பிக்கவும், ஏரியொன்று தோண்டவும் கருதியுள்ளோம். கற்றளிக்குத் திருமேனிகள் சமைப்பிக்க இமயத்தி லிருந்து கல்லும், ஏரி நீரைத் தூய்மை செய்ய கங்கையிலிருந்து நீரும் கொண்டுவர நம் அலுவலாளர்

சிலரை ஒரு படைப்பகுதியுடன் அனுப்பக் கருதியுள் ளோம். அவர்கள் வங்க நாட்டின் வழிசெல்ல உமது உடன்பாடு கேட்டு இத்தூதுவரை அனுப்பலானோம்.'' இதுதான் செய்தி. இதைக்கேட்ட மகிபால மன்னர் இசைவார் போலத்தோன்றியது. ஆனால் -

**அரையன்** - ஆனால் இசையவில்லையோ?

**வல்ல** - அரையரே, ஆத்திரம் வேண்டாம். மேலே கேட்போம்.

**இரா. சோ. தேவர்** - கேட்பதென்ன? இசையில்லைதான்.

**இரா** - தூதரே, முழுதும் கூறிமுடியுங்கள்.

**இருட்** - அரசவையில் அமர்ந்திருந்த ஒருவர் எழுந்தார். அவர் தானைநாயகமாக இருக்க வேண்டுமென்று நினைக் கிறேன். இறுமாப்புடன் தமது மொழியில் ஏதோ பேசினார். மொழிபெயர்ப்பாளர் இதனை எனக்கு மொழிபெயர்த்துக் கூறவில்லை. மற்றொருவர் எழுந் தார், அவர் இறுமாப்புடன் சினமுங் கொண்டவர் போலக் கைகளை வீசிப்பேசினார். பிறகு ஒருவர் பேசினார். முடிவில் மகிபாலமன்னர் தமக்குப் பக்கத் தில் அமர்ந்திருந்தவருடன் தாழ்ந்த குரலில் சில விநாடிகள் பேசிக்கொண்டிருந்தார், இவர் முதலமைச்ச ராகவிருக்கலாம் என்று நினைக்கிறேன். இறுதியில் இவர் எழுந்து நின்று என்னை நோக்கிப் பேசத் தொடங்கினார். மொழிபெயர்ப்பாளர் உடனுக்குடனே மொழிபெயர்த்துக் கூறினார்.

**வல்ல** - என்ன கூறினார், அதைச் சொல்லுங்கள்,

**இருட்** - அவரது சொற்களை ஒன்றுகூட விடாமல் குறித் துக்கொண்டு வந்துள்ளேன் கேளுங்கள். **(ஓலை வாசித்தல்)** ''சோழப்பேரரசின் தூதரே, வழிகேட்டமைக்குச் சோழ மன்னருக்கு நமது நன்றியைத் தெரிவியும், வழிவிட நமது

உடன்பாடுகேளாது தமது தானையுடனேயே சோழ மன்னர் இங்கு வந்திருக்கலாமே, இது ஏன் அவருக்குத் தெரியவில்லை?''

**இரா.சோ.தே.** - என்ன, இன்னும் ஒருமுறை அதனை வாசியுங்கள்.

**இருட்** - ''வழிவிட நமது உடன்பாடு கேளாது தமது தானையுடனேயே சோழமன்னர் இங்கு வந்திருக்கலாமே, இது ஏன் அவருக்குத் தெரியவில்லை?''

**இரா.சோ.தே** - சரி, மேலே வாசியுங்கள்,

**இருட்** - ''வரும் அலுவலளார் துணைக்கு ஒருபடைப் பகுதிபோதுமா? துணைக்குச் சோழமன்னரது முழுத் தானையும் வந்தால் தானே நல்லது?''

**மாவலி** - மகிபால மன்னன் சிறந்த அறிவாளி என்று நினைக்கின்றேன்.

**ஈழத்** - வடவருக்குள்ள மடமை எங்கே போய்விடும்?

**இரா. சோ.தே** - ஒவ்வொரு சொல்லும் அவ்வடவரது செருக்கைத் தெற்றென விளக்குகிறது.

**இருட்** - ''சோழமன்னரது முழுத்தானையும் வந்தால்தான் நல்லது இதை உமது மன்னரிடம் அழுத்தந்திருத்த மாகக்கூறும். ஒரு படைப்பகுதி வர வழிகேட்பது எமது பெருமைக்கு ஏதமாகும், முடிவாக ஒரு சொல் : நாம் வங்கப்பேரரசின் அரியணையில் அமர்ந்திருக்கும் வரையில் சோழ மன்னரின் ஒரு படை வீரன் கூட நமது மண்ணில் கால் வைக்க நாம் இடந்தரோம்'' இதுவே மகிபால மன்னருடைய விடை.

**வல்ல** - தாங்கள் விடைபெற்று உடனே திரும்பிவிட்டீர்களோ?

**கிருட்** - ஆம், திரும்பிவிட்டேன். ஆனால் நானும் முடிவாக ஒரு சொல் கூறி வந்தேன்.

**அரை** - அஃதென்ன?

**கிருட்** - ''தங்கள் விருப்பப்படியே சோழப்பேரரசின் முழுத்தானையும் மகிபால மன்னரை வழிகேட்க வரும். இதுவே தங்களுடைய சூழ்ச்சிகளுக்குச் சோழப் பேரரசின் இறுதி எச்சரிக்கை. தங்கள் தானைகளை யெல்லாம் ஆயத்தமாக வைத்திருங்கள்'' என்பதாகும்.

**இரா** - தூதரே, இவ்விறுதிச்சொல் மொழிபெயர்க்கப்பட்டதா?

**கிருட்** - அழுத்தந்திருத்தமாக மொழிபெயர்க்கச் சொன்னேன். மொழிபெயர்ப்பாளரும் அவ்வாறே மொழி பெயர்த்துக் கூறினார். பிறகு யான் எழுந்து மகிபால மன்னருக்கும் ஏனையோருக்கும் வணக்கஞ்செலுத்தித் திரும்பி விட்டேன்.

**இரா** - சாமந்தநாயகரே, இப்பதிலைக் குறித்துத் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**வல்ல** - நினைப்பதென்ன? நாம் எதிர்பார்த்த விடைதான் இது.

**இரா** - மாமா, நாம் எதிர்பார்த்த விடைதான் இது. எதிர்பார்த்த விடைதான் இது. மகிபால மன்னரிடம் இத்தகைய ஆணவத்தையும், இறுமார்ப்பினையும், செருக்கினையும் நாம் எதிர்பார்க்கவில்லை. சோழப் பேரரசைக்குறித்து என்ன ஏளனம்! ஆயினும் நமக்கு இது மெத்த மகிழ்ச்சியையே அளிக் கின்றது.

> **கல்லான் வெகுளுஞ் சிறுபொருள் எஞ்ஞான்றும்**
> **ஒல்லானை யொல்லாதொளி.**

என்றார் நாயனார்.

**வல்ல** - அரசே, இக்குறளின் பொருளென்ன?

**இரா** - **மாமா. தங்களுக்கு இது விளங்கவில்லையா? நீதிநூல் அறியாதானைப்பகைத்து அவனைச்சிறு முயற்சியால் வெல்லலாம், இச்சிறு முயற்சியை மேற்கொள்ளாத வனை வெற்றியால்வரும் புகழ் எக்காலும் சாராது.**

**வல்ல** - மன்னரேறே,

**வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்**
**துணைவலியுந் தூக்கிச்செயல்**

என்னுங்குறளே அடிக்கடி என் நினைவிற்கு வருகின்றது.

**இரா** - தங்களுக்குச் சிறிதும் ஐயப்பாடு வேண்டாம். நால்வகை வலியையும் ஆராய்ந்தே நான் கூறுகின்றேன். நாம் வாகை சூடுவோம் என்பதில் தங்களுக்கு எள்ளளவும் ஐயம் வேண்டாம். நமது ஒற்றர்கள் மூலம் எதிரிகள் நிலை இன்னதென்று உணர்ந்து வருகின்றேன். ஆயினும் அவர்கள் கூறுவதிலும் பகைவர்கள் மும்மடங்கு வலிய வர்கள் என்று கொண்டே நாம் நமது முயற்சியைச் செய்ய வேண்டும்.

**வல்ல** - இனி நமது படைகளையெல்லாம் ஒன்று திரட்ட வேண்டியது தானே?

**அரை** - மன்னர் பெருமான் ஆணையை எதிர்பார்த்த வண்ணமிருக்கின்றேன்.

**இரா** - மாமா, நமது பகைமையை வலியப்பெற்ற மகிபால மன்னனது மடமையை என்னென்று நினைப்பது! சோழப்பேரரசை ஓர் பொம்மையரசென நினைத் தனனோ? தமிழ்மறவரை நாடகவீரர் என்று நினைத் தனனோ? நன்று, நன்று. வடவரை முனிந்து பயனில்லை. அவர்கள் வெள்ளிய மதியினர். தமிழ் மக்களின் தொன்மை, வண்மை, மதி நுட்பம், வீரம் ஈரம் இவற் றினை அவ்வடவர் எவ்வாறு அறிவர்?

**வல்ல** - அறிந்தாலும் அவர்க்ள் ஆணவம் அகலாது.

**இரா.சோ.தேவர்** - உண்மை, உண்மை, எட்டுணையும் ஐய மில்லை.

**இரா** - இவ்வுலகில் கல் தோன்றி மண்தோன்றாக்காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தகுடி தமிழ்க்குடி என் பதை அவர்கள் எவ்வாறு அறிவர்? படைப்புக் காலந் தொடங்கித் தமிழ் நாட்டையாண்டுவந்த சேர, சோழ, பாண்டியர்களாகிய நாம் ஒருவர்க்கொருவர் பொருது வெற்றி தோல்வியடைந்திருக்கிறோமேயன்றி எப்பொழு தாவது வேற்று நாட்டான் தமிழ் மண்ணில் கால் வைத்து வென்றி கொண்டதுண்டோ? ஆம், ஒருவன் வைத்தான்.

**அரை** - யார்?

**மாவலி** - எப்பொழுது?

**ஈழத்** - தமிழ் மண்ணிலா?

**இரா** - ஆம். ஒருவன் கால் வைத்தான். தமிழ்நாட்டில் எல்லை வரையும் பரதகண்ட முழுதும் அவனடி பணிந்தது. பின்னர் அவன் தமிழ் மண்ணிலும் காலடி வைத்தான்.

**வல்ல** - அரசரேறே, அவன் யாரெனக் குறிப்பிட வேண்டும்.

**இரா** - இவன்தான் மோரியப் பேரரசனாகிய பிந்துசாரன் என்பான். தமிழ்நாடு தவிர நாவலந்தீவு முழுதும் அவ னடி பணிந்தது. இப்பெருநிலப்பரப்பை வென்ற தோடமை யாமல்

> **நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கின்**
> **உயிர்க்கிறுதி யாகி விடும்**

என்ற வள்ளுவர் வாய்மொழியை அறியாதவனா தலால் தமிழ்நாட்டை வெல்லக்கருதி, கோசர்படை, வடுகர்படை, இவைகளை முன்னே செலுத்திப் பின்னர் மோரியப் படையுடன் தமிழ்நாட்டின் வடமேற்குத்திசை வழி உட்புகுந்தான். சேரர்படையும் வேறு சிற்றரசர் படையும் அவனது படைகளை எதிர்த்து நிற்கமாட்டாமல் தளர்வுற்றுப்பின் வாங்கின. பின்னர் பிந்துசாரனது மூன்று

தானைகளும் வெள்ளம்போற் புரண்டு சோணாட்டிற் புகுந்தன. அக்காலத்தில் நமது சோணாட்டையாண்ட சோழன் இளஞ்சேட்சென்னி பிந்துசாரன்து பெருந்தானை களை எதிர்த்து முறியடித்து வாகை புனைந்தான். முதுகுகாட்டியோடிய மோரியர் தானைகள் தமிழ் மண்ணில் வேறிடத்து எங்கும் தங்காவண்ணம் அவை களைத் தொடர்ந்து சென்று சிதறவடித்தான். அடிபணிந்து சிறைப்பட்ட மோரிய வீரர் தவிர ஏனையோர் தமிழ் நாட்டை விட்டோடிவிட்டனர். தமிழரின் வீரப் புகழை இவ்வுலகுள்ளவளவும் நிலைநாட்டிய இப்பெரு வெற்றி இன்றைக்கு ஆயிரத்திருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்டதாகும். அதன் பின்னர் வடநாட்டான் ஒரு வனும் தமிழ் மண்ணில் கால் வைக்கத் துணியவில்லை.

**இரா.சோ.தே** - தந்தையே, இவ்வெற்றி எனதுள்ளத்திற் பசுமரத்தாணிபோற் பதிந்து விட்டது.

**இரா** - நாம் வடவருக்கு அறிவு கொளுத்தும் வேலையில் இப்பொழுதுதான் முனைந்திருக்கிறோம். ஆனால் இதற்கு முன்னர் இரு பெருந்தமிழ் மன்னர் அவர்களுக்கு அறிவு கொளுத்தி விட்டனர்.

**அரை** - மன்னரேறே, அவர்கள் யாவர்?

**இரா** - மோரியப் பேரரசன் பிந்துசாரன் தமிழ்நாட்டிலிருந்து வெருட்டியடிக்கப்பட்ட காலத்திற்கு ஏறக்குறைய இரு நூற்றைம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் சோணாட்டை யாண்டவன் சோழன் கரிகாற்பெருவளத்தான். இவனது வீரமும், புகழும், கொடையும் கதிரவன் ஒளியென்னப் பல திசைகளிலும் பரவின. கல்வி கேள்விகளில் மிக்கோனாதலால் கரிகாற்பெருவளத்தான் வடவர் தமிழ்நாட்டின் மீது படையெடுத்து வந்த செய்தியை நன்கு உணர்ந்திருந்தான். ஆதலால் தென்னாடு முழுதும் வென்ற பிறகு ஒரு பெருந்தானையுடன் வடநாட்டிற் புகுந்து இமயம்வரை சென்றான்.

இவனது வீரப்புகழ் இவனுக்கு முன்னரே வடநாட்டிற்குச் சென்றிருந்தமையால் வடநாட்டு மன்னர் இவனை எதிர்க்க முடியாதெனவுணர்ந்து வரவேற்று வழிபடத் தொடங்கிவிட்டனர். கரிகாற் பெருவளத்தானுக்கு மகத நாட்டு மன்னன் பட்டி மன்றம் கொடுத்துப் பணிந்தான். வச்சிர நாட்டு மன்னன் கொற்றப்பந்தர் கொடுத்துக் கை கூப்பினான். அவந்தி வேந்தன் உவந்து தோரணவாயில் வழங்கிவாழ்த்தினான்.

**இரா.சோ.தே** - தந்தையே, கரிகாற்பெருவளத்தான் நாவலந்தீவு முழுதும் வென்றவன் தானே?

**ரா** - இமயம் முதல் இலங்கையீறாக வென்று புகழோச்சியவன் கரிகாலன்.

**வல்ல** - வேந்தே, வடநாட்டின் மீது சென்ற மற்றொரு தமிழ் மன்னன் சேரன் செங்குட்டுவன்தானே?

**இரா** - ஆம், அருந்தமிழாற்றல் அறியாத கனகவிசயரென்னும் ஆரிய மன்னர் தமிழ் மன்னரை இகழ்ந்து பேசினர். அவ்வமயம் கண்ணகி தேவிக்குப் பத்தினிக் கோட்டம் எடுப்பிக்கச் சேரன் செங்குட்டுவன் கருதியிருந்தானாதலால் தன் பெருந்தானையோடு வடபேரிமயம் சென்று கற்கொண்டுவர முடிவு செய்தான். சென்ற தானையை எதிர்த்த கனக விசயர் முதலாய ஆரிய மன்னர் முறியடிக்கப்பட்டனர். இமயத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கல் கங்கையில் நீர்ப்படை செய்யப்பட்டுப் பின்னர் அவ்வாரிய மன்னர் முடி மேலேற்றிக் கொண்டுவரப்பட்டது.

**மாவலி** - மன்னரேறே, இப்படையெழுச்சி எப்பொழுது நடைபெற்றது?

**இரா** - கரிகாற்பெருவளத்தான் காலத்திற்கு நூற்றைம்பது யாண்டுகளுக்குப்பின்னர் இதுநடை பெற்றது. இப்படையெழுச்சி நிகழ்ந்து எண்ணூற்றைம்பது யாண்டுகள்

கடந்த பின்னர் இப்பொழுது நாம் மகிபால மன்னருக்கு அருந்தமிழாற்றல் அறிவுறுத்தப் புறப்படுகின்றோம்.

**அரை** - நாவலந்தீவின் காவலரே, இனிக்காலந்தாழ்க்க வேண்டாம். தங்கள் ஆணை தலைமேற்கொள்ளச் சித்தமாயிருக்கின்றேன்.

**இரா** - தமிழ்த் தானை நாயகங்களே, நமது கஞ்சுகர் தலைவர் கிருட்டினன் இராமன் சென்றும் அஞ்சுதலின்றி விஞ்சு மொழி பேசிய அம்மகிபால மன்னன் மீது அறப்போர் தொடுத்து இரட்டபாடியில் நாம் செய்தவாறு அவனது தானைகளைச் சின்னாபின்னமாக்கிச் சிதறவடித்துத் திரும்பினாலொழிய எமது சினம் தணியாது. சோழன் இளஞ்சேட்சென்னியும் சோழன் கரிகாற்பெருவளத் தானும், சேரன் செங்குட்டுவனும் தோன்றிய வீரத்தமிழர் மரபினில் வந்த நாம் வடவரையடக்கி வழி வழி வந்த தமிழன் புகழை நிலைநாட்டுதல் வேண்டாமா?

**ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்**
**பொன்றாது நிற்ப தொன்றில்**

என்ற அவ்வள்ளுவப் பெருந்தகை ஆணை தலை மேற்கொண்டு இந்நிலவுலகில் இசைநாட்டிச் செல் வோம். வடவரை வெல்வோம். இதில் எட்டுணையும் ஐயம்கொள்ளற்க. சயம்கொண்ட சோழமண்டலத்து நாம் கட்டிவருகின்ற கோநகர்க்குக் கங்கை கொண்ட சோழ புரம் என்றும், எடுப்பிக்கின்ற கற்றளிக்குக் கங்கை கொண்ட சோழேச்சரம் என்றும், தோண்டுகின்ற ஏரிக்குச் சோழ கங்கம் என்றும் இன்றே யாம் பெயர்களைச் சூட்டு கின்றோம். சாமந்தநாயகரே, தானை, கடல்நாயகங்களே, இது தங்களுக்கு உடன்பாடா?

**வல்ல** - ஏந்தலே, இவ்வாறு பெயரளித்தல் சாலப் பொருத்த மானதே.

**அரை** - மன்னர் பெருமானே, இச்செய்தி நமது படைவீரர்களுக்கு என்றுமில்லா ஊக்கத்தையளிக்கும்.

**மாவலி** - ஆம், இதில் சிறிதும் ஐயமில்லை.

**ஈழத்** - மன்னர் மன்ன, இப்பெயர்கள் தங்கள் புகழை வருங்கால மக்கள் உணரும்படியாகச் செய்யும்.

**இரா. சோ. தே** - எந்தையே, எண்ணிய எண்ணியாங்கே செய்து முடிப்போம்.

**இரா** - தங்கள் உடன்பாடு எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சியை அளிக்கின்றது. நல்லது, நமது தானைகளெல்லாம் ஆயத்தமாயிருக்கின்றனவா?

**அரை** - தானைகள் தும்பைசூடிப் புலிக்கொடி தூக்கிச் செல்ல என்றும் சித்தமாயுள்ளன. பொறிப்படைகள் ஏற்பாடும் முடிந்து விட்டது. இஞ்சியேறும் ஏணிகளும், கிடங்கு கடக்கும் தோணிகளும், கயிறும், பாலமும், பாறல் செய்யும் பாறைவகைகளும், எந்திர விற்களும், நூற்றுவர் கொல்லி முதலாயின வெல்லாம் கைத்திறம் வாய்ந்த கருமிகளால் செய்து முடிக்கப்பட்டு விட்டன.

**மாவலி** - கடாரப் பேரரசனிடமிருந்து விடை கிடைத்தவுடன் புறப்பட நமது கடற்படையும் சித்தமாயுள்ளது.

**வல்ல** - இப்படையெழுச்சி முடிந்து நமது தண்டத்தானை திரும்பி வர இரண்டு ஆண்டுகளாவது ஆகும் என்று நினைக்கின்றேன்.

**இரா** - வாகைமிலைந்து நமதுதானை திரும்பும்பொழுது புதிய கோநகராகிய கங்கை கொண்ட சோழபுரம் அதனை வரவேற்கக்கூடிய நிலைமைக்கு வந்துவிடும், என்பது எனது எண்ணம்.

**வல்ல** - வேந்தே, தண்டத்தானை புறப்படுமுன் முடிசூட்டும் திருமணமும் நடைபெறவேண்டாமா?

**இரா** - ஆம், ஏன் இதில் தங்களுக்கு ஐயம்? நிமித்திகரைக் கொண்டு விரைவில் முழுத்தமும் ஓரையும் பார்த்து மங்கல நாள் குறிப்பிடுங்கள். கண்ணெழுத்தாளரைக் கொண்டு திருமுகம் எழுதி விரைவில் சிற்றரசர்களுக்கும் ஏனைய பெரியோர்களுக்கும் அனுப்பி விடுங்கள். இவற்றிற்கெல்லாம் முதலாக மஞ்சர் விமலாதித்த ருக்கும் இராசாதிராசனுக்கும் வீரராசேந்திரனுக்கும் முடங்கல் அனுப்பிவிடுங்கள். முடிசூட்டிக் கொள்ள வேண்டிய மைந்தன் இன்னும் இரட்டபாடியி லிருக்கின்றானே?

**வல்ல** - வேந்தே, இன்றே விமலாதித்தர், இராசாதிராசர், வீரராசேந்திரர் இவர்களுக்கு முடங்கல் அனுப்பி விடுகின்றேன். திருமுகங்களை இன்னும் இரண்டு மூன்று நாட்களில் அனுப்பி விடுகின்றேன்.

**இரா** - வேறு செய்தி ஒன்றுமில்லையே, நண்பகல் உணவிற்குச் செல்லலாமே?

**வல்ல** - மற்றொரு காரியத்தையும் இப்பொழுதே முடிவு செய்து விடுதல் நல்லது என்று நினைக்கின்றேன். வங்கப் படையெழுச்சிக்குத் தலைமை பூண்பது யார்? அவருக்குக் கீழ்ச்செல்லவேண்டிய தானை நாயகங்கள் யாவர்?

**இரா** - இதில் ஏன் ஐயம்? மகிபால மன்னரை யாமே நேரிற்காண விரும்புகிறோம்.

**வல்ல** - ஏந்தால், தம்மைவிடத்தானைக்கு தலைமை தாங்கத் தகுதியுடையோர் இம்மாநிலத்துள் வேறெவருமிலர். இருப்பினும் இன்றைய நமது நிலைமையை எண்ணிப் பார்ப்போமானால் வேறொருவர் தலைமை பூண்பது தான் நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது.

**இரா** - **எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்**
**திண்ணியராகப் பெறின்**

என்பது தாம் உணர்ந்ததுதானே?

**வல்ல** - அரசே, வெற்றியைப்பற்றி ஐயம் எனக்குச் சற்றுங் கிடையாது. தங்களைவிடச் சிறந்த தானைத்தலைவர் தாரணியில் யாருமில்லை. இரட்டபாடி எல்லை யிலோ, இலங்கையிலோ திடீரென இடுக்கண் நேரக் கூடும். வங்கம் சென்று திரும்பக் குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது ஆகும். இதனாலேயே யான் கவல் கின்றேன். தாங்கள் தலைநகரிலேயே இருந்தால் இரட்டபாடியைப்பற்றியோ, இலங்கையைப்பற்றியோ கவலை கிடையாது.

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு** அன்றோ?

**இரா** - தங்கள் கருத்துதான் யாது? வெளிப்படையாகக் கூறுங்கள்.

**வல்ல** - தாங்கள் தஞ்சையிலேயே இருக்க வேண்டும். இராசாதிராசன் முடிசூடிய பிறகு இரட்டபாடி எல் லைக்கே ஏகல் வேண்டும். வீரராசேந்திரன் பாண்டி நாட்டிலேயே இருத்தல் வேண்டும். வங்கப்படை யெழுச்சிக்கு அரையன் இராசராசன் தலைமை தாங்க வேண்டும். அவருக்குக்கீழ் விமலாதித்த மன்னர், இராசேந்திர சோழதேவர் இராசராச நரேந்திரர் ஆகிய மூவரும் மூன்று சாரிப்படைகளையும் நடத்திச் செல்லு தல் வேண்டும். கடாரத்துடன் போர் ஏற்படுமானால் இராசேந்திர சோழமாவலி வாணராயர் கடற்படைக்குத் தலைமை தாங்க வேண்டும். இதுவே என் முடிந்த கருத்து.

**இரா** - **தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்**
**கரும்பொருள் யாதொன்றுமில்**

ஆகலின் தங்கள் கருத்தை முழுதும் ஒப்புகிறேன்.

**வல்ல** - வேந்தே, **அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கால்**
**இன்மை அரிதே வெளிறு**

ஆகலின் தங்களும் ஆய்ந்தே துணிதல் வேண்டும்.

**இரா** - மாமா, தங்கள் சொற்களை நன்றாக ஆய்ந்தே ஒப்பு கின்றேன். 'வழிவிட நமது உடன்பாடுகேளாது தமது தானையுடனேயே சோழமன்னன் இங்கு வந்திருக்க லாமே, இது ஏன் அவருக்குத் தெரியவில்லை' என்ற மகிபால மன்னனது ஏளனச் சொற்களால் முதலில் எனதுள்ளம் உந்தப்பெற்றது. சினமுங் கொண்டேன். ஆய்ந்தபின் தாம் கூறுவதே சாலச்சிறந்ததென்ற முடிவுக்கு வந்து விட்டேன். மற்றொன்று, நரேந்திரன் தானை நடத்தும் தகுதியுடையவனா?

**வல்ல** - தகுதியுடையவரே.

**அரை** - அவரது தகுதியில் எனக்கு முழு நம்பிக்கையுண்டு.

**இரா** - சரி, இனி மங்கல காரியங்களை முடித்துப் பின்னர் நமது தானைகளைப் புறப்பாடு செய்வோம். அவைகளை வழியனுப்ப யாமே வெங்கைக்கோநகர் வரையில் செல்லலாம் என்று நினைக்கின்றேன்.

**வல்ல** - அரசே, அவ்வாறே சென்றுவாருங்கள். இன்றுகாலை நீண்டநேரம் பேசும்படி நேர்ந்து விட்டது. நண்பகல் உணவிற்குச் செல்வோம் (எல்லோரும் எழுந்து செல்லுதல்)

---

## களம் - இரண்டு

**இடம்:** **தஞ்சை அரண்மனையிலுள்ள பூங்கா.**

**நடிகர்:** **இராசராச நரேந்திரன், அம்மங்காதேவி, நங்கை, மங்கை, அஞ்சுகம்.**

**பொழுது:** **மாலை**

**நங்கை** - தேவி, அஞ்சுகம் நம் அரண்மனைக்கு வந்து அஞ்சுநாள் கூட ஆகவில்லை. அதற்குள்ளே எவ்வளவு மாறிவிட்டாள் பார்த்தீர்களா?

**அஞ்சுகம்** - ஏன், என்னைப் பார்த்தால் உங்களைப்போல் இல்லையோ? எப்படி மாறிவிட்டேன்?

**நங்கை** - ஏன் அஞ்சுகம் சினந்துகொள்கிறே? உண்மையாகத் தான் சொல்கிறேன். நீ இருந்த இருப்பென்ன? உன் பேச்சும் உருவமும் எப்படியோ மாறிவிட்டதே.

**அஞ்சு** - தேவி, நங்கை பேசுகிறதைப் பார்த்தீர்களா? என்ன வாய்த்துடுக்கு?

**நங்கை** - அடிஅஞ்சுகம், உன்னை வைக்கிற இடத்திலே வச்சிருந்தால் இப்படியெல்லாம் ஏறிப்பேசமாட்டே. எல்லாம் அந்தக் களத்தில்வென்றார் செய்த காரியம், உன்னை நொந்து என்ன ஆகப்போகிறது. நேற்று வந்தவள் என்று கூட நினைக்காமல் -

**அம்மங்காதேவி** - நங்கை, வாயைமூடு, அஞ்சுகம் என்ன சொல்லி விட்டாள்? இப்படிப் படபடப்பாய் பொழியத் தொடங்கிவிட்டே. நாம் இங்கே விளையாட வந்தோமா, சண்டைபோட வந்தோமா?

**நங்கை** - என்னை வாய்த்துடுக்கு என்று சொல்லுகிறாளே?

**மங்கை** - நங்கா, திரும்பத்திரும்ப இப்படியே பேசிகிறாயே, தேவி சொல்கிறதைக் கேள்.

**அம்ம** - நங்கா, நீதான் முதலிலே இந்தச் சில்லரைச் சச்சரவைத் தொடங்கினாய், எல்லாம் நாநயத்திலிருக்கிறது. நீ சொன்ன சொல்லில் குற்றமில்லை. சொன்னமாதிரியில்தான் குற்றமிருக்கிறது. அஞ்சுகம் எனக்குத் தோழியான பிறகு அவளிடம் அதிக மாறுதல் எனக்குத்

தெரியவில்லை. ஏதோ கொஞ்சம் பேச்சில் மாறியிருக்கிறாள். உடையும் இப்போது அழகாக உடுத்திக் கொள்கிறாள். இந்த மறுதல் நல்லதுதானே? பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும். அஞ்சுகம் எவ்வளவோ திறமைசாலியாயிருக்கிறாள். அவளைத் தோழியாகப்பெற்றது எனக்கு அதிக மகிழ்ச்சியாயிருக்கிறது.

**நங்கை** - தேவி, தங்களையும் நான் நன்றாகத்தெரிஞ்சு கொண்டேன். நேற்று வந்தவள் உங்கள் மனதை எப்படியோ மாற்றி விட்டாள். எங்களிடத்தில் இருந்த அன்பெல்லாம் போச்சு.

**அம்ம** - நங்கா, இப்படியெல்லாம் குறும்புத்தனமாய்ப் பேசாதே. இஃதிருக்கட்டும், இப்பொழுது நாம் என்ன விளையாட்டு விளையாடலாம், அதைச்சொல்.

**நங்கை** - தெள்ளேணம் கொட்டி விளையாடலாமா?

**அம்ம** - விளையாடலாம், ஆனால் இதற்கு நான்கு பேருக்கு மேல் வேண்டுமே? நீபோய் கங்கை, காவேரி, பொன்னி மூன்று பேரையும் அழைத்துவா. எப்படியும் ஏழுபேர் இருந்தால் தான் நல்லது.

**நங்கை** - மங்கா, வா, நாம்போய் அவர்களை அழைத்துவருவோம். பொன்னி இருக்கிற இடம் உனக்குத்தான் தெரியும். (இருவரும் செல்லுதல்.)

**அஞ்சு** - தேவி, தங்களிடம் தனிமையாப் பேச வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தேன். நல்லவேளையாக இப்பொழுது சமயம் வாய்த்தது.

**அம்ம** - அஞ்சுகம், அப்பேர்ப்பட்ட செய்தி என்ன?

**அஞ்சு** - என் தகப்பனார் சிங்கப்புலி இருபத்தைந்து ஆண்டுகளாக வெறும் படைவீரராகவே இருக்கிறார்.

**அம்ம** - இருபத்தைந்து ஆண்டுகளாகவா? ஏன்? உன்தகப்பனார் திறமையில்லாதவர் போலத்தெரிகிறது.

**அஞ்சு** - அதில்லை காரணம். ஒரு சண்டையிலிருந்து ஓடிவந்து விட்டாராம்.

**அம்ம** - ஓடிவந்து விட்டாரா? உன் தகப்பனா? இதைவிட ஒரு படைவீரன் செய்யக்கூடிய பெரிய குற்றம் வேறொன்று மில்லை. படையிலிருந்து தள்ளிவிடாமல் வைத் திருக்கிறார்களே, அது அவருக்குப் பெரிய பரிசு என்று நினைத்துக் கொள், வேறு ஏதாவது உனக்கு என்னால் ஆகக்கூடியது இருந்தால் சொல்.

**அஞ்சு** - தேவி, எங்களைக் காப்பாற்றத்தானே அவர் ஓடி வந்துவிட்டார். அவர்சண்டையில் இறந்து போயிருந்தால் எங்களைக் காப்பாற்றுவது யார்? இது என்ன பெரிய குற்றமா?

**அம்ம** - அஞ்சுகம், நீ வீரக்குடியில் பிறந்தவளாயிருந்தும் இது உனக்கு விளங்கவில்லையே. போருக்குச் சென்ற வீரன் தன் அரசனுக்கும் நாட்டிற்கும் செய்யவேண்டிய கடமையை மறந்து தனது குடும்பமே பெரிது என்று நினைத்தது முதல் தவறு. கோழையாய் ஓடிவந்தது இரண்டாவது தவறு. சோழர் படைக்கு அவமானம் விளைவித்தது மூன்றாந்தவறு. வேறு அரசாங்கமாயிருந் தால் உன் தகப்பனை உயிரோடுகூட வைத்திருக்க மாட்டார்கள்.

**அஞ்சு** - தேவி, அப்படியானால் என் கணவர் வீரப்புலிக்கா வது படைத்தலைவர் பதவி வாங்கித்தாருங்கள்.

**அம்ம** - அஞ்சுகம், நீ புதியவளாயிருக்கிறபடியினால் இந்தச் செய்திகளெல்லாம் உனக்கு விளங்கவில்லை. படை வீரனாயிருப்பவன் தன் திறமையாலும், தகுதியாலும் உயர வேண்டுமேயொழிய வேறொருவர் பரிவினால்

உயர்தல் கூடாது. பரிவுப் பேச்சால் உயர்ந்தவன் நடத்து கின்ற படை குன்றை முட்டுகின்ற குருவிபோலாகும். அவன் தனக்கும், தன்படைக்கும், அரசருக்கும், நாட்டிற்கும் கேடு விளைவிப்பான். ஆகையால் இந்தப்பேச்சும் வேண்டாம். விட்டுவிடு. வேறு ஏதாவது ஆகவேண்டியதிருந்தால் சொல்.

**அஞ்சு** - வேறு ஒன்றுமில்லை. நீங்கள் கூறுவது எனக்கு நேர்மையாகத்தான் தோன்றுகிறது. எல்லாம் என்கணவர் விதிபோலாகும்.

**அம்ம** - அஞ்சுகம், உன் கணவர் படையில் சேர்ந்து எத்தனை யாண்டுகளிருக்கும்?

**அஞ்சு** - ஆறு அல்லது ஏழு ஆண்டுகளிருக்கும். அவர் முதல் முதலாக இரட்டபாடிப்போருக்குச் சென்றிருந்தாராம்.

**அம்ம** - ஆறு ஆண்டுகள்தானே? வங்கப்படையெழுச்சி இப்பொழுது வரப்போகிறது. உன் கணர் தன் பட்டத் திற்குத் தகுந்தாற்போல் இந்தப் போரில் சண்டை செய்தாரானால் பதவி தானே உயர்கிறது. இதற்கு ஒரு வருடைய பரிவுப்பேச்சு எதற்கு? இதோ நங்கை முத லியவர்கள் வருகிறார்கள், இந்தப் பேச்சை நிறுத்திக் கொள்வோம். **(நங்கை முதலியோர் வருதல்)**
நங்கா ஏன் இவ்வளவு நாழிகையாச்சு?

**நங்கை** - தேவி, பொன்னி போன இடம் தெரியவில்லை. அவளைத் தேடிப்பிடிச்சுவரத்தான் இவ்வளவு நாழி யாச்சு. சரி. எந்தஇடத்தில் தெள்ளேணம் கொட்டி விளை யாடலாம்?

**அம்ம** - அதோ நிற்கின்ற எனது பாட்டனார் இராசராச தேவர் படிமத்தைச்சுற்றி விளையாடலாம். முதலில் ஒருவர் பாடவேண்டும். மற்றவர்கள் பின்பற்றிப்பாடவேண்டும். யார் முதலில் பாடுகிறீர்கள்?

அஞ்சு - தேவி, நீங்கள் நன்றாகப் பாடுவீர்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். நீங்களே, முதலிற் பாடுங்கள்.

அம்ம - சரி, (தேவிபாட, ஏனையோர் பின்பற்றிப் பாடித் தெள்ளேணம் கொட்டி விளையாடுகின்றார்கள்.)

**தேவாரம் வகுத்தபிரான் திசையெட்டும் வென்றபிரான்**
**பூவாரும் பெருவுடையார் புகழ்கோயில் எடுத்தபிரான்**
**மேவாரும் விரும்புமிரா சராசர் மெய்ப்புகழை**
**நாவார நாம்பாடித் தெள்ளேணம் கொட்டாமோ.**

**வடவரையிற் கற்கொணர வழிகேட்டே நம்பெருமான்**
**வடவரிடம் தூதனுப்ப மதியில்லா விடைபகர்ந்த**
**மகிபாலன் செருக்கழிய படைபெருக்கும் நம்பெருமான்**
**திடமுடனே போர்நிகழ்த்தத் தெள்ளேணம் கொட்டாமோ.**

**நந்தமிழே ஞாலமிசை நாநவின்ற முதன்மொழியாம்**
**பைந்தமிழின் வள்ளுவரே தலைசிறந்த பாவலராம்**
**இந்தமொழிக் கெதிருண்டோ இருநிலத்தீர், ஆதலினால்**
**செந்தமிழ்வா ழியவேன்றே தெள்ளேணம் கொட்டாமோ.**

சரி, தெள்ளேணம் கொட்டி விளையாடியது போதும். வேறு என்ன விளையாட்டு விளையாடலாம், சொல் லுங்கள்

அஞ்சு - தேவி, கண் பொத்திக் கண்டுபிடிச்சு விளையாடலாம்.

அம்ம - இது நல்ல விளையாட்டுத்தான். சரி, உங்களில் ஒருத்தி இங்கே வாருங்கள். நான் இந்த மேடையில் உட் கார்ந்து கண்ணைப் பொத்திக் கொள்கிறேன். மற்ற வர்கள் ஓடி ஒளிந்துகொள்ளுங்கள். பிடிப்பட்டவர்கள் என்னிடம் வந்து கண் பொத்திக் கொள்ளவேண்டும். பிடிபடாது வந்து என்னைத் தொட்டவர்கள் வென்ற வர்கள்.

**நங்கை** - தேவி, முதலில் என்கண்களைப் பொத்திக்கொள்ளுங்கள்.

**அம்ம** - சரி, உட்கார். நீங்கள் எல்லோரும் ஓடிஒளிந்து கொள்ளுங்கள். **(இவ்வாறு சிறிதுநேரம் விளையாண்டபிறகு)**

**நங்கை** - தேவி, உங்கள் கண்களைப் பொத்திக் கொள்கிறேன். நீங்கள் போய்ப் பிடித்து வாருங்கள்.

**அம்ம** - சரி, வா. **(நங்கை தேவியின் கண்களைப் பொத்தப் போகின்றபோது பின்பக்கம் வந்த நரேந்திரனைப் பார்த்து விலகிக் கொள்கிறாள். நரேந்திரன் தேவியின் கண்களைப் பொத்திக் கொள்கிறான். தோழிகள் எல்லோரும் ஓடி மறைந்து கொள்ளுகின்றனர்.)** நங்கா, கண்ணைவிடு, எவ்வளவு நாழிகைப் பொத்திக் கொண்டிருக்கிறாய்? நான் போய்ப்பிடித்து வருகின்றேன். **(நரேந்திரன் கண்களை விடாமையால்)** கண்களை விடுகிறாயா, என்ன? என்னிடமா உன் கைவரிசையைக் காட்டுகிறாய்? **(நரேந்திரன் கண்களை விடாமையால் தேவி வெகுண்டு நரேந்திரன் கைகளை வலிந்து எடுத்துக் கண்களைத் தேய்த்துக் கொண்டு திரும்பிப் பார்த்தல்)** யார்? தாங்கள்தானா? இது என்ன விளையாட்டு, எங்கே என் தோழிகள்?

**இராசராச நரேந்திரன்** - தேவி, இது கண்பொத்தி விளையாட்டு, அவர்கள் எல்லோரும் ஓடி ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். நீ போய் அவர்களில் ஒருத்தியைப் பிடித்துவா.

**அம்ம** - தங்களுக்கு நாணம் என்பது சிறிதுங்கிடையாது. இத்தனைபேர் நடுவில் என்னைவந்து தொட்டீர்களே?

**நரேந்** - தேவி, நாணம் என்பது பெண்ணின் குணம். உன் தோழிகளுக்குத்தான் நம் காதல் தெரியுமே. அவர்கள் மூலமாகத்தானே உனது பெற்றோர்களும் நமது காதலையுணர்ந்து மணத்திற்கும் முழுத்தநாள் குறித்திருக்கிறார்கள்.

அம்ம - தாங்கள் கூறுவது முற்றிலும் உண்மை. நாணம் பெண்ணின் குணமே. நாணமின்மை தங்களைப் போன்ற ஆடவரின் குணம்.

நரேந் - தேவி, நீ இதனை எந்த நூலிற் கற்றாய்?

அம்ம - தெய்வப் புலவர் திருவள்ளுவர் நூலிற்றான்.

நரேந் - திருவள்ளுவர் நாணுடைமை என்ற அதிகாரத்தில் ஆடவருக்கு நாணுடைமையின் இன்றியமையாமை யைப் பற்றியன்றோ கூறியிருக்கின்றார்.

அம்ம - ஆம், ஆடவருக்கு நாணுடைமை இன்மைபற்றியே அவ்வளவு வலியுறுத்திக் கூறியிருக்கின்றார், நாணுத் துறவுரைத்தல் என்ற அதிகாரத்திலும் ஆடவருடைய பேதைமையையே விளக்கியிருக்கின்றார்.

நரேந் - திருவள்ளுவரே இவ்வாறு கூறியிருக்கும்பொழுது யான் நின் கண்களைப் பொத்தினமைக்கு ஏன் சினந்து கொள்கிறாய்?

அம்ம - கண்களைப் பொத்தினமைக்குச் சினந்துகொள்ள வில்லையே?

நரேந் - பின்னெதற்காகச் சினந்து கொண்டாய்?

அம்ம - இஃதிருக்கட்டும், யான் தங்களைப் பார்த்து எத்தனை நாட்கள் ஆயின?

நரேந் - எத்தனை நாட்களா? என்று நான் நின்னைப் பார்க்காமலிருந்தேன்? வங்கத்திற்குச்சென்ற தூதர் திரும்பிய பிறகு நடந்த அரசியற் கூட்டத்திற்கு நின் னாலன்றோ யான்செல்லாமலிருந்தேன், மாமா என்னைப் பற்றி என்ன நினைத்தனரோ?

**அம்ம** - சரி, சரி, யான் போய் வருகின்றேன். இன்னும் சிறிது நேரம் இங்கிருந்தால் மேலும்மேலும் என்மேல் பழி களைச் சுமத்திக்கொண்டே போவீர்கள். கூட்டத்திற்குச் செல்லாமல் அன்று நான்தான் தங்கள் கைகளைப் பிடித்துக் கொண்டிருந்தேன் போலும்.

**நரேந்** - தேவி, எடுத்ததற்கெல்லாம் ஏன் இவ்வாறு சினந்து கொள்கிறாய்?

**அம்ம** - என்சினம் தங்களை என்ன செய்யப்போகிறது? கூட்டத் திற்குப் போகாது யான் தானே தங்களைத் தடை செய்தேன்?

**நரேந்** - நின்காதலில் ஈடுபட்ட என்னுள்ளந்தான் தடை செய்தது என்று ஒப்புக்கொள்ளுகின்றேன்.

**அம்ம** - ஆகவே தாங்கள் கூட்டத்திற்குச் செல்லாததற்குத் தாங்கள்தானே காரணம்?

**நரேந்** - யான் காரணமில்லை. நினது காதலில் ஈடுபட்ட எனதுள்ளம்.

**அம்ம** - ஓகோ, நீங்கள் வேறு, உங்கள் உள்ளம் வேறு. உள்ளொன்றுப் புறம்பொன்றா?

**நரேந்** - தேவி, இந்த ஆராய்ச்சி வேண்டாம், நாழிகையாயிற்று, செல்வோம்.

**அம்ம** - சரி, சென்றுவாருங்கள். தங்கள் உள்ளத்தையும் உடன் அழைத்துச் செல்லுங்கள்.

**நரேந்** - எனதுள்ளத்தை நீ கொள்ளை கொண்டிருக்கும்போது அது எவ்வாறு உடன்வரும்?

**அம்ம** - நரேந்திர மன்ன, எனதுடலில் உயிர் ஊசலாடுகின்றது. தங்கள் உள்ளத்தை என்னிடம்விட்டு எனதுள்ளத்தை அழைத்துச் செல்வீர்களானால் அமைதியேற்படுமோ?

நரேந் - தேவி, சித்தங்கலங்க வேண்டாம், நமது மணத்திற்கு முழுத்தநாளுங் குறித்துவிட்டார்களே. யான் சென்று வருகிறேன். விடைகொடு.

**அம்ம** - தஞ்சையில்தானே இருக்கப் போகிறீர்கள்?

**நரேந்** - தேவி, ஏன் இவ்வாறு பேசுகின்றாய்? ஏன் இதில் ஐயம்?

**அம்ம** - சரி, அப்படியானால், நான் போய் வருகிறேன்.

(இருவரும் செல்லுதல்)

---

## களம் - மூன்று.

**இடம்:** **தஞ்சை அரண்மனையில் திருவோலக்க மன்றம்**

**நடிகர்:** **இராசேந்திரன், வல்லவரையர் வாண்டிய தேவர்.**

**படைநாயகம் களத்தில்வென்றார், வீரப்புலி.**
(கைகள் சேர்த்துக் கட்டப்பெற்ற மூன்று ஒற்றர்களை வீரப்புலி அழைத்து வருகின்றான். ஏந்திய வாளொடு இருநகர்க் காவலர் ஒற்றர்களைக் காத்து வருகின்றனர்)

**பொழுது:** முற்பகல்

**படைநாயகம் களத்தில்வென்றார்** - அடே, வீரப்புலி, அந்த ஆட்களை இழுத்துவா இங்கே.

**வீரப்புலி** - வாங்கப்பா, வாங்க, உங்களுக்குத்தான் தமிழ் தெரியுமே, என்ன விரைச்சுப்பார்க்கிறீங்க? உள்ளே வாங்கடா, அப்புறம் மேலே கீழே பார்க்கலாம்.

**களத்** - (படை வணக்கம் செய்து) எனையாளுடைய மன்னர் பெருமானே, (வீரப்புலி ஒற்றர்களைக் கொண்டு நிறுத்துதல்.)

**இராசேந்திரன்** - மாமா, இவர்கள் யாவர்? ஏன் இங்கே வருகின்றனர்? இவர்களுடைய கைகள் ஏன் பிணிக்கப் பெற்றிருக்கின்றன?

**வல்லவரையர் வாண்டியதேவர்** - களத்துவென்றார், என்ன செய்தி, இவர்கள் யாவர்?

**களத்** - இவர்கள் சோழப்பேரரசின் உற்றநண்பர் மகிபால மன்னரது ஒற்றர்கள்.

**இரா** - அவர்கள் நமது படைவீரர்களைப்போல் தோன்றுகிறார்களே?

**களத்** - ஆம், அரசே, இவர்கள் நமது படைகளிற்சேர்ந்து விட்டார்கள். (ஒவ்வொருவராகக்காட்டி) இவன் விற்படையிற் சேர்ந்திருக்கிறான். இவன் வாட்படையிற் சேர்ந்திருக்கிறான், இந்த மூன்றாம் பேர்வழி வேற்படையிற் சேர்ந்திருக்கிறான்.

**வல்ல** - ஏன் சேர்ந்தார்கள்? எப்படிச் சேர்ந்தார்கள்?

**இரா** - இவர்களை எவ்வாறு கண்டுபிடித்தீர்கள்?

**களத்** - மன்னர் பெருமானே, எல்லாம் தங்கள் உதவியினாற்றான். வங்கம் சென்ற நமது ஒற்றர்கள் மூலம் இங்கே வங்க நாட்டின் ஒற்றர்கள் வந்திருக்கும் செய்தியைத் தாங்கள் தான் முதன்முதலில் நமது தானை நாயகத்திற்கு அறிவித்தீர்கள்.

**இரா** - சரி, அவர்களை எவ்வாறு கண்டுபிடித்தீர்கள்?

**களத்** - இவர்கள் நமது மொழி பேசுகின்றார்கள். எவ்வாறு கற்றுக்கொண்டார்களோ தெரியவில்லை. இவர்களைக்

கண்டு பிடிப்பதற்கு எனக்குக் கட்டளை பிறப்பிக்கப் பட்டது. யான் இதோ நிற்கின்ற படைவீரன் வீரப் புலிக்குக் கட்டளையிட்டுப்பிறகு நகர்க்காவலர், வேளைக்காரப்படையினர் இவர்களோடு கலந்து தேடத் தொடங்கினேன். முடிவில் வீரப்புலியே இவர்களைக் கண்டுபிடித்தான்.

**இரா** - இவர்கள் நமது படைகளில் எவ்வாறு சேர்ந்தார்கள்?

**களத்** - பல்லாயிரக்கணக்கில் நமது படைகளுக்கு ஆட்கள் சேர்க்கப்பட்டமையால் இவர்களும் எளிதிற்சேர்ந்து விட்டார்களென்றே நினைக்கிறேன்.

**இரா** - படைகளுக்குத் தனித்தனி எண்ணிக்கை முதலியன கிடையாதா? எவ்வாறு உங்களை ஏமாற்றினார்கள்?

**களத்** - மன்னர்பெருமானே, படைகளுக்கு தனித்தனி எண்களும், படைவீரர்களுடைய பெயர்கள், எண்கள் குறித்தத் தனிதனி பட்டியல்களும் உண்டு. இருந்தபோதிலும் படைகளில் வீரர்களாகச் சேர்ந்தவர்களை வேற்று நாட்டு ஒற்றர்கள் என்று எவ்வாறு கண்டுபிடிக்க முடியும்?

**வல்ல** - பின் எவ்வாறுதான் கண்டுபிடித்தீர்கள்?

**களத்** - இதோ நிற்கின்ற படைவீரன் வீரப்புலிதான் கண்டு பிடித்தவன். இவனுக்கு முழுவிவரமும் தெரியும்.

**இரா** - இவன் பெயர் வீரப்புலியா? சரியான வீரன் என்று தான் தெரிகிறது. எப்படிக் கண்டுபிடித்தாய்?

**வீரப்** - என்னையாளுடைய மன்னர் பெருமானே, நான் ஒரு நாள் மாலையிலே பெருவுடையார் கோயிலுக்குப் போனேன். அங்கே இந்த மூன்று பேரையும் பார்த்தேன். முதலில் நமது படைவீரர்கள்தான் என்று நினைத்தேன். பிறகு எனக்கு மனதிலே என்னமோ ஐயமேற்பட்டது.

**இரா -** மூன்று பேரைப்பார்த்தால் ஐயம் ஏற்படுமா, என்ன?

**வீரப் -** அதனால் இல்லை, அரசே, பெருவுடையார் கோயில் விமானத்தை இந்த மூன்றுபேரும் அண்ணார்ந்து நிமிர்த்திய கழுத்தைக்கீழே போடாமே நீண்டநேரம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

**இரா -** இதனால் உனக்கு ஐயம் ஏற்பட்டதா?

**வீரப் -** ஆமாம், அரசே, நமது படைவீரர்கள் இந்தமாதிரிப் பார்க்கமாட்டார்கள். ஐயம் ஏற்பட்டவுடனேயே, நான் அவர்களைச்சரியாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டேன். கோயிலில் அவர்களுக்குப்பின் கொஞ்சம்தொலையில் மெதுவாக நடந்துபோனேன் இறுதியில் அவர்கள் பெரியநந்தி மேடைமேல் ஏறினார்கள். நான் கீழே நின்றபடியே அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்த்தேன். ஒருவன் நந்தியின் தலையை அண்ணார்ந்து பார்த்துக்கொண்டு நின்றான்; இன்னொருவன் அதன் உடம்பைத்தடவிப் பார்த்தான். மூன்றாம் பேர்வழி அதன் வாலைத் தொட்டுப்பார்த்தான்.

**இரா -** இவர்கள் இவ்வாறு பார்த்ததில் வியப்பிற்கிடமில்லையே, இவ்வாறு பார்ப்பது இயற்கைதானே?

**வீரப் -** அரசர்பெருமானே, நமதுபடைவீரர்கள் இப்படிப்பார்க்க மாட்டார்கள், புதிய பேர்வழிகள் ஆனபடியினால் தான் இவ்வாறு பார்த்தார்கள். மற்றொருசெய்தி. அவர்கள் பேச்சையும் உற்றுக்கேட்டேன். அது நமது மொழியாகத்தோன்றவில்லை. கோயிலை விட்டு வெளியே சென்றதும் அவர்கள் வல்லம் சாலையில் மேற்கே சென்றார்கள். படை வீட்டிற்குச் செல்லவேண்டிய நேரம் வந்துவிட்டபடியால் நான் உடனே திரும்பிவிட்டேன். திரும்பியவுடனே படைநாயகம் களத்தில் வென்றாரிடம் எனது ஐயத்தைத் தெரிவித்தேன்.

**களத்** - நான் உடனே தானைநாயகத்தினிடம் தெரிவித்தேன். வேளைக்காரப் படையினருக்கும் நகர்க்காவலருக்கும் உடனே செய்திதெரிவிக்கப்பட்டது. எங்களுக்கு இந்த மூன்று பேர்களைப்பற்றிக் கவலை கிடையாது. இவர்கள் தாமாகவே நமது படைகளிற் சிக்கிக்கொண்டார்கள். இவர்களைத்தவிர வேறு ஒற்றர்கள் இருக்கின்றார் களோ என்று தெரிந்து கொள்வதற்காகவே நாங்கள் பல நாட்கள் தேடினோம். ஆராய்ச்சி செய்தோம். இறுதியில் வேறு ஒற்றர்கள் இல்லை என்ற முடிவிற்கு வந்தோம்.

**இரா** - இவர்கள் நமது படைகளிற் சேர்ந்ததன் நோக்கமென்ன?

**களத்** - அதனையும் கண்டுபிடித்துவிட்டோம். வங்கப்படை யெழுச்சிக்கு நமதுதானைகள் புறப்பட்டு வெங்கை நாட்டைக் கடந்து கலிங்கநாட்டில் காலடி வைக்கும் போது நமது தானைநாயகங்களைக் கொன்றுவிட வேண்டுமென்பது இவர்களது சூழ்ச்சி.

**வல்ல** - (ஏறிட்டுப் பார்த்து) அப்படியா?

**இரா** - இதனை எவ்வாறு கண்டீர்கள்?

**களத்** - இவர்கள் வங்கநாட்டின் ஒற்றர்கள் என்று தெரிந்த பிறகு இவர்கள் இரவில் தங்குகின்ற இடத்தைச் சோதன செய்தோம். நாடொறும் படைப்பயிற்சி முடிந்தவுடன் படைவீடுகளுக்குத் திரும்பாமல் இவர்கள் மறைந்து போவது வழக்கம். வடநாட்டுக் கத்திகள் மூன்று இவர்கள் தங்கியிருந்த வீட்டில் அகப்பட்டன. இதோ இவைகள் தான் அக்கத்திகள். (கத்திகளை அரசர் முன்னிலையில் வைத்தல்)

**இரா** - கலிங்கநாட்டில் நமது தானை நாயகங்களைக் கொல்வது இவர்களது நோக்கம் என்பதனை எவ்வாறு கண்டு பிடித்தீர்கள்?

**களத்** - இவர்கள் தங்குகின்ற வீட்டைக் கண்டுபிடித்த பிறகு அதைச்சுற்றியுள்ள வீடுகளில் நமது ஆட்களை இரவில் தங்கும்படி ஏற்பாடு செய்தோம். அவர்களில் ஒருவன் வீரப்புலி.

**வீரப்** - நான் தங்கியிருந்த வீட்டிற்கும் இவர்கள் தங்கி யிருந்த வீட்டிற்கும் நடுவில் ஒரு சுவர்தான் இருந்தது. ஒரு இரவு முழுதும் தூங்காமல் இவர்கள் பேச்சை ஒட்டுக்கேட்டேன். கொஞ்ச நேரம் தங்கள் மொழியில் பேசிக் கொண்டார்கள். பிறகு சிரித்துக்கொண்டு தமிழில் பேசினார்கள். ஒருவன் 'முதலில் நீங்கத்தான் ஒரு தானை நாயகத்தைக் கொல்லவேணும்' என்றான். இன்னொரு வன், 'சரி நீங்கள் இன்னொரு தானைநாயகத்தைத் தீர்த்துவிடுங்க' என்றான். இன்னொருவன், 'எனக்கு ஒரு தானைநாயகம் அகப்படமாட்டானா' என்றான். அதன் பிறகு எங்கே கொல்கிறது என்கிறதைப்பற்றி இவர்களுக்குள் கடுமையாகப்பேச்சு நடந்தது. ஒருவன் தஞ்சையிலேயே முடித்துவிட வேண்டும் என்றான். இன்னொருவன், 'இங்கேயே தீர்த்து விட்டால் வேறு தானைநாயகங்களை ஏற்பாடு செய்து விடுவாங்க' என்று சொன்னான். மற்றொருவன், 'ஆமாம், கலிங்கதேசத் திற்குப் போனபிறகு வேலை செய்தால்தான் நம்ப நோக்கம் நிறைவேறும், என்றான்.

**வல்ல** - சரி, எல்லாம் புரிந்து விட்டது. மன்னரே, மேலே ஆக வேண்டியது என்ன? இவர்களைச் சிறைக்கூடத்திற்கு அனுப்பிப் பின்னர் நீதி முறைப்படி ஆய்ந்து தண்டிக்க வேண்டியதுதானே?

**இரா** - மாமா, இதனைத் தள்ளிவைக்க எனக்கு எண்ண மில்லை. ஆய்ந்து இப்பொழுதே ஒருமுடிவு செய்து விடவேண்டும். இவர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக் கொள்ளுகின்றார்களா?

**களத்** - அரசே, தாங்களே இப்பொழுது நேரில் விசாரித்து விடலாம். வீரப்புலி, அவர்களைச்சற்று இப்புறம் அழைத்துவா. ***(அழைத்து வருதல்)***

**இரா** - நீங்கள் எந்த நாட்டுப் பேர்வழிகள்?

**முதல் ஒற்றன்** - நம்ம வங்கதேசம்.

**இரா** - இங்கே எதற்காக வந்தீர்கள்.

**மு. ஒற்** - ஓங்கதேசம் பார்க்க வந்தாங்கோ.

**இரா - (இரண்டாவது ஆளைப்பார்த்து)** நீ எதற்காக இங்கே வந்தாய்.

**இரண்டாவது ஒற்றன்** - ஓங்கதேசம் பார்க்க வந்தாங்கோ.

**இரா** - மாமா, இவர்கள் மொழியில் ஒகரம் இல்லை என்று தெரிகிறது. எங்கள் படையில் ஏன் சேர்ந்தீர்கள்?

**மு. ஒற்** - ஓங்கச் சேனையில் ரொம்பக் காசு கொடுக்குறாங்கோ.

**இரா - (கத்திகளைக்காட்டி)** இவைகளை ஏன் வைத்திருக்கிறீர்கள்?

**மு.ஒற்** - அது நம்ம கத்தி இல்லீங்கோ.

**இரா** - பின் யாருடையது?

**மு.ஒற்** - அது -

**இ. ஒற்** - அது நம்ம தங்கியிருந்த ஊட்டில் இருந்துது.

**வல்ல** - இவன் உதவிக்கு வந்துவிட்டான்.

**இரா** - எங்கள் நாட்டில் இம்மாதிரிக் கத்திகள் செய்வதில்லையே?

**மு.ஒற்** - ஏங்க தேசத்தில் இல்லீங்கோ.

**இரா** - (மூன்றாம் பேர்வழியைப் பார்த்து) இந்தக் கத்திகளை எதற்காக வைத்திருக்கிறீர்கள்?

**மூன்றாவது ஒற்றன்** - ஏங்க தேசத்தில் இல்லீங்க.

**இரா** - சரி, இவர்கள் மொழியில் எகரமும் இல்லையென்று தெரிகிறது.

**வல்ல** - இவன் முதற்பேர்வழிசொன்னதையே சொல்லுகின்றான், அவன் விழியைப்பாருங்கள்.

**மு.ஒற்** - விளி இல்லீங்கோ.

**இரா** - இவர்கள் மொழியில் ழகரமும் இல்லையென்று தெரிகிறது. இரவில் எங்கே தங்குகிறீர்கள்?

**மூ.ஒற்** - ராஜா பேசுவது புரியிலீங்கோ.

**இரா** - (இரண்டாவது ஒற்றனைப் பார்த்து) இரவில் எங்கே தங்குகிறீர்கள்?

**இ.ஒற்** - ராஜா பேசுவது புரியிலீங்கோ.

**வல்ல** - அரசே, விசாரணை போதும். நமது நாட்டின் நீதிமுறைப்படி இவர்களைக் கொலை செய்யவேண்டியதுதான். ஒற்றர்கள் செய்யவேண்டிய அலுவல்களைத்தாண்டி கொலைக்குற்றம் செய்து நமது தானைகளைச் சின்னா பின்னமாக்க எண்ணியிருந்திருக்கின்றனர்.

**இரா** - மாமா, தாங்கள் கூறுவது முற்றிலும் சரியே; இவர்கள் குற்றவாளிகள்என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. இப்பொழுது சிறைக்கூடத்திற்கு அனுப்பிவிடுவோம். கொடுக்கவேண்டிய தண்டனையைக் குறித்துப்பின்னர் சிந்தித்துக்கொள்வோம்.

**வல்ல** - இவர்களை இப்படியே விட்டு வைத்திருந்தால் ஏதாவது ஏதம் விளையும் என்று நினைக்கிறேன்.

**இரா** - படைநாயகம், இவர்களை அழைத்துச்சென்று தற்போது சிறையில் அடைத்துவைக்க ஏற்பாடு செய்.

**(களத்துவென்றாரும், வீரப்புலியும் படைவணக்கம் செலுத்தி ஒற்றர்களை அழைத்துச் செல்லுதல்)**

மாமா, இவர்களுக்கு நமது மொழி தெரிந்திருக்கிற படியால் இவர்களை நல்ல தமிழ்க்குடிகளாக்கி விடலாம் என்று நினைக்கிறேன்.

**வல்ல** - அரசே, தங்கள் கருத்து எனக்கு விளங்கவில்லை.

**இரா** - இவ்வொற்றர்களை நல்லதமிழ்க்குடிகளாகச் செய்து விடுவோம். பின்னர் என்ன செய்வார்கள் பார்ப்போம்.

**வல்ல** - அரசே, தாம் கூறுவது எனக்கு விந்தையாகத்தோன்று கிறது. கொலைக்குற்றம் செய்யவந்தவர்களை நல்ல தமிழ்க்குடிகளாக மாற்றிவிடப் போகின்றீர்களோ?

**இரா** - இதில் என்ன விந்தை இருக்கின்றது? பண்டைக்காலந் தொட்டு வடக்கேயிருந்துவந்த ஆரியப் பார்ப்பனர் களுக்குத் தமிழ் வேந்தர்கள் தங்குவதற்கு வீடுகளும், உண்டுடுத்துக் களித்திருப்பதற்கு நில முதலியனவும் இறையிலியாகக் கொடுத்துக் குடியேற்றி வைக்கவில் லையா? இவர்கள் குடியிருந்த தெருக்களுக்கு ஏற்பட்ட பெயராகிய பார்ப்பனச்சேரி என்பதும் இப்பொழுது மறைந்து வருகிறதே? எனது மூதாதையர்கள் இவர் கள் குடியிருப்புக்குச் சதுர்வேதிமங்கலங்களும், பிரம தேயங்களும் கொடுத்துப் பட்டவிருத்தியென்னும் இறை யிலிநிலங்களும் அளித்துள்ளனர். ஆனால் இவர் களுடைய ஒரே தொழில் கோயில்களில் சாமகானம் பாடுவது.

**வல்ல** - அரசே, இதுவும் எனக்கு விளங்கவில்லை. குற்ற வாளிகளோடு ஆரியப் பார்ப்பனரை ஒப்பிட்டுப் பேசுகின்றீர்களே?

**இரா** - சாமந்த நாயகரே, ஆரியப் பார்ப்பனரைக் குற்ற வாளிகள் என்று யான் கூறவில்லையே. அவர்கள் எவ்வளவோ நல்லவர்கள், ஒழுக்கமுடையவர்கள். நாடொறுந் தவறாது காலையிற் குளித்து வேதம் ஓது கின்றனர். நமது நாடு வந்தபிறகு புலால் உண்பதையும் அறவே ஒழித்து விட்டனர். எனினும் அவர்களிடம் சிலகுறைகளும் காணப்படுகின்றன. அவற்றைத் தவிர்த்துக் கொள்வார்களானால் நமது நாட்டிற்கு எவ்வளவோ நன்மையாகும்.

**வல்ல** - குறைகள் யாவை?

**இரா** - இவர்கள் இன்றைக்கு ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன் பிருந்தே நமது நாட்டிற்கு வரத்தொடங்கினர். தமிழ் வேந்தர்கள் அவர்களை வரவேற்று யான் முற்கூறிய வாறு அவர்களுக்குப் பலவித உதவிகளும் செய்தனர். இவர்கள் இப்பொழுது பிறப்புமுதல் இறப்புவரை யும் பேசுகின்ற மொழி தமிழ். தமிழ்மொழியே இவர் களுக்குத் தாய்மொழியாகிவிட்டது. அவ்வாறாகியும் தாய்மொழிப்பற்று இவர்களிடத்து ஒருசிறிதும் இல்லை.

**வல்ல** - ஆம், இவர்களுக்கு இன்னமும் தமது பண்டைய மொழியிலேயே அதிகப்பற்று இருக்கின்றது.

**இரா** - அதிற்பற்றிருப்பதனால் குறையொன்றும் இல்லை. நமது ஒப்பற்றமொழியிலே எத்தனையோ இணையற்ற நூல்களிலிருந்தும், மூவர் தேவாரம்போன்ற நெஞ்சை யுருக்கும் பத்திநூல்களிலிருந்தும் அவைகளை இவர்கள் கற்கின்றார்களில்லை. ஓதுவோருக்கும் கேட்போருக்கும் பொருள்விளங்காத தமது வேதங்களையே இன்னும் ஓதிவருகின்றனர். இவ்வாறு ஓதிவருதலைக்குறித்தே நக்கீரதேவநாயனார் என்ற பெரியார் கோபப்பிரசாதம் என்ற தமது நூலில்,

"ஆரியப்புத்தகப்பேய்கொண்டு புலம்புற்று
வட்டணைபேசுவர் மானுடம்போன்று"

எனக்கூறியுள்ளனர். இரண்டாவதாக இவர்கள் தமிழ் நாட்டிற்கு வந்து எத்தனையோ ஆண்டுகளாகியும் இவர்களது தெய்வக்கொள்கை இன்னும் சீர்திருந்தவில்லை. திருநீறணியக் கற்றுக்கொண்டனரேயன்றிச் சிவனை வழிபடுமுறையைக் கற்றனரில்லை.

**வல்ல** - அரசே, இவர்கள் நாடொறும் சிவன்கோயில்களுக்குச் செல்லுகின்றனரே?

**இரா** - செல்வதுண்மைதான், ஆனால் சிவவழிபாடு இவர்களுக்குத் தெரியாது.

**வல்ல** - பின்னெதற்காகச் செல்கின்றனர்?

**இரா** - அங்கே கிடைக்கும் சிறப்புகளையும் திருவமுதுகளையும் பெறுவதற்காக. சிவவழிபாடு இவர்களுக்குத் தெரியாது என்று ஏன் கூறுகின்றேன் என்றால், திருநீறு பூசியபிறகு காலை, மாலை, நண்பகல் மூன்றுபோதுகளிலும் கேசவன், மாதவன், கோவிந்தன் என்று கூறித் திருமால் வழிபாடே செய்கின்றனர். உள்ளொன்றுவைத்துப் புறம்பொன்று பூசுகின்றனர். இதனாற்றான் இவர்களைத் திருமூலர் மிக வன்மையாகக் கடிந்து பாடியுள்ளார்.

**வல்ல** - திருமூலர் என்ன கூறியிருக்கின்றார்?

**இரா** -

**சத்தியம் இன்றித் தனிஞானந் தானின்றி**

**ஒத்தவிடயம் விட்டோரும் உணர்வின்றிப்**

**பத்தியும் இன்றிப் பரனுண்மை இன்றிஊண்**

**பித்தேறும் .......................... அன்றே'**

எனப்பாடியுள்ளனர்.

**வல்ல** - அரசே, திருமூலர் இவ்வளவு வன்மையாகக் கண்டித்திருப்பார் என்று யான் சிறிதும் நினைக்கவில்லை.

இரா - திருமூலர் இதனுடன் நின்றுவிடவில்லை. ஆரியப் பிராமணர் நமது நாட்டிற்கு வந்தபிறகு நாம்சிறப்பாகப் போற்றிவரும் ஆதிசைவரது பெருமையைக்கண்டு பொறாமையுற்றனர். ஆதிசைவரது பெருமைக்குக் காரணம் நமது கோயில்களில் திருமேனி தீண்டும் இறைவழிபாட்டில் அவர்கள் ஈடுபட்டிருப்பதே யென்றுணர்ந்தனர். உடனே அத்தொழிலில் இடம் பெறப் பெருமுயற்சி செய்தனர். நமது மன்னர்களும் அவர்களுக்கு இடங்கொடுத்து விடுவார்கள் போலத் தோன்றியது. ஆனால் திருமூலர் பாடல் இதனைத் தடுத்துவிட்டது.

வல்ல - இப்பாடல் எது?

இரா - 'பேர்கொண்ட பார்ப்பான் பிரான் தன்னை அர்ச்சித்தால்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லாவியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாமென்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத்தானே'

வல்ல - அரசே தாங்கள் இவர்களுக்குச் சிவ வழிபாட்டுமுறை தெரியாது என்று கூறியது முற்றிலும் உண்மை. திருமூலர் இதனாற்றான் இவ்வாறு பாடியுள்ளார்.

இரா - இன்னும் இரண்டு குறைகளை இவர்கள்பால் யான் கண்டிருக்கின்றேன். இவர்கள் இரப்பதற்கு நன்றாகக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஈகை என்றால் இன்னதென்றே அறியாமலிருக்கிறார்கள். தவறி ஈவார் களானால் அது தமது இனத்தவர்க்கே. வள்ளுவர் பெருமான்

வறியார்க்கொன் றீவதே யீகை மற்றெல்லாங்
குறியெதிர்ப்பை நீரதுடைத்து

என்று கூறினார். திருமூலர்

**'ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்'**

எனவுரைத்தார். உரைத்துமென்ன?

துறக்கத்திற்கும் வீடுபேற்றிற்கும் வழிகாட்டும் பரந்த கொள்கைகளைக் கற்பிக்கும் நீதிநூல்களும், பத்தி நூல்களும் நமது மொழியில் எண்ணிறந்தனவாயுள் ளன. அவற்றை இவர்கள் கற்பதில்லை. கற்றாலும் அவற்றைப் பின்பற்றுவதில்லை.

**வல்ல** - அரசே, இத்தகையோருக்கு நமது மன்னர்கள் நம்நாட்டில் எவ்வாறு இடங்கொடுத்தனர்?

**இரா** - விருந்தோம்பல் தமிழர்களுக்குப் பிறவிக்குணம். ஈகையிலோவென்றால், தமிழ் மன்னர்களும், மக்களும்.

**நல்லா றெனினுங் கொளறீது மேலுலகம்**
**இல்லெனினு மீதலே நன்று,**

என்ற வள்ளுவர் வாய் மொழியைத் தலைமேற் கொண்டுள்ளனர். யான் இவர்கள்பால் கண்ட மற்றொரு குறை:

**பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமையான்**

என்ற கொள்கை பரவியிருந்த இத்தமிழ்நாட்டில் பிறப்பினாலே உயர்வு தாழ்வு உண்டென்னும் ஆரியக் கொள்கையைப் புகுத்தி யது. இதனால் நமதுநாடு மிகவும் சீர்கெட்டது.

**வல்ல** - தண்டமிழ்ப் புலமைவாய்ந்த பண்டிதச் சோழதேவரே, தங்கள் கல்வியறிவின் ஆழத்தையும் நுட்பத்தையுங் கண்டு யான் இறும்பூ தெய்துகின்றேன். தங்களுடைய விரிவான உலகியலறிவையும், பரந்த கொள்கைகளை யும், நிரம்பிய புலமையையும் நினைக்கும்போது எனது நெஞ்சம் நெக்குவிட்டு உருகுகின்றது. தாமே தமது காலத்தில் நமது நாட்டின் சீர்கேடுகளைக் கல்வி யெறிந்து திருத்தங்கள் செய்யத்தொடங்கினால் நமது நாடு நல்ல நிலையெய்தும் என்று கருதுகின்றேன்.

**இரா** - சாமந்தநாயகரே, மிக எளிதிற் சொல்லி விட்டீர்கள். இச்சீர்கேடுகள் நமது நாட்டில் வேரூன்றிக் கன்றுகளாகி மரங்களாகி வளர்ந்து விட்டனவே. அவற்றைக்கல்லி யெறிதல் அவ்வளவு எளிதன்று. இருப்பினும் நமது காலத்திலேயே இத்துறையில் ஏதாவது செய்ய முயற்சி செய்யவேண்டும். நமது நாட்டிற்கு வந்த ஆரிய நன் மக்களால் எதிர்பாராவகையில் ஏதங்கள் விளைந் துள்ளன. இப்பொழுது நமது கையில் வந்து சிக்கிய வங்கக் கொலையாளிகளைப் பண்படுத்தித் தமிழ் மக்களாய் வளர்த்துப் பார்ப்போம். நன்மக்களால் தீமை விளையும்போது தீமக்களால் என்ன விளையும் என்று பார்ப்போம். மற்றொன்று: வங்கத்தை வென்றபிறகு நான் கங்கைக்கரையிலிருந்து சிவப்பிராமணர்களை நமது நாட்டில் குடியேற்ற எண்ணியுள்ளேன். அவர்கள் சிவப்பிராமணர்களாய் இருப்பார்களோ, அல்லது முன்பு வந்தவர்கள் போலவே திருநீறுபூசித் திருமால் மந்திரம் ஓதுவார்களோ, பார்ப்போம்.

**வல்ல** - அரசே, இத்தகைய சோதனைகளில் எனக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை. தங்கள் விருப்பம்போல் செய்து பாருங்கள்.

**இரா** - சரி, இவற்றைப்பற்றி மேலும் பின்னர் ஆய்வோம். திருமணத்திற்கும் முடிசூட்டிற்கும் இன்னும் எத்தனை நாட்கள் இருக்கின்றன?

**வல்ல** - வருகின்ற புதனன்று.

**இரா** - மற்றொரு செய்தி, வீரப்புலி என்ற படைவீரனைப் படைத் தலைவனாக்கிவிடுமாறு தானைநாயகத்திற்குக் கட்டளை பிறப்பித்துவிடுங்கள். நமது தானைநாயகங் களின் உயிர்களைக் காப்பாற்றியவன் அவன். ஒற்றராக வந்தக்கொலையாளிகளை அவன் கண்டுபிடித்திரா விடில் நமது படையெழுச்சிதான் என்னவாகுமோ?

**வல்ல** - இன்றே கட்டளை பிறப்பித்து விடுகின்றேன்.

**இரா** - மற்றொரு செய்தியை மறந்து விட்டேன். நாம் சிறிதும் எதிர்பாராவகையில் நமக்கு நேரவிருந்த பேரிடுக் கண்ணையகற்றியருளிய நம்மையாளுடைய பெருமான் இராசராசேச்சரம் உடையாருக்கு இறையிலி தேவதானமாக இருபதுவேலி நிலம்விடக் கருதியுள்ளேன்.

**வல்ல** - அரசே, அவ்வாறே செய்யுங்கள். நம்முடைய நன்றியை இறைவனுக்குக் காட்டும் வேறுவழிதான் யாது?

**இரா** - ஏனையவற்றைப் பிற்பகலிற் பேசிக்கொள்வோம். சென்று வாருங்கள். ***(இருவரும் செல்லுதல்)***

---

## களம் - நான்கு

**இடம்:** **சிங்கப்புலியின் வீடு.**

**நடிகர்:** **சிங்கப்புலி, வீரப்புலி, சிங்கப்புலியின் மனைவி, அஞ்சுகம்.**

**பொழுது:** **காலை**

**சிங்கப்புலி** - எல்லாம் அந்தக்களத்தண்ணா செஞ்ச உதவியே தவிர வேறொண்ணுமில்லை. அவர்தாம் நம்ம குடும்பத்துக்கு விளக்கேத்தி வச்சாரு என்னு சொல்லவேணும்.

**சிங்கப் புலியின் மனைவி** - நீங்க இப்படித்தான் சொல்லுவீங்க. எல்லாம் நான் கண்டகனாவிலேதான் தெரிஞ்சுதே.

**சிங்க** - என்னத்தை நீ கனாவிலே கண்டுட்டே, நம்ம மாப்பிளைக்குப் படைத்தலைவன் பதவி கிடைக்குமென்னா நீ

கண்டுட்டே? எல்லாம் களத்தண்ணா செஞ்ச உதவிதான். முதலிலே அஞ்சுகத்துக்கு மணம் செய்துவச்சாரு; அப்புறம் நம்மப் பையன்களுக்கும் அஞ்சுகத்துக்கும் வேலை பார்த்து வச்சாரு. இப்போ மாப்பிள்ளைக்குப் படைத்தலைவன் பதவி வாங்கிக்கொடுத்தாரு.

**வீரப்** - மாமா, அத்தை என்ன கனவுகண்டாங்க, அதைச் சொல்லட்டுமே.

**அஞ்** - பதவி கனாவாலும் வரவில்லை, களத்தண்ணாவாலும் வரவில்லை. எனக்குத் தெரியும் காரணம்.

**வீரப்** - இதென்ன, ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு காரணம் சொல்கிறீங்க. பதவி கிடைச்ச எனக்கே காரணம் தெரிய வில்லையே.

**சிங்** - அஞ்சுகம், நீ சொல்கிறது புதிசாயிருக்குதே. உன் காரணம் என்ன?

**அஞ்** - நம் மன்னர் மகள் அம்மங்கா தேவியார் என்மேல் உயிராகத்தான் இருக்கிறார்கள்.

**சி.மனை** - பார்த்தீங்களா? அரண்மனைக்குப் போனபிறகு அஞ்சுகத்தின் பேச்சே மாறிப்போச்சு; உடம்பும் ஒரு மாதிரியாப்போச்சு.

**சிங்** - நீ என்ன அறிவில்லாமே பேசுறே. மகள் மேலேயே கண்ணெச்சி படலாமா?

**வீரப்** - கண்ணே, அஞ்சுகம், நீ என்னமோ சொல்லவந்தியே அதைச் சொல்லே.

**அஞ்** - அத்தான், அப்பாவும் அம்மாவும் என்னைப் பேச விட்டால் தானே.

**சிங் -** சரி, அஞ்சுகம், உன்கதையைத்தான் முதிலிலே சொல்லு.

**அஞ் -** அம்மங்கா தேவியாரிடம் முதலில் உங்களுக்குப் படைத்தலைவர்பதவி கொடுக்க வேண்டுமென்று கேட்டேன். முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அத்தானுக்காவது கொடுக்கவேண்டும் என்று சொன்னேன். வங்கப்போருக்குப்பிறகு அத்தானுக்குப் படைத் தலைவர் பதவி கிடைக்கும் என்று சொன்னார்கள். இப்போது பார்த்தால் தெரியுது. என்னிடத்தில் முடியாது என்று சொல்லிவிட்டுச் செய்துவிட்டார்கள். சொல்லா மற் செய்வர் பெரியர்' என்று பழமொழி சொல்கிறார் களே, அதுசரியாகத்தானிருக்கிறது.

**வீரப் -** அஞ்சுகம்சொல்கிறதுதான் காரணமாயிருக்கலாம் என்னு நினைக்கிறேன். கண்ணே அஞ்சுகம், உனக்கு நான் மாலைபோட்டவேளை, எப்பேர்ப்பட்ட வேளை பார்த்தியா?

**சி-மனை -** எல்லாரும் நான் கண்ட கனாவைச் சொல்கிறேன், அப்புறம் மேலே பேசுங்களே.

**சிங் -** கனா, கனா என்கிறியே, உன் கனாவைத்தான் சொல்லு.

**சி-மனை -** இந்தக்கனாவிடியற்காலம் வந்தது. நம்ம மாப் பிள்ளை பெருவுடையார் கோயிலுக்குப்போனாரு. அங்கே மூணு படைவீரங்க நின்னாங்க. அவர்களைப் பார்த்தவுடனே மாப்பிள்ளை ஒளிந்துகொண்டாரு. மூணுபேரும் மூணு சின்னக் கத்திகளைக் கையிலே எடுத்தாங்க. மாப்பிள்ளை அஞ்சி ஓடிவந்து நம்ம வீட்டுக்குள்ளே நுழைந்தாரு. அவர் பின்னாலே களத்து வென்றார் ஓடிவந்தாரு. அவர் மாப்பிள்ளையைப் பிடிச்சுக்கட்டி நம்ம மன்னரிடம் இழுத்துப் போனாரு. அங்கே இந்த மூணுபேரும் நின்னாங்க. மாப்பிள்ளைக்கு என்ன ஆகப்போகுதோ என்று அழுதேன். அத்தானுக்கு ஒண்ணும் வராது அம்மா என்னு சொல்லிவிட்டு

அஞ்சுகமும் அழுதாள். அப்புறம் நான் தேம்பித் தேம்பி யழுதேன். விழிச்சுக்கொண்டேன்.

**சிங்** - இந்தக் கனாவுக்கும் மாப்பிள்ளைக்குப் பதவி கிடைச் சதுக்கும் ஏதாவது பொருத்தமிருக்குதா? நீ சும்மா கனாவையே நம்பிக்கொண்டிருக்கிறியே.

**வீரப்** - அப்படிச் சொல்லாதீங்க மாமா, அத்தை கண்ட கனாவிலே தான் காரணம் இருக்கிறாப்போல் எனக்குத் தோன்றுது. இந்த வங்கத்து ஒற்றப்பசங்களை நான் கண்டு பிடிச்சதை இந்தக் கனா காட்டுது. கடைசியாக இந்த மூணு பேரையும் நமது மன்னரிடம் இழுத்துக் கொண்டு போனேன். படைநாயகம் களத்துவென் றார் கூட வந்தாரு. எல்லாம் பொருத்தமாயிருக்குது.

**சிங்** - உன் அத்தை கனாவிலே அழுதாளே, அதற்கென்ன காரணம் சொல்ல முடியும்?

**வீரப்** - கனாவிலே எல்லாம் இப்படித்தான் கலந்துவரும். எல்லாவற்றிற்கும் காரணம் சொல்ல முடியாது. என் அப்பா அம்மா இறந்துபோகிறதற்கு முன்னாலே இப் படித்தான் கனா கண்டேன்.

**அஞ்** - இப்போது எல்லாம் எனக்கு நன்றாப்புரியுது. அத்தான் இந்தப்பசங்களைப்பிடிச்ச செய்தி அம்மங்காதேவியாரின் காதிற்கு எட்டியிருக்க வேண்டும். தேவியாரை நான் முன்னேயே கேட்டுக் கொண்டிருந்ததனாலே அவர் உடனே தனது தகப்பனாரிடம் தெரிவித்து அத்தானுக்குப் பதவி வாங்கிக் கொடுத்திருக்க வேண்டும். களத்து வென்றாரும் சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன். எல்லாம் ஒன்றுசேர்ந்தன. அத்தானுக்கு ஆகிற வேளை யும் வந்தது.

**சிங்** - அதைச் சொல்லு அஞ்சுகம்; அதுதான் காரணம். நீதான் அம்மங்காதேவியிடம் சொல்லிப் பார்த்தியே, எனக்குக்

கிடைச்சுதா பதவி? எல்லாம் ஆகிறவேளை வந்தால் தான் நடக்கும். இதிருக்கட்டும், மாப்பிள்ளை, உங்கள் மச்சான்மார் இரண்டுபேரும் கடற்படையிலே சேர்ந்து விட்டாங்களே, அந்தப் பசங்களும் போருக்குப் புறப் படவேண்டியிருக்குமா?

**வீரப்** - அப்படித்தான் நினைக்கிறேன், மாமா. நாம் புறப்பட்ட பிறகு அவர்களும் புறப்பட வேண்டியதுதான் போலத் தெரியுது. கடாரத்திலிருந்துபதில் வந்துவிட்டதாம். நம்முடைய வணிகர் நாவாய் கொள்ளைபோன தற்குத்தான் பொறுப்பாளி இல்லை என்றும், சோழக் கடற்படையாட்கள்தான் கடாரத்து நாவாய்களைக் கொள்ளையடிக்கிறார்கள் என்றும், இதை உடனே நிறுத்தாவிட்டால் உடனே தான் போர்தொடுக்க வேண்டி யிருக்கும் என்றும் கடாரத்தரசன் பதில் அனுப்பியிருக் கிறானாம். ஆகவே நாம் புறப்பட்ட பிறகு நமது கடற்படையும் புறப்பட்டு விடும். கடற்படை வங்கத்தின் வழியாகத்தான் கடாரத்திற்குப் போக வேண்டுமாம்.

**சிங்** - சரி, சரி, கடாரத்தரசனுக்கும் சனியன் பிடிச்சுக் கொண்டதா?

**அஞ்** - அத்தான், தங்கள் தாய்தகப்பனார் இறந்துபோனதற்கு முன்னால் கனாக்கண்டேன் என்று சொன்னீர்களே, அது என்ன கனா?

**வீரப்** - என் கண்ணே, அதைப்பற்றி அப்புறம் பேசிக்கொள்வோம்.

**சி.மனை** - ஆமா, நாழியாச்சு, எல்லோரும் எழுந்திருங்க, காலையுணவைப் பார்த்துவிட்டு அப்புறம்பேசலாம். (எல்லோரும் எழுந்து செல்லுதல்)

---

# களம் - ஐந்து

## முடிசூட்டு விழா

சோழன் விசயாலயன் வழித்தோன்றல்கள் யாவரினும் கல்வி கேள்விகளிலும், கொடையினும், வீரத்தினும் மிக்கோனாய இராசேந்திரன் செங்கோலுடன் புகழோச்சிவந்த காலத்தில் சோழ வளநாட்டின் கண்ணெனத் திகழ்ந்த தஞ்சைமாநகரின்கண் இருபெரு நிகழ்ச்சிகள் இணையிலாப் பெருமிதச் சிறப்புடன் நிகழ்வதாயின. அவைதாம் இராசேந்திர தேவருடைய மூத்த மகனார் இராசாதிராசருடைய முடிசூட்டு விழாவும், அம்மங்கா தேவியார், இராசராச நரேந்திரர் இவர்கள் திருமணமுமாகும்.

அன்று தஞ்சை மாநகரின் காட்சி அமராபுரியோ, அளகாபுரியோ என்ன கலைமாச் செல்வர் கற்பனையையுங் கடந்து நின்றது. வீரசோழப் பெருந்தெரு, இராச வித்யாதரப் பெருந்தெரு, சயங் கொண்டசோழப் பெருந்தெரு, சூரசிகா மணிப் பெருந்தெரு, வானவன்மாதேவிப் பெருந்தெரு ஆகிய தெருக்களிலுள்ள நெடுநிலைமாடங்களும், கூடகோபுரங்களும், ஆடரங்குகளும், நாடக சாலைகளும், அகில்கமழ் மாளிகைகளும், யாழ்பயிலிடங் களும்,இலைகளாலும், தழைகளாலும், பன்னிறப் பூக்கள் தொடுத்த மலர் மாலைகளாலும், தோரணங்களாலும், வாரணங் களாலும், கொடிகளாலும், செடிகளாலும், பளிக்கு மணிகளாலும், களிக்கும் பதுமைகளாலும், அணிசெயப்பெற்று அழகுசொரிந்து பொலிவுற்றன. அரன் கோயில்களும், அரசன் கோயிலுமோ வென்றால் என்னனைய வெளிய மதியினர் தெளியவொண்ணாச் சிறப்புடன் திகழ்ந்தன. அரண்மனையின் அரசிருக்கைமன்றத்தின் முன்னுள்ள வெளியிற்றோன்றிய முடிசூட்டு மன்றத்தின் வனப்பினை என்னென்றியம்புவது! அதனையடுத்துநின்ற திருமண மன்றத்தின் திருவினை எவ்வாறு தெரிப்பது! சுருங்கக்கூறின், அவை கைத் திறம்வாய்ந்த கருமிகளாலும், சிற்பிகளாலும், ஓவியர்களாலும், பொன்

னாலும், மணியாலும், முத்தாலும் அழகுசெயப்பெற்றுக் கண்களைப் பறிக்கும் காட்சியளித்தன.

நிமித்திகர் குறித்த மங்கல நாளின் காலையிலே முடிசூடும் இராசாதிராசர் நகர்வலம் போந்தார். யானைமீதேற்றிய அரசிருக்கையில் இருமருங்கும் வெண்சாமரை வீச, கொற்றக்குடை நிழற்ற, புலிக்கொடி நால அமர்ந்திருந்தார் இராசாதிராசர். யானைகள் மீதும், குதிரைகள் மீதும் இராசேந்திர தேவரும், அமைச்சரும், தானைநாயகங்களும், சிற்றரசர் பலரும் போந்தனர். இருமருங்கிலும் முதற்கண் வில்லும், வாளும், வேலும் ஏந்திய தேர்ந்த காலாட்படையினர் அணிவகுத்துச் சென்றனர். பின்னர் யானைப்படையினரும், குதிரைப்படையினரும் அணிவகுத்துச் சென்றனர். நடுவண் புலிக்கொடியேந்திய படையினர் நூற்றுவர் சென்றனர். போர்முரசும், சங்கமும், எக்காளமும், தாரைகளும் பேரிகையும் விண்ணதிர முழக்கின. நக்கன் எடுத்த பாதம், நக்கன் சோழகுல சுந்தரி, நக்கன் இராசராசகேசரி, முதலிய நடனமாதர் நடனமாடிவரப் பக்கவாத்தியர் கொட்டிமத்தளம், வீணை, மொரலியம், வங்கியம், பாடவியம், உடுக்கை, முத்திரைச் சங்கம் ஆகிய இசைக்கருவிகளை இசைத்தனர். காந்தர்வரும், காந்தர்விகளும் இன்னிசைப்பாடல் பாடிவந்தனர். இடையிடையே, 'இராசாதிராசன் வாழ்க' 'உடையார் இராசேந்திர தேவர் கொற்றம் ஓங்குக' 'எண்டிசை புகழும் பண்டிதச் சோழன் வாழ்க' என்ற பேரொலிகள் விண்ணைப் பிளந்தன. இருமருங்கும் மாளிகைகள் மீதும், மாடத்தும்பரும் நின்று இக்கண்கொளாக் காட்சியைப் பருகிய ஆடவரும், மகளிரும் மலர்மாரி சொரிந்து மகிழ்ந்து ஆரவாரம் செய்தனர்.

காலையிற் புறப்பட்ட ஊர்வலம் இன்னணம் நகர்ந்து நண்பகல் நேரத்தில் முடிசூட்டுமன்றம் வந்து நின்றது. நன்முழுத்த நேரமும் வந்துசேர்ந்தது. இராசாதிராசன் யானையினின்றும் இறங்கினார். மன்றத்தில் மங்கல மாந்தராய ஆதிசைவர் மங்கலத் தீவளர்த்து மந்திரமோதினர். பின்னர் நுண்ணூல் சுற்றிய பொன்னின் குடங்களில் நிரம்பிய நன்னீர்கொண்டு மன்னரை மரபுளி நீராட்டினர். அதன் பின்னனர் மங்கலவுடை தரித்தமன்னன் வெண்கொற்றக் குடைநிழற்றும் அரிமாசுமந்த அரசு கட்டி

லேறியமர்ந்தார். அமர்ந்ததும் மங்கல மாந்தரின் தலைவராய ஆதிசைவர் ஒன்பதுவகை மணிகளும் பொருத்திய பொன்முடியினைக் கையிலேந்தித் திசைதொறும் திரும்பிவணக்கஞ் செய்து பின்னர் பெருவுடையார் விமானத்தை நோக்கி மும்முறை அஞ்சலி செய்து பல்லியங்கறங்கவும், மங்கலவாழ்த்தொலி ஆர்ப்பவும் மன்னன் இராசாதிராசன் முடியிற் சூட்டினார். இன்னணம் முடிசூட்டுவிழா இனிதே நிறைவெய்தியது.

## திருமண விழா

திருமணப் பந்தரின் நடுவண் எழிலொழுக விளங்கிய முத்துவிதானத்தின் கீழ் இராசேந்திர மன்னன் ஆசிரியர் பெருந்தகையாகிய சர்வசிவபண்டிதர் முன்னிலையில் இராசராசேச்சரத்தின் ஆதிசைவ அருச்சகர் சைவாச்சாரியர் பவனபிடாரர் மங்கலத்தீ வளர்த்து மந்திரம் ஓதியிருந்தனர். இராசராசேச்சரத்தில் திருப்பதிகம் ஓதுவோராகிய இராசராச சதாசிவன், மாதேவன் திருஞான சம்பந்தனான ஞானசிவன், கைலாயன் ஆரூரனான தருமசிவன் ஆகியோரை உள்ளிட்ட நாற்பத்தெண்மரும் தக்க பக்கவாத்தியருடன் சுற்றியமர்ந்து திருப்பதிகம் விண்ணப்பஞ்செய்தனர். பல்லியங்கள் மங்கலவொலி பரப்பின. சங்கம், பேரிகை முதலியன மங்கலநாதம் முழக்கின. மன்னன் கிளைஞரும் சுற்றத்தாருமாகிய ஆடவர் ஓர்பாலும், மகளிர் மற்றோர்பாலும் அமர்ந்திருந்தனர்.

முடிசூடிய இராசாதிராசன் எழுந்து சென்று புனித மஞ்சன நீராடிப் பொன்னாடையுடுத்து, மாலையும் மணிமுத்தாரமும் அணிந்து மணக்கோலம் பூண்டுநின்ற தம் மஞ்சராம் இராசராச நரேந்திரரைக் கைப்பிடித்து அழைத்துவந்து மணியாலும் முத்தாலும் வேய்ந்த துகில் புனைவிதானத்தின் பக்கல் நிறுத்தினன். உடனே மங்கலமாதர் நீர் நிறைத்த பொற்குடங்களும் நிரைமணி விளக்குகளும், சுண்ணக்கலவை நிறைந்த முளைப் பொற்பாண்டிலும் ஏந்தி வந்து மணமகனார் எதிர்நின்று மங்கல வாழ்த்துக்கூறி விதிமுறையின் மங்கல வினைகள் செய்தனர். இவ்வினைகள் முடிந்ததும், இராசாதிராசன் மணமகனாரைக் கைப்பிடித்து அழைத்துச் சென்று விதானத்தின் கீழ் மலர் தூவிய

பொற்றவிசின்மீது அமரச்செய்தனர். பின்னர் சைவாச் சாரிய ராகிய பவனபிடாரர் சிவாகமவிதிப்படி மணமகனாருக்கு இறைவணக்கம் முதலாயின செய்வித்தனர்.

மகளிர் வீற்றிருக்கும் பகுதியில் மற்றோர்பால், அஞ்சுகம், நங்கை, மங்கை ஆகிய தோழிகளும், பாங்கியரும், கற்பகத்தின் பூங்கொம்போ, பவளமென்கொடியோ, என்னத் திகழும், அழகினுருவாய அம்மங்காதேவியாருக்குச்செப்பமுடன் ஒப்பனைசெய்தனர். அழகொழுக அமர்ந்திருந்த அம்மங்கா தேவியாருக்குத் தோழிகள், பாசமாலை, மாணிக்கமாலை வாகுவலயம், பதக்கம், அரதனவளையல், அரதனக்கடகம், பவளக்கடகம், அரதன மோதிரம், நவரத்தின மோதிரம், வைரவடம் முதலியமணி பதித்த அணிகலன்களையும், திரு முடி, வீரபட்டம், உதரபந்தனம், இராசாவர்த்தம், திரள்மணி வடம், முதலிய பொன்னாலாய அணிகலன்களையும், முத்தின் சூடகம், முத்தின் சிடுக்கு, முத்துமாத்திரை முதலிய முத்தின் அணிகலன்களையும் அணிவித்துத் தேவியாரின் இயற்கை யழகை மறைத்தனர்.

மங்கலத் தீவளர்த்து மந்திரமோதியிருக்கும் சைவாச் சாரியர் 'நல்லோரை வந்தது, மணமகளைஅழைத்துவாருங்கள்' என்ன அஞ்சுகமாம் தோழி அம்மங்கா தேவியாரை அழைத்து வந்து பொற்றவிசில் நரேந்திர மணாளருக்கு வலப்பக்கம் அமர்த்தினள். நரேந்திர தேவரின் பெற்றோராகிய விமலா தித்தமன்னரும், குந்தவ்வையாரும் எழுந்துவந்து மணமகனாரின் பக்கத்தில் நிற்க அவர்களுக்கு நரேந்திர தேவர் முறைப்படி பாத பூசை செய்தனர். அவ்வாறே அம்மங்காதேவியாரின் பெற் றோராகிய இராசேந்திர தேவரும் பஞ்சவன்மா தேவியாரும் எழுந்துவந்து மணமகளாரின் பக்கத்தில் நிற்க அவர் களுக்குத் தேவியார் முறைப்படி பாதபூசை செய்தனர். பூசை முடிந்ததும் இராசேந்திர தேவமன்னர் மணமகனாரை நோக்கி, 'எங்கள் அருநிதிப்பாவையாம் அம்மங்காதேவியை இல்லக் கிழத்தியாக உமக்கு அளித்தோம்' என்றுகூறி அமர்ந்தனர்.

அமர்ந்தபிறகு பல்லியம் முழங்க, வாழ்த்தொலி மல்க, தேவாரத் திருப்பதிகத்தின் இன்னிசை பெருக, மலர்மாரியும், மங்கலவரிசியும் சொரிய மணமகனாராம் இராசராச நரேந்திர தேவர் திருமங்கல நாண் ஆகிய புலிப்பற் பொற்றாலியை அம்மங்காதேவியாரின் அணிபெறு கழுத்தில் அணிந்தார். பின்னர் சைவாச்சாரியர் ஆணையின்படி மணாளராகிய நரேந்திரதேவர் தம்மணாட்டியின் கைப்பிடித்து மங்கலத்தீயை மும்முறை வலம்வந்தார். அதன்பிறகு மணமக்கள் இருவரும் சைவாச் சாரியரையும், சர்வசிவபண்டிதரையும் நோக்கிக் கீழ்விழுந்து வணங்கி எழுந்து திருநீறு பெற்று நெற்றியில் அணிந்து அமர்ந் தனர்.

இவ்வாறு மணமங்கலம் இனிதே முடிவுற்றது. இம் மங்கல நன்னாளில் குடிகள் மகிழ்தற்பொருட்டு இராசேந்திர மன்னர், சிறையிலிருப்போரை விடுதலை செய்யவும், படைவீரர்களுக்கு ஓர் திங்கள் நிபந்தம் அதிகமாக அளக்கவும், சோழ மண்டலத்தின் குடிகளுக்கு ஓராண்டு இறைதவிர்க்கவும், தஞ்சை நகர மக்களுக்கு மூன்றுநாள் விருந்துணவு அளிக்கவும் ஆணை பிறப்பித்தனர்.

---

## களம் - ஆறு

**இடம்:** தஞ்சையில் வானவன் மாதேவிப் பெருந்தெரு.

**நடிகர்:** சாஸ்திரி, கனபாடி, ஜடாவல்லவர்.

**பொழுது:** நண்பகல்.

**சாஸ்திரி** - (மேலே பார்த்துக்கொண்டே நடந்து கைகளை நீட்டி) அடடா, என்னபோஜனம்! என்ன போஜனம்! இந்தமாதிரி போஜனம் என் ஜென்மத்தில் சாப்பிட்டதேயில்லை!

**கனபாடி** - (மேலே பார்த்துக் கொண்டே நடந்து கைகளை நீட்டி) அப்பப்பா, போஜனம்னா போஜனம்! இந்தமாதிரி போஜனம் சதாகாலமும் கிடைச்சுதென்னா!

**ஜடாவல்லவர்** - (மேலேபார்த்துக்கொண்டே நடந்து கைகளை நீட்டி) சோழ மகாராஜா அரண்மனை பேூஜனம் என்னா அந்த மாதிரியே அலாதிதான்! (மூவரும் மோதிக்கொள்ளல்)

**சாஸ்** - யாருங்காணும்? கனபாடிகளா? என்ன, மேலேபார்த் துண்டே வரீள்?

**கன** - என்ன, சாஸ்திரியளே, இது யார். ஜடாவல்லவரா? என்ன இப்படி ரெண்டுபேரும் எங்கேயோ பார்த்துண்டு வந்து என்மேலே மோதிட்டிள்?

**ஜடா** - என்னங்காணும், நீர் சொல்றது? நேரேபார்த்து நடக்கக் கூடாதா? இப்படி என்மேல் வந்து விழுந்திட்டிளே?

**சாஸ்** - அடாடா, ஜடாவல்லவரா, சரித்தான், எங்கே இவ்வளவு தூரம்?

**ஜடா** - வீரசோழப் பெருந்தெருவிலே, அந்த மேற்குப் பார்த்த மாளிகையிலே பிராமண போஜனம் நடந்தது. அங்கே போயிட்டு வரேன்.

**கன** - வீரசோழப் பெருந்தெருவிலா? அடாடா நேக்குத் தெரியாமே போயிட்டுதே!

**சாஸ்** - கனபாடிகளே, தாங்கள் எங்கேயிருந்து வரீள்?

**கன** - சூரசிகாமணிப் பெருந்தெருவிலே அந்தக் கிழக்குப் பார்த்த மாளிகையிலே பிராமண போஜனம் நடந்தது. அங்கே போய் வரேன்.

**ஜடா** - சூரசிகாமணிப் பெருந்தெருவிலா? அடாடா, நேக்குத் தெரியாமற் போயிட்டுதே! சாஸ்திரியளே, தாங்கள் எங்கேயிருந்து வரீள்?

**சாஸ்** - ஜயங்கொண்ட சோழப் பெருந்தெருவிலே அந்தத் தெற்குப் பார்த்த மாளிகையிலே பிராமண போஜனம் நடந்தது. அங்கேயிருந்துவரேன். நீங்கள் சொல்றதைப் பார்த்தால் நான்கு வீதிகளிலும் பிராமண போஜனம் நடந்திருக்கிறதாத் தெரியறது.

**ஜடா** - சாஸ்திரியளே, தற்சமயம் தாங்கள் எங்கே போரீள்?

**சாஸ்** - வீரசோழப் பெருந்தெருவுக்குத்தான். இதிருக்கட்டும், உங்கள் ரெண்டுபேரையும் ஒரு சந்தேகம்னா கேட்க வேணுமென்று இருந்தேன். ஒருதடவைச் சாப்பிட்டவாளே இன்னொரு முறை உள்ளே விடுவாளோ?

**கன** - தாங்கள் ஒருதடவைச் சாப்பிட்டீள் என்னு அவாளுக்கு எப்படித் தெரியும்?

**ஜடா** - ஏன் காணும் தெரியாது? சாஸ்திரியள் வயத்தைப் பார்த்துத் தெரிஞ்சுக்கமாட்டாளோ?

**சாஸ்** - அதெல்லாம் என்கிட்டே செல்லாது. என் தொந்தி பெரிசாயிருக்குண்ணு சொல்லிவிடுவேன். இதிருக்கட்டும், போஜனம் எப்படியிருந்தது, அதைச் சொல்லுங்கள்.

**கன** - அதையேன் கேட்கிறீள், இலைக்கு ஒருபொன் தாராளமாக் கொடுக்கலாம். உங்களுக்கெல்லாம் பூரி எவ்வளவு கிடைச்சுது?

**ஜடா** - நேக்கு ஒருபொன்தான் கிடைச்சுது?

**சாஸ்** - என்ன பிரமாதம்? நேக்கும் ஒரே பொன்தான் கிடைச்சுது.

**கள** - சரித்தான், நேக்கும் ஒரே பொன்தான் கிடைச்சுது.

**சாஸ்** - பூரி கிடக்கட்டும், பூரி, நீங்கள் போஜனம் பண்ணின இடத்திலே கூட்டம் எப்படியிருந்தது?

ஜடா - அதையேன் கேட்கிறீர்! எள்ளுப்போட்டால் எள்ளு விழாது. ஆனால் இந்தப் பிராமணாள் இருக்காளே, பிராமணாள், கொஞ்சம்கூடப் பெரியவாளைக் கண்டா மரியாதை இல்லேங்காணும்.

கன - என்ன, இப்படிக் கோபிச்சுக்கிறீள்? என்ன பண்ணி விட்டா உம்மை.

ஜடா - என்ன பண்ணி விட்டாளா? பிராமணா போஜனப் பிரியகா என்கிறது சரியாத்தானிருக்கு. என் காலை மிதிச்சுத்துவைச்சுவிட்டா. இதுபோதாதா நேக்கு?

சாஸ் - இதைப் பிரமாதமா சொல்றியளே, (துணியைக் காட்டி) இதோ பாரும், என் சோமனையே கிழிச்சுட்டா.

கன - இப்படி ரெண்டுபேரும் ரொம்பபிரமாதமாப் பேசிறியளே, என் கதையைக் கேளுங்கள். என்னையே கீழே தள்ளி ஒரு புரட்டுப் புரட்டித் துவைச்சுட்டா. அங்கேயிருந்த சேனாவீரன் என்னைத் தூக்கி விடாமலிருந்தால் என் குடலே வெளியே வந்திருக்கும்.

ஜடா - கூட்டத்திலே போஜனத்துக்குப் போகிறதின்னா எல்லாம் இப்படித்தான். இது கிடக்கட்டும், நீங்கள் பிருகந்நாயகி பிருகதீஸ்வர ஆலயத்துக்குப் போனீளோ?

சாஸ் - அங்கே என்ன விசேஷம்?

ஜடா - விசேஷமா? நன்னாயிருக்கு! சாஸ்திரியளே, தாங்கள் தஞ்சாவூரிலேதான் இருக்கிறீளோ?

கன - நேக்குந் தெரியாதே, என்ன விசேஷம்?

ஜடா - உமக்குத் தெரியாதா? நல்ல பிராமணாள் நீங்கள். பிருகந்நாயகி சமேத பிருகதீஸ்வர சுவாமிக்கு ஒரு வாரத்துக்குத் தினேதினே விவாகமகோற்சவம், பட்டா

பிஷேக மகோற்சவம் இவைகளை முன்னிட்டு விசேஷ பூஜா அபிஷேக அலங்கார அர்ச்சனா ஆராதனை நடந்து வரதே.

**சாஸ்** - இது நேக்குந் தெரியுங்காணும். ஆனால் ஒருவாரத்துக்கு நடக்கிறதென்னு தெரியாது.

**கன** - ஜடாவல்லவரே, நித்தியநைவேத்தியமும் விசேஷந் தானே?

**ஜடா** - இதிலென்ன சந்தேகம்? எத்தனையோ தினிசு நைவேத் தியம்! பழவரிசிப் போனகம், பழவரிசிச்சர்க்கரைப் போனகம், அப்பக்காய்க் கறியமுது, புளிங்கறியமுது, புளியிட்டடுங்கறியமுது, காய்க்கறியமுது, பொறிக் கறியமுது, பருப்பமுது, நெய்யமுது, தயிரமுது, இன்னும் எத்தனையோ, நேக்குப் பேர் தெரியவில்லை.

**கன** - எல்லாம் மகா நைவேத்தியமான்னா இருக்கு. இன்னி யிலிருந்து தவறாமே ஆலயத்துக்குப்போகணும். நேக்குத் தெரியாமற் போயுட்டுதே.

**சாஸ்** - இன்னொரு சந்தேகம் நேக்கு ஏற்பட்டிருக்கு.

**ஜடா** - இதில் சந்தேகத்துக்கு என்ன இடமிருக்கு?

**சாஸ்** - இதைப்பத்தி இல்லேங்காணும். இராஜேந்திரச் சக்கர வர்த்தி அரண்மனையிலே நடந்த பட்டாபிஷேக விவாக மகோற்சவங்களுக்காகத்தானே இத்தனை விசேஷ மும்? இதிலே பிராமணாளுக்கும் மூணுநாள்போஜனம், இதராளுக்கும் மூணுநாள் போஜனம். இதை யோசித் துப்பார்த்தியளோ?

**கன** - சாஸ்திரியளே, நன்னாப் புரியறதுங்காணும்.

**ஜடா** - நேக்கும் நன்னாப் புரியறது. சக்கரவர்த்தி வரவர ஒருமாதிரியாத்தானிருக்கிறார். இதராளுக்கும் மூணுநாள் போஜனம்! பிராமணாளுக்கும் மூணுநாள் போஜனம்!

**கன -** மகா அநியாயங்காணும் இது!

**சாஸ் -** இதுக்கு நாமென்ன பண்றது?

**கன -** என்ன பண்றதா? இப்படியே விட்டுவிட்டா வரவரக் காரியம் ரொம்பக் கெட்டுப் போயிடும். ஜடாவல்ல வருக்குத்தான் அரண்மனையிலே ரொம்பசெல் வாக்கு இருக்கே, அவர் போய் மந்திரியிடம் இந்த அநியாயத்தை எடுத்துச் சொல்லக் கூடாதோ?

**சாஸ் -** கனபாடிகளே, உம்முடையயோஜனை நூத்திலே ஒண் ணுங்காணும். ஜடாவல்லவரே, இன்னிக்கே மந்திரியிடம் போயிட்டு வாரும்.

**ஜடா -** நான் போய் அவரிடம் என்னாங்காணும் சொல்றது?

**கன -** என்னா சொல்றதா? நான் சொல்றேன். கேளும். நேரா மந்திரியிடம் போறது. இப்போ நடந்த மகோற் சவங்களுக்காகப் பிராமணாளுக்கு ஒருமாச போஜன மாவது நடக்கவேணும் என்னு சொல்றது. அப்படி நடந்தாத்தான், சோழ சாம்ராஜ்யம் சுபிக்ஷமாயிருக்கும், காலாகாலத்திலே மழை பெய்யும், பிரஜைகள் எல் லாம் சௌக்கியமாயிருப்பா, சோழச் சக்கரவர்த்திகள் இந்தத் தேசத்திலே வம்சபாரம்பர்யமாக ராஜ்யபாரம் நடத்துவா, எல்லோருக்கும் ஈஸ்வர கடாக்ஷம் உண் டாகும், இன்னும் இத்தியாதிகளையெல்லாம் வருணிச்சுச் சொல்றது.

**சாஸ் -** கனபாடிகளே, ரொம்பரொம்ப நல்ல யோஜனை. ஜடா வல்லவரே, நீர் உடனே புறப்பட வேண்டியதுதான். இனிமேல் தாமசம் வேண்டாம். இப்பவே புறப்படும்.

**ஜடா -** சரி, அப்படியானா புறப்படறேன். போயிட்டு வந்த பிறகு இன்னிக்கு சாயரக்ஷை பிருகந்நாயகி ஆலயத்தில் சந்தித்துப் பேசிக்கொள்வோம்.

**சாஸ் -** அப்படியே செய்வோம். நீர் போய் ஜயத்தோடு திரும்ப வேணும்.

**கன -** சந்தேகமே வேண்டாம். ஜடாவல்லவர் ஜயத்தோடுதான் திரும்புவார். **(ஜடாவல்லவர் ஒருதிசையிலும், சாஸ்திரி, கனபாடி இவர்கள் ஒருதிசையிலும் செல்லுதல்)**

---

# அங்கம் - நான்கு

## களம் - ஒன்று

**இடம்:** **தஞ்சை அரண்மனையில் திருவோலக்க மன்றம்.**

**நடிகர்:** **இராசேந்திரன், இராசாதிராசன், இராசேந்திர சோழதேவன், வீரராசேந்திரன், வல்லவரையர் வாண்டியதேவர், அரையன் இராசராசன், இராசேந்திரசோழ மாவலிவாணராயர், இராச ராச ஈழத்தரையர். வேளைக்காரப் படைத் தலைவர்.**

**பொழுது : காலை.**

**இராசேந்திரன் -** சாமந்தநாயகரே, இனி நன்முழுத்த நாளிலே நமது வில், வாள், வேல், குடை, கொடி, முரசு இவற்றினை வடதிசைப் போக்கிப்பின்னர்த் தண்டத் தானை புறப்பட வேண்டிய ஏற்பாட்டினைச் செய்ய வேண்டியதுதானே?

**வல்லவரையர் -** அவ்வாறே செய்வோம். நாளைநின்று வியாழ னன்று நன்னாள். வெங்கைநாடுதாண்டிய பிறகுதான்

தண்டத்தானை போர்க்கோலம் பூணவேண்டியிருக்கும். இப்பொழுது நாம் செய்துவைத்திருக்கிற ஏற்பாட்டினை தானைநாயகங்களுக்கும் தங்கள் வீரமக்களுக்கும் தெரிவித்து விடுவோம்.

**இரா** - இதனைத் தாங்களே தெரிவித்து விடுங்கள்.

**வல்ல** - தானைநாயகங்களே, அரையன் இராசராசன் வங்கத்தின் மேற்செல்லும் தண்டத்தானை முழுதிற்கும் தலைவர். விமலாதித்த மன்னர் தானையின் நடுப்பகுதிக்குத் தலைவர். இராசேந்திர சோழதேவர் இடசாரிப் படையணிகளுக்குத் தலைவர். இராசராச நரேந்திரர் வலசாரிப் படைகளுக்குத் தலைவர். இராசாதிராசர் முன்போலவே இரட்டபாடி எல்லையைக் காத்து நிற்கவேண்டும். வீரராசேந்திரரும் முன்போலவே பாண்டி மண்டலத்து எல்லையைக்காத்து நிற்க வேண்டும். தண்டத்தானை வங்கத்தை வென்று கங்கை நீரும், இமயத்தின் கல்லும் கொண்டுவரும் எல்லையில் இராசேந்திரசோழ மாவலி வாணராயர் தலைமையில் நாகையிலும், கடல்மல்லையிலும் நிற்கும் நமது கடற்படை கடாரப்படையெழுச்சிக்குப் புறப்படவேண்டும். வேளைக்காரப் படைத்தலைவராய இராசராச ஈழத்தரையர் தமது படையுடன் நமது மன்னர் பெருமான் செல்லுமிடமெல்லாம் செல்லவேண்டும். இதுதான் எங்கள் ஏற்பாடு. உங்கள் கருத்துக்களைத் தடையின்றி இப் பொழுது வெளியிடலாம்.

**இராசாதிராசன்** - தந்தையே, சாமந்தநாயகரே, என்னை வங்கத்திற்கனுப்பிப் பெருமைப்படுத்தும் எண்ணம் தங்களுக்கு இலை போலும்.

**வல்ல** - இளவரசே, இதனை நாங்கள் ஆய்ந்தே முடிவுசெய்தோம். தங்களுக்கு முடிசூட்டியதும் இதுகுறித்தே. வங்கத்தினின்று வெற்றியுடன் நமது தானை திரும்பிவர எப்படியும் இரண்டு ஆண்டுகளாவது செல்லும். இந்த

இடைக்காலத்தில் எதிர்பாராவகையில் மன்னர் பெருமா னுக்கு யாதாவது நிகழுமாயின் சோழப்பேரரசின் பொறுப்பை ஏற்பதுயார்? இரண்டாவதாக இரட்டபாடி எல்லையைத் தங்களால் அன்றி யாரால் பாதுகாக்க முடியும்? வங்கத்தைவிட இரட்டபாடி தஞ்சைக்கு மிக அண்மையில் உள்ளது.

**இரா-ரா** - சரி, தங்கள் ஏற்பாட்டை ஏற்கின்றேன்.

**வல்ல** - வீரராசேந்திரர் பண்டிநாட்டெல்லையைப் பாதுகாத்துச் சிறந்த பழக்கம் பெற்றிருக்கின்றார். ஏறக்குறைய அவரே பாண்டிநாட்டரசராகவும் விளங்குகிறார். அவருக்குப் படைத்தலைமை தொல்லை வேண்டாம் என்றே விட்டு விட்டோம்.

**வீரராசேந்திரன்** - மன்னர் பெருமான் ஆணையை ஏற்க யான் எப்பொழுதும் சித்தமாயிருக்கின்றேன்.

**இரா** - மாமா, இந்தக்கடாரப் படையெழுச்சிதான் எனக்கு வியப்பாயிருக்கின்றது.

**வல்ல** - வியப்பென்ன? சங்கிராம விசயோத்துங்க வர்மனுடைய ஆணவத்தை அடக்கினாலொழிய நமது பெருமைக்கு ஏதம் வரும் என்பது உறுதி.

**இரா** - எனது இணையற்ற தந்தை என்றும் சிவன் சேவடி மற வாத சிந்தையராயினும் புறமதத்தினருக்கும் ஏற்ற பெற்றியால் சலுகைகள் காட்டினார். வைணவக் கோயில்களுக்கும், சமண, புத்தப் பள்ளிகளுக்கும் எத் தனையோ நிபந்தங்கள் ஏற்பாடுசெய்துள்ளார். சங்கிராம விசயோத்துங்க வர்மனுடைய பாட்டனார் சூடாமணி வர்மனுடைய வேண்டுகோளுக்கிணங்கிச் சத்திரிய சிகா மணி வளநாட்டுப் பட்டினக் கூற்றத்துள்ள நாகப் பட்டினத்தில் பௌத்தப் பள்ளி எடுப்பிக்கவும், அதற்கு இராசராசப் பெரும்பள்ளி எனத் தம்பெயரிடவும்

உடன்பட்டார். சங்கிராம விசயோத்துங்கவர்ம னுடைய தந்தை மாறவிசயோத்துங்க வர்மன் வேண்டு கோளுக்கு இணங்கி நாகையிலுள்ள அப்பெரும் பள் ளிக்கு ஆனைமங்கலம் என்றவூரைப்பள்ளிச்சந்தமாக அளித்தார். இவைகளுக்குச் சங்கிராம விசயோத்துங்க வர்ம னுடைய கைம்மாறு என்ன? நமது வணிகர் இழந்த பொருளுக்கு ஈடு கேட்டால், சோழக்கடற்படையாட் களின் கொள்ளையைநிறுத்தாவிட்டால் உடனே போர் என்று நம்மை யச்சுறுத்துவதா?

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

**வல்ல** - உண்மை, உண்மை. வள்ளுவர் வாக்குப் பொய்க்காது. அரசே, தங்கள் அறிவாற்றலையும் ஆராய்ச்சி நுட்பத் தையும் பலவாண்டுகளாக நுகர்ந்து இன்பம் எய்தி வருகின்றேன். நீண்டகாலமாகத் தங்களிடம் எனது மனதில் எழுந்த ஓர் ஐயத்தைக்கூறித் தெளிய வேண்டு மென்றிருந்தேன். இன்றுதான் அது என் நினைவிற்கு வந்தது.

**இரா** - தங்களுக்கா ஐயம்? எதனைக்குறித்து?

**வல்ல** - சில திங்கள் முன்புயானும் இதோ வீற்றிருக்கின்ற தானை நாயகங்களும் படைத்தலைவர், படைநாயகம் முதலிய பதவிகளுக்கு நமது படைகளிலிருந்து ஆட்கள் தேர்ந் தெடுத்தோம். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில், களத்து வென்றார், கங்கைநாடர், தஞ்சைராயர், மூவரையர், பொன்னாரம்பூண்டார் என்பவர்கள் சிலராவர். இவர் கள் ஒவ்வொருவரும் தமதுபட்டங்களுக்குக் காரண மாக ஏதேதோ வரலாறு கூறினர். இவற்றின் உண்மை எனக்குப் புலனாகவில்லை. எனது ஐயம் இத்துடன் நின்றுவிடவில்லை. எனது பட்டத்திற்குக் காரண மென்ன? நமது தானை நாயகங்களின் பட்டங்களுக்குக் காரணமென்ன? எனது குலம் என்ன? தங்களது குலம்

என்ன? என் கேள்விகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக எழுந்தன. இவைகளுக்கு ஆராய்ச்சி அறிவுசான்ற தாங்களே தான் விடையளிக்க முடியும்.

**இரா** - மாமா, ஆராய்ச்சி செய்வதற்கு இதுநேரமில்லை. என்றாலும் எனக்குத் தெரிந்தவரைச் சுருக்கமாகக் கூறுகின்றேன், கேளுங்கள். எமது குலம் சோழர் குலம் என்றே கூறவேண்டும். எனினும் அது தனிப்பட்ட சோழர்குலமாகாது. எனது மூதாதை விசயாலய வேந்த ருக்குப் பிறகு அது கலப்பெய்விட்டது. அதனாற்றான் தாங்கள் எனக்கு மாமாவாக விளங்குகிறீர்கள். எனது தந்தையார் எனது அத்தை குந்தவ்வையாரைத் தங்க ளுக்குத் திருமணம் செய்வித்தார். எனது தங்கை குந்தவ்வையாரை மஞ்சர் விமலாதித்தருக்குத் திரு மணம் செய்வித்த பிறகு கீழைச்சாளுக்கர் குலமும் சோழர் குலத்துடன் கலந்து விட்டது. இதனாற்றான், எனது மகள் அம்மங்காதேவியை விமலாதித்தர் மகன் நரேந்திரருக்கு மணம் செய்து கொடுக்க யான் ஒருப் பட்டேன். தங்களுடைய குலமும் தானைநாயகங் களின் குலமும் தாங்கள் முன்கூறிய களத்துவென்றார் முதலியோருடைய குலமும் ஒன்றே.

**வல்ல** - அதுதான், என்ன? கூறவேண்டும்.

**இரா** - மாமா, இப்பொழுது தங்களது ஆட்சியிலுள்ள நாட்டை ஏறக்குறைய எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் புல்லி என்னும் பெயருடைய கள்வர் கோமான் வேங்கடத் தைக் கோநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்தான். அவன் கொடையிலும் வீரத்திலும் மிக்கோனாய் விளங் கினமையால் சங்ககாலப்புலவர் பெருமக்கள் அவ னைப் புகழ்ந்து பாடியுள்ளனர். அவ்வரசரது வழியினரே தாங்கள். புல்லியின் வழியினர் நீண்டகாலம் வேங் கடத்தைச் சுற்றியுள்ள பகுதியை ஆண்டுவந்தனர். புல்லி யின் காலத்திற்கு ஏறக்குறைய முந்நூறு ஆண்டு களுக்குப்பிறகு அவருடைய வழியினர் தெற்கே வெள்ளம்

போற் புரண்டு வந்துசோணாட்டையும் பாண்டி நாட்டையும் அடிப்படுத்தினர். சோழ பாண்டியர் ஏறக்குறைய ஐந்நூறு ஆண்டுகள் வரையிலும் முடி யிழந்து தலைமறைவாகத் திரிந்தனர். புல்லியின் வழி வந்தவர்களில் ஒருவன் அச்சுத விக்கந்தன் என்பவன். இவன் புல்லியின் காலத்திற்கு நாநூறு ஆண்டு களுக்குப்பிறகு காவிரிப்பூம்பட்டினத்தைக் கோநகராகக் கொண்டு சேர சோழ பாண்டிய மண்டலங்கள் மூன்றையும் ஆட்சிபுரிந்தான். இவனுக்குப் பிறகு ஒரு நூறாண்டுகள் வரையிலும் இவனது வழியினர் தமிழகத்தில் பேரரசர்களாகவே ஆட்சி செலுத்திவந் தனர். இக்காலத்தில் சேர சோழ பாண்டியர் மறைவாகவே திரிந்தனர். அதன்பிறகு பல்லவர்களும் சோழர்களும் ஒன்றுசேர்ந்து அவர்களை முறியடித்தனர். முறியடிக்கப் பட்ட பிறகும் அவர்கள், பலவிடங்களில் சிற்றரசர்களாய் ஆட்சிசெலுத்திவந்தனர். பல்லவர்களும் பிறகு இவர் களுடன் மணத்தால் கலந்துவிட்டனர். அச்சுதவிக்கந் தன் காலத்திற்கு நாநூறு ஆண்டுகளுக்குப் பிறகு அவனது வழியினரான முத்தரையர் என்பார் தஞ்சையை ஆண்டுவந்தபோதுதான் மூதாதையாகிய விசயாலய மன்னர் பல்லவர் துணைகொண்டு அவரை முறி யடித்துத் தஞ்சையைக் கைப்பற்றித் தமது ஆட்சியை நிலைநிறுத்தினார்.

**வல்ல** - அரசே, தாங்கள் கூறிய வரலாற்றிலிருந்து தெளிவாக யான் ஒன்றும் அறிந்துகொள்ள முடியவில்லை.

**இரா** - தாங்கள் கள்வர்கோமான் புல்லியின் வழியினர், அச்சுதவிக்கந்தன் வழியினர், முத்தரையன்வழியினர். இப்பொழுது தெரிகிறதா? தாங்கள் இப்பொழுது எமக்குட்பட்ட சிற்றரசாகவும், எமது சாமந்தர் தலைவ ராகவும் விளங்குகின்றீர்கள். தங்களைப் போன்றே புல்லியின் வழியினர் பலர் நமக்குட்பட்ட சிற்றரசர் களாய்த் திகழ்கின்றனர். பலர் நமது தானைநாயகங் களாகவும், படைவீரரர்கவும் திகழ்கின்றனர். எமது

மூதாதை வியசாலய மன்னர் ஆட்சிதொட்டே சோழரும், புல்லியின் வழியினராகிய களவரும் மணத்தால் ஒன்றுபட்டுவிட்டனர். களவர் தமிழ் மக்கள் ஆதலாலும், படைச்செருக்கும் படை நடத்தும் திறலும் வாய்ந்த அஞ்சாநெஞ்சினர் ஆதலாலும், கல்வி, கேள்வி, ஒழுக்கங் களிற் சிறந்த பெருமக்களாதலாலும், எமது மூதாதையர் அவர்களுடன் மணத்தால் ஒன்றுபட ஒருப்பட்டிருத்தல் வேண்டும். களவருக்குக் களப்பிரர், களேபரர், என்ற பெயர்களும் உண்டு. களவர்களில் சிலருக்கு வழங்கி வருகிற, சோழன் கிளையார், சோழப்பிரியர், சோழ தரையர், சோழங்கர், சோழங்க நாடார், சோழங்கதேவர், சோழகர் முதலிய பட்டங்கள் நமது கலப்பைத் தெளி வாக எடுத்துக் காட்டுகின்றன. சோணாடுகொண்டான் என்ற பட்டம் ஒருகாலத்தில் களவர் சோணாட்டை அடிப்படுத்தினமையைக் குறிக்கின்றது.

**வல்ல** - கள்வர் கோமான் புல்லியின் குலமுறையுணர்த்திய கோமானே, இப்பொழுது எல்லாவற்றையும் தெளிவாக வுணர்ந்தேன். தாங்கள் ஆராய்ச்சிக்கு ஓர் எல்லையாக விளங்குகிறீர்கள்.

**அரையன்** - மன்னர் பெருமானே, தாங்கள் கூறிய வரலாறு கேட்டு எனதுள்ளம் பூரிக்கின்றது. வீர உணர்ச்சியும் பொங்கி எழுகின்றது.

**மாவலி வாணராயர்** - மன்னர் மன்ன, இப்பொழுது தான் யான் எனது முன்னோர் பெருமையை உணர்ந்தேன்.

**ஈழத்தரையர்** - அரசரேறே, தாங்கள் அறிவுக்கடலாக விளங்கு கிறீர்கள்.

**இரா** - சாமந்தநாயகரே, வியாழனன்று வில், வாள் முதலிய வற்றை வடதிசைப் போக்கி அடுத்தநாளே தண்டத் தானையைப் புறப்படுத்தி விடுவோம். யானும் தானை யுடன் வெங்கை வரையும் சென்று திரும்புகிறேன். யான்

திரும்பும் வரையிலும் இராசாதிராசன் தஞ்சையிலேயே தங்கி எனது அலுவலைப் பார்க்கட்டும். வீரராசேந்திரன் பாண்டிநாட்டுக்கு உடனே புறப்பட வேண்டியதுதான்.

வல்ல - அவ்வாறே செய்வோம். ஏனைய ஏற்பாடுகளை மாலையிற் பார்த்துக்கொள்வோம். (எல்லோரும் செல்லுதல்)

---

## களம் - இரண்டு

இடம்: தஞ்சையில் பெருவுடையார் கோயில்

நடிகர்: இராசேந்திரன், விமலாதித்தர், இராசேந்திர சோழதேவர், நரேந்திரன், அரையன் இராச ராசன், சைவச்சாரியர் பவனபிடாரர்.

பொழுது: இரவு முதல் யாமம்.

இராசேந்திரன் - (இறைவன் திருமுன் நின்று அஞ்சலி செய்துபாடுதல்)

உலகெலாந் தொழவந் தெழுகதிர்ப் பரிதியொன்று
நூறாயிரகோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம்பச்சோ வங்ஙனே
வழகிதோ வரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம் பருவரை
வெண்டிங்கள்
நிலைகுலாம் பதணத்திஞ்சி சூழ்தஞ்சை யிராச
ராசேச்சரத் திவர்க்கே.

எங்குலமுழுதாண்டு எம்மை உய்விக்கவந்து இராச ராசேச்சரத்து எழுந்தருளிய பெருமானே, அடியேனுடைய

குற்றங்களைந்து அடியேன் மேற்கொண்டுள்ள போரில் வெற்றி நல்குமாறு உமது திருவடித்தாமரைகளைப் பற்றி நிற்கின்றேன். **(கீழே விழுந்து வணங்கி எழுதல்)**

**விரிச்சி** - 'அரசே உமதுதானைக்குப் பெருவெற்றியுண்டாகும்.'

**சை-பவ** - மன்னர் பெருமானே, வானிழல் கூறிய ஒலி கேட்டதோ? **(திருநீறு நல்குதல்)**

**இரா** - **(திருநீறு பெற்று நெற்றியில் அணிந்து திரும்புதல்)**

**விமலாதித்தர் - (இறைவன் திருமுன் வந்து நின்று அஞ்சலிசெய்து)** இராசராசேச்சரமுடைய எம்பெருமானே, அடியேன் வெங்கை மன்னன் விமலாதித்தன் என்னையுடையார் இராசேந்திர தேவர் மேற்கொண்டுள்ள வங்கப்போரில் ஊத்தையட்டாமல் ஏன்று கடவ திருவிளக்குக்கு நான்கு பசுக்கள் விடுகின்றேன். அடியேனுடைய நிபந்தத்தை ஏற்று வெற்றி நல்குதல் வேண்டும். **(கீழே விழுந்து வணங்கி எழுந்து திருநீறு பெற்றுச் செல்லுதல்)**

**அரையன் - (இறைவன் திருமுன் வந்து நின்று அஞ்சலி செய்து)** எம்மையாளுடைய இராசராசேச்சரப் பெருமானே, அடியேன் மகாதண்டநாயகம், அரையன் இராசராசன் உடையார் இராசேந்திரதேவர் மேற்கொண்டுள்ள வங்கப் போரில் ஊத்தையட்டாமல் ஏன்றுகடவ திருவிளக்குக்கு நான்கு ஆடுகள் விடுகின்றேன். அடியேனுடைய காணிக்கையேற்று வெற்றியருள் புரிதல் வேண்டும். **(கீழே விழுந்து வணங்கியெழுந்து திருநீறு பெற்றுச் செல்லுதல்)**

**இரா.சோ.தேவன் - (இறைவன் திருமுன் வந்து நின்று அஞ்சலிசெய்து)** எங்குலமுழுதாண்டு எம்மையுய் விக்கவந்து இராசராசேச்சரத்து எழுந்தருளிய பெருமானே, அடியேன் இராசேந்திர சோழதேவன், என்னையுடையார் இராசேந்திர தேவர் மேற்கொண்டுள்ள வங்கப்போரில்

ஊத்தையட்டாமல் ஏன்றுகடவ திருவிளக்குக்கு ஐந்து பசுக்கள் விடுகின்றேன். அடியேனுடைய நிபந்தத்தை யேற்று வெற்றியருள்புரிதல் வேண்டும். (கீழேவிழுந்து வணங்கி எழுந்து திருநீறு பெற்றுச் செல்லுதல்)

நரேந்திரன் - (இறைவன் திருமுன் வந்து நின்று அஞ்சலி செய்து பாடுதல்)

பன்னெடுங் காலப் பணிசெய்து பழையோர்தாம்
பலரேம்ப லித்திருக்க
என்னெடுங் கோயில் நெஞ்சுவீற்றிருந்த எளிமையை
என்றுநான் மறக்கேன்
மின்னெடும் புருவத்திளமயில னையார்
விலங்கல்செய் நாடக சாலை
இன்னடம் பயிலுமிஞ்சி சூழ்தஞ்சை யிராசரா
சேச்சரத் திவர்க்கே.

அண்டங்களனைத்திற்கும் நாதனே, இராசராசேச்சர முடைய எம்பெருமானே, அடியேன் இராசராச நரேந்திரன், என்னையுடையார் இராசேந்திர தேவர் மேற்கொண்டுள்ள வங்கப்போரில் ஊத்தையட்டா மல் ஏன்றுகடவதிங்கள் விழாத் திருவமுதிற்குத் திங்கள் தோறும் பழவரிசி இருகலமும் பருப்புமுதலியனவும் ஏற்பாடு செய்துள்ளேன். வெற்றியருள் புரிதல் வேண்டும். (கீழே விழுந்து வணங்கி எழுந்து திருநீறு பெற்றுச் செல்லுதல்)

---

## களம் - மூன்று

இடம்: தஞ்சைப் புறம்படியில் படைப்பயிற்சிப் பறந்தலை

நடிகர் : களத்துவென்றார், போர்மூட்டியார், வாள் வெட்டி.

பொழுது: காலை.

**போர்மூட்டியார்** - தம்பி, களம். எப்போதானைபுறப்படுது?

**களத்துவென்றார்** - நேற்றே, வில், வாள், குடை எல்லாவற்றையும் வடதிசைப் போக்கியாச்சு. இன்று மாலை முன்னணி புறப்படுது. நாளைப்பேரணி புறப்பட்டுவிடும். ஆனால் இப்போது அணிவகுப்பு ஒன்றுங்கிடையாது. அதெல்லாம் வெங்கைநாடு தாண்டின பிறகுதான்.

**வாள்வெட்டி** - களத்தண்ணா, என்னைமாத்திரம் தாங்கள் கடைக்கண் பார்க்கவில்லை. தங்களுக்கு ஊழியஞ் செய்து வருகிறது போல இன்னொருவருக்குச் செய்து இருந்தால் நான் இப்போது படைத்தலைவனாய் இருப்பேன்.

**களத்** - ஏய், வாள்வெட்டி, இப்படியெல்லாம் மட்டித்தனமாப்பேசாதே. நான் யாருக்கு என்ன செய்தேன்? சோழர் தானையில் ஒருத்தன் பரிவுப்பேச்சாலே யாராவது உயர்ந்தான் என்று சொல்ல முடியுமா?

**வாள்** - ஏன் அண்ணா இப்படிப் பேசுகிறீங்கள்? நேற்றுவரையும் இந்த வீரப்புலி என்னைப்போல ஒரு படைவீரனாத்தானேயிருந்தான்? அவனைப் படைத்தலைவனாக்கினது யார்?

**களத்** - இந்தமாதிரிதான் நீ ஏமாந்து போகிறது? வீரப்புலி படைத்தலைவன் ஆனதற்கு யார் காரணம் என்று எனக்கே தெரியாது. காரணம் என்ன என்றுமாத்திரம் எனக்குத் தெரியும்.

**போர்** - தம்பி, களம், வீரப்புலி இப்போது படைத்தலைவனா? மிக நல்லபேர்வழி. எல்லாம் நீதான் அவன் தலையில் எழுதி வச்சே.

**வாள்** - பார்த்திங்களா, போர்மூட்டியண்ணாவுக்குக்கூட நீங்கள் வீரப்புலிக்குச் செய்த உதவி தெரிஞ்சிருக்குது.

**களத்** - திரும்பத்திரும்ப இப்படிப்பேசாதே. அந்த வடநாட்டு ஒற்றப்பசங்களை வீரப்புலிதான் கண்டுபிடிச்சான். இதனாலேதான் அவன் படைத்தலைவனாயிருக்கிறான் என்று தெரியுது.

**போர்** - தம்பி, களம், நம் அரண்மனையிலே திங்களுக்கு ஒரு திருமணம், முடிசூட்டு நடந்தால் எவ்வளவு நன்றா யிருக்கும், தெரியுமா?

**களத்** - ஏன் அண்ணா இப்படிச் சொல்கிறீங்கள்?

**போர்** - எனக்கும் ஒருதிங்கள் நிபந்தம் அதிகமாகக் கிடைச்சுது. மூன்றுநாள் விருந்தும் கிடைச்சுது. என் ஆயுளிலே இந்த மாதிரி விருந்து உண்டதே கிடையாது. இதோடு சிங்கப்புலி வீட்டிலேயும் ஒரு நாள் விருந்துண்டேன்.

**களத்** - சிங்கப்புலி வீட்டிலேகூடவா உங்களுக்கு விருந்து?

**போர்** - அடாடா, அத ஏன் கேட்கிறாயப்பா! இந்தமாதிரி விருந்தோம்புகிற மக்களை நான் இதுவரையிலும் பார்த்ததேயில்லை. சிங்கப்பலி என் பக்கத்திலே உட் கார்ந்து கொண்டு, நல்லாச்சாப்பிடுங்கள், நல்லாச் சாப்பிடுங்கள் என்று சொல்லிக்கொண்டேயிருந்தான். அந்தக் குட்டி அஞ்சுகம், மேல மேலே ஏதாவது கறியும், அமுதும் வச்சுக்கொண்டே இருந்தாள். அடாடா, அந்தக் குட்டிக்குவந்த வாழ்வே வாழ்வு! இப்போது எப்படி இருக்கிறாள், நீ கண்ணாலே பார்த்தியா! நான் சாப் பிட்டுக்கொண்டிருந்தபோது வீரப்புலி உள்ளே வந்தான். என்னைக் கண்டதும் அவனுக்கு எப்படி இருந்ததோ தெரியவில்லை. அண்ணா, அண்ணா, அண்ணா என்று சொல்லிக்கெண்டு ஆட்டமாத்தான் ஆடினான். அவனுக்கு என்ன களிப்பு, என்ன மகிழ்ச்சி! அப்பா! இந்தமாதிரி மகிழ்ச்சியும், ஒற்றுமையும் உள்ள ஒரு குடும்பத்தை நான் பார்க்கவே முடியாது.

**களத்** - அந்தக் குடும்பத்துமேல் கடவுள் கடைக்கண் சாத்தி விட்டார். அதைப்பற்றி நாம் பேசுகிறதே தவறு. கண்ணெச்சி பட்டாலும் படும்.

**வாள்** - நான் படைவீட்டுக்குப் போகிறேன். அண்ணா. என்னமோ, நான் ஒருத்தன் இருக்கிறேன் என்கிறதை மறந்து விடாதீங்க. வங்கப்போருக்குப் போனால் நான் எங்கேயோ, நீங்கதான் எங்கேயோ, யார்கண்டா? என்னமோ, கடவுள் இருக்கிறார். இத்தனைப் போரிலே யும் வெற்றியுடன் திரும்பியிருக்கிறேன்.

**களத்** - இதுதானப்பா, எனக்குவியப்பாயிருக்கு. இத்தனைப் போரிலேயும் நீ எப்படித்தான் தப்பி வந்தாயோ?

**வாள்** - இதில் என்ன, அண்ணா, வியப்பு தங்களுக்கு? எல்லாம் என் வீரத்தாலேதான் வெற்றியேற்பட்டுது. குடமலை நாட்டுச் சண்டையிலே ஒரு கணவாயில் எங்கள் படை தனியாக அகப்பட்டுக்கொண்டது. நூறு பேரிலே ஒரு பத்துப்பேர்தான் தப்பியிருந்தோம். எனக்கும் விதி முடிஞ்சுப்போச்சு என்றே நினைத்தேன். அப்புறம் மனவுறுதியைக்கைவிடாமே ஒருகாரியம் செய்தேன். தப்பிச்சேன்.

**களத்** - என்ன காரியமப்பா அது?

**வாள்** - இரண்டு பிணங்களுக்கிடையிலே விரைச்சுப் படுத்துக் கொண்டேன். கைகால்களைக் கொஞ்சமும் ஆட்டாமே மூச்சையும் விடாமே பிடிச்சுக்கொண்டு கிடந்தேன். எதிரிகள் என்னைத் தாண்டிப்போன பிறகு எடுத்தேன் ஓட்டம். *(போர்மூட்டியும், களத்துவென்றாரும் சிரித்தல்)*

**களத்** - நல்ல வீரனப்பா நீ.

**வாள்** - இரட்டபாடிச் சண்டையிலே இதைவிடப் பெரிய வேலை செய்தேன்.

**களத் -** அதையும் சொல்லு பார்ப்போம்.

**வாள் -** இதே மாதிரிதான் எங்கள் படை ஒரு இடுக்கண்ணான இடத்திலே அகப்பட்டுக்கொண்டது. ஆனால் ஒரு வேத்துமை. எங்கள் படையிலே இரண்டு பேர் வழிகள்தான் தப்பி இருந்தோம். எதிரிகள் படை யிலே ஒருபத்துப்பேர் தப்பியிருந்தாங்க. இந்தப் பத்துப் பேரையும் வெருட்டி அடிச்சுவிட்டு வந்து சேர்ந்தேன்.

**போர் -** வாள்வெட்டி, நீ தனியாகவா பத்துப்பேரை வெருட்டி அடிச்சே?

**வாள் -** ஆமாம், அண்ணா. எல்லாம் என் வீரத்தாலேதான். நெஞ்சிலே வீரமிருக்கிற வரையிலும் எதிரிகள் எல்லாரும் எனக்குத் துரும்புதான்.

**களத் -** எப்படி இந்தப் பத்துப்பேரையும் வெருட்டி அடிச்சாய், அதைச் சொல்லு.

**வாள் -** பகைவர் படையிலே ஆட்கள் அதிகமாயிருக்கிற வரையிலே பிணங்களுக்கிடையே விரைச்சு மூச்சைப் பிடிச்சுக் கொண்டு கிடந்தேன். பத்துப்பேர்தான் தப்பியிருக்கிறாங்க என்று தெரிஞ்சவுடனே, பக்கத்தில் கிடந்த இரண்டு பிணத்தின் தலைகளை வெட்டித் தலைமயிராலே இரண்டையும் இடதுகையிலே பிடிச்சுக் கொண்டேன். வலது கையாலே வாளை வீசிக் கொண்டு எதிரிகளை நோக்கிப் பாய்ஞ்சு போகிறது போலப்பாசாங்கு செய்தேன். பசங்கள், எடுத்தாங்க ஓட்டம். **(களத்து வென்றாரும், போர்மூட்டியும் சிரித்தல்)**

**களத் -** வீராதிவீரனப்பா நீ. ஆனால் உன்னுடைய இந்தத் தந்திரமெல்லாம் வடநாட்டுப் போரிலே செல்லாதப்பா. அங்கே எதிரிகள் எல்லாரும் உன்னைவிடத் தந்திர சாலிகள். இந்த ஒற்றப் பசங்களைப் பார்த்தியா? நம்மை ஏமாற்றி நம் படையிலேயே சேர்ந்துவிட்டாங்க.

வான் - முடிவிலே என்னாச்சு, மூணு பசங்களும் மாட்டிக் கொண்டாங்களே. எல்லாம் எனக்குத் தெரியும்வழி. கடவுள் என்னைக் கைவிடமாட்டாரு. சமயத்திற்குத் தகுந்த அறிவை எனக்குக் கொடுப்பாரு.

களத் - சரி, நீ படைவீட்டுக்கு ஓடு. நாளை புறப்பட வேண்டும், தெரியுமா?

வான் - தெரியும் அண்ணா. (எல்லோரும் செல்லுதல்)

---

## களம் - நான்கு

**இடம்:** **தஞ்சையில் இராசராசப்பிச்சர் வீட்டில் ஓர் அறை.**

**நடிகர்:** **இராசராசப்பிச்சர், சாத்தவேள், சங்கரதேவர்.**

**பொழுது:** **மாலை.**

இராசராசப்பிச்சர் - சாத்தரே, எல்லாம் நாம் எதிர்பார்த்தபடியே நடக்கின்றன.

சாத்தவேள் - நாம் எதிர்பார்த்தபடி என்று எப்படிச் சொல்ல முடியும்?

இரா.பி - ஆமாம்: நமது நண்பர் சங்கரதேவர் சொன்னபடி எல்லாம் நடைபெற்றிருக்கின்றன. போர், திருமணம், முடிசூட்டு எல்லாம் அவர் சொன்னபடியே.

சாத்த - சங்கரதேவர் நாளைப் புறப்படுவாரன்றோ? புறப்படு முன் நாம் அவரைப் பார்ப்பது நல்லது என்று

நினைக்கிறேன். **(சங்கரதேவர் வருதல்)** இதோ வந்து விட்டாரே சங்கரதேவர். நண்பரே தங்களுக்கு நூறாண்டு.

**சங்கரதேவர்** - அருமை நண்பர்களே, வணக்கம். தங்களுடைய வாழ்த்தைப்பெற்றுப் போகத்தான் இப்பொழுது வந்தேன். நாளைக்காலை பேரணிப் பெருந்தானை புறப் படுகிறது.

**இரா.பி** - நண்பரே, மெத்த மகிழ்ச்சி. வெற்றி நமது. தாங்கள் வெற்றியுடன் திரும்புவீர்கள் என்பதில் எனக்கு எட்டுணையும் ஐயமில்லை. பெருவுடையார் தங்களுக்கு அருந்துணையாய் நிற்பார்.

**சங்** - அருமை நண்பரே, தங்கள் கையால் எனக்குத் திருநீறு அளித்தல்வேண்டும். **(இராசராசப்பிச்சர் திருநீறு அளிக்க அதனைச் சங்கரதேவர் நெற்றியில் அணிகின்றார்)** யான் சென்றுவருகின்றேன். வெற்றியில் எனக்கு முழுநம் பிக்கை உண்டு. மற்றொருசெய்தி தங்களுக்குக் கூற மறந்துவிட்டேன். ஆதித்தரும் படையில் சேர்ந்து விட்டார்.

**சாத்த** - யார், நமது நண்பர் ஆதித்தரா?

**சங்** - ஆம், அவரேதான். அவர் பின்னணியாகிய கடைக்கூழைப் படையில் சேர்ந்திருக்கிறார்.

**இரா.பி** - ஆதித்தர் போரில் விருப்பமுடையவர் போலவேதான் பேசிக்கொண்டுவந்தார்.

**சாத்த** - ஆம், நமது அரசாங்கம் என்றால் அவரும் உயிராகத் தானிருந்தார்.

**சங்** - ஆருயிர் நண்பர்களே, எனக்கு விடையளியுங்கள். யான் சென்று வருகிறேன். **(வணங்குதல்)**

**இரா.பி.சாத்த** - (வணங்கி) சென்று வாருங்கள். வெற்றி நமதே. (சங்கரதேவர் செல்லுதல்)

**சாத்த** - நண்பரே, நேரமாயிற்று, யான் வீடுபோய் வருகிறேன்.

**இரா.பி** - ஏன் இவ்வளவு விரைவில் திரும்ப விரும்புகிறீர்கள்? வீட்டில் இப்பொழுது என்ன அலுவல்?

**சாத்த** - பெரிய அலுவல் ஒன்றுமில்லை. நான் நாளைக்காலை தங்களிடம் வருகிறேன்.

**இரா.பி** - சரி, அப்படியானால் சென்று வாருங்கள். (சாத்தவேள் வணங்கிச் செல்லுதல்)

---

## களம் - ஐந்து

**இடம்:** சிங்கப்புலியின் வீட்டில் முன்கூடம்.

**நடிகர்:** வீரப்புலி, அஞ்சுகம், அஞ்சுகத்தின் தாய்

**பொழுது:** காலை.

**வீரப்புலி** - அஞ்சுகம், மாமா எங்கே? புறப்பட்டுவிட்டாரா?

**அஞ்சுகம்** - புறப்பட்டுப் போய்விட்டார். உங்களையும் விரைவில் புறப்பட்டு வரச்சொன்னார்.

**வீரப்** - அஞ்சுகம், உன் அண்ணன்மார்களும் இன்னும் சில நாளையிலே புறப்பட்டு விடுவாங்க. அப்புறம் உங்களைப்பார்த்துக்கொள்ளுவது யார்?

**அஞ்** - இராசேந்திர மன்னருடைய செங்கோல் எங்களைப் பாதுகாக்கும். இதைப்பற்றித் தங்களுக்குச் சிறிதும்

கவலை வேண்டாம். தாங்கள் வெற்றிவீரராய்த் திரும்ப வேண்டுமென்பதே என் கவலை.

**வீரப்** - வெற்றியைப்பற்றி நீ கவலைப்படாதே. வெற்றி நம் முடையதுதான். ஆனால் ஒண்ணு. போருக்குப் போகிற வர்கள் எல்லோரும் உயிரோடு திரும்புவார்கள் என்று எப்படி நினைக்க முடியும்?

**அஞ்** - உங்களுக்கு ஒன்றும் நேராது. நீங்கள் ஏன் இப்படிப் பேசுகிறீங்க?

**வீரப்** - அஞ்சுகம், நீ அதிகம் தெரிஞ்சவளாச்சே. போர் என்றால் அம்மானை விளையாட்டு என்று நினைச்சுக்கொண் டியோ? படைவீரர் உயிரெல்லாம் கடவுள் கையிலே இருக்கு. ஆனால் போரிலே முதுகு காட்டி ஓடி வராமே எதிர்த்து நின்று சண்டைசெய்து இறந்தால் வீரத்துறக்கம்சித்திக்குமாம்.

**அஞ்** - இப்படியே திரும்பத்திரும்பப் பேசுகிறீங்களே. என்மனசு கலங்குதே. **(கண்ணைக் கசக்குதல்)**

**அஞ்சுகத்தின் தாய்** - அஞ்சுகம், அதெல்லாம் ஒண்ணும் அஞ்சாதே. ஏன் கண்ணைக்கசக்கிறே? மாப்பிள்ளை உயிரோடு திரும்பி வருவாரு. போருக்குப் போகிறபோது கலங்குகிறது நம் குலத்துக்கே வழக்கமில்லை.

**வீரப்** - சரி, நேரமாச்சு, அஞ்சுகம், நான் போகிறேன்.

**அஞ்** - போகிறேன் என்று சொல்லாதீங்க அத்தான். போய் வருகிறேன் என்று சொல்லுங்கள். **(கண்ணைக் கசக்குதல்)**

**அ.தாய்** - அஞ்சுகம், என்னச்சின்னப்பெண்ணுப் போலே திரும்பத் திரும்பக் கண்ணைக் கசக்கிறே. மாப்பிள்ளை, போய் வருகிறேன் என்று சொல்லுங்களே.

வீரப் - அஞ்சுகம், நான் போய் வெற்றி வீரனாகத் திரும்பி வருகிறேன். நீ கொஞ்சமும் கவலைப்படாதே.

அஞ் - திரும்பிவர இரண்டு ஆண்டு செல்லும் என்று சொல் கிறார்களே?

வீரப் - நீ கொஞ்சமும் கவலைப்படாதே. வெற்றி ஏற்பட்டவுடன் நான் எல்லோருக்கும் முன்னால் திரும்பிவந்து விடு கிறேன்.

அ.தாய் - நீங்கள் போய்வாருங்க, மாப்பிள்ளை. மாமாவையும் எச்சரிக்கையாப் பார்த்துக்கொள்ளுங்க.

வீரப் - என் கண்ணே, அஞ்சுகம், நான் போய் வருகிறேன். (முத்தங் கொடுத்துப் புறப்படுதல்)

அஞ் - அம்மா, அத்தான் உயிரோடு திரும்பி வருவார் என்று நினைக்கிறீங்களா?

அ.தாய் - இப்படியெல்லாம் பேசாதே, அஞ்சுகம். மாப்பிள்ளை வெற்றியோடுதான் திரும்பி வருவாரு.

அஞ் - இல்லையம்மா, நேற்றிரவு ஒருகனவு கண்டேன். அது என்மனசைக்கலக்கி விட்டது. இல்லாவிட்டால் இப் படியாநான் அத்தானுக்கு நேராக் கண்ணைக்கசக்கு வேன்?

அ.தாய் - கனாவைக் கொஞ்சமும் நம்பாதே. நான்தான் அன் றைக்கு உன் அத்தானுக்கு ஏதோ தீங்கு வரப்போகுது எண்ணுக் கனாக்கணடேன். அது நன்மையா முடிஞ்சுது.

அஞ் - என்னமோ, அம்மா, என் அத்தான் உயிர் பெருவுடையார் கையிலேதான் இருக்குது. எனக்குப் பசியா இருக்குது. உணவு உண்ணவேணும்.

**அ.தாய்** - சரி, உள்ளேவா, மனசிலே கொஞ்சமும் கவலை வைக்காதே. நீ உணவுண்டு அரண்மனைக்குப் போய் விடு. அம்மங்காதேவியாரிடம் போனால் உன்கவலை யெல்லாம் தீர்ந்து விடும். (இருவரும் உள்ளே செல்லுதல்)

---

## களம் - ஆறு

**இடம்:** தஞ்சை அரண்மனையில் அந்தர்ப்புரம்.

**நடிகர்:** அம்மங்காதேவி, நரேந்திரன்,

**பொழுது:** காலை.

**அம்மங்காதேவி** - (பஞ்சணைமீது அமர்ந்து வீணை இசைத்துப் பாடுதல்)

பொன்ன விலுங் கொன்றையினாய் போய்மகிழ்க்
கீழிரு வென்று
சொன்ன வெனைக் காணாமே சூளறவு மகிழ்க் கீழே
என்ன வல்ல பெருமானே யீங்கிருந் தாயோ வென்ன
ஒன்ன லரைக் கண்டாற் போலுளோம்
போகீரென் றானே.

மான்றிகழுஞ் சங்கிலியைத் தந்துவரு பயன்களெல்லாம்
தோன்றவருள் செய்தளித்தா யென்றுரைக்க வுலக
மெலாம்
ஈன்றவனே வெண்கோயி லிங்கிருந்தா யோவென்ன
ஊன்றுவதோர் கோலருளி யுளோம்போகீ ரென்றானே.

**நரேந்திரன்** - (அம்மங்காதேவி பாடிக் கொண்டிருக்கும் போது உள்ளே வந்து)

தேவி, என்ன, இன்று என்றுமில்லா மகிழ்ச்சி! தனியாக இசையமுதம் பருகுகின்றாய்!

**அம் -** மணாளரே, மணமான பிறகு மகிழ்ச்சியன்றி மனதில் வேறு என்னவுணர்ச்சி யுண்டாகும்? நீங்கள் நீண்ட நேரம் எங்கேயோ போய்விட்டீர்கள். அதனால் மனதைத் தேற்றிக்கொள்ளுவதற்குப் பாடிக்கொண்டிருந்தேன்.

**நரேந் -** *(பஞ்சணையில் அமர்ந்து)* யான் நின்னைப் பிரிந்து இரண்டு நாழிகைகூட ஆகவில்லையே? இதற்குள்ளாகவா உனக்கு மனதைத் தேற்றவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது?

**அம் -** இரண்டு நாழிகையோ இருபது நாழிகையோ, எனக்குத் தெரியாது. ஆனால் தங்கள் மனம் கல் என்பது நன்றாய்த் தெரிகின்றது. நாம் இல்லொழுக்கம் பூண்டு இருபது நாட்கள் தானே ஆயின?

**நரேந் -** தேவி, இதென்ன நாட்களைக்கூடக் கணக்கு வைத் திருக்கின்றாய்?

**அம் -** நான் நாட்களைக் குறைவாகவன்றோ கணக்கு வைத் திருக்கிறேன்.

**நரேந் -** இந்தச் சொற்பொருள் விளையாட்டு நின்னை விட மாட்டேன் என்கிறதே?

**அம் -** நன் விளையாடுகின்றேனா? தாங்கள் விளையாடு கின்றீர்களா? ஆய்ந்து பாருங்கள். கூட, நாட்களைக் கணக்கு வைத்திருக்கின்றேன் என்று சொன்னீர்களே?

**நரேந் -** சரி, சரி, உன்னோடு உரையாட யாரால் முடியும்? திரும்பத் திரும்பப் பண்டிதச்சோழன் பாவை என்பதனை மெய்ப் பிக்கின்றாய். கூட என்ற சொல்லுக்கு என்னென்னமோ பொருள் கொண்டுவிட்டாயே? சரி, நாட்கணக்கு எதற்காக வைத்திருக்கின்றாய்? இப்பொழுது என்ன சொல்வாய், பார்ப்போம்?

அம் - வேண்டுமென்றுதான் நாட்கணக்கு வைத்திருக்கின் றேன். நாம் எத்தனை நாள் இங்கேயே தங்குவது? எப்பொழுது வெங்கைக்கோநகர் புறப்படுவதாகத் தங்க ளுக்கு எண்ணம்?

நரேந் - ஏன் இவ்வளவு துடிதுடிக்கின்றாய்?

அம் - என்னைச் சிற்றில் கட்டிவிளையாடும் சிறுமி என்று நினைத்துக் கொண்டீர்களோ? நாம் இப்பொழுது தஞ்சை யரண்மனையிலிருப்பது விருந்து என்பது தங்களுக்குத் தெரியாதா? விருந்தும் மருந்தும் மூன்றே நாட்கள்தான். நாம் மிக அதிகநாட்கள் தங்கிவிட்டோம். இனிமேலும் தாழ்க்காது உடனே புறப்படுவதற்கு வேண்டிய ஏற் பாட்டைச் செய்யுங்கள்.

நரேந் - உனக்கு இவ்வளவு விரைவில் பெற்றோரிடம் பற்று அற்றுப்போனது எனக்கு வியப்பாயிருக்கின்றது.

அம் - பெற்றோரிடம் யான் வைக்கவேண்டிய பற்று ஒருக் காலும் அறாது. ஆயினும்

'பெற்றாற் பெறிற் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு'

என்பதே இனி எனக்குக் கட்டளைக்கல்.

நரேந் - தேவி, உனதுகற்பின் பொற்பைக்கண்டு யான் இறு மாந்து பெருமிதமடைகின்றேன். இப்பொழுது நின் னிடம் விடை பெற்றுச் செல்லவன்றோ யான் வந்தேன்.

அம் - விடைபெற்றுச் செல்லவா? எங்கே செல்கிறீர்கள்?

நரேந் - தேவி, இதுவரையிலும் யான் உனக்குத் தெரிவிக்காம லிருந்தது தவறு என்றுணர்கிறேன். வங்கத்திற்குச் செல் லும் தண்டத்தானையில் வலசாரிப் படைகளுக்கு யான் தானைநாயகம்.

**அம் -** தாங்களா? தானைநாயகமா? யான் தங்களை வாய்ச் சொல் வீரரென்றல்லவோ நினைத்தேன்.

**நரேந் -** வாய்ச்சொல் திறமை நின்னிடமன்றோ நிறைந் திருக்கின்றது?

**அம் -** தாங்கள் தஞ்சைக்குவந்த அன்றே திருவோலக்க மன்றத் தில் இடையிடையே தாங்கள் பேசியதைக் கேட்டேன். அன்றுமுதல் யான் தங்களை வாய்ச்சொல் வீர ரென்றே மதித்து வந்தேன். வாய்ச்சொல்வீரத்தாலேயே என்னையும் மணந்துவிட்டீர்கள். இக்காலத்தில் எத் தனையோ அமைச்சர்கள் தங்களைப்போலவே வாய்ச் சொல் வீரர்களாய் விளங்குகிறார்கள். எங்கு சென்றா லும் இடையீடின்றிப் பேசுகிறார்கள். ஆனால் பேச்சின் படி ஒன்றும் செய்கிறதில்லை.

**நரேந் -** தேவி, நீ என்னைப்பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் ஏளனம் செய்யலாம். நமது அமைச்சர்களைப்பற்றி இவ்வாறு ஒன்றும் பேசாதே.

**அம் -** ஏன் பேசவேண்டாம் என்று சொல்கிறீர்கள்? மொழி திறம்புவது அமைச்சர் செயலன்றோ?

**நரேந் -** சரி, சரி, நேரமாயிற்று எனக்கு விடைகொடு. தானைகள் புறப்பட வேண்டும்.

**அம் -** யானும் தங்களுடன் வருகின்றேன். வெங்கைக் கோநக ருக்குச் செல்வோம்.

**நரேந் -** நேரமாயிற்று என்கிறேன். நீ மீண்டும் மீண்டும் விளை யாட்டுத்தனமாய்ப் பேசுகின்றாய்.

**அம் -** இறைவனுக்கே தன் தோழனோடு விளையாட விருப்ப மிருக்கும்போது என் மணாளராகிய தங்களுடன் விளை யாட எனக்கு எவ்வளவு ஆசையிருக்க வேண்டும்!

**நரேந்** - உன்னுடன் உரையாட என்னால் முடியாது. நான் போய் வருகிறேன். விடைகொடு.

**அம்** - நீங்கள் இங்கே வந்தபோது நான் பாடிக்கொண் டிருந்தேனே. அப்பாடல்கள் எப்படியிருந்தன?

**நேரந்** - நீ பாடினால் எப்படியிருக்க முடியும்? அதைப்பற்றி ஏன் கேட்கின்றாய்?

**அம்** - என் குரலைப்பற்றியோ, இசையைப்பற்றியோ, கேட்க வில்லை. அவற்றின் பொருளை நோக்கினீர்களோ?

**நரேந்** - உன் இசையில்தான் ஈடுபட்டேன். பொருளை நோக்க வில்லை.

**அம்** - அந்தோ! பொருளை நோக்கவில்லயோ? பொருள் நிறைவில்லாப் பாடல் எதற்குப் பயன்படும்? இக்காலத்து மக்கள் இவ்வாறுதான் பொருளை நோக்காது வெறும் சொற்களையும் இசையையும் விரும்புகிறார்கள். அரும் பொருள் இல்லாப்பாடல் உயிரில்லா உடம்பு போன்றது. நீரில்லா ஆறு போன்றது.

**நரேந்** - தேவி, நேரமாகிறது, நேரமாகிறது, என்கிறேன். நீ இசைப் பாட்டிற்கு இலக்கணம் சொல்லப் புகுந்து விட்டாய்.

**அம்** - பொருளில்லாப்பாடல் வெறும் புலனறிவுக்குத்தான் இன்பம். செவியின்பம் போதுமா? பொருள் செறிந்த பாடலினால், செவிக்கு இன்பம், உள்ளத்திற்கு இன்பம், உயிருக்கு இன்பம். மூவர் பாடல்களினால் இறை யறிவு எய்தப்பெறுதலால் அது வீட்டின்பத்திற்கும் வழி காட்டி நிற்கின்றது.

**நரேந்** - தேவி, குழல் யாழிசைகள் செவிக்கு அளவிலா இன்பத்தையளிக்கின்றனவே?

**அம் -** ஆம், தாங்கள் கூறுவது முற்றிலும் உண்மை. இக்கருவிகளின் இசைகள் செவிக்கே இன்பத்தையளிக்கின்றன. அத்துடன் பண்ணிசையுணர்ந்தோர் மனதிற்கு ஒரு விதமயக்கமான இன்பமும் உண்டாகும். இவ்வின்பம் கலைத்திறத்தை அறிவதால் உண்டாவது.

**குழலினிது யாழினி தென்ப தம்மக்கள்**
**மழலைச்சொற் கேளா தவர்.**

என்ற குறளில் தெய்வப் புலவர் இக்கருத்தையடக்கி வைத்திருக்கின்றார். குழந்தைகளின் மழலையோசை, அப்பா, அம்மா, என்பன போன்ற பொருள்பொருந்திய சொற்களுடனும், பெற்றோரால் பொருள் அறியமுடியாத பிற சொற்களுடனும் சேர்வதாற்றான் குழல், யாழிசையினும் பெற்றோருக்கு அதிக இன்பத்தை அளிக்கின்றது.

**நரேந் -** நினது அறிவு நுட்பத்தைப் பன்முறையறிந்துவிட்டேன். இருப்பினும், இப்பொழுது என் உள்ளம் துடிக்கின்றது. யான் புறப்படவேண்டும். தேவி, உடனே எனக்கு விடைகொடு.

**அம் -** நமக்கு மணமாகாதபோது, அன்றொருநாள் அரண்மனைப் பூங்காவில் தூங்குவது போலுமிருந்த தாங்கள் எழுந்து என்னை வழிமறித்தீர்களே, அன்று விடை வேண்டும், விடைவேண்டும் என்று சொல்லி என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டீர்கள். மணமான பிறகு இன்று விடைகொடு, விடைகொடு என்று சொல்லி என் மனதிற்கு மயக்கத்தைக் கொடுக்கின்றீர்கள்.

**நரேந் -** தேவி, நினக்கு எவ்வாறுவிடையளிப்பது என்று எனக்கு விளங்கவில்லை.

**அம் -** இதுநிற்கட்டும். யான் பாடிய பாடல்களின் பொருள் விளங்கிற்றோ, அதைக் கூறுங்கள்.

நரேந் - சரி உன் விருப்பத்தின்படி பொருளைக்கூறி எனக்கு விடைகொடு. மகாதண்டநாயகம் என்னை எதிர் பார்த்துக் கொண்டேயிருப்பார். தானைகள் புறப்பட்டு விட்டன. தெரியாத்தனமாகச் சங்கிலிப் பிணைப்பில் அகப்பட்டுக் கொண்டேன்.

அம் - சங்கிலிப் பிணைப்பைப்பற்றித்தான் இப்பாடல்கள் கூறுகின்றன. மணந்தபின் பிரிவதில்லை என்று இறைவன் முன்னிலையில் சங்கிலிநாச்சியாருக்குச் சுந்தரர் சூளுறவு கூறினார். பின்னர் சூளுறவை மீறித் திருவொற்றியூரிலிருந்து தெற்கே புறப்பட்டார். சுந்தரர் கண்கள் இரண்டும் மங்கின. திருவெண் பாக்கத்திலுள்ள கோயிலுட்புகுந்து ஒரு பதிகத்தால் தனது கண்கள் கேடுற்றநிலையைக் கூறிப்புலம்பி னார். அப்பதிகத்திலுள்ள இரண்டுபாடல்கள் தாம் நான் பாடியவை. 'என் கண்களை அவித்து இக் கோயிலில் இருக்கிறீரோ' என்று இறைவனைச் சுந்தரர் கேட்டார். இறைவன், 'இங்கேதானிருக்கிறேன், நீ போய்வா, வேண்டுமானால் ஊன்றி நடப்பதற்கு ஒரு கோல் தருகிறேன்,' என்று விடைகூறினார்.

நரேந் - தேவி, இந்த வரலாற்றை என்னிடம் ஏன் இவ்வளவு விரித்துக் கூறுகின்றாய்?

அம் - தாங்கள் என் ஒப்பமின்றி என்னை விட்டுப்பிரிவ தில்லை என்று இருமுறை கூறியிருக்கின்றீர்கள்.

நரேந் - உன் ஒப்பம் பெற்றுச் செல்லத்தானே இங்கு வந்தேன்.

அம் - என் ஒப்பம் பெறாமற் சென்றால் தங்கள் கண்கள் நன்றாயிருக்க வேண்டுமே?

நரேந் - நீ, என்ன, இறைவனா?

அம் - இறைவனிலும் பெருமை வாய்ந்தவள்.

**நரேந்** - எவ்வாறு?

**அம்** - **தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யு மழை.**

**நரேந்** - சரி, விடைகொடு.

**அம்** - நீங்கள் எப்பொழுது திரும்புவீர்கள்?

**நரேந்** - இரண்டு ஆண்டுகளாவது ஆகும். போர் முடிந்தவுடன் விரைவில் திரும்பிவிடுவேன்.

**அம்** - **செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்**
**வல்வரவு வாழ்வார்க் குரை.**

**நரேந்** - தேவி, தேவி, இவ்வாறெல்லாம் பேசாதே.

**அம்** - அந்தோ! தாங்கள் பிரிந்திருந்த இருநாழிகைகள் எனக்கு இரண்டு ஆண்டுகளாகத் தோன்றினவே! இரண்டு ஆண்டுகள் எவ்வாறு பிரிந்திருப்பேன்!

**நரேந்** - தேவி, எனது கடமையை உன்னிப்பார், நான் தானை நாயகப்பதவியை ஏற்றுக் கொண்டிருக்கிறேனே? இரண்டாவதாக வடவரை முறியடித்துத் தமிழ் நாட்டின் பெருமையைத் தன்னேரிலாத் தமிழ்மொழியின்பெருமையை நிலைநாட்ட வேண்டாமா?

**அம்** - ஆம், நிலைநாட்ட வேண்டியதுதான். வடவர்மொழி தலையெடுக்குமிக்காலத்தில் இதுமிகவும் இன்றியமையாதது. தங்களிடம் சொல்ல மறந்துவிட்டேன். நமது தாய் மொழியின் பெருமை குறித்து யான் சில பாடல்கள் இயற்றியுள்ளேன்.

**நரேந்** - நீயா, எங்கே அவற்றைப்பாடு பார்ப்போம்.

**அம்** - பாடுகின்றேன், தவறுகளிலிருந்தால் பொறுத்தல் வேண்டும்.

நரேந் - யாரால் நினதுபாடல்களில் தவறு காணமுடியும்? மிகமிக நன்றாகப் பேசுகின்றாய்!

அம் - (பாடுதல்)

ஆழியிற் றோன்றி மோதிடு ஞருகுண்டே பழிவுற
மலைபோலே
நாழியிற் றோன்றி நாழியிற் சிதைவுறும்
மொழியென நலியாதே
ஊழியிற் றோன்றி ஒளிதிகழ் குமரியாய் நின்றனை
யுணர்வாலே
வாழிய செந்தமிழ் வாழிய செந்தமிழ் என்றுனை
வழுத்தேனோ.

தாழியில் மத்துறு தயிரெனத் தத்தளித் தரற்றுபல்
மொழிபோலே
நாசியில் நெஞ்சினில் வலிந்துமிடற்
றினில்முற்கி முனைந்துவாராதே
யாழிலி சையென எழிலிசை தழுவி யெழுந்தமிழ்
அதனாலே
வாழிய செந்தமிழ் வாழிய செந்தமிழ் என்றுனை
வழுத்தேனோ.

(வேறு இசை)

தோழியா னொன்று சொல்லக் கேளாய்த்
தொல்லுலகில் மூவாண்டில்
காழியான் போன்று கவியிசைத் தோரைக் கண்ட
துண்டோ அப்பரைப் போல்
ஆழியிற் கன்மே லணைந்தோ ருண்டோ
ஆதலினால் நந்தமிழை
வாழிய செந்தமிழ் வாழிய செந்தமிழ்
என்றுநாம் வாழ்த்தோமோ.

ஊழி முதல்வனை யுலகிற் கொருவனை
யெவர்க்கு மரியானை
தோழமை பெற்றமை சுந்தரன் செந்தமிழ்த்
தொழும்பின் இசையாலே
ஏழிசை நினைந்தே என்னுளங் கனிந்தே
என்னருந் தமிழ்த்தாயே
வாழிய செந்தமிழ் வாழிய செந்தமிழ்
என்றுனை வழுத்தேனோ.

இனிமையெனும் பொருள்கொண்டாய்
இருநிலத்தின் மொழிகளில் நீ
தனிமையெனும் சால்புதனைத் தெரித்ததற்கோ
தமிழணங்கே.

உயிர்மெய்சார் பெழுத்தெனப்பேர் கொண்ட
தென்னே உலகத்தில்
உயிர்மொழிநீ யலாற்பிறிதில் லென்பதனை
யுணர்த்தற்கோ.

அகம்புறமாப் பொருள்தெரிக்கும் அழகுதனைக்
கண்டேயும்
அகந்தையுடன் பிறமொழிச்சீர் அறைகின்றார் அறியாரே.

செத்தமொழி யென்றாலும் சீர்த்திதனைச் செப்புகின்றார்
முத்தமிழின் மூவாத மொய்ம்புதனை யுணராதார்.

தொல்காப்பி யத்தின் சீர் துய்த்தறியார் துணிகொண்டே
பல்காப்பி யங்கள்தாம் பயின்றாலும் பயனென்னே.

சங்கநூல்கள் தமைநுகர்ந்தோர் சுவைப்பதுண்டோ
சற்றேனும்
துங்கமில்லா நூல்கடம்மின் துகள்நிறைந்த கற்பனையே.

வள்ளுவர்தன் வாயுறைவாழ்த் தினையுணர்ந்தோர்
வம்புபேசி
எள்ளுவரோ எய்ப்பிலாநம் எழிலொழுகும் இன்றமிழை.

நீதிநூல்கள் சாற்றுகின்ற நெறிகடம்மை
யறிந்துயர்ந்தோர்
ஓதுவரோ சாதிகுலம் உயர்த்துவதாம் மனுமுதல்நூல்.

சிலம்புநூலின் சீர்த்தியொரு பொழுதேனும்
சிந்தித்தால்
நலம்புனைந்தே காவியச்சீர் நவில்வாரோ
நன்றுணர்வார்.

மூவர்தம் உயிர்க்குறுதி மொழிகடம்மை நுகராதார்
யாவரவர் இருந்துமென்ன இருநிலத்தின்
பொறையாவார்.

**நரேந்** - தேவி, யான் என்னைமறந்தேன்! பொருள் நிறைந்த பாடல்களின் பெருமையே பெருமை! நினது குரலும் இசையும் ஒருபாலிருக்கட்டும். நினது பாடல்களை என்னென்று கூறுவேன்! பாடல்களிற் பொதிந்த பொருள் களை என்னென்றுரைப்பேன்! தன்னேரில்லாத் தமிழ் மொழியின் பெருமையினை என்னென்று கூறுவேன்! இணையிலா இம்மொழிக்குக் கேடுசூழ்வாரை ஒறுக்கா மல் யான் விடேன். விடைகொடு, யான் புறப்படு கின்றேன்.

**அம்** - சரி, தாங்கள் ஏன் என்னைக் கேளாது தானைநாயகப் பதவியை ஏற்றீர்கள்?

**நரேந்** - தேவி, ஏன், மீண்டும் மீண்டும் இவ்வாறே பேசு கிறாய்? உன்தந்தை, எனது மாமன், என் தலைவன் கட்டளையை உதறித்தள்ளலாமா? இரண்டாவதாக ஏற்க மறுப்பது என் வீரத்திற்கழகா? மூன்றாவதாகத் தமிழ்நாட்டின் பண்டைய வீரப்பெண்மணிகளின் வழி வந்த நீ இவ்வாறு பேசுதல் தகுதியாகுமா? பண்டைய வீரப் பெண்மணி ஒருத்தி தன் தந்தை, கணவன், ஒரே மகன் எல்லோரையும் போர்க்களத்திற்கனுப்பி அவர் கள் மாற்பிற் புண்பட்டிறத்தலை மனமகிழ்ச்சியுடன் வரவேற்றனளே? போர்ப்பறையோசை அப்பெண்மணி களின் செவிகளுக்கு இசையமுதமாகவன்றோ இருந்தது. தமது நாட்டின் உரிமையைப் பாதுகாக்க ஆடவரைவிட

மகளிர் அன்றோ அக்காலத்தில் மன்னர்களுக்கு உறு துணையாய் நின்றனர். நீ ஏன் இவ்வாறு பேசுகின்றாய்? எனக்கு நின்சொற்கள் சிறிதும் விளங்கவில்லை.

**அம்** - விளங்கவில்லையென்றால் வெளிப்படையாகப் பேசுகின்றேன், கேளுங்கள். நமக்கு மணமாகி இருபது நாட்கள் தானே ஆயின? இதற்குள் தங்களை விட்டுப்பிரிய எனதுள்ளம் இடங்கொடுக்குமா? தாங்கள்தான் என்னை விட்டுப்பிரிய எவ்வாறு துணிந்தீர்களோ தெரியவில்லை. ஆடவர் மனம் கல்லேதான்.

**நரேந்** - தேவி, யான் இனி நின்னிடம் இன்சொல்கூற முடியாது. பெண்ணாசையுட்பட்டுத் தனது கடமையை மறப்பவளை விடப்பெரும்பேதை இப்பெருநிலத்துள் இருக்க முடியாது. யான் இப்பொழுது சரியான இளம் பருவத்துக் காளையாயிருப்பினும், நினது இளமையிலும், அழகிலும், இனிய சொல்லிலும், ஈடுபட்டு என் கடமையை ஒருக்காலும் மறவேன். நீ இனி என்ன கூறினாலுஞ்சரி, இதோ யான் புறப்படுகின்றேன். (புறப்படுதல்)

**அம்** - என் ஒப்பமின்றியா புறப்படுகின்றீர்கள்? தங்கள் கண்கள் - ?

**நரேந்** - என் கண்கள் அவிந்தால் அவியட்டும். என்னை நீ இவ்வாறு மருட்ட முடியாது.

எண்சேர்ந்த நெஞ்சத்திடனு டையார்க்
கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமையில்.

(புறப்பட்டு நடத்தல்)

**அம்** - மணாளரே, சற்றுநில்லுங்கள். யான் தங்களை நீண்ட நேரம் சோதனை செய்துவிட்டேன். இனித்தங்களால் பொறுக்க முடியாது.

நரேந் - என்ன சோதனை செய்தாய்? என்னையா சோதனை செய்தாய்?

அம் - ஆம். மணந்து சிலநாளாவதற்குள் மணாட்டியை விட்டுப் பிரிய மணாளனது பிரிய மனம் ஒருக்காலும் இடங்கொடாது என்று நினைத்தேன். ஆனால் நீங்கள் சோதனையில் வெற்றி பெற்று விட்டீர்கள்.

நரேந் - தேவி, பேச்சில் நின்னை வெல்லுதல் என்னால் இய லாது. பெண்ணின் குணத்தை ஆணின் குணமாக வைத்துப் பேசுகின்றாய். மணந்து சில நாளாவதற் குள் மணாளனை விட்டுப் பிரிய மணாட்டியின் பிரிய மனம் ஒருக்காலும் இடங்கொடாதென்பதே உண்மை. இத்தனை நாழி என்னுடன் வாது செய்தனையே, எதனால்?

அம் - இதோ, இத்திருமுகத்தை வாசியுங்கள். (பஞ்சணையின் அடியில்வைத்திருந்த ஓலைநறுக்கை எடுத்துக்கொடுத்தல்)

நரேந் - (பெற்று வாசித்தல்) ''எனதாருயிர்த்தலைவ, இப்பொழுது தங்களிடம் ஒரு சோதனை நிகழ்த்தப் போகின்றேன். இதில் வெற்றி பெறுவீர்களானால் தாங்கள் வடநாட்டில் வெற்றிபெறுவீர்கள். தாங்கள் வெற்றிபெறுவீர்கள் என்பதற்கு அடையாளமாக இவ்வாகை மாலையைத் தங்களுக்குச் சூட்டுகின்றேன்.'' (சூட்டுகின்றேன் என்ற சொல்லை நரேந்திரன் வாசிக்கும்பொழுது அம்மங்கா தேவி மறைத்துவைத்திருந்த வாகை மாலையை எடுத்துச் சூட்டுகின்றாள்) (நரேந்திரன் பாடுதல்)

காவியங் கண்ணாய் கழறுமா றொன்றறியேன்
தேவியே நின்றன் திருமுகச் செவ்விநோக்கி
ஆவியே சோர்ந்தேன் அலகிலாப் பேரறிவின்
ஓவிய மென்றே உனைநா னுணர்ந்தனனே.

(திருமுகச் செவ்விநோக்கி என்றசொற்களை இசைக்கும் போது நரேந்திரன், ஓலை நறுக்கையும், அம்மங்கா தேவியின் முகத்தையும் பார்க்கின்றான்)

**அம்** - மணாளரே, தமிழ்நாட்டின், தமிழ்மொழியின், தமிழன்னை ஊட்டியபாலின் பெருமையை வடநாட்டில் நிலைநாட்டி வெற்றிவீரராய்த் திரும்புங்கள்.

**நேரந்** - தேவி, சென்று வருகின்றேன். இது என் நினைவின் அறிகுறி. (முத்தங்கொடுத்துப் புறப்படுதல்)

---

## களம் - ஏழு

**இடம்:** **வெங்கைக் கோநகர்.**

**நடிகர்:** **தானைநாயகங்கள், தானைகள்.**

**பொழுது:** **காலை.**

**அரையன்** - தானைநாயகங்களே, நமது முன்னணி ஒருகாதம் சென்றிருக்கும் என்று நினைக்கின்றேன். யான் இனி உங்களுக்கு விளக்க வேண்டியது ஒன்றுமில்லை. நம்மையுடையார் இராசேந்திர தேவர் ஆணைப்படி வடநாட்டினர் அனைவரும் தமிழ்நாட்டின் ஒப்பற்ற பெருமையை உணரும்படியாகச் செய்தல் வேண்டும். முதலில் கலிங்க மன்னனது சக்கரக் கோட்டத்தைத் தாக்குவோம். போர்க்கோலத்துடன் தானைகளை நடத்துங்கள்.

**நரேந்** - கலிங்க மன்னனைக் கலங்கச்செய்ய வேண்டும்.

**இரா.சோ.தே** - கலிங்க மன்னனை முறியடித்தாலன்றி வடநாட்டிற்கு வழியேது?

(போர் முரசம், பேரிகை, சங்கம் முழங்கக் காலாட் படையணிகள் படைகள் ஏந்திப் புலிக்கொடி தூக்கிச் சாரை சாரையாகப் புறப்படுகின்றன. பின்னர்க் குதிரைப்

*படைகளும் அவற்றின் பின்னர் யானைப்படைகளும் புறப்படுகின்றன. தானைநாயகங்கள் குதிரைகள் மீதிருந்து தானைகளை நடத்துகின்றனர். முரசொலி முதலியன நிற்கும்போது கீழ்க்குறித்த பாடல்களைப் படைவீரர் பாடிச்செல்கின்றனர்.)*

தேவி செந்தமிழ்த் தாயே திருவடி தொழுவோம்யாம்
நாவில் வந்தமிழ் தூறும் நலந்தனை நவில்வோம்யாம்
பாவில் பைந்தமிழ்த் தேனும் பனுவலைப் பருகுதும்யாம்
சாவில் எந்தமிழ்த் தாயே தனையரைத் தழுவாயே.

*(வேறு)*

செந்தமிழை யிகழ்ந்தவரைச் செருக்கறுப்போம்
பைந்தமிழ நியாப்பதடி களையொறுப்போம்

*(வேறு)*

காடு மலைகளைக் கடப்போம்
ஏரி நதிகளைத் தடுப்போம்
கோட்டை கள்தமைப் பொடிப்போம்
அரணக ழிகளை யிடிப்போம்

*(வேறு)*

வில் எடுப்போம் கணை தொடுப்போம்
வேல் விடுப்போம் வாள் படுப்போம் - தேவி...

*(வேறு)*

வடவரை வெல்வோம் வாகை சூடுவோம்
திடமுடன் செல்வோம் தீமை சாடுவோம்.

*(வேறு)*

படபட வென்றே பாய்ந்திடுவோம்
தடதட வென்றே தாழ்த்திடுவோம்
சடசட வென்றே சாய்த்திடுவோம்
மடமட வென்றே மாய்த்திடுவோம். - தேவி...

*(வேறு)*

எங்கள் சோழன் - இளஞ்சேட் சென்னி
வந்து தாக்கிய - பிந்து சாரன்
முந்தி யோட - முறியடித்தான், முறியடித்தான்.

எங்கள் சோழன் - கரிகள் காலன்
பட்டி மன்றம் - தோரண வாயில்
கொற்றப் பந்தர்ப் - பெற்றுவந்தான், பெற்றுவந்தான்.

எங்கள் சேரன் - வஞ்சி வீரன்
வம்பு பேசிய - கனக விசயர்
கதறி யோடச் - சிதறடித்தான், சிதறடித்தான்.

தேவிசெந்தமிழ்த் தாயே திருவடி தொழுவோம் யாம்.

*(உரை நடை)*

எண்டிசை புகழும் பண்டிதச் சோழன் வாழ்க!
இமயம் செல்லும் இணையிலாத் தானை வெல்க!

---

## களம் - எட்டு

**இடம்:** வங்கத்தில் மகிபால மன்னர் அரண்மனையில் திருவோலக்கமன்றம்.

**நடிகர்:** மகிபால மன்னன், அமைச்சர், முதல் தானைநாயகம், இரண்டாம் தானைநாயகம், வாயிற்காவலர், செய்தியாட்கள்.

**பொழுது:** பிற்பகல்.

*அமைச்சர்* - மன்னர் மன்ன, இராசேந்திரன் தானைகள் வெங்கைக் கோநகரைவிட்டுப் புறப்பட்டு விட்டன என்று செய்தி வந்திருக்கிறது.

**மகிபாலன்** - தானைநாயகங்களே, சோழர்படைகள் நமது எல்லையை மிதிப்பதற்குள் அவற்றை வழியிலேயே மறித்து வெருட்டியடிக்க வேண்டும்.

**மு.தா.நா** - மன்னர் பெருமானே நமக்குச் சிறிதும் கவலை வேண்டியதில்லை. கலிங்கமன்னர் முதலிய நமது நண்பர்கள் சோழர் படைகளை எளிதில் விட்டு விடுவார்கள் என்று யான் நினைக்கவில்லை.

**இ.தா.நா** - சக்கரக்கோட்டம் ஒன்றே சோழர் படைகளைத் திருப்பியடித்துத் திண்டாட்டத்தில் விட்டுவிடும்.

**வாயிற்காவலர்** - **(ஓடிவந்து)** அரசர் பெருமானே, செய்தியாள் ஒருவன் உடனே உள்ளே வரவேண்டுமென்கிறான்.

**மகி** - உடனே வரச்சொல் **(வாயிற்காவலன் செல்லுதல்)**

**அமை** - என்ன செய்தி கொண்டுவந்திருக்கின்றானோ, தெரியவில்லை.

**மு.தா.நா** - என்ன செய்தி? வெற்றிச் செய்தியாகத்தானிருக்க வேண்டும். கலிங்கமன்னன் சோழர் தானையை மடக்கியடித்து வந்தவழியே திரும்பி ஓடச்செய்திருப்பான்.

**இ.தா.நா** - அல்லது சக்கரக்கோட்டம் அத்தமிழ்ப் பசங்களைச் சிதறியோடச் செய்திருக்கும். அவ்வளவுதான்.

**செய்தியாள்** - **(உள்ளேவந்து வணங்கி நின்று)** அரசர் பெருமானே, கலிங்கமன்னன் நம்மையேமாற்றிக் கபடமாகப் பகைவர் காலில் விழுந்து விட்டான். சக்கரக்கோட்டம் தவிடு பொடியாகிவிட்டது. **(எல்லோரும் திடுக்கிடுதல்)**

**மு.தா.நா** - என்ன, கலிங்க மன்னனா? ஒருக்காலும் நம்மை ஏமாற்றமாட்டானே!

**இ.தா.நா** - என்ன, சக்கரக் கோட்டமா? அக்கோட்டையை யாராலும் அசைக்க முடியாதே!

**இ.செ.ஆள்** - **(உள்ளே வந்து வணங்கி)** அரசர் பெருமானே, இந்திரரதனது ஆதிநகர் பாதிக்குமேல் தூளியாகி விட்டது! இந்திரரதன் இருக்கும் இடந்தெரியாமல் மாய மாய் மறைந்துவிட்டான். கோசலதேசம் நாசமாய் விட்டது -

**மகி** - அடே, நிறுத்து, போதும். அமைச்சரே, இந்தப்பசங்களைப் பிடித்துக் கட்டிச்சிறைக்கனுப்புங்கள். கொடுஞ்செய்தி கொண்டுவரவா இவர்களை நாம் வைத்திருக்கின்றோம்? **(செய்தியாட்கள் நடுங்கி ஒடுங்கி நிற்றல்)**

**அமை** - மன்னர் மன்ன, இவர்களைக் கடிந்துகொள்வதிற் பயனென்ன? தானைநாயகங்கள் உடனே புறப்படட்டும். நமது முழுத்தானையும் உடனே புறப்பட வேண்டும். நமது நண்பர்களை நம்பி மதிமோசம் போகக்கூடாது.

**மூ.செ.ஆள்** - **(உள்ளே வந்து வணங்கி நின்று)** அரசர் பெருமானே, சோழரின் தண்டத்தானை கங்கைநதி உடைப்பெடுத்து வருவதுபோல வழியில் எதிர்ப் படும் எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு வரு கிறது. அதனைப் புயலோ, மின்னோ, இடியோ, என்று சொல்வதற்கில்லை. இருகாதவழிக்குப் புழுதி மேகம் போல் மேலேகிளம்பியிருக்கிறது. வெய்யிலில் அவர் களுடைய வாள் வீச்சு மின்னலைப் போலத்தெரி கிறது. அவர்களுடைய முரசொலி இடிபோல் அதிர் கின்றது - **(எல்லோரும் ஒருவரையொருவர் நோக்குதல்)**

**மகி** - அடே, புலவர்போல அடுக்கியடுக்கிப் பேசுகின்றாயே, வேறு என்ன செய்தி கொண்டுவந்திருக்கிறாய்?

**மூ.செ.ஆள்** - ஒட்டரத்தேசத்தரசன் கொல்லப்பட்டான், தண்ட புத்தியாளும் தன்மபாலன் பிடிபட்டான், தென்லாடத்

தரசன் இரணசூரன் ஓடிவிட்டான், கிழக்கு வங்கத் தரசன் கோவிந்தசந்திரன் தப்பிவிட்டான்.

மகி - என்னடா, ட,ட,ட, என்று கத்துகிறே, பிடித்துக் கட்டுங் கள் இந்தப்பயலை. (செய்தியாள் நடுங்கி ஒடுங்கி நிற்றல்)

அமை - மன்னர், மன்ன, மதிமோசம் போகக்கூடாது. இவனைச் சினந்து ஆவதென்ன? தாங்களே போர்க்களத்திற்கு உடனே புறப்படவேண்டும். தானைநாயகங்கள் தங்க ளுக்குக்கீழ் போர் செய்யவேண்டும்.

மூ.தா.நா - மன்னரேறே, அமைச்சர் கூறுவதுதான் சரி, எழுந் திருங்கள் போர்க்களத்திற்கு. இதோ சென்று நாங்கள் இருவரும் நமது இணையிலாத் தானைகளை நடத்தி வருகின்றோம். அந்தத் தமிழ்ப் பசங்களுக்குச் சரியான புத்தி புகட்டித் திரும்புவோம்.

மகி - மெத்த மகிழ்ச்சி, உடனே புறப்படுங்கள். (எழுதல்)

அமை - மன்னர் மன்ன, தானைநாயகங்களே, வெற்றியுடன் திரும்பவேண்டும்.

மகி - தாங்கள் அரண்மனையைப் பாதுகாக்க வேண்டும்.

அமை - கவலை வேண்டாம், செல்லுங்கள். (எல்லோரும் செல்லுதல்)

---

## களம் - ஒன்பது

இடம்: வங்கக்கோநகருக்கு அருகிலுள்ள பறந்தலை

நடிகர்: அரையன் இராசராசன் முதலிய தானை நாயகங்கள், படை நாயகங்கள் முதலியோர்.

பொழுது: நண்பகல்

*(சோழர் தானைக்கும் வங்கத்தானைக்கும் போர் நடந்து கொண்டிருக்கிறது. சோழர் தானையின் தலைமை யிடத்தில் சோழர் தானைநாயகங்கள் குதிரைகள் மீதிருந்து போர்குறித்துப் பேசுகின்றனர்.)*

**அரையன்** - தானைநாயகங்களே, நாம் எதிர்பார்த்ததைவிட எதிரிகள் கடுமையாகவே எதிர்க்கின்றனர். நமது தானை நிற்கின்ற ஒருகாத தொலையையும் யான் ஒரு முறைச் சுற்றிப் பார்த்து வந்துவிட்டேன். நடுப்பகுதி யில் நமது குதிரைப்படை கடுமையாகத்தாக்கியும் பகை வரின் அணிவகுப்புக் குலையவில்லை. அவர் களுடைய வலசாரிப்படைகளும் ஏறக்குறைய அதே நிலையில்தான் இருக்கின்றன. அவர்களது இட சாரிதான் சிறிது அசைந்திருப்பதுபோல் தோன்றுகிறது.

**நரேந்திரன்** - ஆம், இடசாரிதான் சிறிது அசைந்திருக்கிறது. அங்கேதான் அடிமேல் அடி அடிக்கவேண்டும். நடுவிற் பிளக்க முயல்வதைவிட நமது வலசாரிப் படைகளால் அசைந்திருக்கிற அவர்களது இடசாரியைப் பிளந்து சென்று பின்புறமாக அவர்களது தானையை வளைப்பது நன்று என்று எனக்குத் தோன்றுகிறது.

**இ.சோ.தே** - நரேந்திரர் சொல்வது சரியே, ஆயினும் நாம் நடுப்பகுதியையும் விட்டுவிடக்கூடாது. அப்பகுதியில் மற்றொரு குதிரைப் படைத் தாக்குதலைத் தொடங்கிப் பின்னர் வேற்படை வீரரை ஏவலாம்.

**விமலாதித்தர்** - இறுதியில் யானைப்படையை ஏவலாம்.

**அரை** - ஆம், அதுதான் சரி, யானைப்படையை முதலில் அனுப்புவதால் நன்மையைவிட இடையூறுதான் அதிகமாகும். விற்படை பின்னணிகளில் இருந்தபடியே இடைவிடாது அம்புமாரியைப் பெய்துகொண்டே இருக்கவேண்டும்.

**நரேந்** - சரி, இப்பொழுது தங்கள் ஆணை என்ன? விரைவிற் சொல்லுங்கள். அசைந்து கொடுத்த பகைவரின் இடசாரி மும்மரமாய் எதிர்க்கத் தொடங்கியிருக்கின்றது.

**அரை** - உடனே சென்று தாங்கள் கூறியபடியே பகைவர்களின் இடசாரியைப் பிளந்து பின்பக்கம் வளைக்க முயலுங்கள். முடியாவிட்டால் இடசாரியைச் சுற்றி வளைக்கப்பாருங்கள். **(நரேந்திரன் குதிரையிவர்ந்து தனது வலசாரிக்குச் செல்லுதல்)** விமலாதித்த மன்னரே, நீங்கள் நடுப்பகுதியில் குதிரைப் படைகொண்டும் வேற்படைகொண்டும் மேலும், மேலும் தாக்குங்கள். இராசேந்திரசோழ தேவரே, வாருங்கள். நாம் இடசாரிக்குச் செல்வோம். **(மூவரும் தலைமையிடம் விட்டுச்செல்லுதல்)**

**நரேந்** - **(கங்கைநாடர் இருப்பிடம் சென்று)** கங்கை நாடரே, உமது தானையைக்கொண்டு ஒரே தாக்குதலில் பகைவரணிகளைப் பிளக்கவேண்டும். முடியவில்லையென்றால் சுற்றிவளைக்க முயற்சிசெய்க.

**கங்கைநாடர்** - அவ்வாறே செய்கின்றேன். **(நரேந்திரன் செல்லுதல்) (கங்கைநாடர் குதிரையிற் சென்று, மூவரையர், களத்துவென்றார், பொன்னாரம் பூண்டார் இவர்களையழைத்துப் பேசுதல்)** படைநாயகங்களே, எனக்கு வந்துள்ள ஆணையைக் கூறுகின்றேன். கேளுங்கள். நமது வலசாரித் தானையைக் கொண்டு பகைவர்களின் இடசாரியணிகளைப் பிளக்க வேண்டும். முடியவில்லையென்றால் சுற்றி வளைக்கவேண்டும். உடனே படைத் தலைவர்களுக்குக் கட்டளை பிறப்பித்துவிடுங்கள். மற்றப்படை நாயகங்களுக்கும் இதனைத் தெரிவித்துவிடுகின்றேன். எனது ஆணை பிறந்தவுடன் சேர்ந்து தாக்க வேண்டும். **(கங்கைநாடர் செல்லுதல்.) (படைநாயகங்கள் அவரவர் இருப்பிடம் செல்லுதல்)**

**களத்துவென்றார்** - **(படைத்தலைவன் வீரப்புலியிடம் சென்று)** வீரப்புலி, இப்பொழுது நமக்குச் சோதனைக்காலம்

வந்துள்ளது. பகைவரின் இடசாரி யணிகளைப் பிளக்க வேண்டும். முடியவில்லையென்றால் சுற்றிவளைக்க வேண்டும். நான் மற்றப் படைத் தலைவர்களுக்கு இதனைத் தெரிவித்த பிறகு ஆணைபிறப்பிக்கின் றேன். எல்லோருஞ் சேர்ந்து தாக்குதல் வேண்டும். உன்கீழுள்ள படைவீரர்களுக்கு உடனே கட்டளை யைத் தெரிவித்து ஆணையை எதிர்பார்த்து எச் சரிக்கையாயிரு.

**வீரப்புலி** - இராசேந்திர மன்னருக்கும், நமதருமைத் தமிழ்நாட் டிற்கும், தமிழ்மொழிக்கும் உழைக்கச் சரியான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. பகைவரது இடசாரியைப் பிளந்தே விடுவோம். ஐயம்வேண்டாம். வீரப்புலியின் தோள்வலியை விரைவில் தாங்கள் காண்பீர்கள்.

**களத்** - சரி, படைவீரர்களுக்குக் கட்டளையைத் தெரிவித்து ஆணையை எதிர்பார்த்து நில். **(இருவரும் செல்லுதல்)** **(எதிரிகளின் இடசாரியில் பேரிரைச்சல்)**

**நரேந்** - **(சிலவிநாடி சென்றபின்னர் அரையன் இராசராசனிடம் பாய்ந்து வந்து)** மகாதண்டநாயகமே, பகைவரது இடசாரியைப் பிளந்துவிட்டோம். அவர்களது பக்கப் படைகள் பின்வாங்குகின்றன. அவைகளைச் சுற்றி வளைக்க ஏற்பாடுசெய்கின்றேன். தாங்கள் நமது இட சாரியிலும் கடுமையாய்த் தாக்கினால் பகைவரின் நடுப்பகுதியைச் சுற்றிவளைத்து மகிபாலமன்னனை எலியைக் கூட்டிற் பிடிப்பதுபோலப் பிடித்து விடலாம்.

**அரை** - சரி, அவ்வாறே செய்கின்றேன். நீங்கள் பகைவரின் இடசாரியை வளைக்கப்பாருங்கள். **(நரேந்திரன் செல்லுதல்)**

**விமலா** - **(அரையனிடம் பாய்ந்துவந்து)** மகாதண்டநாயகமே, பகைவர்களின் நடுப்பகுதியணிகள் ஓடத்தொடங்கி விட்டன. அவைகளைத் தொடர்ந்து மகிபாலமன்ன னைப் பிடிக்க முயற்சிக்கின்றேன்.

**அரை** - விடாதீர்கள், பிடித்துவிடுங்கள். **(இருவரும் செல்லுதல்)**

---

# அங்கம் - ஐந்து

## களம் - ஒன்று

**இடம்:** **தஞ்சை அரண்மனையில் திருவோலக்க மன்றம்.**

**நடிகர்:** **இராசேந்திரன், வல்லவரையர் வாண்டிய தேவர், அம்மங்கா தேவி, வாயிற்காவலன்.**

**பொழு:** **நண்பகல்.**

**வல்லவரையர்** - அரசே, தாங்கள் வெங்கையிலிருந்து திரும்பி வரும்போது சயங்கொண்ட சோழமண்டலத்தில் சில நாட்கள் தங்கிவந்ததாகக் கூறினீர்களே, புதிய கோநகர் முதலியன முடிய இன்னும் எத்தனை நாட்கள் ஆகும்?

**இராசேந்திரன்** - ஏறக்குறைய நமது திட்டமுழுதும் நிறைவேறிவிட்டதென்றே கூறலாம். ஏரியும், ஏரிக்கால் வாய்களும் முடிந்துவிட்டன. கற்றளியும் முடிந்து விட்டது. ஆனால் இமயத்திலிருந்து கற்கள் வந்த பிறகுதான் திருமேனிகள் செய்தாகவேண்டும். கோநகரில் அரண்மனையும், அமைச்சர், தானைநாயகங்கள் முதலியோர் குடியிருப்புக்கு வேண்டிய மாளிகைகளும் இன்னும் பத்தேநாட்களில் முடிந்துவிடும். அரண்மனையைச் சுற்றிலும், பெருந்தெருக்கள், சிறிய தெருக்கள், அங்காடிகள் முதலியவற்றிற்கு வேண்டிய அடிப்படை திட்டங்களும் முடிவு பெற்றுவிட்டன. தெருக்களில் வீடுகள் கட்டிக்கொள்வதற்குச் சயங்கொண்ட சோழ மண்டலக் குடிகளுக்குத் தனித்தனியாகக் கட்டளைகளும் பிறப்பித்துவிட்டேன்.

**வல்ல** - கங்கைகொண்ட சோழபுரத்திற்குத் தாங்கள் எப்பொழுது எழுந்தருளப் போகின்றீர்கள்?

இரா - வங்கத்தின் மேற்சென்ற தானைகள் திரும்பியவுடன் தஞ்சையைவிட்டுப் புதிய கோநகருக்குச் செல்ல வேண்டியதுதான்.

வாயிற்காவலன் - (உள்ளேவந்து வணங்கி) என்னையாளுடைய மன்னர் பெருமானே, வங்கத்திலிருந்து நமது குதிரைவீரர் ஒருவர் திரும்பிவந்துவிட்டார். உடனே தங்களைப் பார்க்க வேண்டுமென்கிறார்.

இரா – உடனே வரச்சொல்.

வல்ல - வெற்றிச்செய்தி வருகிறது.

இரா - ஆம், வெற்றியே.

குதிரைவீரன் - (உள்ளேவந்து வணங்கி) என்னையாளுடைய மன்னர் பெருமானே, வெற்றி, வெற்றி, வெற்றி, மகாதண்டநாயகம் இத்திருமுகத்தை அனுப்பியுள்ளார். (ஓலை கொடுத்தல்)

இரா - (திருமுகத்தைப் பெற்றுக் கையில் வைத்துக்கொண்டு) போர் எப்பொழுது முடிந்தது? நீ எப்பொழுது புறப்பட்டாய்?

கு.வீர - செய்தி கொண்டுவருவதற்காக மகாதண்டநாயகம் காதத்திற்கு ஒரு குதிரை வீரனாக நூறு குதிரை வீரர்களைத் தஞ்சையிலிருந்து வங்கத்திற்குச் செல்லும் வழி நெடுக நிறுத்திச் சென்றிருந்தார். ஒவ்வொரு குதிரை வீரனும் ஒரே நாழிகைப்போதில் காதவழியைக் கடந்து விடவேண்டுமென்றும் ஆணை பிறப்பித்திருந்தார். இராப்போதாலும், குறுக்கே ஓடுகின்ற ஆறுகளாலும் ஒரு நூறு நாழிகை வீணாகிவிட்டது. இல்லாவிட்டால் திருமுகம் நேற்றே வந்துசேர்ந்திருக்கும். போர் முடிந்ததிலிருந்து இன்றைப்பொழுதையும் சேர்த்து மூன்றேகால் நாட்கள் ஆயிருக்கின்றன. என்னிடம் திருமுகம் வந்ததிலிருந்து இப்பொழுது சரியாக ஒன்றேகால் நாழிகைதான் கழிந்திருக்கும்.

இரா - சரி, நீ செல். (குதிரைவீரன் செல்லுதல்) மாமா, இத்திருமுகத்தை வாசியுங்கள்.

வல்ல - (திருமுகத்தைப் பெற்று வாசித்தல்)

## வெற்றி

"என்னையாளுடைய கங்கைகொண்ட சோழதேவ மன்னருக்கு ஆயிரம் வணக்கம் செலுத்தி மகாதண்டநாயகம் அரையன் இராசராசன் விண்ணப்பித்துக் கொள்ளும் செய்தி:

பெருவுடையார் பேரருளாலும், தம்முடைய வீரப் புகழாலும் வாழ்த்தாலும் நமது தண்டத்தானை முழு வெற்றியடைந்துவிட்டது. வெங்கைக் கோநகரிலிருந்து புறப்பட்டபிறகு வழியில் எதிர்த்த சிற்றரசர்களையெல்லாம் நாழிகைக் கணக்கில் முறியடித்து விட்டோம். வங்கம் சேர்ந்த பிறகு மகிபால மன்னரது கோநகருக்கு அடுத்தாற்போலுள்ள பறந்தலையில் நமது தானையை அணிவகுத்து நிறுத்தினோம். விரைவில் மகிபால மன்னரது தானை அவரது தலைமையில் வந்து நமது தானையை எதிர்த்துப் போரிட்டது. எதிர்ப்பு மிகக் கடுமையாகவேயிருந்தது. முற்பகலில் வெற்றியாருடையதெனச் சொல்ல முடியாதநிலையில் போர் நிகழ்ந்தது. பிற்பகலில் எங்கள் தாக்குதல் சூழ்ச்சிகளைச் சிறிது மாற்றினோம். அதனால் நல்ல பயன் ஏற்பட்டது. வெற்றியும் கிட்டியது. ஆனால் மகிபால மன்னரைப் பிடிக்க நாங்கள் செய்த முயற்சி வெற்றி பெறவில்லை. அவர் அகப்படாது குதிரை யிவர்ந்து ஓடி மறைந்துவிட்டார்.

இங்கே யான் விண்ணப்பிக்கவேண்டிய வேறு செய்திகள் பின்வருமாறு: இமயத்திலிருந்து கற்கொண்டுவர ஒரு படையை அநுப்பியுள்ளேன். வெங்கைத் துறையி

லிருந்த நமது கடற்படை நாயகத்திற்கு வங்க வெற்றிச்செய்தி எட்டியவுடன் கடற்படை கடாரம் நோக்கிப்புறப்பட்டுவிட்டது. போர்ச் சூழ்ச்சியிலும் வீரத்திலும், தங்களுடைய மஞ்சர் விமலாதித்த மன்னரும், மைந்தர் இராசேந்திர சோழதேவரும், மருகர் இராசராச நரேந்திரரும் இணையற்றவர்கள். இவர்களைப்பற்றி யான் அதிகமாகக் கூறுவது மிகையாகும். மகிபால மன்னருடைய தானையில் இருநூறாயிரம் வீரர்களும், நமது தானையில் ஒருநூறாயிரம் வீரர்களும் மடிந்திருக்கலாம் என்று மதிப்பிடுகின்றேன். ஆனால் சரியாகக் கணக்கெடுத்த பிறகுதான் நமது தானையில் மடிந்தவர்களின் தொகையை அறுதியிட முடியும்.

இப்போரில் தானைத்தலைவர் கங்கைநாடர் என்பாரும், படைநாயகங்கள், களத்துவென்றார், மூவரையர், பொன்னாரம் பூண்டார் என்பவர்களும் தம்முடைய இணையிலா வீரச்செயல்களால் எனது பாராட்டைப் பெற்றவர்களாவர். படைத்தலைவன் வீரப்புலி என்பவனுடைய வீரச்செயலை எவ்வாறுபாராட்டுவது என்று எனக்கே தெரியவில்லை. ஆனால், அந்தோ! அவ்வீரன் தனது படையுடன் பகைவர்மீது பாய்ந்து தாக்கிப் பகையணிகளைப் பிளந்து சென்றபோது வீரத் துறக்கம் எய்திவிட்டான். இன்னும் ஒரு திங்களில் நமது தண்டத்தானை வெங்கைக் கோநகர் திரும்பிவிடும். மற்றவை நேரில்.''

இப்படிக்குத் தங்கள் திருவடிகளுக்கு

ஊழியம் பூண்ட,

மகாதண்டநாயகம் அரையன் இராசராசன்.

**அம்மங்காதேவி** - அப்பா, வீரப்புலி என்பவரைப்பற்றி மகாதண்டநாயகம் என்ன எழுதியிருக்கிறார்? நான் சரியாகக் கேட்கவில்லை.

**இரா** - வீரப்புலி நமக்கு அருந்தொண்டாற்றி வீரத்துறக்கம் எய்திவிட்டான்.

**அம்** - அந்தோ! **(பஞ்சணையில் மயங்கிவீழ்தல் இராசேந்திரரும் வல்லவரையரும் தேவியைத்தூக்கி உட்காரவைத்தல்)**

**இரா** - அம்மங்கா, வீரப்புலி இறந்ததற்கு ஏன் இவ்வளவு ஆற்றொணாத் துயரம்? போர் என்றால் எத்தனையோ ஆயிரம் படைவீரர் இறந்துதானே ஆகவேண்டும்?

**அம்** - ஐயோ! அப்பா, வீரப்புலி என் உயிர்த்தோழி அஞ்சுகத்தின் கணவர். அஞ்சுகத்தினிடம் இச்செய்தியை யான் எவ்வாறு அறிவிப்பேன்!

**இரா** - அம்மங்கா, அவலமடையாதே, அவன் குடும்பத்திற்கு நாம் தக்க உதவிசெய்வோம்.

**அம்** - நான் வருகிறேன், அப்பா. **(எழுந்து செல்லுதல்)**

**இரா** - மாமா, யான் நாளையே வெங்கைக்கோநகருக்குப் புறப்படுகின்றேன். வெற்றியுடன் திரும்பும் நமது தானையைத் தக்கவகையில் எதிர்கொண்டு வரவேற்க வேண்டும். தாங்கள் மாலையில் என்னை வந்து பாருங்கள், **(எழுந்து செல்லுதல்)**

**வல்ல** - வருகின்றேன. **(எழுந்து செல்லுதல்)**

---

## களம் - இரண்டு.

**இடம்:** **தஞ்சை அரண்மனையில் அம்மங்காதேவியின் அந்தர்ப்புரம். படைப்பயிற்சிப் பறந்தலை.**

**நடிகர்:** **அம்மங்காதேவி, நங்கை, அஞ்சுகம்.**

**பொழுது:** **மாலை.**

**அம்மங்காதேவி** - நங்கா, நீ ஓடிப்போய் விரைவில் அஞ்சு கத்தை அழைத்துவா.

**நங்கை** - தேவி, ஏதாவது செய்தியுண்டோ?

**அம்** - அதைப்பற்றி அப்புறம் பேசிக்கொள்ளலாம். நீ போய் விரைவில் அழைத்துவா.

**நங்** - தேவி, எனக்கு அஞ்சுகத்தின் வீடு இருக்கிற இடம் தெரியாதே?

**அம்** - நீ என்ன அறிவில்லாதவளாய் இருக்கிறாய்? தஞ்சையில் இவ்வளவுகாலம் இருந்தும் அஞ்சுகத்தின் வீடு தெரியாதா உனக்கு? இராசவித்தியாதரப் பெருந்தெரு வழியாகச் சென்று வில்லிகள் தெருப்பக்கம் திரும்பு. அத்தெருவின் கோடியில் படைப்பயிற்சிப்பறந்தலை தெரியும். அதன் ஒரு மூலையில் சிங்கப்புலியின் வீடு இருக்கிறது. சிங்கப்புலியின் மகள்தான் அஞ்சுகம். அந்த வீட்டில்தான் அஞ்சுகமிருப்பாள். வழி தெரியாவிட்டால் வழியில் உசாவிக்கொண்டுபோ.

**நங்** - சரி, போய் அழைத்து வருகிறேன்.

**அம்** - விரைவிற் போய்வா. (நங்கை செல்லுதல்) (தேவி தனக்குள்ளாக) ஐயோ! அஞ்சுகத்தினிடம் இக்கொடுஞ் செய்தியை எவ்வாறு கூறுவேன்! கற்புக்கரசியாய் விளங்கினாளே, என்னிடம் அடிக்கடி தன் கணவனைப் புகழ்ந்து புகழ்ந்து பேசிவந்தனளே! தன் கணவனுக்குப் படைத்தலைவர் பதவி வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று பரிந்துபரிந்து பேசினாளே! அவள் ஆண்குழந்தை ஈன்று ஆறுதிங்கள்கூட ஆகவில்லையே! பாவியாகிய யான் அவளுடைய தன்னல மற்ற ஊழியத்திற்கு ஒரு கைம்மாறும் செய்யவில்லையே! அவளது கணவன் பிரிவு எனக்கே ஆற்றமுடியாத துன்பத்தைக் கொடுக்கின்றதே!

அவளுக்கு யான் எவ்வாறு ஆறுதல் கூறுவேன்! இக் கொடுஞ்செய்தியைக் கேட்டால் என்ன பாடுபடுவாளோ! அந்தோ! *(பஞ்சணையில் சாய்தல்)*

**நங்** - *(ஓடிவந்து)* தேவி, இதோ அஞ்சுகம் வந்துவிட்டாள்.

**அம்** - *(நிமிந்து உட்கார்ந்து கண்களைத் துடைத்துக்கொண்டு)* எங்கே அஞ்சுகம்?

**நங்** - இதோ வந்துவிட்டாள்.

**அஞ்சுகம்** - *(அருகில் வந்து)* தேவி, வங்கத்திலிருந்து நமது குதிரை வீரர் ஒருவர் திரும்பிவிட்டாராமே, வெற்றிச் செய்தி தானே கொண்டுவந்திருக்கிறார்?

**அம்** - வெற்றிதான். வெற்றியன்றி நமக்கு வேறு என்னசெய்தி வரும்?

**அஞ்** - அப்படியானால் நமது தானைகள் எப்பொழுது திரும்பிவரும்?

**அம்** - இன்னும் இரண்டே திங்களில் திரும்பிவிடும்.

**அஞ்** - தானைகள் புறப்பட்டு இப்பொழுது ஒரு ஆண்டிற்கு மேல் ஆகிவிட்டதே? இரண்டு திங்களில் திரும்பிவிட முடியுமா?

**அம்** - செல்லும்போது எத்தனையோ போர்கள் செய்ய வேண்டியிருந்திருக்கும். திரும்பும்போது போர் இராது. அதனால் விரைவில் திரும்பவேண்டியதுதானே.

**அஞ்** - வேறு ஏதாவது செய்தி உண்டா? நமது படைவீரர்கள் எல்லோரும் திரும்பிவிடுவார்கள் அல்லவா?

**அம்** - போருக்குச் சென்றவர்கள் எல்லோரும் திரும்ப முடியுமா? எத்தனையோவீரர்கள் வீரத்துறக்கம் புகுந் திருப்பார்கள்.

**அஞ்** - தேவி, எனக்குச் சிலநாட்களாகவே உடம்பு சரியாயில்லை. எனது மனசும் அமைதியாயில்லை. எனது கணவரைப்பற்றி அடிக்கடி கனாக்காண்கிறேன்.

**அம்** - அஞ்சுகம், நீ ஏன் இப்பொழுது அடிக்கடி வீட்டிற்குப் போய்விடுகின்றாய்?

**அஞ்** - தேவி, யான் என்ன செய்வேன்? என் குழந்தையை விட்டுப் பிரிந்திருக்கமுடியவில்லை. என் தாய் வீட்டில் தனியாக இருக்கிறார்கள். என் தந்தை, தம்பிமார், என்கணவன் எல்லோரும் போருக்குப் போய்விட்டார்களே? வீட்டில் இப்பொழுது ஆண் பிள்ளையென்று என் சின்னத்தம்பி இரண்டுபேர்தானே இருக்கிறார்கள்? அவர்களுக்கு அஞ்சு வயதும் மூன்று வயதும் தான் ஆகிறது. என் மனதிலே இப்பொழுது கவலையே குடி கொண்டிருக்கிறது. எல்லோரும் எப்பொழுது திரும்பிவருவார்களோ, தெரியவில்லை

**அம்** - அஞ்சுகம், உன் கணவர் சோழர் வரலாற்றிலே இடம் பெற்றுவிட்டார்.. எல்லோரும் வியக்கும் வீரத்துடன் போர் புரிந்து.......... புகழ் பெற்றுவிட்டார்.

**அஞ்** - தேவி, 'போர் புரிந்து' என்று சொல்லிவிட்டு அப்புறம் ஏன் தயங்கிப் பேசினீர்கள்? என் வலத்தோளும், வலக்கண்ணும் துடிக்கின்றவே, விரைவிற் கூறுங்கள்.

**அம்** - அஞ்சுகம், நீ ஒருசிறிதும் அஞ்சவேண்டாம். உன் கணவர் என்றும் அழியாத புகழ் எய்திவிட்டார்.

**அஞ்** - தேவி, தேவி, மறைக்காது உண்மையைச் சொல்லுங்கள்.

**அம்** - உன் கணவர் அஞ்சாநெஞ்சுடன் அருஞ்சமர் புரிந்து ..... வீரத்துறக்கம் அடைந்துவிட்டார்.

**அஞ்** - அந்தோ! என் ஆருயிரே! **(மயங்கி வீழ்தல்) (நங்கையும் அம்மங்காதேவியும் விசிறிகொண்டு விசிறியும் தண்ணீரால் முகத்தைக் கழுவியும் அஞ்சுகத்தை எழுப்பி உட்கார வைத்தல்)**

**அம்** - அஞ்சுகம், அஞ்சுகம், கலங்காதே, வீரத்துறக்கம் எல்லோருக்கும் சித்திக்காது. இதற்காக மகிழ்ச்சியடைய வேண்டுமேயொழிய துன்பமடையக்கூடாது.

அஞ் - தேவி, தேவி, யான் இனி என்ன செய்வேன்! தேவி, என் கணவர் இறந்தது உண்மையா? அவர் என்னை விட்டுப் பிரிந்து போகமாட்டாரே! விரைவில் வெற்றியுடன் திரும்பி வருகிறேன் என்று சொன்னாரே!

**அம்** - அஞ்சுகம், அழாதே, என்னருமை அஞ்சுகம், அழாதே. **(கண்களைக் கசக்குதல்)**

நங் - (மெதுவான குரலில்) தேவி, நீங்கள் சும்மாயிருங்கள்.

அஞ் - எல்லோருக்கு முன்னால் திரும்பி வந்துவிடுகிறேன் என்று சொன்னாரே! பாவி, நான் அவருடைய சொல்லை நம்பி மோசம்போனேனே! ஐயோ! பெருவுடையாரே! இது சரியா, இது முறையா? ஐயோ, என் மணாளரே, என் கண்ணே, மணியே, முத்தே, கட்டிக்கரும்பே, யான் இனி என்று உம்மைப்பார்ப்பேன்! என்னையாளுடைய இராசேந்திர மன்னருக்கு வெற்றிதேடிக் கொடுத்தீரோ! ஐயோ! இதற்காகவா முத்தங்கொடுத்துப் பிரிந்து சென்றீர்!

அம் - அழாதே அஞ்சுகம், அஞ்சுகம், நான் சொல்கிறதைக் கேள். மனதைத் தேற்றிக்கொள். உலகில் இவ்வாறு நிகழ்வது இயற்கைதானே, சாவும், வாழ்வும் நம் கையிலா இருக்கிறது? உன் கணவரது ஒப்பற்ற ஊழியத்தையும் புகழையும் நினைத்து மனதைத் தேற்றிக்கொள். நீ மெத்த அறிவுடையவளாச்சே. **(தேவி தன்கண்களைக் கசக்குதல்)**

நங் - (மெதுவான குரலில்) தேவி, நீங்கள் பேசாமல் சும்மா யிருங்கள். அஞ்சுகம் தானாகவே ஆறுதல் அடைந்தால் தான் நல்லது.

அஞ் - (புலம்புதல்)

மண்ணாளும் பெருமான் ராசேந்திர மன்னன்
மகிழ்ந்தே நின்னைப்
புண்ணாளும் பொருபடைக் கேதலைமை பூணச்
செய்தனன், அந்தோ!
கண்ணாளா யுனைப்பிரிந் தேபாவி கலங்கி
நின்றேன், ஐயோ!
விண்ணாள விரும்பினை வீரப்புலியேயென்
வேந்தே அந்தோ!

புண்பட் டிறந்தனையோ புகலரிய வீரத்தால்
பூவேந்தர்தம்
கண்பட் டிறந்தனையோ கருதரிய நாரத்தால்
என்னைக் கவர்ந்தாய்,
பண்பட் டிருந்தனையே படைக்கலத்தில்
பாரில்நின் னையொப்பாரியாரே,
கண்கெட் டிருப்பேனோ யினியுன்னைக்
காணாதே கணவா, அந்தோ!

அன்னை கண்டகனவும் அடியாட்கு
நீயார் வத்தால்
முன்னை மொழிந்த மொழியும் படையேந்தி
யேநீ சென்ற
பின்னை வந்து தொடர்ந்த நிமித்தப்
பிழை யெல்லாம்
என்னை இந்நி லைகாண எழுந்தன
வோவந் தோவே!

தேவி, என்னருமைத்தேவி, எனதாருயிர்த்தேவி, இனி யான் ஒரு விநாடியும் உயிர்வாழ முடியாது.

அம் - அஞ்சுகம், அஞ்சுகம் என்னருமை அஞ்சுகம், நான் சொல்கிறதைக்கேள், நீஇவ்வாறெல்லாம் பேசாதே, உனது குடும்பத்திற்கு யாதொரு குறையுமில்லாமல் நான் பார்த்துக்கொள்கின்றேன். யான் இராசேந்திரமன்னன் மகள் என்பது உனக்குத் தெரியாதா?

**அஞ்** - தேவி, என் கணவரை இழந்தபிறகு, என் கண்ணை இழந்த பிறகு, என் உயிரை இழந்தபிறகு எனக்கு இன்பவாழ்வு ஏது? தெரியாமற் பேசுகின்றீர்களே? எனக்கு என்ன சுகபோகம் வேண்டும்? என் கணவருக்காக இந்தவுடம்பைச் சுமந்தேன். இனி இந்தவுடம்பு எனக்கெதற்காக?

**அம்** - அஞ்சுகம், நீ அவலக்கடலில் ஆழ்ந்திருக்கும்போது யான் எது சொல்லியும் பயனில்லை. நீ போய் விட்டால் உன் குழந்தையைப் பாதுகாப்பது யார்?

**அஞ்** - தேவி நான் போய்வருகிறேன். என் தாய்க்குச் செய்தியை அறிவிக்க வேண்டும். தனது மக்களையும் விட மருகரை உயிராகப் பாவித்தார்களே என் தாய். இக்கொடுஞ் செய்தியைக் கேட்டால் என் தாயின் நிலை என்னாகுமோ? நான் போய் வருகிறேன், தேவி. நான் இனி மேல் தங்களுடைய தோழி என்பதனை மறந்து விடுங்கள். யான் உயிர் வாழமுடியாது. (வணங்கிப் புறப்படுதல்)

**அம்** - அஞ்சுகம், நீ சிறிதும் கலங்காதே. நான் நாளைக் காலை உன்வீட்டிற்கு வருகிறேன். உன் தாய்க்கும் ஆறுதல் கூறவேண்டும். (நங்கையை நோக்கி) நங்கா நீ அஞ்சுகத்தை அவள் வீடுவரையிலும் அழைத்துக் கொண்டு விட்டுவா. இருட்டாகிவிட்டது. (மெதுவான குரலில்) வழியில் கிடங்கிற் குதித்து உயிரை விட்டாலும் விட்டு விடுவாள். குதிக்க விட்டுவிடாதே, எச்சரிக்கை யாய்ப் போய்வா.

**நங்** - தேவி. போய் வருகிறேன். (அஞ்சுகத்தின் பின்னர்ச் செல்லுதல்) (சிறிது தொலை சென்றபிறகு அதிக இருட்டாகிவிட்டதால் நங்கை அஞ்சித்திரும்பிவிடுகின்றாள்)

**அஞ்** - (தனக்குள்ளாக) தந்தை, தம்பிமார் படைவீரர், கணவர் படைத்தலைவர், யானோ இராசேந்திர மன்னர்தம் அருமை மகள் அம்மங்காதேவியாரின் உயிர்த்தோழி

என நினைந்து இறுமாந்து நடந்தேனே! ஆ! கெட்டேன், பாவி! இப்புலால் உடம்பு இனிமேல் எனக்கு எதற்கு? பெண்ணே, அஞ்சுகம், இனிமேல் இந்த உடம்பு உனக்கு எதற்கு? ''நீ கொஞ்சமும் கவலைப்படாதே, வெற்றி ஏற்பட்டவுடனே, நான் எல்லோருக்கு முன்னால் திரும்பி வந்து விடுகிறேன்'' என்று அவர் சொன்ன சொல் காற்றில் பறந்துவிட்டதே. ஐயோ! **(கீழே தடுமாறி வீழ்ந்து பின்னெழுந்து)** அதோ, அந்தக் கிடங்கில் குதித்து என் உயிரை மாய்த்துக்கொள்கிறேன். பிறகு என் கணவரை வீரத்துறக்கத்தில் சென்று பார்ப்பேன். **(கிடங்கின் அருகில் போகும்போது வீரப்புலியின் உரு எதிரே தோன்றி)**

**வீரப்.உருவம்** - அஞ்சுகம், அஞ்சுகம், என்ன காரியம் செய்யப் போகின்றாய்?

**அஞ்** - என்ன, என் கணவர் குரல்போல் கேட்கின்றது - ஐயோ, நடக்கும்போதுகூடவா கனவு காண வேண்டும்!

**வீரப்.உ** - அஞ்சுகம், என்னைப்பார், நான்தான் உன் கணவன் வீரப்புலி.

**அஞ்** - **(வீரப்புலியின் உருவைப் பார்த்து நடுநடுங்கி)** ஐயோ, என்னைப் பேய் மிரட்டுகின்றதே, என் செய்வேன்!

**வீரப்.உ** - நான் பேய் இல்லை, நீ சிறிதும் அஞ்சாதே, நான்தான் உன் உயிர்த்தலைவன் வீரப்புலி. வெற்றி ஏற்பட்டவுடன் எல்லோருக்கு முன்னால் திரும்பி வந்துவிடுகிறேன் என்று கூறிச்சென்றேனே. அவ்வாக்கை நினைத்தும் நீ இப்பொழுது செய்யப்போகின்ற காரியத்தை நினைத்தும் விரைந்து வந்தேன். உனக்கு மதிகூறிப் போகவே இப்பொழுது வந்திருக்கிறேன்.

**அஞ்** - **(சிறிது அச்சந்தவிர்ந்து)** தாங்கள் வங்கப்போரில் இறந்து வீரத்துறக்கம் அடைந்துவிட்டதாகக் கூறினார்களே? நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்?

**வீரப்.உ** - நான் வங்கப்போரில் பகைவர் அணிவகுப்பைப் பிளந்து குலைத்து அப்பறந்தலையில் எனது பூதவுடலை விட்டு அதே போன்ற மற்றொருவுடலில் இங்கே வந்துள்ளேன். நீ செய்யப்போகின்ற காரியம் தெரிந்த வுடனே மிக விரைந்து வந்தேன்.

**அஞ்** - அப்படியானால், என்னை அவலக்கடலில் மூழ்கும் படியாக விட்டுச்சென்றுவிட்டீர்களே, இது நீதி யாகுமா?

**வீரப்.உ** - நீதியும் நேர்மையும் இப்பொழுது உனக்குச் சரியாகப் புலனாகாது. யான் வேண்டுமென்று எனது பழைய வுடம்பை விட்டு நீங்கவில்லை. எனது கடமை என்று யான் நினைத்தகாரியத்தைச் செய்தேன். அதனால் இறைவன் எனக்கு வேறுபதவி கொடுக்கவேண்டு மென்று நினைத்து இவ்வாறு செய்துவிட்டார்.

**அஞ்** - அவ்வாறானால், தாங்கள் இப்பொழுது நல்ல நிலையில் இருக்கிறீர்களோ?

**வீரப்.உ** - ஆம், இதிற்சிறிதளவும் ஐயங்கொள்ளாதே. இன் னும் சிலவாண்டுகள் இப்பூமியில் தங்கிப்பிறகு வேறு உலகிற்குச்சென்று வேறுபிறவி எடுப்பேன் என்று நினைக்கின்றேன். ஆனால் இதனைப்பற்றி அவ் வளவு உறுதியாய்க்கூறிவிட முடியாது. பழையவுடம் புடனிருந்தபோது எனது எதிர்காலம் எவ்வாறு எனக் குத் தெரியாமலிருந்ததோ அவ்வாறே இப்பொழுதும் இருக்கிறது. ஆனால் இப்பொழுது முன்னையிலும் மிகமகிழ்ச்சியாயிருக்கின்றேன். எனது பெற்றோர் களைக் கண்டேன். என்கைக் கண்டதும் அவர்களுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியுண்டாயிற்று. இன்னும் எத் தனையோ நண்பர்களுடன் மகிழ்ச்சியாய்க்காலம் கடத்திவருகிறேன். என்னுடைய நிலைமை பற்றி இதை விட அதிகம் இப்பொழுது கூறுதல் முடியாது.

அஞ் - இப்பொழுது தாங்கள் என்னைக் காணவந்ததன் நோக்க மென்ன?

வீரப்.உ - உனக்கு மதிகூறிப்போகவந்தேன். நீ இப்பொழுது செய்யநினைத்த காரியத்தை விட்டுவிடு. நமது மைந் தனைப் பொன்போல் போற்றி வளர்த்துவா. அவன் தனது காலத்தில் பெரிய வீரனாக, சோழர் தானை களுக்கு நாயகமாக விளங்குவான். எனக்குப் பதிலாக அவன் உனக்கு ஆறுதல் அளித்து வருவான். என்னைக் கண்டதை உன் தாய் முதலியவர்களிடம் கூறாதே. நான் இறந்துபோனதற்கு அவர்கள் வருந்துவார்கள். நீ கவலை கொள்ளாதிருந்தால் அவர்கள் விரைவில் ஆறுதல் அடைந்து விடுவார்கள்.

அஞ் - தாங்கள் இன்றி யான் எவ்வாறு கவலையற்று இருக்க மடியும்?

வீரப்.உ - நான் சொல்கின்றபடிச் செய்வாயானால், நான் எங்கே யிருப்பினும் அடிக்கடிவந்து உனக்கு வேண்டும் வரங் களை அளித்துப்போவேன். நமது வீட்டின் தோட்டத் தில் எனக்கு வீரக்கல் நிறுத்தி என்னை வீரனாக வழி பட்டு வருவீர்களானால் நமது குடும்பத்திற்கு வேண்டிய நன்மைகளை என்னால் முடிந்த அளவு அவ்வப்போது செய்து வருவேன். ஆகையால் உனது தந்தையும் தம்பிகளும் திரும்பியவுடன் வீரக்கல் நிறுத்து வதற்கு ஏற்பாடு செய்.

அஞ் - என்னாருயிர்க் கணவரே. என் குலதெய்வமே, தாங்கள் கூறியபடியே செய்கிறேன். யான் வேண்டுகின்ற வற்றையளித்து என்னைக் காப்பாற்றி வரவேண்டும். எனக்கு இவ்வுருவுடனேயே அடிக்கடி காட்சியளிப்பீர் களானால் யான் தங்கள் பிரிவுக்குச் சிறிதும் வருந்தேன்.

வீரப்.உ - யான் இப்பூமியில் இருக்கின்ற வரையில் உனக்குக் காட்சியளித்து வருவேன். ஆனால் உனக்குமட்டுமே. நீ இனி என்னை உன் கணவன் என்று கருதாதே. அவ்வாறு கருதினால் நம்முடைய பழைய தொடர்பு உன் நினை

விற்கு வந்து தொந்தரைகொடுக்கும், புனிதமான உணர்ச்சியும் உண்டாகாது. 'குலதெய்வமே' என்று என்னை அழைத்தாயே? அதுதான் சரி. ஆனால் என்னால் முடிந்த உதவிகளை உனக்குச் செய்துவர முடியுமேயன்றி நீ வேண்டுவனவற்றையெல்லாம் என்னாற் செய்யமுடியாது. எல்லாம் வல்ல இறைவன் தான் எக்காரியத்தையும், எக்காலத்தும் எல்லோருக்கும் செய்ய வல்லவன். அவரவர் ஊழ்வினைப் படி அவரவர்களுக்கு வேண்டுவனவற்றைச் செய்கின்றவன். மற்றொரு செய்தி கூறவேண்டும். என்னுடைய பழைய வுடம்பு நீங்கியவுடன் எனதறிவின் எல்லை மிக விரிவடைந்து விட்டது. முன்பு அறிய முடியாதவற்றையெல்லாம் யான் இப்பொழுது மிக எளிதில் அறிந்துகொள்ளுகிறேன். நினைத்தவிடத்திற்கு நினைத்த மாத்திரையிற் செல்லும் ஆற்றலும் எனக்கேற்பட்டிருக்கிறது. சுருக்கமாகக்கூறினால், முன்பு இருட்டில் இருந்தேன். இப்பொழுது வெளிச்சத்திற்கு வந்திருக்கிறேன் என்று கூறவேண்டும். ஆனால் என்னுடன் இருக்கின்ற மற்றவர்கள் உணர்ச்சி எவ்வாறோ எனக்குத் தெரியாது. சரி, யான் வருகின்றேன். யான் சொன்னபடி செய்துவா. (மறைதல்)

**அஞ்** - ஆ! என் குல தெய்வமே, என்ன இவ்வாறு திடீரென மறைந்துவிட்டீர்கள்? **(வீட்டிற்குச் செல்லுதல்)**

---

## களம் - மூன்று.

**இடம்:** **சிங்கப்புலியின் வீடு.**

**நடிகர்:** **அஞ்சுகம், அஞ்சுகத்தின் தாய்.**

**பொழுது:** **இரவு.**

**அஞ்சுகத்தின் தாய்** - அஞ்சுகம், அஞ்சுகம், எழுந்திரு. பிள்ளை அழுகிறான்.

அஞ்சுகம் - (எழுந்து தொட்டிலையாட்டித் தாலாட்டுதல்)

கற்பகத்தின் பூங்கொம்பே கண்ணே, கண்வளராய் தாலோ,
தாலேலோ,
பொற்புடைய பூவிலூறுந் தேனே, யென்பொன்னே,
தாலோ, தாலேலோ,

பசுந்தமிழ்ச் சுவைமல்கப் பாலருந்தும் பாலா,
தாலோ, தாலேலோ,
செழுந்தமிழ்த் தேன்பிலிற்றச் செருக்கருந்தும்
சேயே, தாலோ, தாலேலோ,

வடவர்படை மடிந்தொழிய வெட்டிக் குவித்தான்
மகனே, தாலேலோ,
களவர்குலம் விளங்கவரும் கட்டிக் கரும்பே
தாலோ, தாலேலோ,

அச்சந் தவிர்த்தெனை யெதிர்மறித் தருளியோன்
அளியே, தாலோ, தாலேலோ,
பச்சைப் பசுங்குதலை மழலைத்தும்பு பவளவாய்ப் பாலா,
தாலோ, தாலேலோ,

(தாலாட்டி முடித்துப் படுத்துறங்குதல்)

---

## களம் - நான்கு

இடம்: கடாரத்தில் விசயோத்துங்கவர்மன் அரண் மனையில் அத்தாணி மன்றம்.

நடிகர்: விசயோத்துங்கவர்மன், அமைச்சர், முதல் தானைநாயகம்; இரண்டாம் தானைநாயகம், தஞ்சைராயர், வாயிற்காவலர்.

பொழுது: முற்பகல்.

அமைச்சர் - அரசே, சென்றதை நினைத்துச் சித்தங்கலங்குவது அறிவுடைமையாகாது. இனிச் செய்யவேண்டியவற்றை

யாவது எண்ணிச்செய்ய வேண்டும். சோழமன்னருக்கு அத்தகைய விடையனுப்ப வேண்டாம் என்று யான் சொன்ன சொற்கள் தங்கள் செவிக்கேறவில்லை.

**விசயோத்துங்கன்** - போர்ச் செய்திகளைக் குறித்துத் தானை நாயகங்கள் கூறுவதை யான் எவ்வாறு தட்டமுடியும்?

**அமை** - அப்படியானால் அதன் விளைவைக் குறித்து இப் பொழுது ஏன் கலங்கவேண்டும்?

**மு.தா.நா** - இராசேந்திர மன்னன் கடற்படை இவ்வாறு வந்து தாக்குமென்று யான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

**இ.தா.நா** - துறைகள் இல்லாத இடங்களிலும் வீரர்கள் இவ்வாறு வந்து இறங்குவார்கள் என்று யான் சிறிதும் எதிர் பார்க்கவில்லை.

**மு.தா.நா** - இவ்வாறு நேரும் என்று தெரிந்திருந்தால் நாங்கள் கடற்கரை முழுதுமே வலுப்படுத்தி வைத்திருந் திருப்போம்.

**தஞ்சைராயர்** - அரசே, அமைச்சரே, தானைநாயகங்களே, உங்க ளுடைய வாக்குவாதங்களைக் கேட்டுக்கொண்டு வாளா விருப்பதற்கா யான் இங்கே வந்தேன்? போதும், நிறுத்துங்கள், உங்கள் பேச்சை. எங்கள் கடற்றானை மகாநாயகம் இராசேந்திரசோழ மாவலி வாணராய ருடைய கட்டளைகளை ஒப்புக்கொள்ளுகிறீர்களா, இல்லையா? இரண்டில் ஒன்று உடனே கூற வேண்டும். நான் இனி ஒருவிநாடியும் உங்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு காத்திருக்க முடியாது.

**அமை** - போர்க்கலநாயகமே, சினம் வேண்டாம், இதோ விடை கூறிவிடுகின்றோம்.

**தஞ்** - என்ன விடை கூறப்போகிறீர்கள்? இப்பொழுது உங்கள் நிலை தெரியுமா? மாநக்கவாரம், இலாமுரிதேசம்,

சாவகம் எல்லாம் எங்கள் கைக்கு வந்துவிட்டன. இலங்காசோகத்திலிருந்தும், மாதமர்லிங்கத்திலிருந்தும் உங்கள் கோநகராகிய கடாரத்தைநோக்கி எங்கள் கடற்படைவீரர்கள் விரைந்து வந்துகொண்டிருக்கிறார்கள். இப்பொழுது என்ன விடை கூறப்போகிறீர்கள்?

**விச** - தஞ்சைராயரே, இன்னும் இரண்டு நாழிகைகளில் விடை கூறிவிடுகின்றோம்.

**தஞ்** - என்ன, இது ஏமாற்றுவித்தையா? யாரை ஏமாற்ற நினைக்கிறீர்கள்? இராசேந்திர மன்னருடைய போர்க்கல நாயகத்தையா? சரி, இனி உங்களோடு பேசிப் பயனில்லை. இரண்டு நாழிகைகளில் உங்கள் கோநகர் கடாரம் தவிடுபொடியாகிவிடும், யான் செல்கின்றேன் (எழுந்துநடத்தல்)

**அமை** - போர்க்கலநாயகமே, அமருங்கள், இதோ, விடை கூறி விட்டோம். என் வேண்டுகோளுக்கிரங்க வேண்டும்.

**தஞ்** - (அமர்ந்து) எங்கள் கடற்றானை மகாநாயகத்தின் கட்டளைகளை அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டும். என்ன சொல்லுகிறீர்கள்?

**விச** - கட்டளைகளை மற்றொருமுறை கூறுங்கள்.

**தஞ்** - (ஓலை வாசித்தல்)

'முதலாவதாக, உங்கள் போர்க்கலங்களை எங்கள் கடற்படையிடம் ஒப்படைக்க வேண்டும். இரண்டாவதாக, உங்கள் தீவுகளிலும், துறைகளிலும் எங்கள் நிலைப்படைகள் ஓராண்டு தங்கியிருக்க வேண்டும். மூன்றாவதாக, சீனத்துடனும் உங்கள் நாட்டுடனும் நாங்கள் நடத்துகின்ற வணிகத்திற்கு யாதொரு இடையூறும் எக்காலத்தும் ஏற்படக்கூடாது. நான்காவதாக எங்கள் வணிகர் இழந்த பொருளுக்கு ஈடுபண்ண

வேண்டும். ஐந்தாவதாக, இந்தப் படையெழுச்சியில் எங்களுக்கு ஏற்பட்ட செலவை ஆறு திங்களுக்குள் கொடுக்க வேண்டும். ஆறாவதாக, அதாவது இறுதியாக, ஆண்டுதோறும் நீங்கள் சோழப்பேரரசிற்கு ஒரு நூறாயிரம் பொன் கப்பக்கடமையாகச் செலுத்தி வர வேண்டும்.'

இவற்றை ஒப்புக்கொள்ளுகிறீர்களா, இல்லையா?

**விச** - இக்கட்டளைகள் மிகக் கடுமையானவைகளாய் இருக்கின்றனவே.

**தஞ்** - வேறு வழியில்லை, என்ன சொல்கிறீர்கள்?

**அமை** - போர்க்கலநாயகமே, உண்மையிற் கட்டளைகள் மிகக் கடுமையானவைகள்தாம். முதலில் இவற்றை யான் சரியாக அறிந்துகொள்ளவில்லை.

**தஞ்** - இக்கட்டளைகளுக்கு ஒருவிலக்கு உண்டு, அதனைச் சொல்ல மறந்துவிட்டேன். நான்காவது ஐந்தாவது கட்டளைகளை நிறைவேற்றி விடுவீர்களானால் முதல் இரண்டு கட்டளைகளும் நீங்கிவிடும். அதாவது உங்கள் போர்க்கலங்களை உங்களிடம் ஒப்படைத்து விடுவோம்; எங்கள் நிலைப் படைகளைத் திருப்பியழைத்துக்கொள்வோம்.

**விச** - இறுதிக் கட்டளையையும் நீக்கிவிட்டால் நன்றாயிருக்கும்.

**தஞ்** - அரசே, உமது பேச்சு நன்றாயிருக்கிறது! இதனைத்தான் எங்கள் நாட்டில் 'இடங் கொடுத்தால், மடத்தையே பிடுங்கிக் கொள்வான்' என்று சொல்வார்கள். நீர் கப்பக்கடமை செலுத்தியே வரவேண்டும். இந்தக் கட்டளையை மாற்றுவதற்கு எங்கள் கடற்றானை மகா நாயகத்திற்கும் அதிகாரம் கிடையாது. அந்த அதிகாரம் எங்கள் மன்னர் பெருமானுக்குத்தான் உண்டு.

**அமை** - நல்லது, இப்பொழுது என்ன செய்யவேண்டும்.

**தஞ்** - இவ்வோலையில் கையெழுத்திடுங்கள். (ஓலை நீட்டுதல்)

**அமை** - இதில் யார் கையெழுத்திடவேண்டும்?

**தஞ்** - இங்கே இருக்கின்ற நீங்கள் நால்வரும் கையெழுத்திட்டாற் போதும். முதலாவதாக அரசர் கையெழுத்து. இரண்டாவதாக அமைச்சர் கையெழுத்து. மூன்றாவதாக முதற்றானைநாயகம். இறுதியாக இரண்டாம் தானை நாயகம்.

**அமை** - சரி, அரசே, கையெழுத்திடுங்கள். (ஒருவர் பின் ஒருவராக நால்வரும் கையெழுத்திடுகிறார்கள்) (பிறகு அமைச்சர் தஞ்சைராயரிடம் ஓலையைநீட்டி) போர்க்கலநாயகமே உங்களுக்கு இவ்வளவு தொந்தரை கொடுத்ததற்கு மன்னிக்கவேண்டும்.

**தஞ்** - தொந்தரையொன்றுமில்லை. யான் வருகின்றேன். உங்கள் எல்லோருக்கும் வணக்கம். அரசே, எங்கள் இராசேந்திர மன்னரது பெருமையை இனியாவது தாங்கள் தெரிந்து கொள்ளுங்கள். (செல்லுதல்)

---

## களம் - ஐந்து

**இடம்:** **கங்கைகொண்ட சோழபுரத்தில் உள்ள சோழகங்கம் என்னும் ஏரியின் கரை.**

**நடிகர்:** **இராசராசப்பிச்சர், சாத்தவேள், சங்கரதேவர், ஆதித்தர்.**

**பொழுது:** **மாலை.**

**இராசராசப் பிச்சர்** - சங்கர தேவரே, ஏன் இவ்வாறு சொல்லுகின்றீர்கள்? நமது மன்னர் பெருமான் வாகை மிலைந்து

திரும்பிய நமது தண்டத்தானையை வரவேற்கக் கோதாவரியாற்றங்கரை வரை சென்றாரே, நாங்கள் வெற்றி வீரராய்த் திரும்பும் எங்கள் ஆருயிர் நண்ப ராகிய தங்களை வரவேற்க இவ்வளவு தொலைவரக் கூடாதா?

**சாத்தவேள்** - இந்தப் புதிய கோநகர் முதலியவற்றையும் பார்த்து வரவேண்டுமென்கிற அவாவும் எங்களுக்கிருந்தது.

**சங்கரதேவர்** - தாங்கள் என்பால் கொண்டுள்ள அன்பிற்கு என்ன கைம்மாறு செய்வேன்?

**ஆதித்தர்** - தாங்கள் கங்கைகொண்ட சோழபுரம் வரையில் வருவீர்களென்று யான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

**சாத்த** - தேவரே, தாங்கள் உயிருடன் திரும்பினீர்களே, அதுவே எங்களுக்குப் பெரிய கைம்மாறு.

**சங்** - பெருவுடையார் பேரருளாலும், தங்களுடைய வாழ்த் தாலுமே உயிருடன் திரும்பினேன். இல்லாவிட்டால் யான் போர்க்களத்திலேயே வீரத்துறக்கம் புகுந் திருப்பேன்.

**ஆதித்** - எங்கள் படைகளுக்குப் போர்த்தொல்லையே கிடை யாது. நாங்கள் வங்கக் கோநகரை எட்டுமுன்பே வங்கப் போர் முடிந்துவிட்டது.

**இரா.பி** - (புண்களைக் காட்டி) சங்கரதேவரே, இப்புண்கள் தங்களுக்கு எங்கே, எவ்வாறு ஏற்பட்டன? சொல் லுங்கள். என்னைப் பிச்சன் என்று நினைக்க வேண்டாம். போர்களைப்பற்றித் தெரிந்துகொள்ளவும் எனக்கு இச்சையுண்டு.

**சாத்த** - சற்று விவரமாகச் சொல்லுங்கள்.

சங் - எல்லாப் போர்களிலும் தப்பினேன். வங்கக் கோநகர்ப் பக்கத்தில் நடைபெற்ற இறுதிப்போரில்தான் புண் பட்டேன். போர் மிகக் கடுமையாக நடைபெற்றது. முற்பகலில் வெற்றி தோல்வி யாருடையதென்றே சொல்ல முடியாதிருந்தது. முடிவில் வலசாரித் தானைகள் ஒன்றில் இருந்த எங்கள் படைகளுக்கெல்லாம் ஓர் ஆணை பிறந்தது. எங்களை எதிர்த்துநின்ற பகைவர்களின் இடசாரியணிகளைப் பிளக்கவேண்டும் அல்லது வளைக்க வேண்டுமென்று. எனது படைத்தலைவர், வீரப்புலி என்பவர். எங்கள் படையணிக்கு வலப்புறமாக நான்கு முழம் முன்னர் வேலைப்பிடித்த வண்ணம் அவர் நின்றார். அவருடைய வாயிலிருந்து வரப்போகிற கட்டளையை எதிர்பார்த்து நீட்டிப் பிடித்த வேல்களோடு அவர் முகத்தைப் பார்த்தவண்ணம் நின்றோம். 'தாக்கு' என்ற சொல் கேட்டது. அப்பா! அச்சொல்லைக் கேட்டதும் எனக்கேற்பட்ட வுணர்ச்சியை யான் சாகும் வரையிலும் மறக்க முடியாது!

இரா.பி - என்னவுணர்ச்சி, வீரவுணர்ச்சிதானே ஏற்பட்டது?

சங் - (நகைத்து) எளிதிற் சொல்லி விட்டீர்கள். வெற்றி! வெற்றி! இராசேந்திர மன்னருக்கு வெற்றி! இராசேந்திர மன்னருக்கு வெற்றி, என்று பித்தம் பிடித்தவர்களைப் போல தொண்டை கிழியக் கதறிக்கொண்டு பாய்ந்து சென்றோம். அதன் பிறகு என்ன ஏற்பட்டதென்று எனக்கே தெரியாது.

சாத்த - உங்களுக்கு என்ன ஏற்பட்டதென்று தெரியாமலா இங்கே திரும்பிவந்து விட்டீர்கள்?

சங் - யான் காலாட் படையணிகளின் மூன்றாவது வரிசையில் நின்று கொண்டிருந்தேன்; கட்டளை பிறந்ததும் பகையணிகள் மீது பாய்ந்து சென்ற இரண்டொரு விநாடிகளுக்குள் இந்த மூன்று புண்களும் எனக்கேற்பட்டன. இடக்காலில் ஏற்பட்டது வாள் வீச்சால்.

மார்பிலும் தோளிலும் ஏற்பட்டவை அம்புகளால். அந்த அம்புகள் எனக்குமுன் பாய்ந்தவர்கள்மேல் உராய்ந்து வந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் எனது மார்போ, தோளோ துளைப்பட்டிருக்கும். காலிற்பட்ட வாள் வீச்சும் அவ்வாறே தடைப்பட்டிருக்கவேண்டும் நம்தானைகளுடன் வந்த மருத்துவர்கள் மிகத்தேர்ச்சி பெற்றவர்கள். ஏதேதோ பச்சிலைகளை வைத்துப் புண்களைக் கட்டினார்கள். இரண்டே வாரங்களில் புண்கள் ஆறிவிட்டன. இப்புண்களை யான் சிறிதும் பொருட்படுத்தவில்லை. ஆனால் எனக்கு மிகப்பெரியதோர் மனப்புண் இப்போரில் ஏற்பட்டது.

**இரா.பி** - சங்கரதேவரே, மனப்புண்ணுக்குக் காரணம்?

**சங்** - எங்களுக்கு வழிகாட்டி முன்னே பாய்ந்து தாக்கிய எங்கள் இணையற்ற படைத்தலைவர் வீரப்புலி வீரத் துறக்கம் எய்தியதுதான். அவர் நின்ற நிலையையும் பாய்ந்து தாக்கிய தன்மையையும் யான் என்றும் மறக்கமுடியாது.

**சாத்த** - போர் என்றால் முழுதும் துன்பந்தானே?

**சங்** - சாத்தரே, முழுதும் துன்பம் என்று சொல்லி விடுவதற்கில்லை. போர்க்களத்தில் நகைப்பையுண்டு பண்ணக்கூடிய எத்தனையோ நிகழ்ச்சிகளும் உண்டு.

**இரா.பி** - போர்க்களத்தில் நகைப்பிற்கிடமேது? நீங்கள் இவ்வாறு சொல்வதுதான் நகைப்பையுண்டாக்குகிறது.

**சங்** - உண்மையாகவே கூறுகிறேன். வேண்டுமென்றால் ஒரே ஒரு நிகழ்ச்சி கூறுகிறேன். கேளுங்கள். வங்கத்தில் நடைபெற்றப் பெரும் போர் முடிவுற்றதும் இறந்த நம்முடைய வீரர்களையெல்லாம் புதைக்கத் தொடங்கினோம். நம்முடைய பொறிப்படையாட்கள் இருநூறு அல்லது முந்நூறு பிணங்களைச் சேர்த்துப்புதைக்கக்

கூடிய பெரிய பெரிய குழிகளாகப் பலவற்றை வெட்டி னார்கள். நானும் எனது படையைச் சேர்ந்த மற்றொரு வீரனுமாகச்சேர்ந்து ஒவ்வொரு பிணமாகத் தூக்கிச் சென்று ஒரு குழியிற் போட்டோம். அப்பொழுது அக்குழியில் திடீரென்று ஒரு அதிசயம் ஏற்பட்டது.

**ஆதித்** - குழியில் அதிசயமா?

**இரா.பி** - என்ன நேர்ந்தது சொல்லுங்கள்.

**சங்** - நாங்கள் தூக்கிவந்துபோட்ட ஒருபிணம் திடீரென்று எழுந்தது. இருவரும் என்னவென்று உற்றுப் பார்த்தோம். எழுந்த பிணம் தன் வாளை உருவிற்று.

**சாத்த** - பிணம் வாள் வைத்திருந்ததா?

**சங்** - ஆம், இந்தப் பிணத்தின் கச்சையில் தொங்கிய வாளைப் பார்க்காமற் குழியிற் போட்டுவிட்டோம்.

**இரா.பி** - பிணம் எவ்வாறு எழுந்திருக்கமுடியும், அதை முதலிற் சொல்லுங்கள்.

**சங்** - அதைத்தான் சொல்கிறேன், குறுக்குக்கேள்வி போடா மற் கேளுங்கள். எழுந்த பிணம் தன் வாளை உருவிற்று. பிறகு அந்தப்பிணம் குழியிற்கிடந்த வேறு பிணங்களின் தலைகளை வெட்டத்தொடங்கிற்று. நான் திடீரென்று குழியிற் குதித்து அந்தப் பிணத்தின் வாளேந்திய கையைப் பிடித்துக்கொண்டேன். உடனே என்னை விரைத்துப் பார்த்து 'நீ யார்' என்று கேட்டது அந்தப் பிணம். நான் 'நீ யார்' என்று கேட்டேன். அது உடனே 'நான்தான் அஞ்சாத சிங்கம், வீராதிவீரன் வாள்வெட்டி' என்று கூறியது. அதன் பிறகு அந்தப் பிணத்தை வெளியே தூக்கிவிட்டோம். உசாவிப்பார்த்த பொழுது இவன் படைநாயகம் களத்தில் வென்றாருக்கு நெருங்கிய நண்பன் என்று தெரிந்துகொண்டோம்.

**இரா.பி** - இறந்தவன் எவ்வாறு பிழைத்தான்?

**சங்** - இது தெரியவில்லையா தங்களுக்கு? ஒரு படையைச் சேர்ந்த அத்தனையாட்களும் வீரர்களாயிருப்பார்கள் என்று நினைப்பது தவறு. வயிறு வளர்ப்பதற்கு வேறு வழியில்லாத இவனைப்போன்ற எத்தனையோ கோழைகள் படைகளிற் சேர்ந்து விடுகின்றார்கள். பகைவர்களின் தாக்குதல்களுக்கு அஞ்சிப் பிணங்களோடு பிணமாகக் கிடந்திருக்கிறான் இந்தப்பயல். நாங்கள் இருவரும் இந்த உயிர்ப்பிணத்தைத் தூக்கும்பொழுது ஒரு சிறிதும் எங்களுக்கு ஐயம் ஏற்படவில்லை. அவ்வளவு விரைப்பாக மூச்சையும் இழுத்துப் பிடித்துக் கொண்டு கிடந்தான். இப்பேர்ப்பட்ட கோழைகளால்தான் ஒரு தானைக்குக் கெட்டபேர் உண்டாகிறது.

**சாத்த** - இந்தக் கதை வேடிக்கையாகத்தானிருக்கிறது?

**சங்** - ஆம், இதை ஒரு நாடகத்தில் நடித்தால் மிக நன்றாயிருக்கும்.

**இரா.பி** - வேறு ஏதாவது செய்தியுண்டோ?

**சங்** - பொற்குடங்களில் கங்கை நீர் கொண்டுவந்து விட்டோம். யானையிழுக்கும் சகடங்களில் இமயத்திலிருந்து கற்களும் கொண்டுவந்துள்ளோம்.

**சாத்த** - தேவரே, எனக்கு ஓர் ஐயம். நமது தானை திரும்பிவந்து விட்டதே, ஓடிப் போன மகிபால மன்னன் திரும்பிவந்து அரசாட்சி தொடங்க மாட்டானா?

**சங்** - அதைப்பற்றி நமக்கென்ன கவலை? நாம் படையெடுத்தது கல்லும் நீரும் கொண்டுவருவதற்காக. கொண்டுவந்து விட்டோம். ஆனாலும் அங்கே நமது தானைநாயகம் ஒருவரின் கீழ் ஒரு நிலைப்படை வைத்து வந்துள்ளோம். மற்றொரு வெற்றிச் செய்தியை

உங்களுக்குக் கூறமறந்து விட்டேன். கடாரத்திலிருந்து செய்தி வந்துவிட்டது.

**ஆதித்** - கடாரத்திலிருந்தா? எனக்குத் தெரியாதே.

**சங்** - கடாரத்தரசன் விசயோத்துங்க வர்மன் நம்முடைய கடற்றானை மகாநாயகம் பிறப்பித்த கட்டளைகளை யெல்லாம் ஏற்றுக்கொண்டு நமக்குக் கீழ்ப்படிந்து விட்டான்.

**இரா.பி** - மிக நல்ல செய்தி.

**சாத்த** - நமக்குத் தரைப் போரிலும் வெற்றி, கடற்போரிலும் வெற்றி.

**ஆதித்** - இனியாவது தமிழ்மக்களின் பெருமையைப் பிறநாட்டி னர் அறிய மாட்டார்களா?

**சங்** - இவ்வெற்றிக்காகவே நம்மையாளுடைய இராசேந்திர மன்னர் கங்கைகொண்ட சோழபுரத்தின் இப்பகுதிக்குக் (**கையாற் சுட்டிக்காட்டி**) கடாரங்கொண்டான் என்று பெயர் வைத்துள்ளார்.

**இரா.பி** - சங்கரதேவரே, தாங்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இங்கே நடக்கின்ற வேலைகளைக் குறித்துப் பல்லாயிரக் கணக்கான சிற்பிகள், தச்சர்கள், கொல்லர்கள் முத லாயினோர் வேலை செய்கிறார்கள் என்று கூறினீர் களே, அப்பொழுது அதனை நான் நம்பவில்லை. இங்கு வந்து இந்த அழகான நகரத்தையும், கோயிலையும், ஏரி யையும் பார்த்த பிறகுதான் தங்கள் கூற்றின் உண்மை யைத் தெரிந்துகொண்டேன்.

**சங்** - நகரமுழுதும் சுற்றிப் பார்த்து விட்டீர்களோ?

**இரா.பி** - நாங்கள் இங்கு வந்து மூன்று நாட்கள் ஆய்விட்டன. உங்களைப் பார்த்த நேரம் வரையிலும் இதுதான் வேலை.

ஏறக்குறைய எல்லாவற்றையும் பார்த்து விட்டோம். இன்னும் பலவிடங்களில் குடியிருப்பு வீடுகள் கட்டும் வேலைகள் நடைபெறுகின்றன. என் மதிப்பு நகரத்தின் சுற்றளவு இரு காதமிருக்குமென்று நினைக்கிறேன். இதோ தெரிகின்ற சோழ கேரளன் என்ற அரண்மனையின் சுற்றளவு அரைக் காதம் இருக்கலாம். அரண்மனையின் நடுப்பகுதிக்கு உட்கோட்டை என்று பெயர். அதனை அந்தர்ப்புரம் என்று சொல்கிறார்கள். தஞ்சையரண்மனையைவிட இது மிகப் பெரியது.

சாத்த - ஆனால் இராசராசேச்சரத்தைவிடக் கங்கைகொண்ட சோழேச்சரம் சிறியதாகத்தானிருக்கிறது. விமானத்தின் உயரமும் இருபது முழம் வரையிலும் குறைவாயிருக்குமென்று நினைக்கிறேன்.

இரா.பி - இரண்டு விமானங்களும் முழுதுங்கருங்கற்களாலேயே கட்டப்பட்டிருக்கின்றன. தஞ்சை விமானத்தின் உச்சியிலுள்ள பெருங்கல் சாரப்பள்ளம் என்றவூரிலிருந்து ஏற்றப்பட்டது. இந்த விமானத்தின் உச்சியிலுள்ள பெருங்கல்பரணையென்ற ஊரிலிருந்து ஏற்றப்பட்டதாம். இவ்வூர்ப் பெயர்கள் காரணப்பெயர்கள் என்று நினைக்கிறேன். கோயில்கள் கட்டப்பெற்ற பிறகுதான் இவ்வூர்களுக்கு இப்பெயர்கள் ஏற்பட்டிருக்க வேண்டும்.

சங் - இந்த ஏரியைப் பாருங்கள். இதற்குச் சோழகங்கம் என்று பெயர் வைத்திருக்கிறார் நம்முடைய மன்னர்.

இரா.பி - சோழகங்கம் கடல்போலவே காட்சியளிக்கிறது. ஐம்பதினாயிரம் வேலி நிலங்களுக்காவது இதன் தண்ணீர் உதவும் என்று நினைக்கிறேன்.

சங் - இவ்வேரிக்குத் தண்ணீர் கொள்ளிடத்திலிருந்தும் வெள்ளாற்றிலிருந்தும் வருகிறது. கால்வாய்களின் நீளம்

ஆறு காதத்திற்கு மேலிருக்கலாம். இன்னும் சிலவாண்டு களில் பொட்டலாய்க்கிடக்கின்ற இப்பரந்தவெளி தஞ்சை நாட்டைப்போலவே பசுமையாய்விடும் என்று நினைக்கிறேன். ஏரியின் நீளம் ஒன்றரைக் காதத்திற்குமேல் இருக்கும்.

**இரா.பி** - நண்பர்களே, விரைவில் மேற்கே பாருங்கள், குருதி நிறங்கொண்டு பரிதி ஏரியில் மூழ்குவதை!

**சாத்த** - பிச்சரே, தாங்கள் குருதியை உவமை கூறுவது மிகப் பொருத்தமாயிருக்கிறது. ஏரி நீரில் குருதி கரைவதுபோலத் தெரிகிறது பாருங்கள்.

**இரா.பி** - செவ்வானத்தில் உலவுகின்ற கரிய மேகங்களைப் பாருங்கள். ஒவ்வொரு மேகத்திற்கும் மின்னுகின்ற வெள்ளி விளிம்பு ஏற்பட்டுள்ளது. நீலவானத்திலே நீளமான சாலைகள் செல்வதைப் போலத் தோன்று' கின்றனவே, அவை மேகத்தின் நிழலால் உண்டா யிருப்பவை.

**சங்** - நண்பர்களே, உண்மையாக இவ்வியற்கைக் காட்சி எனக்கும் அளவிலா இன்பத்தையளிக்கின்றது. கிழக்கே திரும்பிப் பாருங்கள், செயற்கைக் காட்சியை.

**இரா.பி** - ஆம், பரிதியஞ் செல்வன் இவைகளுக்குப் பொன் னாடை போர்த்தியுள்ளான். உண்மையில் இந்நெடு நிலை மாடங்களும், அரண்மனையும், கங்கைகொண்ட சோழேச்சரமும் பொற்றுகில் போர்த்தவை போலவே தோன்றுகின்றன.

**சங்** - நண்பர்களே, நேரமாயிற்று. இரவில் எங்கே தங்கப் போகின்றீர்கள்? புது இடமாயிற்றே.

**இரா.பி** - அதைப்பற்றி கவலை கிடையாது. பெரிய கடைத் தெருவில் எத்தனையோ உணவு விடுதிகள் இருக் கின்றன. பெருவுடையாரை வணங்கி விடுதி ஒன்றில் உணவுண்டு கோயிற் சுற்றில் படுத்துக்கொள்கின் றோம்; நாளைக்காலை தஞ்சை புறப்படுகின்றோம்.

**சங் -** படைகள் எல்லாம் இங்கேயே தங்கவேண்டுமா, தஞ்சை போகவேண்டுமோ, இன்னும் ஒன்றும் தெரிய வில்லை.

**இரா.பி.சாத்த -** சரி, நாங்கள் சென்றுவருகிறோம். வணக்கம்.

**ஆதித் -** நாளைக் காலையில் நீங்கள் புறப்படுமுன் உங்க ளைப் பார்க்க முயற்சிக்கிறோம். வணக்கம்.

**சங் -** முயற்சிப்பதென்ன, உண்மையில் உங்களைக் காலையில் பார்க்கின்றோம். வணக்கம்.

*(எதிர்த்திசைகளில் செல்லுதல்)*

---

## களம் - ஆறு

**இடம்:** கங்கைகொண்ட சோழபுரத்தில் சோழகேரளன் என்னும் அரண்மனையில் திருவோலக்க மன்றம்.

**நடிகர்:** இராசேந்திரன், வல்லவரையர் வாண்டிய தேவர், இராசாதிராசர், இராசேந்திரசோழ தேவர், வீரராசேந்திரர், இராசராச நரேந்திரர், அரையன்இராசராசன், இராசேந்திரசோழ மாவலி வாணராயர், அம்மங்கா தேவி.

**பொழுது:** மாலை.

**வல்லவரையர் -** கங்கைகொண்ட சோழதேவரே, கடாரங் கொண்டவரே,

எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

என்ற வள்ளுவர் பெருமான் வாக்கு முழுதும் நிறை வேறிவிட்டது. எண்ணியவத்தனையும் செய்து முடித்து

விட்டீர்கள். பேய்மொழி பிதற்றும் அவ்வடநாட்டு அறிவிலிகளுக்குத் தமிழனது தனிப்பெருமையைத் தெரிவித்துவிட்டீர்கள். கடாரப் பேரரசனுக்கு அறிவுச் சுடர் கொளுத்தினீர்கள். தங்கள் பேரும் புகழும் இப்பேருலகில் என்றும் நின்று நிலவ கங்கை கொண்ட சோழபுரமாகிய இவ்வழகியகோநகரையும், கோநகரத்தின் உள்ளாலையில் கடாரங்கொண்டான் என்ற பெருந்தெருவையும் படைத்து விட்டீர்கள். வனப்பு மிக்கதாய சோழ கேரளன் என்னும் இப்பெரிய அரண்மனையையும் கட்டி முடித்தீர்கள். தங்கள் குடிகள் தங்களை என்றும் மறவாது வாழ்த்திவரக் கடலே போன்று காட்சியளிக்கும் சோழ கங்கம் என்ற ஏரியையும் தோண்டுவித்தீர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக எல்லாம் வல்ல இறைவனுக்குத்தங்கள் நன்றியைக் காட்டுவதற்குக் கங்கைகொண்ட சோழேச்சரமாகிய கற்றளியை எடுப்பித்தீர்கள். தங்கள் பேரறிவையும், பேராற்றலையும் பெருநோக்கையும் என்னென்றுரைப்பேன், என்னென்று புகழ்வேன்!

**இராசேந்திரன்** - மாமா, ஏன் இவ்வளவு வரம்பிகந்து பேசுகிறீர்கள்?

**செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்**
**தியற்கை யறிந்து செயல்.**

என்றவாக்கின் படி உலகத்தியற்கையை அடிக்கடி எனக்கு எடுத்துக்காட்டி அறிவு புகட்டிவந்தீர்கள். என்னுடைய அறிவு வெறும் நூலறிவே. தங்கள் அறிவு நூலறிவும் உலகியலறிவுஞ் சேர்ந்தது. யான் செய்யத் தொடங்கிய அரிய காரியங்களெல்லாம் உண்மையில் தங்கள் உதவியினாலேயே வெற்றியுடன் முற்றுப் பெற்றன.

**வல்ல** - மன்னர் பெருமானே, வாகை மிலைந்து திரும்பிய நம்முடைய தானைநாயகங்களுக்குத் தக்க வகையில் சிறப்புகள் செய்யவேண்டும்.

**இரா** - இதனை யான் மறக்கவில்லை.

> **சுழலுமிசை வேண்டி வேண்டா வுயிரார்**
> **கழல்யாப்புக் காரிகை நீர்த்து.**

என்று வள்ளுவர் பெருமான் கூறினும் நாம் இவர்களுக்கு எல்லோரும் அறியுமாறு சிறப்புகள் செய்தேயாக வேண்டும்.

**வல்ல** - 'கூறினும்' என்று ஏன் கூறுகின்றீர்கள்? வள்ளுவப் பெருந்தகை சிறப்புச் செய்யக் கூடாது என்று கூறி யிருக்கின்றாரோ?

**இரா** - இவ்வீரர்கள் உயிரை விரும்பாதவர்கள். இப்பெரு நிலத்துப் பரந்து செல்லும் புகழையே விரும்புகிற வர்கள். புகழே அவர்களுக்கு அணிகலன். வீரக்கழல் முதலிய அணிகலன்களை அவர்களுக்கு அணிவித்தல் வெறும் ஆரவாரமே.

**அரையன்** - உண்மை, உண்ம்ம, எனையாளுடைய இராசேந்திர மன்ன, தங்களுக்கு ஊழியஞ் செய்தல் எங்களுக்கு மற்றோர் அணிகலமாகும்.

**மாவலிவாணராயர்** - புகழைவிட ஊழியமே எங்களுக்குப் பெரும்பேறு.

**வல்ல** - மதி நுட்பம் வாய்ந்த இணையிலா இத்தகைய வீரர்கள் இருக்கும்போது நமக்கு என்ன குறை?

**இரா** - உண்மையில் இவர்கள்தானே கங்கையும் கடார முங்கொண்டவர்கள்! செயல் இவர்களது, பட்டம் எனது! நரேந்திரரே, தாங்கள் எப்பொழுது வெங்கைக்குப் புறப்படுகின்றீர்கள்?

**நரேந்திரன்** - மாமா, என் தந்தையுடன் யானும் வெங்கைக் கோநகரிலேயே தங்கியிருப்பேன். ஆனால் அம்மங்கா

வின் நினைவு வந்தது. போரினால் யான் எனக்கு மண மானதையும் மறந்துவிட்டேன். பிறகு யான் போருக்குப் புறப்படும் போது அம்மங்கா என்னுடன் நீண்டநேரம் வாது செய்து என்னைத் தடுக்க முயற்சி செய்தது நினைவிற்கு வந்தது. அம்மங்கா சினந்து கொள்ளாம லிருக்கும் பொருட்டுத்தான் அவளை அழைத்துப்போக நேரில் வந்திருக்கிறேன்.

**அம்மங்காதேவி** - அப்பா, தங்கள் மருகர் சொல்லுவதைச் சிறிதும் நம்பாதீர்கள். கங்கைகொண்ட சோழபுரத்தைப் பார்த்துப் போகவே அவர் இங்கே வந்திருக்கிறார். மணமானதையே மறந்தவருக்கு அழைத்துப்போக மனமானமேது?

**நரேந்** - தேவி, இன்னுமா ஏளனம்? நாளையே நாம் புறப் படுவோம்.

**அம்** - உண்மையாகவா சொல்லுகிறீர்கள்?

**நரேந்** - உண்மையாகவே.

**அம்** - அப்பா, அப்படியானால் நான் நாளை வெங்கைக்குப் புறப்படலாமா?

**இரா** - அம்மங்கா, இனிமேல் உனக்கு எனதுடன்பாடு வேண்டி யதில்லை. நீ உடனே புறப்பட வேண்டியதுதான்.

**இராசாதிராசன்** - தந்தையே, யான் நாளை இரட்டபாடி புறப்படு கின்றேன். புதிதாக முடிசூடிய ஆகவமல்லன் தொந்தரை கொடுப்பான் என்று தெரிகிறது.

**இரா** - அவ்வாறே செய்.

**வீரராசேந்திரன்** - யானும் நாளை மதுரை செல்கின்றேன்.

**இரா** - சென்று வா.

**இராசேந்திர சோழதேவன்** - தந்தையே, எல்லோரையும் அனுப்பிவிட்டு யார் முன்னிலையில் நமது மகா தண்டநாயகங்களுக்குச் சிறப்புகள் செய்யப் போகின் றீர்கள்?

**இரா** - அவ்வாறானால் எல்லோரும் சிறிது தாழ்த்துச் செல்லலாம். விரைவில் நாட்டார் தமிழ்ப் பேரவை கூட்டி இவர் களுக்கும் ஏனைய வீரர்களுக்கும் செய்ய வேண்டிய சிறப்புகளைச் செய்வோம்.

**வல்ல** - அதுதான் நல்லது. (எல்லோரும் எழுந்து செல்லுதல்)

---

## களம் - ஏழு

(வங்கத்தின் மேற்சென்ற தானை திரும்பி ஓராண்டு சென்றபின்)

**இடம்:** சோழகேரளன் என்னும் அரண்மனையில் ஓர் தனிக்கூடம்.

**நடிகர்:** இராசேந்திரன், கருவூர்த்தேவர்.

**பொழுது:** காலை.

**இராசேந்திரன்** - (கருவூர்த்தேவர் வரவைக்கண்டதும் இருக்கை விட்டெழுந்து வணங்கித் தனதிருக்கையில் அவரை அமரச் செய்து)

வருக, வருக, மாதவப் பெரியீர்,
கருவூர்த் தேவ, பெருவாழ் வுற்றேன்
துன்னருஞ் சிறப்பின் தூய சீரடி
என்னில் விழைந்தமை என்னருந் தவத்தால்

காய சித்தியும் யோக ஞானமும்
மேய பத்தியும் சிவன்றாள் நேயமும்
செந்தமிழ்ச் சீலமும் அந்தமில் அறிவும்
பந்தமில் வாழ்வும் அந்தண் வொழுக்கமும்
கொண்டருட் குருவே, குறையொன் றிரப்பன்,
கண்டனன் கனவொன்று, கருத்தழிந் தனன்யான்,
கொண்டலும் புயலுஞ் சூழ்ந்தே யாண்டும்
எண்டிசை யிருண்டது, என்னறிவு சிதைந்தது,
மின்னும் இடியும் பளீஇர், திடீஇர்
என்னும் படியே இரவும் பகலும்
பன்னெடு நாட்கள் பகைப்புல மெனவே
இந்நெடு நிலைமா டத்தும் யாண்டும்
தொடர்ந்தன, துகிற்கொடி கள்வீழ்ந் தனவே,
அடர்ந்தன அடவிகள் அகலிடத் தந்தோ,
எழுந்தனன் இறும்பூ தெய்தினன், இறைவா,
அழுந்தினன் அவலக் கடலுள், அந்தோ,
அருள்புரிந் திடல்வேண் டுமென்ஐ யாவோ!

**கருவூர்த்தேவர்** - அரசே, அமர்க. (இராசேந்திரன் பக்கத்திலுள்ள மற்றோர் இருக்கையில் அமர்கின்றான்) கனவு கண்டா கருத்தழிந்தீர்? உலகம் புகழும் உத்தம வீரனாயிற்றே தாம்?

**இரா** - அடிகளே, தம்மைப்போன்ற முற்றத்துறந்த முனிவர்களாலன்றி எத்தகைய வீரனாலும் உட்பகைவனை வெல்லுதல் இயலாது. அடியேன் கண்ட கனவின் உட்கோளை உணர்த்தல் வேண்டும்.

**கரு** - அரசே, கனவின் பலன் பலவகைத்து. அவற்றை ஈண்டு விரித்தல் வேண்டாம். ஒருசில கூறுகின்றேன். நினைவின் காரணமாக உடற்கூறு, உணவின் வகை இவை பற்றி எழுங்கனாக்கள் பயனிலவாம். ஒருவன் உள்ளத்தே பல நாட்களில் எழுந்த தனித்தனி எண்ணங்கள் ஒருசேரக்கனவில் தோன்றும். இவ்வாறே பலவாண்டுகளில் கண்ட காட்சிகளும், கேட்ட கேள்வி

களும், எண்ணிய எண்ணங்களும் நுகர்ந்த பிறவும் ஒருசேரக் கனவில் தோன்றும். ஆகையின் இவைகள் இயற்கைக்கு முரணாகக் கனவில் காட்சியளிக் கின்றன. மற்றொன்று: ஓர் பெரிய மரத்தை மிகச் சிறிய பனிநீர்த்துளி உள்ளடக்கிக் காட்டுவதுபோல் பல நாழிகை அல்லது பல நாட்கள் நடப்பது போன்ற செய்திகள் கனவில் உண்மையில் இரண் டொரு விநாடிகளில் நடைபெற்று விடுகின்றன. அவாக் கடலுள் ஆழ்ந்து பலபல வின்பங்களை விரும்பி முயற்சித்துப் பயனெய்தா மாந்தர் அடிக்கடி கனவு காண்பர். இவையெல்லாம் பயனில்லாக் கனவுகளே யாம். தூயசிந்தையராய மாந்தர் ஐம்புலனொடுங்கி மனமொடுங்கித் தம் வயமிழந்து தூங்கும்போது தோன்றுங் கனாக்கள் வரும் பொருளுரைக்குங் கனாக் களாகும். இத்தகைய கனாக்கள் பெரும்பாலும் நான்-காம் யாமத்தில் தோன்றும்.

இரா - அடிகளே, அடியேன் கண்ட கனவு நான்காம் யாமத் தில் தோன்றியதே.

கரு - கனவினால் மற்றொரு செய்தியையும் உணரலாகும். வீண் பெருமை பேசும் மனிதன், அவன் எத்தகைய வீரனாகிலும் தான் கண்ட கனவிற்கே அஞ்சுகிறான்; காரணம் கனவிற்குப் பலன் உண்டென்ற கருத்தும் தன்னெதிர் காலம் எவ்வாறே என்ற எண்ணமுந்தான். கனவிற்கஞ்சுகின்ற ஒருவன் அதனைவிட வெறும் உறக்கத்திற்கு அஞ்ச வேண்டியவனே. ஏனெனில் உறங்கு கின்ற ஓர் பெரிய வீரனை விழித்திருக்கின்ற ஓர் பேடி யும் கொன்று விட முடியும். ஆகவே மனிதனுடைய ஆற்றல், வீரம், செருக்கு இவையெல்லாம் எத்துணைச் சிறியன பார்.

இரா - உண்மை, உண்மை, முற்றிலும் உண்மை. அடியே னுடைய கனவின் பொருளைத் தெரித்தல் வேண்டும்.

**கரு** - நீ கண்ட கனவின் பலன் மிக வெளிப்படையானதே.

**இரா** - அருள் கூர்ந்து தெரித்தல் வேண்டும்.

**கரு** - உரைக்கின்றேன், கவலைகொள்ள வேண்டாம். இன்றை யிலிருந்து முந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகு நெடுநிலை மாடங்கள் கொண்ட இவ்வழகிய அரண்மனையும், இப்பெரிய நகரும், இருந்தவிடம் தெரியாமல் மறைந்து விடும். இவையிருந்த இடங்களில் அடவிகள் தோன்றும். நீ வெட்டுவித்த ஏரியோவென்றால், நீர் சுருங்கி அளவு சுருங்கித் தனது பழம் பெருமையை ஓரளவில் காட்டி நிற்கும். கங்கை கொண்ட சோழேச்சரமாகியகற்றளியோ தன் மதிலிழந்து பொலிவிழந்து மங்கிய புகழோடும் எடுப்பான விமானத்தோடும் இருந்துவரும். கங்கை கொண்ட சோழபுரம் என்னும் ஓர் சிற்றூரும், கடாரங் கொண்டான் என்னும் மற்றோர் சிற்றூரும், இப்பெரிய பரந்த நகரம் இருந்தவிடத்தில் சிறு குடிசைகளோடு இருந்துவரும். இவையெல்லாம் நின்னுடைய வெற்றி களைப் பிற்கால மக்களுக்கு நினைப்பூட்டும் அறி குறிகளாகவே விளங்கி வரும். அம்மக்கள், 'இந்தவிடத் தில்தான் அரசன் அரண்மனையிருந்தது, உட்கோட்டை என்ற இந்த இடத்தில் தான் அரண்மனையின் அந்தர்ப் புரமிருந்தது' என்று பேசிக்கொள்வார்கள்.

**இரா** - அடிகளே, இவை பிற்கால மக்களுக்கு எவ்வகையிலும் பயன்படாவோ?

**கரு** - பயனில்லாததொன்றுமில்லை. பிற்கால வரலாற்றாசிரியர் களுக்கு இவை பயன்படும். இடிந்த கங்கைகொண்ட சோழேச்சரத்தின் கற்களையும், நின் அரண் மனையின் கற்களையுங்கொண்டு பிற்காலத்தில் இந் நாட்டையாளும் ஆட்சியாளர் பாலங்களும் வேறு கட்டிடங்களும் கட்டுவர். குடிகளும் தம் குடியிருப்புக்கு வேண்டிய சிறு வீடுகள் கட்டிக்கொள்வர்.

**இரா** - அந்தோ! பிற்கால மக்கள் அவ்வளவு அறிவிலிக ளாகவா இருப்பர்?

**கரு** - அரசே, அவர்கள் மேற்குறை கூறிப்பயனில்லை, நின் வினை, வினைதான் இவ்விளைவையுண்டுபண்ணும்.

**இரா** - அடிகளே, யான் கொடிய வினைகள் செய்ததாக எனக்கு நினைவில்லையே.

**கரு** - இவ்வாறு நினைப்பது தவறு. நீ முற்பவத்திற் செய்த பழவினை யொருபுறமிருப்ப, இப்பிறவியிற் செய்த தீவினை பலவுண்டு. நின் தந்தை போலாது நீ வெறும் புகழொன்றையே விரும்பினவன்.

**என்று மொருவுதல் வேண்டும் புகழொடு**
**நன்றி பயவா வினை.**

என்ற தெய்வப் புலவர் கட்டளையை நீ கடைப்பிடிக்க வில்லை.

**இரா** - அடிகளே, எண்ணரிய அறங்கள் செய்துள்ளேன். கங்கை கொண்ட சோழேச்சரத்தையும் எடுப்பித்தேன்.

**கரு** - எல்லாம் புகழொன்றையே குறித்துச் செய்தனை. வடநாட்டின் மேற் படையெடுத்ததும், கடாரத்தின் மேற் பாய்ந்ததும் புகழ்குறித்தே. வடநாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான சிவப் பிராம்மணர்களை இந்நாட் டிற் குடியேற்றியதும் புகழ் குறித்தே. பண்டுதொட்டு அந்நாட்டிலிருந்து இங்குவந்த பார்ப்பனமக்கள் திருக் குறளும் வேறு தமிழற நூல்களும் காட்டும் அறவழி யொழுகவில்லையென்பதனை யுணர்ந்திருந்தும் இப் பொழுது சிவப் பிராமணர்களை ஏன் குடியேற்றினை?

**இரா** - அருந்தவ முனிவரே, பண்டுவந்த பார்ப்பன மக்கள் தமிழர் சமயத்தையும், கலைகளையும், அறநூல்களை

யும் பின்பற்றவில்லையென்பதற்காகவே இப்பொழுது யான் கங்கைக்கரையில் காசியிலும் அதைச்சுற்றுள்ள இடங்களிலுமிருந்து சிவப் பிராமணர்களைக் குடி யேற்றினேன்.

கரு - நீ இவர்களைக் குடியேற்றியது தவறு என்று யான் கூறவில்லை. புகழ்குறித்தே இதனைச்செய்தனையென்று தான் கூறுகின்றேன். ஆயினும் இவர்கள் முன்புவந்த வர்களின்றும் வேறுபட்டவர்களல்லர். நீ சிவப்பிரா மணர்கள் என்று கூறுகின்றனை. ஆனால் இவர்கள் சிவனை வழிபடுவதில்லை. சிவநெறியே இவர் களுக்குத் தெரியாது. இவர்கள் வெறுங்கர்மத்தை யும் விரதத்தையும் பரமாகக் கொண்டவர்கள். நெஞ்சை யுருக்கிச் சிவநெறி காட்டும் தேவார திருவாசகங் களாய அருட்பனுவல்க்ள் இருந்தும் அவற்றையோதிப் பயனெய்தாது பொருள் தெரியாமலே வேதத்தினை யுருவேற்றிக் கண்மூடிக் கதறுகின்றவர்கள் இவர்கள். இவர்கள் அடியேனையும் வாமமார்க்கத்தினன் என்று இகழ்ந்து பேசிப்பல அல்லல் விளைத்தனர். அதனால் இவர்களைத் தண்டிக்க விரும்பிய நினது தந்தைக்கு மன்னித்து விடுமாறு கூறினேன். அவரும் கருணை காட்டி மன்னித்தனர்.

இரா - அருந்தவ முனிவரே, அடியேனது, பிழைகளைப் பொறுத்தருளல் வேண்டும்.

கரு - அரசே, நீ கொடிய தீவினைகள் செய்திருக்கின்றனை. இரட்டபாடிப் போரிலே, அந்நாட்டைச் சூரையாடி, நகரைக் கொளுத்திப் பாழ்படுத்தினதோடு நில்லா மல், கன்னியர் என்றுங் கருதாமல், இளங்குழவிகள் என்றும் இரங்காமல், முதியரென்றும் மதியாமல் எத் தனையாயிர மக்களைக் கொன்றனை? இது அறப்போர் ஆகுமா? இத்தீவினைகள் நின்னையும் நின்னைச் சார்ந்தவரையும் தொடராவோ?

**இரா** - அருட்கடலே, இவை வன்கணாளராகிய பகைவர்களைத் தண்டிக்கத் தொடங்கியதால் விளைந்த தீமைகள்.

**கரு** - ஆம், அவை நினது சினத்தால் விளைந்த தீவினைகள். முற்பகற்செய்யில் பிற்பகல்விளையுமென்பதனை அறியாயோ? இத்தீவினைகளின் பயன்கள்தாம் நீ கனவிற் கண்ட காட்சிகள். நினது மரபினர் ஆட்சி நின் மக்களோடு அற்றுவிடும். அதன்பிறகு நினது மகள் அம்மங்காதேவிக்கும் இராசராசநரேந்திரனுக்கும் பிறக்கப் போகும் குலோத்துங்கன் சோணாட்டுடன் வெங்கை நாட்டையும் சேர்த்து நீண்டகாலம் செம்மையாக ஆட்சிபுரிவான். அவனது வழியினர் இருநூறு ஆண்டுகள் வரையிலும் ஆட்சி புரிவர். பின்னர் சோணாட்டைப் பாண்டியர் ஒரு சிலவாண்டுகள் ஆட்சிசெய்து அழிவர். அவர்களுக்குப்பிறகு தெலுங்கரும், துருக்கரும், மராட்டியரும் சிற்சிலவாண்டுகள் ஆட்சிசெய்து ஒழிவர். அவர்களுக்குப் பிறகு நினது தந்தை எடுப்பித்த இராசராசேச்சரத்தின் விமானத்தின் வடபால் மூன்றாம் மாடத்தின் நடுவண் திகழும் பிரதிமம் போன்ற தொப்பியணிந்த வெள்ளைமாந்தர் தமிழ்நாட்டுடன் நாவலந் தீவு முழுவதையும் இருநூறு ஆண்டுகள் வரையிலும் செம்மையாய் ஆட்சிபுரிவர். இறுதியில், அதாவது இன்றையிலிருந்து ஒரு தொள்ளாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு நாவலந்தீவு ஆகிய இப்பெருநாட்டின் ஆட்சி அதன் மக்கள் கைகளுக்குமாறும்.

**இரா** - வருங்காலம் உணர்த்திய வள்ளலே, வினையின்பயன் இத்துணைத்து என்று இதுகாறு மறியாதிருந்தேன்.

**கரு** - அரசே.

**எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை**
**வீயாது பின்சென் றடும்.**

என்பது வள்ளுவர் வாக்கு. வினை, தீவினையாயினும், நல்வினையாயினும் அது பிறவிதொறும் தொடரும்; இம்மண்ணுலகை விட்டு எவ்வுலகஞ் செல்லினும் அது அங்கும் தொடரும். அண்டங்களனைத்தும் இறைவன் ஆட்சியில் ஒன்றாகப்பிணைப்புண்டவை. இப்பிணைப்பைத் திருவாசகம் ஓதியருளிய மணி வாசகப் பெருந்தகையார்.

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப் பெருங்காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன.

என்று எழிலொழுக எடுத்துக்காட்டியுள்ளார்.

இரா - முனிவர் பெருமானே, திருவாசகத்தைப்பற்றி யான் இதுவரையிலும் கேட்டதில்லை.

கரு - இவ்வேடுகளை இதுவரையிலும் பாராமலிருந்தது நின் தவறேயாகும். திருவாசகத்திற்குருகாதார் ஒருவாசகத் திற்கு முருகார். இவ்விழுநூலை இயற்றியருளிய மாணிக்கவாசகர் இறைவனிடமே உபதேசம் பெற்ற பெரும்பேறு பெற்றவராவர். மக்களாய்ப்பிறந்தோர் இம்மண்ணுலகில் வாழ்வதைப்போல விண்ணுல கில் தேவரும் இன்னும் எத்தனை எத்தனையோ வுலகங் களில் எத்தனை எத்தனையோ பிறப்பினரும் வாழ் கின்றனர். மண்ணுலகிற் பிறந்தவர் விண்ணுலகிற் கும், விண்ணிலுள்ளோர் வேறுலகிற்கும் செல்லுதல் சாலும். ஆனால் இவையெல்லாம் இறைவன் ஆணை யால் அவரவர் வினைப்படி அருளப்பெறுகின்ற பிறப்புகளாம். மண்ணுலகில் வாழும் மாதர் வாழ்க் கையை ஞாயிறு, மதி, செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி போன்ற கோட்களும், வானில் தெரி

கின்ற ஏனை விண்மீன்களாய தீப்பிழம்புகளாம் உண்டைப் பிறக்கங்களும் இறைவன் ஆணையால் வகைப்படுத்தி வாழ்வும் தாழ்வும் கொடுக்கின்றன. இவ்வண்ணமே, இம்மண்ணும், கோட்களும், மீன்களும் வேறு உலகங்களில் வாழ்வோரை வகைப்படுத்துகின் றன. இன்னோரன்ன உண்மைகளையெல்லாம் திரு வாசகத்தையும், மூவர் அருளிய தேவாரத்திருப்பதி கங்களையும், வேறு அருள் நூற்களையும் உணர்ந் தோர் அறிவர்.

**இரா -** அருந்தவரே, அறியாமையால் என் வாணாளை வீணாகக் கழித்துவிட்டேன்.

**கரு -** அஞ்சவேண்டாம்.

**ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவர்**
**கெழுமையு மேமாப் புடைத்து.**

என்றார் வள்ளுவப் பெருந்தகையார். ஆகையின் நீ மறுமைக்கண் இன்பத்தை விரும்புவாயெனின், இன்றே திருக்குறளையும், தேவார திருவாசகம் போன்ற பத்தி நூல்களையும், வேறு அருள் நூல்களையும் பயில் வாயாக. எல்லா நூற்களையுங் கற்கவேண்டுமென் னும் எண்ணத்தை விட்டுவிடு. 'கல்வியென்னும் பல் கடற்பிழைத்தும்' என்று மணிவாசகப் பெருந்தகையார் கூறுகின்றார். இக்கடலிற் புகுந்தால் தப்புவதரிது.

**கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்**

**நிற்க வதற்குத் தக.**

என்ற வள்ளுவர் வாக்கினைக் கைப்பிடியாகக் கொள்.

**இரா -** முனிவர் பெருமானே, உலகில் இன்னும் எத்தனையோ மொழிகள் இருக்கின்றனவே, அவைகளில் அருள் நூல்கள் இல்லையோ?

கரு - இல்லையென்று கூறமுடியாது. ஆனால் தேவார திருவாசகம் போன்ற பத்திநூல்களையும் திருக்குறளைப் போன்ற ஓர் ஒப்பற்ற நூலையும் வேறு எம்மொழிகளிலும் காணமுடியாது. நமது தாய்மொழியாகிய தமிழ் உலகமொழிகள் எல்லாவற்றினும் தலைசிறந்தது. இம் மொழியில் திருக்குறள் ஒன்றே இருப்பதாக வைத்துக்கொண்டாலும் இதற்கிணையான மொழி உலகத்தில் இல்லை. வேறு பத்தி நூல்களும், ஞான நூல்களும், நீதி நூல்களும், இலக்கண நூல்களும் எத்தனையோ உள்ளன.

இரா - தமிழ் மொழியின் ஒப்பற்ற பெருமையை இப்பொழுது தானுணர்ந்தேன்.

கரு - அரசே, தமிழ் மொழியின் பெருமையை நிலை நாட்டத் திருக்குறள் ஒன்றே போதும்:

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅ ரெனின்.**

**உறுபசியும் ஓவாப் பிணியுஞ் செறுபகையுஞ்**
**சேரா தியல்வது நாடு.**

**நாளென வொன்று போற்காட்டி யுயிரீரும்**
**வாள துணர்வார்ப் பெறின்.**

**இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண**
**நன்னயஞ் செய்து விடல்.**

**இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு.**

ஆகிய இந்த ஐந்து குறட்பாக்களின் அடிப்படையுண்மைகளை உலக மக்களனைவரும் அறிவார்களானால்

உலகம் உய்யும், இன்றேல் அழியும், கல்வியின் பயன் கடவுள் உண்மையறிதல்; மக்கள் அமைதியான வாழ்வு நடத்த வேண்டுமானால் நாடு பசி, பிணி, பகையற் றிருத்தல்; இம்மண்ணில் தம்வாழ்நாள் மிகக்குறு கியது என மக்கள் உணர்தல்; இன்னா செய்தாருக்கு நன்மை செய்தல்; இன்னா செய்தாருக்கு நன்மை செய்யாவிடின் தம் மனிதத் தன்மைக்கு இழிவு என வுணர்தல்; ஆகிய இவ்வுண்மைகளை உலக மக்கள் அனைவரும் உணர்தல் வேண்டும். 'உனக்கு இம்சை செய்வோருக்கு இம்சை செய்யாதே, பிறர் செய்யும் இம்சையைப் பொறுத்துக் கொள், இடது கன்னத்தில் அடிப்போருக்கு வலது கன்னத்தைக் காட்டு' என்பது போன்ற உண்மைகளைப் பிற பெரியார் எடுத்துக் கூறுவர். ஆனால் இவை வள்ளுவர் வாக்கின் விளிம்பைக் கூடத் தொடவில்லை.

இரா - செந்தமிழ்ச் சிலரே, திருவள்ளுவரின் இணையற்ற பெருமையை உணர்ந்தேன் இன்று.

கரு - வருங்காலத்தில் நந்தமிழ்மொழியில் இன்னும் எத் தனையோ சிறந்த நூல்கள் உண்டாகப் போகின்றன. ஆனால் ஒன்று: யான் முன்பு கூறிய மக்களாட்சி இந்நாவலந்தீவில் உண்டாகும்போது நமது மொழிக்கு, தன்னேரிலாத தமிழ் மொழிக்குப் பேரிடுக்கண் உண் டாகும். அக்காலத்து மக்கள் தமிழ்மொழியின் இணை யற்ற பெருமையை அறிய மாட்டாராய் அதனைப் புறக்கணித்து மறுமைக்கு எத்துணையும் உதவாத பிறமொழிகளின்மேல் காமுற்று அவற்றைக் கற்பர். கற்புடைய தன் மனையாளை நீத்துப் பொதுமகளைச் சாரும் புன்மையாளன் போன்றவர் இவர். சிலர் தமிழின் பெருமையை உணர்ந்தும் அதற்கு வேண்டு மென்றே கேடு சூழ்வர். சிலர் அதன் பெருமை

யையுணராது கேடு சூழ்வர். சிலர் அதன் பெருமையை உணராது உணர்ந்தாரைப் போல் நடித்துக் கேடு சூழ்வர். தாய்மொழி இலக்கண அறிவு ஒருசிறிதும் இலாத சிலர் வேறுமொழி ஒருசிறிது கற்றவளவில் தாம் எல்லாம் உணர்ந்து விட்டதாகக் கருதித் தமிழ் நூற்கள் மேல் குறை கூறித்திரிவர். வெள்ளைப் பாடல் ஒன்றிற்குப் பொருள் கூறத் தெரியாத சிலர் அக்கால அரசாட்சியில் தாம்பெற்ற பதவியின் காரண மாகப் பெரும்புலவர் போல் நடிப்பர். செய்யுட்களின் அடிப்படை நோக்கமும் அவற்றை யெழுதும் சீரிய முறைகளும் ஒரு சிறிதும் அறியாதார் பெரும் புல வர்போல் எழுதுவர், நடிப்பர். ஒப்பற்றத்திப்பிய நூல்களின் உட்பொருளை ஒருசிறிதும் உணராதும் அவற்றிற் பொதிந்துகிடக்கும் மணிபோன்ற கருத்துக் களை அணியாகக் கொள்ளாதும் தம்மனம் போன வாறு நூலெழுதிப் பெரும்புலவர்போல் பேசுவர், நடிப்பர் பலர். இத்தகையோரை அக்காலச் செய்தித் தாள்கள் வானளாவப் புகழ்ந்தெழுதும். இதனால் அக் காலமக்கள் தமிழ்ப்புலவர் யாவர், தமிழறிவு நிறைந்த வர் யாவர், மற்றவர் யாவர் என்ற வேறுபாடு அறிய முடியாமல் மயக்கமுறுவர். உண்மைப் புலவர்களும் அறிவாளிகளும் மூலைமுடுக்குகளில் ஒதுங்கிக் கிடப்பர்.

**இரா -** அடிகளே, தமிழ் நாட்டில் இந்நிலை நீடிக்குமோ?

**கரு -** நீடித்திராது. உண்மைப்புலவர்களைத் தமிழ்மக்கள் உணருங்காலம் வரும். அக்காலத்தில் போலிகள் மறைந்துவிடுவர். தமிழ் மக்களேயன்றி வேறு மொழி யாளரும் தமிழ்நூற்களை விரும்பிக் கற்பாரேல் உலக முய்யும், உலகத்தில் அமைதி ஏற்படும். சிறிதும் ஒலிவழுவிலாத நெடுங்கணக்கின் அமைப்பாலும், வேறு எம்மொழியிலும் காணப்படாத பால், திணை, பொருளிலக்கணப் பகுப்பைக் கொண்டுள்ள இலக் கண அமைதியாலும், இம்மைக்கும் மறுமைக்கும்

பயன் தரத்தக்க அரிய நூல்கள் உடைமையாலும் தன்னேரிலாத தமிழ்மொழி இந்நாவலந்தீவிற்கும் உலகிற்கும் பொது மொழியாகும் வலியுடையதாகும்.

இரா - அந்தமில் அறிவுசான்ற அடிகளே, அக்கால ஆட்சி யாளர் நம் தாய்மொழியின் இவ்விணையற்ற பெரு மையை உணர்ந்து ஆவன செய்வரோ?

கரு - செய்வர். செய்யாதிருப்பரேல், தமிழ் மக்கள் அவர்களை ஆட்சி செலுத்தும் அதிகாரத்தினின்றும் நீக்கி விடுவர். அரசே, முடிவாக உனக்கொன்று கூறவிரும்புகிறேன்.

இரா - அருள் புரிந்திடல் வேண்டும்.

கரு - நீ நாவலந் தீவினுக்கு நாதனாகும் ஆசை கொண் டிருப்பாயேல் அதனை அறவே மறந்துவிடு. **'தினைத் தனையோர் பொறையிலா வுயிர்போங் கூட்டைப் பொருளென்று மிகவுன்னி மதியாலிந்த - அனைத் துலகும் ஆளலாமென்று பேசும் ஆங்காரம் தவிர் நெஞ்சே'** - என நாவுக்கரசர் நவின்றிருப்பதை உன்னிப்பார். இறைவன் படைப்பில் இம்மண்ணுல கம் அணுவிலும் அணு. இரவில் வானைப் பார்த்திருக் கின்றனையோ? வானில் தெரிகின்ற அத்தனைச் சுடர்களும் பல்லாயிரக்கணக்கான உலகங்கள் கொண்ட அண்டங்கள். அங்கு வானவரும் தேவரும், ஏனை யோரும் வாழ்கின்றனர். அங்கு செல்லும் ஆசையை அறவே மறந்து இம்மண்ணில் இது எமதுநாடு, இது எமது தேசம், என அரசரும், அமைச்சரும், ஆட்சி யாளரும், குடிகளும் கொன்னே போரிட்டு மடிந்துகழிவர். இம்மண்ணில் நிலைத்து நீடித்து அரசரோ, ஆட்சி யாளரோ, குடிகளோ, எத்தனை நூறாண்டுகள் வாழ முடியும்? இச்சிறு செய்தியை மண்ணின் மாந்தர் அறியகில்லர். இம்மண்ணை விடுத்து அண்டர் நாடாளும் முயற்சியில் இவர்கள் ஏன் ஈடுபடாமல் இருக்கின்றனர்? மண்ணின்பேரில் இச்சை வைத்துப்

போரில் மதியிலிகள் மடிந்தே கழிவர். அந்தோ! இவர் நிலை சால இரங்கத்தக்கது. அரசே, நீ இம்மண்ணை விடுத்து, அண்டர் நாடாளும் முயற்சியில் ஈடுபடுவாயாக.

இரா - அருட் சித்தரே, அண்டர் நாடாளும் சூழ்ச்சி அடியேனைப் போன்றவர்களுக்குச் சித்திக்குமோ?

கரு - அரசே, அண்டர்நாடாள விரும்பும் அரசரது தானையின் அணிவகுப்பு வேறு வகையானது:

தொண்டர்காள் தூசிசெல்லீர், பத்தர்காள்
சூழப்போகீர்,
ஒண்திறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்,
திண்திறல் சித்தர்களே கடைக்கூழை சென்மின்கள்,
அண்டர் நாடாள்வோம்தாம் அல்லற்படை
வாராமே.

இது மணிவாசகப் பெருமான் கூறியருளிய அணி வகுப்பு. இம்மண்ணின் பேரில் வைக்கின்ற ஆசை யில் ஒரு கூறேனும், இறைவன் பேரிலும், இறை வன் படைப்பாகிய மக்கள் பேரிலும், வேறு உயிர் கள் மாட்டும் ஒருவன் வைப்பானானால் அவன் அண்டர் நாடாள்வான். இது திண்ணம். அரசே, யான் சென்று வருகின்றேன்.

இரா - அடிகளே, அடியேன் குடிலில் இன்று தங்கிச்செல்ல வேண்டும்.

கரு - அவ்வாறே. நாளை அடியேன் கங்கைகொண்ட சோழேச்சரத்துப் பெருவுடையாரைப் பாடி வழிபட்டுச் செல்லக்கருதியுள்ளேன்.

இரா - *(கருவூர்த் தேவர் கால்களில் விழுந்து வணங்கியெழுதல்)*

கரு - பல்லாண்டு வாழ்வாயாக.

முற்றும்.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை |
|---|---|
| முல்லை | 25.00 |
| திராவிட மொழியின் மூவிடப்பெயர் | 40.00 |
| தமிழ்நாட்டு வரலாற்றின் இலக்கிய ஆதாரங்கள் கி.மு.200 - கி.பி.1300 | 100.00 |
| வெள்ளுடை வேந்தர் தியாகராயரின் வாழ்வும் பணியும் | 65.00 |
| தமிழ் நாடகமேடை முன்னோடிகள் | 40.00 |
| தமிழ் வள்ளல் பாண்டித்துரையார் | 25.00 |
| தேவநேயப்பாவாணரின் மொழியியல் - வரலாற்றுக் கொள்கை | 35.00 |
| தமிழ்த்தூது | 20.00 |
| கபிலர் | 70.00 |
| கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாறு | 20.00 |
| நாட்டிய நன்னூல் | 25.00 |
| சங்க இலக்கியத்தில் கலையும் கலைக்கோட்பாடும் | 65.00 |
| கதிர்வேற்பிள்ளை-தமிழ் சொல்லகராதி, மூன்று பாகங்கள் | 600.00 |
| எண்பத்து மூன்றில் தமிழ், பகுதி-3 | 30.00 |
| காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் ஓர் ஆய்வு | 60,00 |
| திருக்குற்றாலநாத சுவாமி கோவில் வரலாறும் பண்பாடும் | 60.00 |
| உத்தர ராம சரிதம் | 30.00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி 1 | 50.00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி 2 | 40.00 |
| சதாசிவப் பண்டாரத்தார் ஆய்வுக் கட்டுரைகள் | 40.00 |
| சங்கத் தமிழர் வாழ்வியல் | 75.00 |
| வேதகிரியார் சூடாமணி நிகண்டு | 65.00 |
| தமிழக மேடைநாடகப்பெண்கலைஞர்கள்குறிப்பேடு | 25.00 |
| **A Grammar of Contemporary Literary Tamil** | 80.00 |
| **Cilappatikaram** | 100.00 |
| காதம்பரி மூலமும் வசனமும் | 125.00 |
| **Tamil Culture and Civilization** | 60.00 |
| **Tolkappiyam and Astadhyayi** | 110.00 |
| தமிழக மகளிர் தொடக்க காலமுதல் ஆறாம் நூற்றாண்டு வரை | 50.00 |
| தொல்காப்பியம் - பொருள் - செய்யுளியல் பகுதி 1 | 50.00 |
| தடிவீரசுவாமிகதை வன்னியராயன்கதை | 55.00 |
| சடத்தலம் | 40.00 |
| காத்தவராய நாடகம் | 30.00 |
| மதங்க சூளாமணி | 40.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 32.00 |
| தமிழில் நவீன நாடகம் | 70.00 |
| இலக்கியத்தில் சோதிடம் | 65.00 |
| சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் | 80.00 |

இராசேந்திரன் விலை ரூ. 55/-